வர்ண ஜாலம்

பாகம் 1

எண்டமூரி வீரேந்திரநாத்

வர்ணஜாலம்

பிரபல தெலுங்கு எழுத்தாளர் திரு எண்டமூரி வீரேந்திரநாத் அவர்கள் எழுதிய ''ப்ரியுராலு பிலிசே'' என்ற நாவலை மொழிமாற்றம் செய்து ''வர்ணஜாலம்'' என்ற தலைப்பில் அளித்துள்ளேன்.

கதையின் நாயகன் கார்த்திகேயன் ஒரு ஓவியன். விதி நடத்திய நாடகத்தின் காரணமாக கைகால்கள் செயலிழந்த நிலையில் இருக்கும் ஸ்ரீ கல்யாணி அவனுக்கு மனைவியாகிறாள். எந்த நிலையிலும் சகமனிதர்களை நம்பாத ஸ்ரீ கல்யாணி, வாழ்க்கையின் எந்த நிலையிலும் சகமனிதர்களிடம் நம்பிக்கையை இழக்காத கார்த்திகேயன்.

இவ்விருவரின் வாழ்க்கையில் புயலாக அனுஜா நுழைகிறாள். கார்த்திகேயன் திருமணமானவன் என்று தெரியாமல் அவனை மனப்பூர்வமாக விரும்பு கிறாள். அவனுடைய கொள்கைகள், நேர்மை அவளை ஈர்த்து விடுகின்றன. நாம் இல்லாதபோதுகூட அடுத்த நபர் நம்மைப் பற்றியே ஒவ்வொரு நிமிஷ மும் யோசித்துக் கொண்டு இருப்பார்கள் என்ற நம்பிக்கைதான் காதல் என்று அனுஜா நம்புகிறாள்.

கார்த்திகேயனின் வாழ்க்கையில் ஊகிக்க முடியாத பல திருப்பங்கள் நிகழ்கின்றன. அவன் மனதில் அனுஜா வின் நினைவுகள் அழகிய கனவாக பதிந்து போய்விடுகின்றன.

மொழிமாற்றத்திற்கு அனுமதி யளித்த திரு எண்டமூரி வீரேந்திரநாத் அவர்களுக்கும், புத்தகமாக வெளியிட்ட அல்லயன்ஸ் நிறுவனத்தாருக்கும் எனது நன்றி.

கௌரிகிருபானந்தன்

வர்ணஜாலம்

மழை நின்று சுமார் ஒரு மணி நேரம் ஆகியிருந்தது. தென்னங்கீற்றுகளின் மீது தங்கியிருந்த மழைத்துளி காதலனை விட்டுப் பிரிய மனமின்றி பிரிந்து கொண்டிருந்த காதலியைப் போல் விடை பெற்றுக் கொண்டு தரையில் சரிந்தது. மேகத் திரைக்குப் பின்னாலிருந்து வெளியே வந்து கொண்டிருந்த சந்திரன் அந்தக் கட்டிடத்தின் அரிஸ்டோகிரஸியை இரு மடங்காக எடுத்துக் காட்ட முயன்றுகொண்டிருந்தான்.

வெளியே இருக்கும் இயற்கையின் அழகைச் சற்றும் பொருட்படுத்தாமல் கையில் இருந்த ஃபைலை கவனமாக படித்துக் கொண்டிருந்தாள் ஸ்ரீகல்யாணி. நிர்வாக கணக்கு வழக்குகளை கவர்ந்தாற் போல் அவளை இயற்கைச் சூழல் கவரவில்லை. மனிதர்களுக்கிடையே பந்தம் என்பதெல்லாம் பரஸ்பர தேவைகளுக்காக அவரவர்கள் ஏற்படுத்திக் கொண்ட முடிச்சு என்று அவள் ஆழமாக நம்பி வந்தாள். அவளுக்கு கீழே ஜெனரல் மேனேஜர்களிலிருந்து ஊழியர்கள் வரை ஏறக்குறைய இரண்டாயிரம் பேர் பலவிதமான கம்பெனிகளில் வேலை பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

ஸ்ரீ கல்யாணி குரூப் கம்பெனியில் வேலை கிடைப்பதையும், அந்த நிர்வாகத்தின் கீழ் வேலை பார்ப்பதையும் பல

பேர் அதிர்ஷ்டமாக நினைப்பார்கள். அந்தக் கம்பெனியின் பத்து ரூபாய் ஷேர் நூற்றைம்பதுக்கு விற்றுக் கொண்டிருந்தது.

ஸ்ரீகல்யாணியின் தந்தை அவளுடைய ஐந்தாவது வயதில் இறந்து விட்டார். அவர் கோடீஸ்வரர். அதற்கு ஐந்து வருடங்கள் கழித்து தாயும் போய்ச் சேர்ந்தாள். ஸ்ரீ கல்யாணியின் சொத்துக்கள் அனைத்துக்கும் அவள் மாமா கார்டியனாக இருந்து அவளை வளர்த்து ஆளாக்கினார். அவருக்கு பக்கவாதம் வந்து எட்டாண்டுகள் படுத்த படுக்கையாக இருந்து விட்டு இறந்து போனார். அப்பொழுது கல்யாணிக்கு பதினெட்டு வயது. இறந்து போகும் முன் மாமா அவளை அருகில் அழைத்து, ''குழந்தாய்! என் முடிவு நெருங்கி விட்டது. உன் தந்தை உனக்கு தந்த சொத்துக்களை அப்படியே உன்னிடம் ஒப்படைத்து விட்டுப் போகிறேன். அது ஒன்று தான் எனக்கு திருப்தி. சத்தியனைக் கல்யாணம் செய்துகொள்'' என்றார். சத்யன் அவருடைய மகன்.

அவள் கண் ஜாடை காட்டியதும் டாக்டர்கள், வேலைக்காரர்கள் வெளியே சென்று விட்டார்கள். அப்பொழுது அவள் சொன்னாள். ''மாமா! இன்னும் கொஞ்ச நேரத்தில் நீங்க கோமாவில் ஆழ்ந்து போய் விடுவீங்க. அதற்குப் பிறகு மரணமடைந்து விடப் போறீங்க. இந்தக் கடைசி தருணத்தில் ஒரு உண்மையைச் சொல்வீங்களா?''

''என்ன உண்மை?''

''ஒரு அறையில் நடுத்தர வயதுக்காரர் ஒருவர் படுத்துக் கொண்டிருந்தார். இன்னொரு ஆள் அவர் முகத்தின் மீது தலையணையை வைத்து அழுத்திக் கொண்டிருந்தான். மூச்சுத் திணறி கட்டில் மீது இருந்த ஆள்

இறந்து போய்விட்டார்.'' அவள் சற்று நிறுத்தி ''ஐந்து வயதில் நான் பார்த்த அந்தக் காட்சி உண்மைதானா மாமா?'' என்றாள்.

அவளுடைய மாமா ரொம்ப நேரம் பேசவில்லை.

''மரணமடைவதற்கு முன்பாவது உண்மையைச் சொல்லுங்கள் மாமா! பொய் சொல்லி என்னை நம்ப வைக்கணும்னு முயற்சிக்க வேண்டாம்.''

அவர் கண்களைத் திறந்து மெதுவாக சொன்னார். ''உங்க அப்பாவைக் கொலை செய்தது நான்தாம்மா.''

உள்ளங்கையை மடக்கிக் கொண்டு ஆவேசத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டே அவள் அப்படியே நின்றிருந்தாள்.

மாமா மேலும் சொன்னார். ''என்னை மன்னித்து விடும்மா. நானும் என் குடும்பமும் பிச்சைக்காரர்களாக உங்களிடம் வந்து சேர்ந்தோம். உங்க அப்பாவைக் கொன்று விட்டுச் சொத்தை என் சொந்தமாக்கிக் கொள்ள வேண்டு மென்று நினைத்தேன். ஆனால் கடவுள் எனக்கு புத்தி புகட்டிவிட்டார். பக்கவாதத்தால் கட்டிலோடு கிடக்கும் படி செய்து விட்டார். என் மனைவியைக் கொண்டு போய்விட்டார். சுவாமி சச்சிதானந்தரின் சாட்சியாக சொல்கிறேன். அதனால்தான் சொத்துக்களை எல்லாம் உன் பெயரில் மாற்றி எழுதிவிட்டேன். என் மகன் சத்யனுக்காக கூட எதையும் மிச்சம் விட்டு வைக்கவில்லை. இப்பொழுதுதான் என் மனதிற்கு நிம்மதியாக இருக்கு. இந்த விஷயத்தையும் உன்னிடம் சொல்லி விட்டதால் இன்னும் லேசாகி விட்டது. இத்தனை வருடங்களாக பக்கவாதத்தாலும் பச்சாத்தாபத்தாலும் குமுறிக் கொண்டிருந்தேன் அம்மா.''

பாதி பொய்யையும், பாதி உண்மையையும் கலந்து எதிராளியை நம்ப வைப்பதற்கு முயன்று கொண்டிருந்த மாமாவை கூர்ந்து பார்த்தாள். அவள் பார்வை ஈட்டியாய் அவர் இதயத்தில் புதைந்திருந்த உண்மையை தோண்டி எடுத்துக் கொண்டிருந்தது.

''சொத்துக்களை எல்லாம் என் பெயரில் மாற்றி எவ்வளவு நாளாச்சு மாமா?'' நிதானமான குரலில் கேட்டாள்.

''போன வருஷம்தான் கல்யாணி.''

''பின்னே எட்டு வருடங்களாக பச்சாதாபப்பட்டுக் கொண்டிருந்தவர், போன வருடம் வரை ஏன் பேசாமல் இருந்தீங்க?''

அவர் பதில் சொல்லவில்லை.

அவளே திரும்பவும் சொன்னாள். ''நீங்க செய்த பாவத்தால்தான் உங்களுக்கு பக்கவாதம் வந்ததென்றும், அந்தப் பாவத்திற்கு பரிகாரம் செய்துவிட்டு, சிவனுக்கு லட்சம் வில்வபத்திரங்களால் பூஜை செய்ய வைத்தால் காலும் கையும் சுவாதீனத்திற்கு வந்து விடும் என்றும் இரண்டு வருடங்களுக்கு முன்னால் சச்சிதானந்த சுவாமிகள் உங்களிடம் சொன்னார். அப்படித்தானே?''

அவர் முகத்தில் ஜீவக்களை குறைந்தது. ''இது உனக்கு எப்படி தெரிய வந்ததோ தெரியாது. அது உண்மைதான். அந்த பச்சாத்தாபத்தால்தான் சொத்தை உன் பெயருக்கு மாற்றி எழுதிவிட்டேன். இப்பொழுது என் பாவத்திற்கு பரிகாரம் கிடைத்து விட்டது. சுவர்க்கம் என்னை அழைக்கிறது.''

''மரணம் நெருங்கிக் கொண்டிருக்கும் இந்தக் கடைசி சமயத்தில் கூட நீங்க மறுபடியும் மனச்சாட்சியை ஏமாற்றிக் கொண்டு இருக்கீங்க, மாமா! சச்சிதானந்த சுவாமிகள் சொன்னதுமே நீங்க ஒன்றும் சொத்தை என் பெயருக்கு மாற்றவில்லை. அவ்வளவு சொத்தை இழப்பது உங்களுக்கும் கஷ்டம்தானே. மேலும் ஒரு வருஷம் டாக்டர்களை சுற்றிச் சுற்றி வந்துவிட்டு, இனி லாபமில்லை என்று தெரிந்து கொண்டு விட்டீங்க. இதற்கு இடையில் சுவாமிகள் தினமும் வந்து உங்க உள்ளத்தில் பாவபீதியை வளர்த்து விட்டார். பயமுறுத்தினார்.''

''இது... இதெல்லாம் உனக்கு எப்படி தெரிந்தது?''

அவள் மாமாவின் முகத்தின் அருகில் குனிந்து அழுத்தமாக சொன்னாள். ''தெய்வத்தின் மேல் பயத்தை உண்டாக்கி, அந்தச் சொத்தை எனக்குத் திருப்பி மாற்றினால் லட்சம் ரூபாய் தருவதாக சச்சிதானந்த சுவாமிகளுக்கு ஆசை காட்டியது நான்தான். சுவாமிகள் கூட உங்களைப் போலவே பணத்திற்கு அப்பாற்பட்டவர் இல்லை மாமா.''

அவர் அப்படியே பார்த்துக் கொண்டிருந்தார். கண்களையும் இமைக்கவில்லை. உயிர் எப்பொழுது போயிற்றோ தெரியாது. பக்கவாதத்தால் தான் போயிற்றோ அல்லது பதினெட்டு வயதே ஆன தன் மருமகளின் புத்திசாதுரியத்தைப் பார்த்து ஏற்பட்ட அதிர்ச்சியால்தான் போயிற்றோ தெரியாது.

அவ்வளவு சிறிய பெண் ஒரே திரியாக கோடிக் கணக்கான சொத்துக்களுக்கு மறுபடியும் வாரிசானதைப் பார்த்து நிறைய பேர் வாலாட்ட முயற்சி செய்தார்கள். தொழிலாளர்களின் பிரச்னையிலிருந்து, ஜெனரல்

மேனேஜர்கள் செய்து வந்த லஞ்ச ஊழல் வரைக்கும் அவள் ஒரே வருடத்தில் ஒரு கட்டுப்பாட்டிற்கு கொண்டு வந்து விட்டாள். அப்படி கொண்டு வருவதற்கு அவளுக்கு உதவியாக இருந்த ஒரே குணம் ''யாரையும் நம்பாமல் இருப்பது.''

சிக்மா டிடெக்டிவ் அண்ட் செக்யூரிடீ ஏஜென்ஸிக்கு அவள் ஆண்டுதோறும் சுமார் ஐந்து லட்சம் வரையிலும் ஃபீசாக தந்துகொண்டிருந்தாள். அவர்களுடைய வேலை என்னவென்றால் அவளுடைய நிறுவனத்தின் பலவேறு கிளைகளில் உயர் பதவியில் இருப்பவர்களின் மீது கண்காணிப்பு வைத்து அவர்களின் வங்கி கணக்குகள், டெலிபோன் பேச்சுக்கள், அவர்களுடைய ரகசிய விவகாரங்கள் அத்தனையும் அவளுக்கு உடனுக்குடன் தெரியப்படுத்துவதுதான். பல ஆண்டுகளாக மிக ரகசியமாக இந்த ரிப்போர்டிங் நடைபெற்று வந்தது. ஒரு வியாபாரப் புள்ளிக்கு இதைக் காட்டிலும் முன் ஜாக்கிரதை வேறு என்ன வேண்டும்?

இருபத்தி நாலு வயது வருவதற்குள் 'அயான்ராண்ட்' நாவல்களில் வரும் பாத்திரத்தைப் போல் 'I am O.K. you are not O.K.' என்ற சுபாவத்தையும், சரியான நேரத்தில் சரியான முடிவுகளை எடுத்துக் கொள்ளக் கூடிய மேதாவித்தனத்தையும் பழக்கப்படுத்திக் கொண்டாள். அவள் மாமாவின் நிர்வாகத்தில் வியாபாரம் கோடி கோடியாகவே இருந்தது. அவள் ஐந்து ஆண்டுகளில் அதை மூன்று மடங்காக்கினாள்.

மாமா காலமான ஆறு மாதங்களுக்குப் பிறகு அவள் ஒரு நாள் சத்யனிடம் சொன்னாள். ''அத்தான்! இன்றைக்கு நாம் டின்னருக்கு போகிறோம்.''

சத்யன் ஆச்சரிய மடைந்தவனாக ''என்னுடன் டின்னரா? நீ என்னோடு ஒரு மணி நேரம் செலவழிக்கப் போகிறாய் என்றால் ஏதோ முக்கியமான விஷயமாகத்தான் இருக்கும்'' என்றான்.

அவள் சிரித்து விட்டு ''ஒரு விதமாக சொல்லணும் என்றால் அப்படித்தான்'' என்றாள்.

நகரத்திலேயே விலை உயர்ந்த ஹோட்டலில் எட்டாவது மாடியில் இருந்த ரூம்ப் கார்டெனில் உட்கார்ந் திருந்தார்கள் இருவரும். மேனேஜர் அவளை பணிவோடு வணங்கிவிட்டுப் போய் விட்டார். பத்து நிமிடங்களில் டின்னர் வந்தது.

சூப்பைக் குடித்துக் கொண்டே அவள் நேராக விஷயத்திற்கு வந்தாள். ''அத்தான்! ஆறு மாதத்திற்கு முன்னால் நான் உன் சொத்துக்கு உரிமைக்காரி ஆகி விட்டேன். அது வரையிலும் 'இந்தச் சொத்து முழுவதும் என்னுடையது' என்று நீ நினைத்துக் கொண்டிருக்கலாம். மாமா இறந்து போவதற்கு முன்னால் சொத்தை எல்லாம் என் பெயருக்கு எழுதிவிட்டார்.''

''இதெல்லாம் என்ன கல்யாணீ? அதற்கு முன்னால் கூட சொத்து உங்க அப்பாவுடையது தானே?'' என்றான் சத்யன்.

''அதற்காக மறுபடியும் எனக்கே தந்து விடணும்னு இல்லையே? சரி போகட்டும். ஏன் தந்தார் என்பதெல்லாம் இப்பொழுது தேவையில்லை. இப்போ உன்னைப் பற்றிச் சொல்லு. சொத்து போய் விட்டதே என்று வருத்தப்படுகிறாயா?''

''செ... அதெல்லாம் ஒன்றுமில்லை.''

''இல்லைன்னு சொன்னால் அது மனசாட்சியை ஏமாற்றுவது போல்தான்.''

''உண்மையாகவே அப்படி எதுவும் இல்லை கல்யாணீ! அப்படிப்பட்ட எண்ணம் இருந்திருந்தால் உன்னை என் மனைவியாக்கிக் கொள்ள முயற்சி செய்திருப்பேனே. நீ மறுத்தால் அது வேறு விஷயம். ஆனால் இவ்வளவு நாட்களில் என்றாவது உன்னிடம் தரக்குறைவாக நடந்து கொண்டிருக்கிறேனா? காதல் வசனங்களை அள்ளி வீசியிருக்கிறேனா?''

''உனக்கு நன்னடத்தை சான்று தருவதற்கு எனக்கொன்றும் ஆட்சேபணை இல்லை. ஆனால் என்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளாமல் போனதற்கு காரணம் மட்டும் அது இல்லை'' என்று சிரித்தாள்.

''பின்னே?''

''ஏற்கெனவே நீ வேறு ஒரு பெண்ணின் காதலில் மூழ்கிப் போய் விட்டதால்.''

அவன் அதிர்ந்து போய் அவளைப் பார்த்தான். ''உனக்குத் தெரியாத விஷயம் என்று எதுவுமே இல்லையா கல்யாணீ?''

''அந்த விஷயத்தை இனி விட்டுவிடு. அசல் விஷயத்திற்கு வருவோம். என்னுடைய ஒரே உறவினன் நீ தான். 'ஸ்ரீ ஏஜென்ஸீ'யை உன் பெயருக்கு எழுதித் தரச் சொன்னால் தருகிறேன். ஏறக்குறைய பத்து லட்சம் விலை மதிப்புடையது.''

''ஏதோ சட்டம் படித்திருக்கிறேனே தவிர, அந்தத் தலைவலி விவகாரமெல்லாம் என்னால் படமுடியாது, கல்யாணீ.''

''பின்னே என்ன செய்வாய்?''

''உன்னுடைய லீகல் விவகாரங்களை எல்லாம் பார்த்துக் கொள்கிறேன். எனக்கு அந்தச் சாமர்த்தியம் இருக்குன்னு நம்புகிறேன்.''

''அப்படி என்றால் சரி.'' டின்னரை முடித்துக் கொண்டு எழுந்தாள்.

மறுநாள் அவனை மாதத்திற்கு இருபதாயிரம் சம்பளத்துடன் லீகல் அட்வைசராக நியமித்து ஆர்டர் தந்தாள். அதோ மெயின் நோட்டில் இருந்த ஷாப்பிங் காம்ப்ளெக்ஸை, சுமார் இருபத்தைந்து லட்சம் விலை மதிப்புடையது, அதையும் அவன் பெயரில் பதிவு செய்து அந்த தஸ்தாவேஜுகளை அவனிடம் தந்தாள்.

''இதெல்லாம் எதுக்கு கல்யாணீ?''

''உங்க அப்பா கார்டியனாக சிறுவயதிலிருந்து என்னை வளர்த்து ஆளாக்கியதற்கு.'' சுருக்கமாக சொன்னாள்.

அவன் காகிதங்களைப் பெற்றுக் கொண்டே சொன்னான். ''எல்லோரும் உன்னை மெடீரியலிஸ்ட் என்பார்கள். ஆனால் நிறைய ஃபிலான்த்ரபிஸ்டுகளை விட நீ ரொம்பவும் உயர்ந்தவள்.''

''என்னை யாரும் ஏமாற்றக் கூடாது. நான் யாரையும் ஏமாற்ற மாட்டேன் என்ற சுபாவம் என்னுடையது. நாளைக்கு எனக்குத் திருமணம் ஆகிவிட்டால் என் கணவருக்கு உன்னைக் கண்டால் பிடிக்காமல் போகலாம். அல்லது நானே உன்னை வேலையிலிருந்து நீக்கிவிடலாம். இப்பொழுதே உனக்கு கொஞ்சம் சொத்தை கொடுத்து விட்டால் மாமாவின் நன்றிக் கடனைத் தீர்த்துக் கொண்டாற்

போல் இருக்கும் இல்லையா!'' மனப்பூர்வமாக சொன்னாள்.

சத்யன் தலையை அசைத்து விட்டு அங்கிருந்து போய் விட்டான். அவன் கண்களில் நன்றி உணர்ச்சியை அவள் தெளிவாக கண்டாள். சில சமயம் நம் பார்வையே நம்மை ஏமாற்றி விடக் கூடும். அது வேறு விஷயம்.

அதற்குப் பிறகு இரண்டு நாட்களில் சிக்மா டிடெக்டிவ் ஏஜென்ஸியிலிருந்து அவளுக்குக் கடிதம் வந்தது, ரகசிய ரிப்போர்ட்டுகளை அனுப்ப வேண்டியவர் களின் பட்டியலில் சத்யனின் பெயரையும் சேர்த்துக் கொள்ள வேண்டுமா என்று. ஏனென்றால் இப்பொழுது சத்யன் அவளுக்கு லீகல் அட்வைசர்.

ஸ்ரீகல்யாணி தேவையில்லை என்று சொல்லி விட்டாள்.

சில சமயம் சிறிய தவறுக்கே பெரிய விளைவுகளை அனுபவிக்க வேண்டியிருக்கும்.

★

ஸ்ரீகல்யாணி அபூர்வமான அழகியொன்றும் இல்லை. கண்களின் தீட்சண்யமும், கட்டுக் கோப்பான உடற்கட்டும் அவளுக்குக் கவர்ச்சியைத் தந்தன. மெல்லிய இடையும், ஆலிலை போன்ற வயிறும் அமைந்திருப்பதால் அவள் பெரும்பாலும் புடவையையே அணிந்து வந்தாள். லேசான அகம்பாவமும், அழகான உடற்கட்டும் ஒரே பெண்ணிடம் இருப்பது அபூர்வம். இந்த இரண்டின் கலவையும் சேர்ந்ததால் சாதாரண அழகுதான் என்றாலும் கவர்ச்சியாக தென்படுவாள்.

ஸ்ரீகல்யாணி கைக்கடியாரத்தைப் பார்த்துக் கொண்டாள். ஒன்பதடிக்க இரண்டு நிமிடங்கள் இருந்தன. சரியாக ஒன்பது மணிக்கு அவள் ஒரு போன் பேச வேண்டும். அவள் பேச நினைத்திருந்தது ஒரு சைக்கியாட்ரிஸ்டிடம். மதியம் ஆபீஸிலிருந்து தான் யார் என்று தெரிவிக்காமலேயே அவருக்கு போன் செய்தாள்.

''உங்களுடைய கன்சல்டேஷன் ஃபீஸ் எவ்வளவு?'' போனில் கேட்டாள்.

''நீங்கள் யாரு?'' மறுமுனையில் யாரோ கேட்டார்கள். ''டாக்டர் இல்லை...''

''டாக்டருடன் ஒரு மணி நேரம் பேசணும். அவருடைய ஃபீசை சொல்லுங்கள்.''

அவன் சொன்னான். அவள் டாக்டர் பெயருக்கு பாங்க் டிராஃப்ட் அனுப்பி வைத்தாள். அத்துடன் சின்ன குறிப்பும் கூட.

'இன்று இரவு சரியாக ஒன்பது மணிக்கு ஃபோன் செய்கிறேன். உங்கள் ஃபீசை ஏற்றுக் கொள்ளுங்கள்.' என்று எழுதி அனுப்பினாள். யார் அனுப்பினார்கள் என்று தெரிந்து கொள்ள வாய்ப்பு தரவில்லை.

ஸ்ரீகல்யாணி மறுபடியும் வாட்சை பார்த்துக் கொண்டாள். சரியாக ஒன்பது மணி அவள் சைக்கியாட்ரிஸ்டிற்கு போன் செய்தாள்.

''குட் ஈவினிங்! மதியம் போன் செய்து ஃபீசையும் அனுப்பியிருந்தேன். நான் இப்போ உங்களிடம் பேசலாமா?''

''இன்றைக்கு டாக்டர்...'' என்று மறுமுனையில் இருந்த நபர் ஏதோ சொல்ல வருவதற்குள் தடுத்து விட்டு

''எனக்கு உங்களிடம் பெரிய வேலை எதுவும் இல்லை. நான் சொன்னதைக் கேட்டால் போதும்'' என்றாள்.

''நீங்கள் மதியம் போய் செய்து அப்பாயிண்ட் மெண்ட் கேட்டுக் கொண்டபோது சந்திப்பதற்காகத்தானாக் கும் என்று நினைத்தேன். நீங்கள் யார் என்று தெரியாமல் இப்படிப் பேசுவீங்கன்னு நினைக்கவில்லை.''

''நான் யாருன்னு உங்களுக்குத் தெரியவேண்டிய தேவை இல்லைன்னு நினைக்கிறேன்.''

''மன்னித்துக் கொள்ளுங்கள். உங்கள் ஃபீசை உங்களுக்கு திருப்பி அனுப்பி வைத்து விடுகிறோம். நோயாளி யார் என்று தெரியாமல் எங்களால் ட்ரீட்மெண்ட் தர முடியாது.''

''ட்ரீட்மெண்டிற்காக உங்களுக்கு போன் பண்ண வில்லை. நான் சொன்னதை எல்லாம் கேட்டுவிட்டு எனக்கு யோசனை சொல்லுங்கள் போதும்.''

''ஆனால் நான்...''

''நீங்கள் நான் சொல்லப் போவதை கேட்க விரும்பாத பட்சத்தில் என் பணத்தை திருப்பி அனுப்ப தேவையில்லை. நீங்களே வைத்துக் கொள்ளுங்கள். அல்லது ஏதாவது அநாதை இல்லத்திற்கு அனுப்பி விடுங்கள்.''

'இதென்ன தலையெழுத்துக் கடவுளே!' என்று நினைத்துக் கொண்டான் போலும் மறுமுனையில் இருப்பவன்.

ஸ்ரீகல்யாணி சொன்னாள். ''இப்படிப்பட்ட பேஷண்ட் கிடைத்திருக்கிறாளே, என்ன செய்வது என்று நினைக்கிறீங்களா?''

''சைக்கியாட்ரிஸ்டிடம் இதையும் விட மோசமான நோயாளிகள் வருவாங்க. சரி சொல்லுங்கள்'' என்றான்.

ஸ்ரீகல்யாணியின் முகம் கோபத்தால் சிவந்தது. மறுமுனையில் இருந்தவர் வயதானவர், மனநல நிபுணர். அதனால் கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டே ''சில நாட்களுக்கு முன்னால் எங்கள் வீட்டு காம்பவுண்டிற்குள் நான் ஒரு சம்பவத்தைப் பார்த்தேன் டாக்டர்'' என்று சொல்லத் தொடங்கினாள்.

அவள் வசித்து வந்த பங்களா சுமார் ஒரு ஏக்கர் பரப்பளவு கொண்டது. ஒரு மூலையில் டிரைவருக்கும், பெர்சனல் மேனேஜருக்கும் குவார்டர்ஸ் இருந்தன. அந்த டிரைவர் இளம் வயதினன்.

ஸ்ரீகல்யாணிக்கு தோட்டத்தில் உலாவும் பழக்கம் அதிகம் கிடையாது. ஆனால் ஏதாவது பிரச்னை ஏற்பட்டாலோ, தூக்கம் வராமல் போனாலோ அவள் தோட்டத்திற்குப் போவாள். அதற்கு வேளையோ, ரசனையோ வேண்டியதில்லை.

அன்றைக்குக் கூட அவள் அதே போல் நள்ளிரவு நேரத்தில் தோட்டத்தில் நடந்து கொண்டிருந்தபோது தொலைவிலிருந்து மெல்லிய சத்தம் கேட்டது. அந்தப் பக்கமாக போனாள். மோட்டார் கிணற்றிலிருந்து தென்ன மரங்களுக்குப் போகும் வாய்க்காலுக்கு பக்கத்திலிருந்து நீண்ட கல்லின் மீது படுத்துக் கொண்டிருந்தார்கள் அவ்விரு வரும் டிரைவரும் - பெர்சனல் மேனேஜரின் மனைவியும். பெர்சனல் மேனேஜரின் மனைவிக்கு இருபத்தாறு வயதிருக்கும். நல்ல சிவப்பு. அழகாக இருப்பாள்.

இருவரும் ஆடையின்றி சிருங்காரத்தில் மூழ்கியிருந் தார்கள். நிலா வெளிச்சத்தில் அவனுடைய கறுத்த உடல் மின்னிக் கொண்டிருந்தது.

ஸ்ரீகல்யாணி அப்படியே இருளில் நின்று கொண்டிருந்தாள். எதிரே காட்சி தெளிவாக தென்பட்டுக் கொண்டிருந்தது. மகிழ்ச்சியின் எல்லையில் உலகத்தையே மறந்து போனவர்களாக தென்பட்டார்கள்.

ஸ்ரீகல்யாணி சட்டென்று திரும்பினாள். அவளுக்கு எந்த விதமான உணர்ச்சியும் தோன்றவில்லை. பதினாறு வயதிலேயே அவள் ஒரு மார்வாடி சிநேகிதியின் வீட்டில் ஓரிரண்டு ப்ளூஃபிலிம்களை பார்த்திருக்கிறாள். பிறகு பிடிக்காமல் போனதால் விட்டு விட்டாள். தனக்கும் சீக்கிரத்திலேயே கல்யாணம் நடக்கும் என்றும், இதை யெல்லாம் தானும் அனுபவிக்கப் போகிறோம் என்றும் அவளுக்குத் தெரியும். ஆனாலும் அவள் உலகம் அது அல்ல.

''அது சரி. உங்கள் பிரச்னைதான் என்ன?'' போனில் அவள் சொன்னதை எல்லாம் கேட்டுவிட்டு அவன் கேட்டான்.

''அந்த விஷயத்திற்குத்தான் வருகிறேன்.''

''சொல்லுங்கள்.''

''எங்கள் பெர்சனல் மேனேஜருக்கு நிறைய வேலை இருக்கும். எப்பொழுதும் வெளி ஊர்களுக்கு போய்க் கொண்டிருப்பார்.''

''அதனால்?''

''எங்கள் டிரைவரின் மனைவிக்கு மூட்டுவலி. வீட்டு வேலைகளை செய்வதற்கே சலித்துக் கொள்வாள். டாக்டர்! இப்போ நான் விஷயத்திற்கு வருகிறேன். முந்தாநாள் நான் பார்த்த காட்சி எனக்கே கோபத்தை வரவழைக்கணும். இரண்டு குழந்தைகளுக்குத் தாயான ஒருத்தி இப்படி

செய்வாளா? வீட்டில் மனைவியை வைத்துக் கொண்டு எங்கள் டிரைவர் வேறொருத்தியுடன் உறவு கொள்ளலாமா என்று தோன்றியிருக்கணும். ஆனால் எனக்கு அப்படி தோன்றவில்லை. பெர்சனல் மேனேஜருக்குப் பணம் சம்பாதிப்பது ஒன்றுதான் நோக்கம். அதனால் அவர் மனைவி தன்னுடைய சந்தோஷத்திற்கு வேறு வழி தேடிக்கொண்டு இருந்திருப்பாள். அந்த வாய்ப்பை எங்கள் டிரைவர் பயன்படுத்திக் கொண்டிருப்பான. மொத்தத்தில் மூன்று பேரும் சந்தோஷமாக இருக்கிறார்கள் என்று நினைத்துக் கொண்டேன். சொல்லுங்கள் டாக்டர்! நான் இப்படிப்பட்ட சுபாவத்தை படைத்தவளாக இருப்பது ஏதாவது ஆபத்திற்கு வழி வகுக்குமா? எதிர்காலத்தில் எனக்கு பிரச்னை ஏற்படுமா? நான் ஏதாவது சைகலாஜிகல் ட்ரிட்மெண்ட் எடுத்துக் கொள்ளணுமா?''

மறுமுனையில் கொஞ்ச நேரம் நிசப்தம். ''உங்களை பிரச்னை எனக்கு புரிந்து விட்டது.''

''தாங்க்ஸ்.''

''உங்கள் பிரச்னைக்குப் பரிகாரம் கொள்வதறகு சைக்கியாட்ரிஸ்ட் தேவையில்லை. வாழ்கையிடம் நேர்மையான அணுகுமுறை கொண்ட மனிதன் போதும்.''

அவள் பதில் பேசவில்லை.

தனக்குள் யோசித்துக் கொள்வதுபோல் கொஞ்ச நேரம் இருந்துவிட்டு அவன் கேட்டான். ''நீங்கள் யார் என்று வெளிப்படுத்திக் கொள்வதில் உங்களுக்கு விருப்பம் இல்லை. காரணம் என்ன?''

''அது அவ்வளவு அவசியம் என்று எனக்கு தோன்றவில்லை. என் மனதின் விபரீதப் போக்கைப் பற்றி தெரிந்து கொள்ளத்தான் இந்த போனும், உங்கள் ஃபீசும்.''

''என் ஊகம் சரியாக இருந்தால் உங்களுக்குத் தாய் தந்தையர் இல்லை. அன்புக்காக ஏங்கியிருக்கீங்க.''

அவள் பதில் பேசவில்லை.

''உங்களுக்குச் சிறுவயதிலேயே ஏதோ கொடுமை நடந்திருக்கணும். உங்களிடம் நிறைய பணம் இருந்திருக் கணும். எல்லோரும் உங்களை ஏமாற்றுகிறார் கள் என்ற எண்ணம் உங்கள் அடி மனதில் ஆழமாக படிந்து போயிருக் கணும். நீங்கள் உங்கள் பெயர் விலாசத்தைத் தராததற்கு காரணம் என்னவென்று என்னால் ஊகித்துக் கொள்ள முடிகிறது. செக்ஸ் சம்பந்தப்பட்ட காட்சியை நீங்கள் பார்த்தது, அதை சாதாரணமாக எடுத்துக் கொண்டது... இதெல்லாம் தெரிந்தால் எங்கே நான் கூட உங்கள் மீது ஆர்வம் காண்பித்து முயற்சி செய்யத் தொடங்கி விடுவேனோ என்பதுதான் உங்கள் சந்தேகம். உங்கள் மனநல மருத்துவரின் மீது கூட உங்களுக்கு நம்பிக்கை இல்லை.''

அவள் அதற்கும் பதில் சொல்லவில்லை. ஆனால் மனதிலேயே அவன் புத்தி சாதுரியத்திற்கு வியந்து போனாள். உண்மையிலேயே அப்படித்தான் எண்ணி யிருந்தாள்.

அவன் சொன்னான். ''உங்கள் நோயின் பெயர் கார்லோசர்கோமா ஆஃப் மெட்யூலா சிண்ட்ரோம். மனித உறவுகள் எல்லாமே சுயநலம் மிகுந்தவை என்ற உங்கள் மன இயல்புக்கு ஒரே ஒரு மருந்து இருக்கிறது.''

''அது என்ன?''

''மானசீகமான சோபனம்! அதாவது மனதிலேயே உறவு வைத்துக் கொள்வது... அதாவது காதலிப்பது என்று அர்த்தம்.''

அவள் முகம் சிவந்தது. அவன் உண்மையாகவே சொல்கிறானா அல்லது தன்னை டீஸ் செய்வதற்காக சொல்கிறானா என்று தெரியவில்லை. அவனுக்கு சுமார் ஐம்பத்தைந்து வயது இருக்கலாம் என்று அவளுக்குத் தெரியும். அதற்குள் அவன் சொன்னான்.

''உங்கள் பெர்சனல் மேனேஜர் வேலை விஷயமாக வெளியூர்களுக்கு போய்க் கொண்டு சந்தோஷமாக இருக்கிறார் என்று உங்களால் எப்படி சொல்ல முடியும்? தன் வீட்டார் அத்தனை பேரையும் காப்பாற்றுவதற்காக அவர் கஷ்டப்படுகிறார். அவரிடம் சுயநலம் இல்லை. அவர் மனைவி உங்கள் டிரைவரோடு சந்தோஷமாக இருப்பதாக சொன்னீங்க. அதாவது அவள் தன் கணவனை நேசிக்கவில்லை என்று அர்த்தம். கேவலம் பாதுகாப்புக் காக அவருடன் இருந்து கொண்டு, தான் வேறு விதத்தில் சந்தோஷமாக இருக்கிறாள்.''

ஸ்ரீ கல்யாணி அவன் சொன்னதை கவனமாக கேட்டுக் கொண்டிருந்தாள்.

''உங்கள் ஃபேக்டரியில் வேலை செய்துகொண்டே உங்கள் ரகசியங்களை இன்னொருவனுக்கு விற்றுக் கொண்டிருக்கும் ஆள் மீது உங்களுக்கு எவ்வளவு கோபம் வருமோ அதே கோபம் அவள் மீதும் வரவேண்டும். அப்படி வரவில்லை என்றால் உங்களுக்குக் கூட செக்ஸ் மீது உள்ளூர விபரீதமான ஆர்வம் இருந்திருக்கணும். இருபத்தைந்து வயதாகி விட்ட போதிலும் உங்களுக்கு ஒருக்கால் இன்னும் திருமணம் ஆகியிருக்காது.''

அவள் ஏதோ கோபமாக சொல்லப் போனவள் தன்னை கட்டுப்படுத்திக் கொண்டாள்.

அவன் சொன்னான். ''உங்கள் வாதம் தான் சரியானது என்றால் நாளை காலையில் உங்கள் டிரைவர் உங்களிடம் வந்து 'இரண்டு பேரும் சும்மாதானே இருக்கிறோம். உல்லாசமாக கழிப்போம் வா' என்று சொன்னால் நீங்கள் ஒப்புக் கொள்ளணும், அதனால் இரண்டு பேருக்கும் லாபம்தானே தவிர நஷ்டமில்லை என்பதால். இதுதான் உங்கள் வாதம்?''

''ஷட் அப்!'' அறையே அதிரும்படியாக கத்திவிட்டு போனை வேகமாக வைத்தாள். அவளுக்கு விவரம் தெரிந்த திலிருந்து அவளை இந்த அளவுக்கு யாரும் அவமானப் படுத்தியதில்லை. குறைந்த பட்சம் அப்படிப் பேசக் கூட முயன்றதில்லை.

அன்றிரவு அவள் தூங்கவில்லை. ரொம்ப நேரம் குறுக்கும் நெடுக்குமாக நடைபயின்று கொண்டே இருந்தாள். காலை ஆறு மணி வரையிலும் விழித்துக் கொண்டுதான் இருந்தாள். ஏழுமணியாகும் போது மறுபடியும் போன் செய்தாள்.

''ஹலோ!'' என்று மறுமுனையிலிருந்து குரல் கேட்டதும் ''இதோ பாருங்க. நேற்றிரவு நீங்கள் என்னை ரொம்ப அவமானப்படுத்தினீங்க. ஒரு பேஷண்ட் உங்களை நம்பி எல்லாவற்றையும் சொன்னால்...'' என்று ஏதோ சொல்ல வந்த போது மறுமுனையிலிருந்து ''இந்தாம்மா! நீ என்ன பேசுகிறாய் என்று எனக்கு ஒன்றும் புரியவில்லை. நான் இப்பொழுதுதான் பம்பாயிலிருந்து வருகிறேன்'' என்று கேட்டது.

வானமே இடிந்து தலை மீது விழுந்துவிட்டாற்போல் அவள் அப்படியே நின்று விட்டாள்.

''நான் பேசுவது சைக்கியாட்ரிஸ்ட் அஸ்வத்தாம னோடு தானே?''

''ஆமாம்.''

''நேற்று நான் அனுப்பிய பாங்க் டிராப்ட்...''

''மேஜை மீது இருக்கு. யார் அனுப்பியிருப்பார்கள் என்று இப்பொழுதுதான் யோசித்துக் கொண்டிருந்தேன்.''

நேற்றிரவு தன்னிடம் பேசிய குரலுக்கும் இந்தக் குரலுக்கும் இருந்த வித்தியாசத்தை அப்பொழுதுதான் கவனித்தாள். அவள் இதழ்கள் அதிரத் தொடங்கின. அது ஆவேசமா, அவமானமா என்று தெரியாத நிலை. அவன் யாரோ தன்னை நன்றாக முட்டாளாக்கி விட்டான்.

அவள் கடுமையாக, மிகத் தெளிவாக சொன்னாள். ''நேற்றிரவு உங்கள் போனில் என்னோடு யாரோ பேசினார்கள். அவன் செய்த அவமானத்திற்கு அவனை நான் சும்மா விடமாட்டேன். இனி வாழ்க்கையில் ஒரு நாளும் இப்படி யாரையும் ஏமாற்றாதபடி பாடம் கற்பித்து விடுகிறேன்.''

''அம்மா! நீங்க யாரு? இதெல்லாம் என்ன?'' மறுமுனையில் அவர் பேசிக் கொண்டிருந்தார். அவள் போனை வைத்து விட்டாள்.

நேற்றிரவு நடந்த சம்பவத்தை விட இது இன்னும் அவமானம். அவள் ரத்தம் சலசலவென்று கொதிக்கத் தொடங்கியது. மறுமுனையிலிருந்த நபர் மனநல நிபுணர் என்று எண்ணிக் கொண்டு எல்லாவற்றையும், ஆதிமுதல் அந்தம் வரையில் எவனோ வழிபோக்கனிடம் சொல்லி விட்டாள். கரை கண்ட மேதையை போல் அவன் அந்தப்

பக்கத்திலிருந்து அறிவுரை சொன்னபோது காதில் பூ வைத்துக் கொள்ளாத குறையாக கேட்டுக் கொண்டாள். இடையிடையே அவன் சிரித்த சிரிப்பிற்கு அர்த்தம் இப்பொழுதுதான் புரிகிறது.

நேற்றிரவு நடந்த சம்பவத்தை நினைக்க நினைக்க அவள் உடல் பற்றி எரிந்து கொண்டிருந்தது. இவ்வளவு தொழிற்சாலைகளுக்கு அதிகாரி அவள்! ஒரு கண்ணசைப்பில் நூறு பேரை அடி பணிய வைக்கக்கூடிய தன்னை, இவ்வளவு தூரத்திற்கு ஏமாற்றிய அந்த ஆள் யாரோ, இனி ஒரு நாளும் யார் மீதும் பிராக்டிகல் ஜோக் செய்ய முடியாதபடி பாடம் கற்றுக் கொள்வான்.

அவள் போனை அருகில் இழுத்துக் கொண்டு டயல் செய்யத் தொடங்கினாள்.

2

''**கா**ர்த்திக்! இப்படி வா உள்ளே.'' இண்டர்காமில் கூப்பிட்டார் அஸ்வத்தாமன். அவருக்கு வயது ஐம்பதை தாண்டி ஏழெட்டு ஆண்டுகள் இருக்கும். முப்பது வயது இளைஞனாக தென்படவேண்டும் என்று முயற்சி செய்து கொண்டிருப்பார். மேதாவியை போல் காட்டிக் கொள்ள முயன்றபடி பேசுவார். வெறும் வெற்று வேட்டு என்று தெரியாத நோயாளிகள் ஏமாந்து போய்க் கொண்டிருப் பார்கள். தம் எழுத்துக்களை விட பத்து வருடங்களுக்கு முன்னால் எடுத்துக் கொண்ட போட்டோ மூலமாக வாசகர்களை கவர்ந்திழுக்க நினைக்கும் (பெண்) எழுத்தாளர்களின் சாணக்கியத்தனம் அவரிடம் நிறையவே தென்படும். மருந்துகளை விட பேச்சு மூலமாகவே

பேஷண்டுகளை வசப்படுத்திக் கொண்டு ஃபீசை கறந்து விடுவார்.

கார்த்திகேயன் வந்து பணிவோடு நின்றான்.

''நேற்று இரவு யாரோ பேஷண்ட் போன் செய்தபோது வாய்க்கு வந்தபடி பேசினாயாமே?''

கார்த்திகேயனுக்கு விஷயம் புரிந்து விட்டது. மெதுவாக சொன்னான் ''நேற்று மதியம் எனக்கு ஒரு பாங்க் டிராப்டும், சிறிய குறிப்பும் வந்தது டாக்டர். அதில் எழுதியிருந்தாற்போலவே பெண் ஒருத்தி தன் பெயரை சொல்லாமலேயே போன் செய்தான். டாக்டர் இல்லைன்னு நான் சொல்ல வருவதற்குள் அவள் தன் கஷ்டத்தைச் சொல்லத் தொடங்கிவிட்டாள்.''

''அதனால் நீ அவள் கஷ்டத்தை எல்லாம் கேட்டாய். கேட்டு விட்டு அறிவுரை வழங்கியிருக்கிறாய். அப்படித் தானே?'' குரலை உயர்த்திக் கத்தினார்.

''இல்லாவிட்டால் ஃபீசை திருப்பி வாங்கிக் கொள்ள மாட்டேன் என்றும், எதாவது அனாதை இல்லத்திற்கு அனுப்பிவிடச் சொல்லியும் சொன்னாள்.''

''இந்த க்ளினிக்கிற்கு டாக்டர் நீயா நானா?''

''நிச்சயமாக நீங்கதான் சார். நான் வெறும் ஆபீஸ் பாய் கம் ரிசப்ஷனிஸ்ட் கம் காபிபாய்.''

''அப்படி இருக்கும் போது யாராவது பேஷண்ட் போன் செய்தால் நீயே டாக்டர் போல் பேசிவிடுவதா? இடியட்!''

கார்த்திகேயனின் முகம் தொய்ந்து விட்டது. ஆனாலும் சூழ்நிலையை எளிதாக்க விரும்பி, ''இதற்கு

இரண்டு காரணங்கள் இருக்கு சார். முதலாவது அவள் நான் சொல்வதை காதில் போட்டுக் கொள்ளாமல் போனது. இரண்டாவது தான் பேஷண்ட் இல்லை என்றும், தான் சொன்னதைக் கேட்டால் போதும் என்றும் அவள் சொன்னது.''

''நிறுத்து! அவள் ரொம்ப கோபமாக உன்னை ஒரு கை பார்த்து விடுகிறேன் என்று சொல்லிவிட்டு போனை வைத்து விட்டாள். குரலைக் கொண்டு பார்த்தால் ரொம்ப செல்வாக்கு உள்ளவளைப் போல் தெரிகிறது. அப்படி என்னதான் சொன்னாள்?''

கார்த்திகேயன் மேலும் சஸ்பென்ஸை கூட்டியபடி ''அந்த விஷயம் நமக்கு தெரிந்து விட்டது என்றுதான் அவள் கலங்கிப் போய்க் கொண்டிருக்கிறாள்'' என்றான்.

அஸ்வத்தாமன் ஒரே பாய்ச்சலாக நாற்காலியை விட்டு எழுந்துகொண்டு, ''என்ன சொன்னாள்? அந்த விஷயத்தைச் சொல்லு'' என்றார் பி.பி. பேஷண்டைப் போல்.

''நிலா வெளிச்சத்தில் மரத்திற்கு பின்னால் ஆணும் பெண்ணும் சேர்ந்திருப்பதைப் பார்த்தாளாம். அந்த வயதில் ரத்த ஓட்டம் அதிகரிப்பது போய், ஏதோ சர்க்கஸை பார்த்தாற் போல் சந்தோஷமாக இருந்ததாம். இது ஏதாவத மனநோயா என்று கேட்டாள்.''

''நீ என்ன சொன்னாய்?''

''கார்லோ சர்கோமா ஆஃப் மெட்யூலா சிண்ட்ரோம் என்று சொன்னேன்.''

''இதென்ன நோய்? நான் கேள்விப் பட்டதே இல்லையே?''

''நானும் கேட்டதில்லை. ஆனால் நோயின் பெயர் பெரிதாக இருந்தால் நன்றாக ஃபீஸ் வசூல் பண்ணலாம்னு மருத்துவப் படிப்பை முடித்து விட்டு வந்த உங்கள் மகனிடம் நீங்கள் சொல்லிக் கொண்டிருந்ததைக் கேட்டேன்.''

''ஷட் அப்! உன்னை இப்பொழுதே டிஸ்மிஸ் செய்கிறேன்.''

கார்த்திகேயன் உடனே பதில் சொல்லவில்லை. மெதுவாக சொன்னான். ''இது அநியாயம் சார்.''

''ஒரு பொறுப்பான டாக்டரை நம்பி பேஷண்ட் தன் ரகசியங்களைச் சொன்னால் அதை நீ கேட்கலாமா? எனக்கு வந்த போனை எடுத்துப் பேசுவதற்கு என்ன தைரியம் உனக்கு?''

''அன்றைக்கு எங்க பக்கத்து வீட்டுப் பெண் போன் செய்த போது 'நான்தான் கார்த்திக்' என்று சொல்லிவிட்டு நீங்கள் கணக்காக பேசவில்லையா சார். அதுவும் இந்த வயதில்'' என்றான் கடைசி வார்த்தையைக் கொஞ்சம் விழுங்கிக் கொண்டே.

அஸ்வத்தாமன் திடுக்கிட்டு ''வாட்!'' என்றார்.

''என்ன சார் இது என்று நான் கேட்ட போது 'இதெல்லாம் சைகாலஜி ஸ்டடீ. உனக்குப் புரியாது. டாக்டர்களுக்கு இதெல்லாம் ரொம்ப அவசியம்' என்று சொன்னீங்க. அதோடு மேலும் ஸ்டடீ செய்வதற்காக டின்னருக்குக் கூட கூப்பிட்டீங்களாம்.''

அஸ்வத்தாமன் நாற்காலியை விட்டுச் சரேலென்று எழுந்து நின்றார். கார்த்திகேயன் தொடர்ந்தான். ''பாவம் அந்தப் பெண். அவங்க வீட்டில் ஆண் துணை இல்லை.

என்னை அண்ணா என்று அழைப்பாள். அவளுடைய அம்மாவுக்கு வயிற்றுவலி வந்திருக்குன்னு சொன்னபோது 'நானும் டாக்டர்தான். இங்கே அழைத்துக் கொண்டு வா'ன்னு சொன்னீங்களாம்.''

''கெட் அவுட்! வெளியே போ.'' கத்தினார் அஸ்வத்தாமன்.

''சார்'' என்றான் கார்த்திகேயன். ''நேற்றிரவு என்னோடு பேசிய கோடீஸ்வரி யாரோ தெரியாது. காலையில் 'உங்களை ஒரு கை பார்த்து விடுகிறே'ன்னு சொன்னதுமே நீங்கள் இந்த முடிவை எடுத்துக் கொள்வீங்க என்று எனக்குத் தெரியும். சின்ன ஆபத்திற்கே அளவுக்கு மீறி பயந்து போய் நம்மை நாம் காப்பாற்றிக் கொள்வதற்காக அடுத்தவர்களை காவு கொடுக்கும் சைகாலஜியை என்னவென்று சொல்வாங்க தெரியுமா? S.T.S.F. காம்ப்ளெக்ஸ்.''

கோபத்தால் அஸ்வத்தாமனுக்கு மூச்சிரைத்தது. ''என் நோய் என்னவென்று எனக்குத் தெரியும். நீ ஒன்றும் சொல்லத் தேவையில்லை.''

கார்த்திகேயன் சிரித்துவிட்டு, ''என்ன தெரியும் உங்களுக்கு? S.T.S.F. என்றால் என்னவென்று சொல்லுங்கள் பார்ப்போம்'' என்றான்.

''நீ போகப் போகிறாயா? போலீசை கூப்பிடட்டுமா?''

கார்த்திகேயன் நகரவில்லை. ''ஆறு மாதங்கள் உங்களுக்குக் கீழே வேலை செய்தேன். உங்களுடைய சைகாலஜியை சொல்கிறேன். கேளுங்கள். நேற்று அந்தப் பெண் செய்த போன் காலை நீங்கள் மட்டும் எடுத்திருந்தால்

பல விதமான நோய்களின் பெயர்களை சூட்டி, கடைசியில் அந்தப் பெண் உங்களை சந்திக்கும்படியாக செய்வீங்க. சைகாலஜிஸ்டிடமிருந்து கைனகாலஜிஸ்டிடம் போகும் படியாக செய்திருப்பீங்க. நான் ஒரு டாக்டர் இல்லை என்றாலும் நேர்மையுள்ள மனிதனாக 'எந்த நோயும் இல்லை'ன்னு சொன்னேன். அதன் விளைவாக வேலையை இழந்து நிற்கிறேன். நோ ரிக்ரெட்ஸ்'' என்று வாசல் வரை போய் கதவைத் திறந்து விட்டு நின்றான். திரும்பிப் பார்த்து விட்டு மெதுவாக சொன்னான். ''S.T.S.F. என்றால் ஷாடோ த்ரெட் ஸ்நக் ஃபியர்.''

கதவைச் சாத்திவிட்டு வெளியே உட்கார்ந்து கொண்டிருந்த நோயாளிகளை மனப்பூர்வமாக வாழ்த்தி விட்டு, அவன் வெளியே நடந்தான்.

★

''என்ன பாய்? எவ்வளவு தடவைதான் எண்ணுவாய்?'' உஸ்மான் கேட்டான்.

''வேலை போய் விட்டது. கையில் இருக்கும் பணத்தில் எத்தனை ரொட்டி சாப்பிட்டு, எத்தனை கப் டீ குடிக்க முடியும்னு கணக்குப் பார்க்கிறேன்.''

அவ்விருவரும் நண்பர்கள். வீட்டிற்கு ஒரு பர்லாங்கு தூரத்திலிருந்த ஹோட்டலில் உட்கார்ந்து இருந்தார்கள். கார்த்திகேயன் தொலைவில் தென்பட்டுக் கொண்டிருந்த தன்னுடைய வீட்டை பார்த்துக் கொண்டே ''இந்த மாத வாடகை வேறு தரணும்'' என்றான் தனக்குள் சொல்லிக் கொள்வது போல்.

''நேற்று வரை வேலை பார்த்ததற்கு சம்பளம்?''

''கொடுத்துத்தான் அனுப்பிவிட்டார்.''

''ஏன் இப்படி திடீரென்று நீக்கினார்?''

''பெண் நோயாளி ஒருத்தி வந்தாள். நான் தான் டாக்டர் என்று சொல்லி டெஸ்ட் பண்ணணும் என்ற சாக்கில் கற்பழித்து விட்டேன். அவள் முதலமைச்சரோட மூன்றாவது மனைவியின் மகளாம். அவர் ரவுடீக்களை அனுப்பி க்ளினிக்கை துவம்சம் பண்ணி விடுவாரோ என்ற பயத்தில் என்னை வேலையை விட்டு நீக்கிவிட்டார் எங்க டாக்டர்.''

''நான் நம்ப மாட்டேன். ஆனாலும் நீ ஜோக்கைக் கூட இவ்வளவு சீரியஸாக சொல்கிறாயே.''

''என்னுடைய வேலை போய் விட்டது ஜோக் இல்லை. நாளையிலிருந்து பட்டினி கிடக்கப் போவதும் ஜோக் இல்லை.''

''அதான் ஒரு மாதச் சம்பளத்தைத் தந்ததாக சொன்னாயே? என்ன செய்தாய்?''

''செலவு செய்து விட்டேன்.''

''ஒரே நாளிலா? அப்படி என்ன செலவு?''

''கணக்கு எழுதவில்லை. நினைவு இல்லை.''

தேநீர் குடித்துக் கொண்டே உணர்ச்சியற்ற குரலில் பதில் சொல்லிக் கொண்டிருந்த கார்த்திகேயனை ரொம்ப நேரம் பார்த்துக் கொண்டிருந்தான் உஸ்மான். கார்த்தி கேயன் தேநீர் குடித்து முடித்தான். நிசப்தத்தைச் சிதறடித்த படி உஸ்மான் சொன்னான். ''நீ ரொம்ப உயர்ந்தவன் பாய்.''

கார்த்திகேயன் சிரித்து விட்டு ''ரொம்ப பெரிய ரகசியத்தைக் கண்டு பிடித்து விட்டாயே. எப்படி?'' என்றான்.

''நேற்று இரவு உன் வீட்டுச் சொந்தக்காரரின் மனைவிக்கு வயிற்றுவலி வந்து ஆபரேஷன் செய்ய வேண்டி வந்தது என்றும், அவளை ஆஸ்பத்திரியில் சேர்த்து அந்தப் பணத்தை நீ கட்டியதாகவும் ரஜியா சிஸ்டர் சொன்னாள்.''

''அதனால் உயர்ந்த மனிதன் ஆகிவிட்டேனா?'' எழுந்துகொண்டே கேட்டான்.

''இல்லை பாய்! லட்சாதிபதி ஒருத்தன் ஆயிரம் ரூபாய் தானம் செய்தாலும் பத்து பேருக்கு அது தெரிய வேண்டும் என்று நினைப்பான். நாளைக்கு என்னவாகுமோ என்ற யோசனை எதுவும் இல்லாமல் கையிலிருந்த பணத்தை எல்லாம் செலவழித்து விட்டாய். அதை கூட பெரிய விஷயமாக நினைக்கவில்லை. ஆனால் இந்த விஷயத்தை என்னிடம் சொல்வதற்குக்கூட நீ ஆர்வம் காட்டவில்லை. அதுதான் உயர்ந்த பண்பு! தன் பெருந் தன்மையை மற்றவர்கள் தெரிந்து கொள்ளணும் என்று நினைக்காமல் இருப்பதுதான் எல்லாவற்றையும் விட பெரிய விஷயம். ஒன்று கேட்கிறேன். பதில் சொல்லு. பணத்தை இவ்வளவு துச்சமாக மதிக்கிற சுபாவம் உனக்கு எப்படி வந்தது?''

''உஸ்மான்! என் தந்தை ஒரு ஜமீன்தார். அந்தக் காலத்திலேயே கோடீஸ்வரர். வைப்பாட்டியின் மோகத்தில் விழுந்து, சொத்தையெல்லாம் அவள் பெயருக்கு எழுதி வைத்து விட்டார். பத்து வருடங்கள் அம்மா ஏறக்குறைய பிச்சை எடுத்து என்னை படிக்க வைத்தாள். ஒரு பைசா கூட அப்பாவிடமிருந்து வாங்கிக் கொள்ளவில்லை. நோய் வாய்ப்பட்டு பிச்சைக்காரனை போல் திரும்பி வந்த அப்பாவை அம்மா ஒரு தாயாக பேணிப் பாதுகாத்தாள்.

உண்மையான அன்பு என்றால் என்னவென்று எனக்கு அப்பொழுதுதான் தெரிந்தது உஸ்மான்.''

''நீ என்ன படித்திருக்கிறாய்?''

''எங்க அம்மா அப்பாவின் வாழ்க்கையை.''

''புரிகிற மாதிரி சொல்லு பாய்.''

''பணத்தால் அன்பை வாங்க முடியும்னு எண்ணிய அப்பா ஹீனமான வாழ்க்கையை வாழ்ந்தார். அன்பால் மனிதர்களை கட்டிப் போட முடியும் என்ற கொள்கையை நம்பிய அம்மா மகாராணியைப் போல் வாழ்ந்தாள். வாழ்க்கையில் கற்றுக் கொள்ள வேண்டிய பாடம் இதை விட வேறு என்ன இருக்க முடியும்?''

உஸ்மான் கொஞ்சம் தடுமாறிவிட்டு ''அந்தக் காலத்து ஜமீன்தார்களுக்கு இதெல்லாம் சர்வ சாதாரணம் என்று நினைக்கிறேன்'' என்றான்.

''அந்த நாட்களில் எங்கள் ஜமீனில் தினமும் ஐம்பது இலைகளாவது விழும். அம்மா அருகில் இருந்து சமையலை மேற்பார்வை செய்வது வழக்கம். ஒரு முறை புடவை தீப்பற்றிக் கொண்டு முகம், உடம்பு எல்லாம் கருகிப் போய் விட்டது. அதுவரை அன்பாக இருந்த அப்பா, அம்மா குடும்ப வாழ்க்கைக்கு லாயக்கு இல்லாமல் போய்விட்டதால் திசைமாறி போய் விட்டார். காதலியின் அழைப்பிற்காக சொத்தை எல்லாம் செலவு செய்து பிச்சைக்காரனாகி விட்டார்.''

''எங்க முஸ்லிம்களில் இரண்டு கல்யாணம் செய்துகொள்வது குற்றம் இல்லை.''

''நான் மதத்தைப் பற்றி சொல்லவில்லை. மனதைப் பற்றி சொல்கிறேன். வாழ்க்கையில் ஒருத்தரை காதலித்த

பிறகு இன்னொருத்தர் மீது பார்வை எப்படி போகும் பஸ்மான்? அடுத்தவங்களுக்கு கொஞ்சம் உடம்புக்கு ஏதாவது வந்து விட்டால் காதல் போய் விடுமா? எனக்கென்னவோ காதலுக்கு இருக்கிற மதிப்பு வேறு எதுக்குமே கிடையாது என்று தோன்றுகிறது. அதனால்தான் பணத்தைக் கண்டாலே வெறுப்பு எனக்கு.''

★

''இந்த உலகத்தில் பணத்தைத் தவிர வேறு எதுவும் கிடையாது என்றும், பணத்திற்காக மனிதன் எவ்வளவு நீச்சமான காரியத்தையும் செய்வான் என்றும் இதோ... இத்தனை ரிப்போர்ட்டுகள் பறைசாற்றுகின்றன. அப்படித் தானே'' என்றாள் ஸ்ரீகல்யாணி மேஜை மீது பைல்களை போட்டபடி.

சிக்மா டிடெக்டிவ் ஏஜென்ஸியின் டைரக்டர் பிரதாப் பதில் பேசவில்லை. மூன்று மாதங்களுக்கு ஒரு முறை ஸ்ரீகல்யாணி சம்பந்தப்பட்ட பல்வேறு கம்பெனிகளில் வேலை பார்த்துக் கொண்டிருந்த அதிகாரிகள் திரை மறைவில் நடத்தி வந்த இருட்டு விவகாரங்களை பற்றிய ரிப்போர்ட்டுகளை அவரே அவளிடம் ஒப்படைப்பார். சுமார் பத்து உயர் அதிகாரிகள் அவள் கம்பெனியை எப்படியெல்லாம் ஏமாற்றி பணத்தை சுருட்டிக் கொண்டு இருக்கிறார்கள் என்ற விவரமெல்லாம் அந்த ரிப்போர்ட்டுகளில் இருந்தது.

''நீங்கள் எனக்கு ஒரு விஷயத்தைப் பற்றி துப்புத் துலக்கி சொல்லணும்'' என்றாள் அவள்.

''என்ன?''

''சைக்கியாட்ரிஸ்ட் அஸ்வத்தாமனைத் தெரியும் இல்லையா?''

''அந்தக் கிழவரா? அவருக்கு ஆனா ஆவன்னா கூடத் தெரியாது. நாலு அமெரிக்கன் டிக்ரிக்களை வைத்துக் கொண்டு ஃபீசை பிடுங்கும் ஆசாமி.''

''அவரைப் பற்றி நமக்கு அனாவசியம். அவரிடம் அஸிஸ்டெண்ட் ஒருவன் இருக்கிறான். அஸ்வத்தாமன் இல்லாதபோது வரும் போன் கால்களுக்கு பதில் சொல்லுவான். இரவு நேரத்திலும் க்ளினிக்கிலேயே இருப்பான் போலிருக்கு. அவனைப் பற்றி எல்லா விவரமும் வேண்டும், பெயர் உள்பட.''

'ஏன்?' என்று பிரதாப் கேட்கவில்லை. சிக்மா ஏஜென்ஸி இப்படிப்பட்ட விஷயங்களில் அதிகமாக விவரங்கள் கேட்காது. ஃபீசு மட்டும் கேட்கும். பிரதாப் எழுந்து கொண்டே ''கூடிய சீக்கிரத்தில் நீங்கள் கேட்ட விவரங்களை அனுப்பி வைக்கிறேன் மேடம்'' என்றார்.

அவர் கிளம்பிப் போன பிறகு அவள் ஃபைலை எடுத்தாள். தொலைவில் காம்பவுண்ட் சுவற்றுக்கு அப்பால் யாரோ ஒரு பெண்ணின் அழுகை குரல் கேட்டது. தினமும் இரவில் அவள் கணவன் அவளை நன்றாக அடிப்பான்; ஆனாலும் அவனோடு தான் இருந்து வருகிறாள். எதிர் வீட்டுக் கல்லூரி மாணவனின் அறையில் ஒரு தடவை பிடிபட்டாள். பெரிய ரகளை நடந்தது. ஆனாலும் சேர்ந்துதான் வசித்துக் கொண்டிருந்தார்கள்.

அவள் ஃபைலை பார்வையிட்டாள். தன் கம்பெனியில் வேலை செய்து வந்த சிலர் ரகசியமாக எவ்வளவு சொத்து சேர்த்திருக்கிறார்கள் என்பதைப் பற்றி சொல்லும் சீக்ரெட் ஃபைல். அவர்களுடைய தேவை முடியும் வரையிலும் பேசாமல் இருந்து விட்டு, பிறகு மெதுவாக ஒவ்வொருத்தராக கழட்டி விட வேண்டும்.

அவள் திரும்பவும் நினைத்துக் கொண்டாள். ''மனித ம றவுகள் எல்லாமே சுயநலம் மிகுந்தவைதான்.''

3

கார்த்திகேயன் சிக்மா கம்பெனிக்கு வந்து சேர்ந்த பொழுது பத்தரை மணியாகி விட்டது. வெளியே வராண்டாவில் ஏறக்குறைய இருபத்தைந்து இளைஞர்கள் உட்கார்ந்திருந்தார்கள். ஆஃபீஸ் பாய் வேலைக்குத்தான் இண்டர்வியூ என்றாலும் பாதி பேருக்கு மேல் பட்டதாரிகள் வந்திருந்தார்கள். அவனும் அவர்களோடு சேர்ந்து பொதுவாக பேசிக் கொண்டிருந்தான்.

''நீங்க என்ன படித்திருக்கீங்க?'' பக்கத்திலிருந்தவ னுடன் உரையாடலை தொடங்கிக் கொண்டே கேட்டான்.

''பட்டப்படிப்பு.''

மேலும் ஐந்து நிமிடங்கள் உரையாடிய பிறகு கார்த்திகேயன் சொன்னான். ''நான் ஏதோ இண்டர்வியூ பற்றி படித்தேன். இப்படித்தான் நிறைய பேரை அழைத் திருந்தார்கள். எல்லோரும் வந்து உட்கார்ந்து கொண்டார்கள். சுவற்றில் ஒரு மூலையில் சிலந்திக் கூடு இருந்தது. அவர்களில் ஒருத்தன் போய் அதை நீக்கி சுத்தம் செய்தான். அவனுக்கு அந்த வேலை கிடைத்து விட்டது.''

பக்கத்திலிருந்தவன் வியப்புடன் ''எப்படி கிடைத்தது?'' என்று கேட்டான்.

''தான் வேலை பார்க்கப் போகிற ஆபீஸ் சுத்தமாக இருக்கணும்னு வேலை கிடைப்பதற்கு முன்னாடியே நினைத்ததால்.''

இவ்விருவரின் உரையாடலைக் கேட்டுக் கொண்டிருந்த இன்னொருத்தன் ஏதோ வேலை இருப்பது போல் அங்கிருந்து நகர்ந்து ரொம்ப காஷுவலாக மேஜைக்குப் பக்கத்தில் விழுந்து கிடந்த நியூஸ் பேப்பர்களை எடுத்து அடுக்கி வைத்தான்.

''அவன் சிலந்திக் கூட்டை நீக்கியதை மேனேஜ் மெண்டில் யாராவது பார்த்தார்களா?''

''அந்த இண்டர்வியூவுக்கு வந்தவர்களுக்கிடையே மேனேஜ்மெண்டின் ஆளும் இருந்தான்'' என்றான் கார்த்திகேயன்.

பக்கத்திலிருந்தவன் அதிர்ந்து போனவனாக ''இங்கே கூட அதே போலவேதான் நடக்கும் என்று சொல்றீங்களா?'' என்று கேட்டான்.

''யாருக்குத் தெரியும்? டிடெக்டிவ் ஏஜென்ஸி இல்லையா? யார் என்ன செய்கிறார்கள் என்று மாறு வேடத்தில் இங்கேயே சுற்றிக் கொண்டிருக்கலாம்'' என்று சொல்லிவிட்டு போய்விட்டான். ஜேபியில் ஒன்றரை ரூபாய் இருந்தது. கடைசி ரொட்டியைத் தின்று விட்டு, தேநீரைக் குடித்து விட்டு ஒரு மணி நேரம் கழித்து திரும்பி வந்தான்.

கற்பனை உலகத்தில் சஞ்சரித்துக் கொண்டே நடந்து கொண்டிருந்தான்.

சிக்மா டிடெக்டிவ் ஏஜென்ஸியின் டைரக்டர் பிரதாப் சுழலும் நாற்காலியில் கிர்ரென்று திரும்பினார். ''உன் புத்திசாதுர்யத்தை உண்மையிலேயே பாராட்டுகிறேன். ஒரு பைசா செலவில்லாமல் என் ஆபீஸை, சுத்தமாக, துப்புறவாக மாற்றிவிட்டாய். உன்னை உடனே என் சிக்மா

டிடெக்டிவ் ஏஜென்ஸியில் நானூறு ரூபாய் சம்பளத்தில் ஆபீஸ் பாயாக நியமித்து ஆணை பிறப்பிக்கிறேன்.''

''தாங்க்யூ சார்.''

காலில் கல் இடறவே இந்த உலகத்திற்கு திரும்பினான் கார்த்திகேயன்.

சிக்மா ஏஜென்ஸியின் உயரமான கட்டிடம் ஏறக் குறைய ஆளரவமில்லாமல் இருந்தது. அவனுக்கு ஆச்சரிய மாக இருந்தது, அத்தனை பேரின் இண்டர்வியூவும் அதற்குள் எப்படி முடிந்து விட்டது என்று.

மெதுவாக உள்ளே போனான். ரிசப்ஷனிஸ்ட் நாற்காலி காலியாக இருந்தது. என்னதான் நடந்தது என்று யாராவது வேலைக்காரனைப் பார்த்து விவரம் கேட்போம் என்று நினைத்தான். ஆனால் வேலைக்காரர்கள் இல்லாத தால்தானே அந்த வேலைக்கு ஆட்களை கூப்பிட்டிருக் கிறார்கள் என்று நினைவுக்கு வந்தது. மேலும் ஐந்து நிமிடங்கள் அப்படியே நின்றான். ரிசப்ஷனிஸ்ட் என்ன வேலையாக போயிருப்பாள் என்று தெரியவில்லை. துணிந்து டைரக்டர் என்று எழுதியிருந்த கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தான்.

உள்ளே பிரதாப் அங்குமிங்கும் நடைபயின்று கொண்டிருந்தார். அவர் கோபமாக இருக்கிறார் என்பது பார்த்தாலே புரிந்து விட்டது.

''யார் நீ?'' என்று கேட்டார்.

''இண்டர்வியூக்காக வந்தேன் சார். வெளியே யாருமே இல்லை'' என்றான் பணிவுடன்.

''பதினொரு மணிக்கு வரச்சொன்னால் இப்பொழுது தான் வருகிறாயா?''

''பதினொரு மணிக்கே வந்து விட்டேன் சார். வெளியே நிறைய பேர் இருந்தார்கள். வரிசைக் கிரமம் என்று எதுவும் இல்லை. அதனால் என் முறை வருவதற்கு எப்படியும் ஒரு மணி நேரமாவது ஆகும் என்று நினைத்தேன்.''

''ஓஹோ! நேரத்தின் மதிப்பு ரொம்பவும் தெரிந்தவன் என்று சொல்லு.''

கார்த்திகேயன் பதில் பேசவில்லை.

அதற்குள் போன் ஒலித்தது. பிரதாப் ரிசீவரை எடுத்து ''ஹலோ!'' என்றார். மறு முனையிலிருந்து ஒலித்த குரலைக் கேட்டதுமே நாற்காலியில் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டு ''சொல்லும்மா கல்யாணீ'' என்றார்.

மறுமுனையில் என்ன சொன்னாளோ தெரியாது. பிரதாப் முன்னால் குனிந்தார். ''நீ சொன்ன பிறகு இன்னும் தாமதம் செய்வதாவது? என் ஆட்கள் ரிப்போர்ட் முழுவதும் தயார் செய்து விட்டார்கள். அந்தக் கவர் என் மேஜை மீதுதான் இருக்கு. அந்த அஸ்வத்தாமனிடம் செகரெட்ரி என்று யாரும் இல்லை. ஒரு இளைஞன் இருந்தானாம். அவனை நேற்றுதான் வேலையை விட்டு நீக்கி விட்டாராம் அந்த டாக்டர். சொல்லும்மா அந்த ஏரியா இன்ஸ்பெக்டர் நம்ப ஆள்தான். அந்த டாக்டரை உள்ளே தள்ளி, அந்த ஆஸ்பத்திரியை சாசுவதமாக இழுத்து மூடச் செய்யட்டுமா?''

மறுமுனையில் அவள் ஏதோ சொன்னாள்.

''ஓஹோ! உங்களுக்கு வேண்டியது அந்த அசிஸ்டெண்ட்தானா? அந்த டாக்டர் இல்லைன்னு சொல்லுங்க. அந்த இளைஞனைப் பற்றி இன்வெஸ்டிகேட் செய்யச் சொல்லி என் ஆட்களுக்குச் சொல்கிறேன்.''

''.....''

''செ... இந்தச் சின்ன விஷயத்திற்குப் போய் ஃபீசெல்லாம் எதுக்கும்மா?''

''சரி. கவரை அனுப்பி வைக்கிறேன்'' என்று போனை வைத்து விட்டு, இன்னும் கார்த்திகேயன் அங்கேயே இருந்ததை பார்த்து விட்டு என்ன என்பது போல் பார்த்தார்.

''என் இண்டர்வியூ...'' பாதியிலேயே நிறுத்திக் கொண்டான். ஒருக்கால் ஸ்ரீகல்யாணி ஃபீசை அனுப்புவதாக சொன்னதால் ஏற்பட்ட பிரபாவமாக இருக்கும். ரொம்ப சந்தோஷமாக தென்பட்டார் பிரதாப். கார்த்திகேயனை பார்த்து ''உனக்கு இண்டர்வியூவா?'' என்றார்.

கார்த்திகேயன் பதில் சொல்லவில்லை. அவர் தொடர்ந்தார். ''உன்னை எதற்காக இண்டர்வியூ செய்யணும்? ஆபீசுக்கு வந்து விட்டு இங்கே பத்து இருபது பேர் ஜனம் இருந்ததைப் பார்த்து விட்டு காபி குடிக்க போனதற்காகவா?''

'எனக்கு நேரத்தின் மதிப்பு நன்றாக தெரிந்திருக்கு என்று நீங்கதானே இப்போ சொன்னீங்க' என்று சொல்ல வில்லை கார்த்திகேயன். எப்படியாவது இந்த வேலையை சம்பாதிக்க வேண்டும். இல்லாவிட்டால் நாளையிலிருந்து சாப்பாடு இல்லை. பணிவான குரலில் சொன்னான். ''நிறைய பேர் இருந்தாங்க சார். ஹாலை முழுவதும் நிரம்பி கொண்டு இருந்தாங்க. அவர்களோடு நானும் எதற்குன்னு வெளியே போய் விட்டு வந்தேன்.''

பிரதாப் முகத்தில் மலர்ச்சி தென்பட்டது. ''வெரி குட். உன்னை எனக்கு பிடித்து விட்டது. உடனே வேலைக்கு சேர்ந்து விடு'' என்றார். இம்முறை வியப்படைவது கார்த்திகேயனின் பங்காயிற்று.

''அவர்கள் அத்தனை பேரையும் போகச் சொல்லி விட்டேன். ஐந்து நிமிஷத்தில் எல்லோரையும் இண்டர்வியூ செய்து விட்டு போகச் சொல்லிவிட்டேன். ஏன் தெரியுமா?''

தெரியாது என்பது போல் தலையை அசைத்தான்.

''ஆபீசில் எல்லா இடங்களையும் சுத்தமாக்கி விட்டார்கள். எல்லாவற்றையும் ஒழித்து வைத்து விட்டார்கள். சிலந்தி வலை, ஒட்டடை எதுவும் விட்டு வைக்கவில்லை. இந்த வேலையைத் தட்டி பறிக்கும் முயற்சியா இதுன்னு கேட்டபோது அத்தனை பேரும் 'நான் நீ' என்று போட்டி போட்டார்கள். எல்லோரையும் ஒரே கத்தலில் 'கெட் அவுட்!' என்று அனுப்பி வைத்து விட்டேன். என்னை கேட்காமல் என் அனுமதி இல்லாமல் என் ஆபீசை ஒழித்து வைக்கலாமா?''

கார்த்திகேயன் மௌனமாக இருந்தான்.

''நீ இந்த நிமிஷத்திலிருந்து வேலையில் சேர்ந்து விடு. முதலில் அந்த ஃபிளாஸ்கில் இருக்கும் காபியை ஊற்றிக் கொடு.''

கார்த்திகேயன் காபியை கோப்பையில் ஊற்றிக் கொண்டிருந்த போது அவர் தொடர்ந்தார். ''எனக்கு என் ஆஃபீஸ் ஆல்ஃப்ரெட் ஹிச்காக் சினிமா செட்போல் இருக்கணும். எல்லா ஆபீஸ்களையும் போல் இருந்தால் கஸ்டமர்ஸ் வரமாட்டார்கள். டிடெக்டிவ் ஏஜெண்டின்

ஆபீஸ் தனித்தன்மையுடன் இருக்கணும்னு எனக்கு ஸ்காட்லாண்ட் யார்டில் சொல்லியிருக்காங்க. அதனால் தான் சிலந்தி வலைகளும், தாறுமாறாக போடப்பட்ட மேஜைகளும். ஒரு டிடெக்டிவ் ஏஜெண்டிடம் கஸ்டமர் வரும் போது அவன் மனநிலைக்கு தகுந்தவாறு இந்த ஆபீஸின் சூழ்நிலை இருக்க வேண்டாமா?''

'முதலில் இவருடைய மனநிலையைப் பற்றி எனக்குச் சந்தேகமாக இருக்கு.' கார்த்திகேயன் தன் மனதிற்குள் நினைத்துக் கொண்டான். கடந்த மூன்று நாட்களாக எல்லா கேசுகளுமே இதே போல்தான் எதிர்பட்டுக் கொண்டிருந்தன.

அவன் காபி கோப்பையை அவரிடம் தந்தான். அதை வாங்கிக் கொண்டே ''உனக்கு இந்த வேலையை ஏன் தந்தேன் தெரியுமா? அவர்களைப் போல் அனாவசியமான விஷயங்களில் நீ தலையிடாததால்தான்'' என்றார்.

''தாங்க்ஸ் சார்'' என்றான் கார்த்திகேயன். ''ஆனால் அவர்களை ஆபீசை எல்லாம் ஒழித்து வைக்கச் சொன்னது நான்தான்.''

அவர் கையிலிருந்த காபி கோப்பை நடுங்கி காபி மேலே சிந்தியது. ''வாட்!'' என்று கத்தினார்.

''இண்டர்வியூவுக்கு வந்து பார்த்ததுமே இந்த ஆபீசை பெருக்கக் கூட ஆள் இல்லைன்னு தோன்றியது. வேலை யாருக்குக் கிடைத்தால் என்ன? முதலில் ஆபீஸை துப்புறவாக மாற்றுவோம் என்று நினைத்தேன். பக்கத்தில் இருந்த ஆளிடம் அதைத்தான் சொன்னேன். நிமிஷத்தில் அந்தச் செய்தி பரவி, அவங்கவங்க வேலை கிடைக்கணும் மேன்னு பாய்ந்து பாய்ந்து சுத்தப்படுத்தியிருக்காங்க.

உங்களுக்கு ஹாரர் சினிமா செட் போன்ற ஆபீஸ்தான் பிடிக்கும்னு எனக்குத் தெரியாது. சாரி சார்.''

அதற்குள் அவர் ஆச்சரியத்திலிருந்து மீண்டு, ''இதெல்லாம் நீ சொல்லியிருக்கா விட்டால் உனக்கு வேலை கொடுத்திருப்பேன்'' என்றார்.

''நான் சாதாரணமாக பொய் சொல்ல மாட்டேன் சார்.''

''என் பொருட்களை அங்கேயிருந்து இங்கேயும், இங்கேயிருந்து அங்கேயுமாக மாற்றிப் போட்டதற்கே அவர்களுக்கு வேலை இல்லை போ என்று சொல்லி விட்டேன். அந்த யோசனையை சொன்னதே நீதான்னு தெரிந்த பிறகு உனக்கும் தரமுடியாது.''

''சரி சார். உங்களுக்கு எப்படி விருப்பமோ அப்படியே செய்யுங்கள்.'' கார்த்திகேயன் அறையை விட்டு வெளியே வந்தான்.

★

இரவு பத்துமணி ஆகிவிட்டது. படுக்கையில் படுத்திருந்தாளே தவிர ஸ்ரீகல்யாணிக்கு தூக்கம் வரவில்லை. போனை அருகில் இழுத்துக் கொண்டு டயல் செய்தாள். ஒரு நிமிடம் கழித்து மறு முனையிலிருந்து பிரதாப் குரல் கேட்டது. ''ஹலோ!''

''அந்த சைக்கியாட்ரிஸ்டிடம் இருந்த அசிஸ் டெண்டைப் பற்றிக் கண்டு பிடிக்கச் சொல்லி இருந்தேன்'' என்றாள்.

''கண்டு பிடித்து விட்டேன். அவன் பெயர் கார்த்திகேயன்.''

''கார்த்திகேயனா? பெயர் ரொம்ப நன்றாக இருக்கு.''

''அந்த டாக்டர் இல்லாதபோது போனை அவன்தான் எடுப்பான். அவன் தான் ரிசப்ஷனிஸ்ட், ரூம் பாய் எல்லாமே. அப்புறமாக அங்கே வேலையை விட்டு விட்டானாம்.''

''தற்சமயம் வேலை இல்லாமல் இருக்கிறானா?'' பிரதாப்பின் பேச்சை இடைமறித்துக் கொண்டே கேட்டாள்.

''ஆமாம். அவன் வீட்டு அட்ரெஸ் கூட இருக்கு. நாளைக்கு அனுப்புகிறேன்.''

''தேவையில்லை. ஆனால் நீங்கள் ஒரு உதவி செய்யணும். உங்களிடம் துப்பறியும் நிபுணர்கள் இருப்பார்கள் இல்லையா? அவர்களில் தான் யாரென்று வெளிப்பட்டு விடாமல் கவனமாக நாடகம் நடத்தக் கூடிய ஆள் யாராவது இருக்காங்களா?''

''என்னிடம் வேலை பார்க்கிறவர்கள் எல்லோருமே அப்படிப்பட்டவர்கள்தான்.''

''போதும் போதும். எனக்கு தெரியும். அந்த விவரங்கள் எதுவும் தேவையில்லை. அப்படிப்பட்ட நபர் ஒருத்தரை அந்த கார்த்திகேயனிடம் அனுப்பி வேலை கொடுங்கள், மாதத்திற்கு பத்தாயிரம் ரூபாய் சம்பளத்தில்.''

பிரதாப் கையிலிருந்த ரிசீவர் நழுவியது. ''பத்தாயிரமா!''

''கொடுத்தால்தானே?''

பிரதாப் குழப்பமடைந்தார். ''எனக்கு ஒன்றும் புரியவில்லையே?'' என்றார்.

அவள் சொல்லத் தொடங்கினாள். என்ன செய்ய வேண்டும் என்று விவரமாக சொல்லிவிட்டு கடைசியில் ''அவனை அந்த இடத்தில் நிராதரவான நிலைமையில் விட்டு விட வேண்டும்'' என்றாள்.

பிரதாப்பின் அதிர்ச்சி மேலும் கூடியது. 'அந்த கார்த்திகேயன் யாரோ தெரியவில்லை. இந்தப் பெண்ணைப் பற்றி தெரியாமல் ஏதோ தவறு செய்திருப்பான். அதான் இவ்வளவு கொடுமையான தண்டனையை அனுபவிக்கப் போகிறான்' என்று நினைத்துக் கொண்டார்.

மறு முனையிலிருந்து ஸ்ரீகல்யாணி ''இப்படிச் செய்தால் அவன் இனி ஒரு நாளும் யார் மீதும் பிராக்டிகல் ஜோக் அடிக்க மாட்டான்'' என்றாள்.

''அப்படி என்ன பிராக்டிகல் ஜோக் அடித்தான்?'' என்ற கேள்வி வாய் வரைக்கும் வந்து விட்டது. இன்னும் இரண்டு பெக்குகள் போட்டிருந்தால் கேட்டிருப்பாரோ என்னவோ. ஆனால் கொஞ்சம் இங்கிதமும, விவேகமும் பாக்கியிருந்ததால் தன்னைத் தானே காப்பாற்றிக் கொண்டார்.

4

''என்ன பாய்? நான் கேள்விப்பட்ட விஷயம் உண்மைதானா?'' உஸ்மான் கேட்டான்.

''என்ன விஷயம் கேள்விப்பட்டாய்?'' கார்த்திகேயன் விசாரித்தான்.

''மெயின் ரோடில் பூட்பாலிஷ் பண்ணிக் கொண்டு இருக்கிறாயா?''

கார்த்திகேயன் சிரித்தான். ''அதேதோ பெரிய விஷயம் என்று நான் நினைக்கவில்லை. சாப்பிடுவதற்கு உணவு இல்லை. சீக்கிரத்தில் வேலை கிடைக்கிற வாய்ப்பும் இல்லை. அதனால் இந்தத் தொழிலை மேற்கொண்டேன். அதுதானே தவிர சினிமாக்களில் வரும் கதாநாயகனாகி விடணும்னு இல்லை. பசி தீர வேண்டியது முக்கியம் இல்லையா?''

''ஆனால் இந்த மாதிரி பூட்பாலீஷ்...''

''அதான் சொன்னேனே அது ஒன்றும் பெரிய விஷயம் இல்லைன்னு. துணி தோய்ப்பது, தலை முடியை வெட்டுவது போன்ற வேலைகளுக்கு கொஞ்சம் திறமையும், முதலீடும் வேண்டும். இதற்கோ அந்த இரண்டும் தேவையில்லை.''

''எனக்கு ஏனோ பிடிக்கவில்லை. இரண்டு ட்யூஷன் களைச் சொல்லித் தந்து பிழைக்கக் கூடாதா?''

''ஏற்பாடு செய்து கொடு. உடனே இந்த பூட்பாலிஷ் வேலையை விட்டு விடுகிறேன்.''

உஸ்மான் பதில் சொல்லவில்லை.

கார்த்திகேயன் சிரித்துக் கொண்டே சொன்னான். ''பார்த்தாயா உஸ்மான்! அது கூட கஷ்டம்தான். அதனால் தான் வேலை கிடைக்கிற வரையில் இந்த வேலை செய்கிறேன். அது போகட்டும். வா போகலாம். உனக்கு சின்ன பார்ட்டி தருகிறேன். எல்லோரும் முதல் சம்பளம் கிடைத்ததுமே நண்பர்களுக்கு பார்ட்டி தருவார்கள். நம்முடையது தினசரி சம்பாத்தியம் என்பதால் முதல் நாள் கிடைத்த வருமானத்தில் உனக்கு டீயும் பிஸ்கெட்டும் வாங்கித் தருகிறேன்.''

''உன்னால் இவ்வளவு சந்தோஷமாக எப்படி இருக்க முடிகிறது? அந்த ரகசியத்தை எனக்கும் சொல்லு பாய்.'' ஹோட்டலில் வந்து உட்கார்ந்து கொண்டே உஸ்மான் கேட்டான்.

கார்த்திகேயன் சிரித்தான். ''தினமும் ஒரு கப் பூஸ்ட் குடியுங்கள். நாள் முழுவதும் ஆரோக்கியமாக இருங்கள் என்று விளம்பரம் செய்வார்கள். என்னிடம் கேட்டால் பணத்தின் மீது ஆசையை விடுங்கள். வாழ்க்கை முழுவதும் சந்தோஷமாக இருங்கள் என்பேன். ஆனால் அது கூட உண்மை இல்லை. ஏன் என்றால்...''

''ஏன் என்றால்?''

''வேண்டாம்.'' வெட்கப்பட்டான்.

''அட! சொல்லு பாய்.''

''பூட் பாலிஷ் பண்ணிக் கொண்டிருக்கும் போது சில சமயம் கனவுலகில் ஆழ்ந்து போய் விடுவேன். நான் பாலிஷ் பண்ணிக் கொண்டிருக்கும் போது சாலையில் டயோட்டா கார் கிறீச்சென்று சத்தத்துடன் வந்து நிற்கும். அதிலிருந்து மின்னல் கொடி போன்ற அழகான பெண் ஒருத்தி இறங்கி வந்து ''நீங்கள் ராவ் பகதூர் கஜபதியின் பேரன்தானே?'' என்று கேட்பாள். என் எதிரே பூட்ஸ் காலுடன் நிற்கும் ஆசாமி எங்க இருவரையும் வியப்புடன் பார்ப்பான். நான் உள்ளூர பெருமைப்பட்டுக் கொண்டே வெளியே முறுவல் பூத்தபடி ''ஆமாம்'' என்பேன். அவள் காரில் என்னை ஏற்றிக் கொண்டு இரானி ஹோட்டலுக்கு அழைத்துக் கொண்டு போவாள்.''

''டயோட்டா காரில் இரானி ஹோட்டலுக்கா?''

''பின்னே எங்கே?''

''கனவு காணும் போதாவது நட்சத்திர ஆறாட்டலைப் பற்றி ஊகித்துக் கொள்ளக் கூடாதா பாய்?''

''நமக்கு தெரியாத விஷயங்களை எதுக்காக ஊகித்துக் கொள்ளணும் உஸ்மான்? நான் என்ன சொல்ல வந்தேன் என்றால் கனவு காணும் போது கூட நான் பணத்தைப் பற்றியேதான் யோசிக்கிறேன் பார். இதிலிருந்து எப்படியாவது மீண்டும் வெளியேறணும். அதைத்தான் யோசிக்கணும்'' என்று கையில் பேப்பரை எடுத்துக் கொண்டான்.

வெயிட்டர் கேக் ப்ளேட்டுகளைக் கொண்டு வந்து இருவருக்கும் முன்னால் வைத்தான். ஒரு கையால் கேக்கை வாய்ப்பிட்டுக் கொண்டே இன்னொரு கையால் பேப்பரைப் பிடித்துக் கொண்டிருந்த கார்த்திகேயன் தன்னையறியாமல் ''ஒஹோ! இவள்தானா அந்தப் பெண்'' என்றான்.

''எந்தப் பெண் பாய்?''

''டாக்டரிடம் என் வேலையை போக்கடித்தது இந்த கல்யாணிதான்னு நினைக்கிறேன்.''

''இவ்வளவு நாளாக நீ என்ன நினைத்துக் கொள்வாயோ என்றுதான் கேட்கவில்லை. உன் வேலை ஏன் போச்சு?''

''எங்க டாக்டருக்கு வந்த போன் காலை நான் தவறுதலாக கேட்டுவிட்டு பேஷண்ட் என்று நினைத்துக் கொண்டு யோசனை சொன்னேன். அதனால் காலையிலேயே அவள் டாக்டரைக் கூப்பிட்டு மிரட்டினாள். அவர் என்னை வேலையை விட்டு நீக்கிவிட்டார்.''

''போனில் பேசியதற்காகவா வேலையை விட்டு நீக்கச் செய்வது? வா... நாலு வார்த்தை கேட்டு விட்டு வருவோம்.''

''நீக்கச் சொன்னது அவள் இல்லை. எங்க டாக்டர் தான் பயந்து போய் என்னை வேலையை விட்டு போகச் சொல்லிவிட்டார்.''

''மிரட்டுவது மட்டும் சாதாரண விஷயமா? இந்த உஸ்மானுக்கு இந்தப் பேட்டையில் எவ்வளவு செல்வாக்கு இருக்குன்னு உனக்குத் தெரியாது. பத்து பேரை கூட்டிக் கொண்டு போகலாம் வா. போன வேலை மறுபடியும் கிடைக்கிறாற் போல் செய்கிறேன். இந்த உஸ்மான் உயிரைக் கூட தருவான். என்ன நினைத்துக் கொண்டிருக் கிறாள் அவள்? பெரிய மகாராணி என்ற நினைப்போ?''

கார்த்திகேயன் நிமிர்ந்து பார்த்தான். அவன் கண்கள் தூய்மையாக சிரித்துக் கொண்டிருந்தன. ''மற்றவர் களுடைய கோபதாபங்களை தன் பொறுமையாலும், வெறுப்பை தன் மன்னிப்பாலும், பலவீனத்தை தன் அன்பாலும், தவறை தன் முறுவலாலும் எதிர் கொள்பவனுக்கு வாழ்க்கையில் வேதனை என்பதே இருக்காது. 'நீ எப்போதும் சந்தோஷமாக எப்படி இருப்பாய்' என்று கேட்பாயே உஸ்மான்? ஒருக்கால் காரணம் இதுவாகத்தான் இருக்கும். எங்கே அதிருப்தி இருக்குமோ அங்கே சந்தோஷம் இருக்காது. அதிருப்தி என்பது மனிதனுக்கு எதன் மூலமாகவும் வரலாம். தீராத காமத்தாலும் வரலாம். தடுக்க முடியாத கோபத்தாலும் வரலாம். அவற்றை ஜெயித்து விட்டால் வாழ்க்கை முழுவதும் திருப்திதான் மிஞ்சியிருக்கும்.''

உஸ்மான் உணர்ச்சி வசப்பட்டு ஏதோ சொல்ல நினைத்து சொல்ல முடியாமல் நிறுத்திக் கொண்டான். கார்த்திகேயன் எழுந்து கொண்டே ''அதனால் நமக்கு கல்யாணியின் மீது கோபம் வேண்டாம். வா போகலாம்'' என்றான்.

இருவரும் வெளியே வந்தார்கள். இரானி ஹோட்டலுக்கு எதிரே சுவற்றின் மீது ஏசுவின் கூற்று எழுதப்பட்டிருந்தது.

''இப்படித்தான் இருக்க வேண்டும் என்று நீ நினைப்பாய். உன்னை எப்படி வைத்திருக்க வேண்டும் என்று ஆண்டவன் கட்டளையிடுவார்.''

''உட்காருங்கள்'' என்றான் பீட்டர். கார்த்திகேயன் எதிரேயிருந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்டான். பீட்டரின் வயது நாற்பத்தி ஐந்து இருக்கலாம். அடிக்கடி கிராப்பை சரி செய்து கொண்டிருந்தான்.

கார்த்திகேயன் [illegible] ப்பரைத் [illegible]தான்.

''எம்பிளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சிலிருந்து லிஸ்ட் வாங்கிக் கொண்டு நாங்கள்தான் அனுப்பினோம். இந்த வேலைக்கு நீங்க வந்திருக்கீங்க என்றால் உங்களுக்கு இந்த வேலை ரொம்ப தேவையாக இருக்கு என்று அர்த்தம்'' என்றான் பீட்டர்.

''ஆமாம் சார். ரொம்ப தேவை.''

''எங்கள் நிறுவனம் ஸ்கை பாக் போன்று கூரியர் சர்வீஸ் நடத்துகிறது. நாட்டின் எந்த மூலையாக இருந்தாலும் ஒரே நாளில் கொண்டு போய் சேர்ப்பது எங்களுடைய ஸ்பெஷாலிடி.''

கார்த்திகேயன் கேட்டுக் கொண்டிருந்தான்.

''சென்னையிலிருந்து சிருகாவ் என்ற குக்கிராமத்திற்கு ஒருத்தர் ஒரு பொருளை அனுப்புவதாக உள்ளார். ஒரே

நாளில் அது அங்கே போய் சேரவேண்டும். நம் கஸ்டமர்கள் பணத்திற்கு பின் வாங்க மாட்டார்கள். நாம் அதை எவ்வளவு சீக்கிரமாக கொண்டு போய் சேர்ப்போம் என்றுதான் பார்ப்பார்கள். விமானத்தில் டில்லிக்கு அனுப்புவோம். அங்கிருந்து லக்னோ, பிறகு ரயிலில் பந்தர் ஹட். அங்கிருந்து பஸ்ஸில் சிருகாவ். இதெல்லாம் வாயு வேகத்தில் நடக்கணும். சொல்லுங்கள். இந்த வேலையைச் சிறப்பாக செய்ய முடியும் என்ற நம்பிக்கை உங்களுக்கு இருக்கிறதா?''

''கண்டிப்பாக செய்வேன் சார்.''

''குட்! அப்படி என்றால் இன்றைக்கே வேலையில் சேர்ந்து விடுங்கள்.''

கார்த்திகேயனுக்கு ஆச்சரியமாக இருந்தது. இவ்வளவு சீக்கிரத்தில் வேலை கிடைப்பது இந்த நாட்களில் எட்டாவது அதிசயம்.

''இனி உங்கள் சம்பளம்'' என்றான் பீட்டர். ''இப்போதைக்கு உங்களுக்கு மூவாயிரம். ஆறு மாதம் ப்ரொபேஷன் முடிந்ததுமே ஐயாயிரம் வரும்.''

கார்த்திகேயன் ஆச்சரியத்தால் மூச்சை இழுத்துப் பிடித்துக் கொண்டான்.

''நீங்கள் வேலையாக வெளியூர்களுக்குப் போகும் போது வழிச் செலவு எல்லாம் போக மாதத்திற்கு பத்தாயிரம் வரை வரும்.''

கார்த்திகேயன் பலமாக மூச்சு விட்டுக் கொண்டான். பத்தாயிரம்! இது கனவா இல்லை நிஜமா?

''நாளைக்கு வந்து அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டர் வாங்கிக் கொள்ளுங்கள்.''

கார்த்திகேயன் எழுந்து இரு கரங்களையும் கூப்பி வணங்கினான். அவன் கண்களில் நீர் திரையிட்டது. ''ரொம்ப தாங்க்ஸ் சார். என் நன்றியை எப்படி வெளிப் படுத்துவது என்று தெரியவில்லை. பசியோடு பாலை வனத்தில் அலைந்து கொண்டு இருந்தவனுக்கு திடீரென்று விருந்துச் சாப்பாடு கிடைத்தாற் போல் இருக்கு'' என்று சொல்லிவிட்டு அங்கிருந்து நகர்ந்தான்.

அவன் போனதுமே பீட்டர் போன் செய்து பிரதாப் புடன் பேசினான். ''நீங்கள் சொன்னபடியே செய்தேன் சார். நாளைக்கு வந்து அவன் அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டரை வாங்கிக் கொள்வான்.''

''அவன் அதை வாங்கிக் கொண்டதுமே அந்த ஆபீசை காலி செய்து விடுங்கள். மறுபடியும் விசாரணை செய்தால், அந்த வேலை தந்தது யாருன்னு அவனுக்குத் தெரியக் கூடாது'' என்றார் பிரதாப்.

''சரி சார்'' என்று போனை வைத்து விட்டான் பீட்டர்.

பிரதாப் ஸ்ரீகல்யாணிக்கு போன் செய்தார். தான் சாதித்த வெற்றியைப் பற்றி சொல்லிக் கொள்ள வேண்டும் என்று அவர் மனம் துடித்தது.

''ஹலோ!'' என்று மறுமுனையிலிருந்து ஸ்ரீ கல்யாணியின் குரல் கேட்டதுமே ''நீங்கள் சொன்னது போலவே கார்த்திகேயனுக்கு வேலை போட்டுக் கொடுத்தேன். நாளைக்கே வந்து வேலையில் சேரப் போகிறான்'' என்றார்.

''கார்த்திகேயன் யாரு?''

பிரதாப்புக்கு தூக்கி வாரிப் போட்டது. திடீரென்று அவர் சந்தோஷத்தில் நீர் தெளித்தாற் போல் இருந்தது.

''நீதான் சொன்னாயேம்மா, அந்த டாக்டரிடம் அஸிஸ்டெண்ட்...''

''அவனா? ஆமாம். அவனுக்குத் தகுந்த பாடம் கற்பிக்கும்படி சொன்னேன்.''

''அதான். அதில் முதல் கட்டமாக அவனுக்கு வேலை போட்டுக் கொடுத்தோம்.''

''என்ன செய்ய வேண்டுமோ விவரமாக சொல்லி விட்டேன். அதை செய்து விட்டுச் சொல்லுங்கள் போதும். உடனுக்குடன் எனக்கு ரிப்போர்ட் செய்யத் தேவையில்லை.'' போனை வைத்துவிட்டாள்.

ஸ்ரீகல்யாணி அத்தனை பெரிய தொழில் மேதை எப்படி ஆனாள் என்று இப்பொழுதுதான் புரிந்தது அவருக்கு. அந்த இளைஞன் மீது பழி தீர்த்துக் கொள்ளும் வரையிலும் நிமிஷத்திற்கு நிமிஷம் அவருக்கு போன் செய்து பேசினாள். அந்த விஷயத்தை நினைவுபடுத்திக் கொண்டே இருந்தாள்.

ஒரு தடவை அந்தக் காரியத்தை அவர் எடுத்துக் கொண்டதுமே பெயருடன் சேர்த்து அந்த விஷயத்தை முற்றிலுமாக மறந்து போய் விட்டாள். இறுதி ரிசல்ட் மட்டும் சொன்னால் போதும் என்று சொல்லிவிட்டு போனை வைத்து விட்டாள். அனாவசியமான விஷயங்களை எல்லாம் மூளையில் போட்டு நிரப்பிக் கொள்ளாமல் அவ்வப்பொழுது அவற்றை ஒதுக்கி விட்டு மூளையை பிரஷ்ஷாக வைத்துக் கொள்வது நல்ல வியாபாரியின் லட்சணம். தனக்கு அது எப்பொழுது வருமோ? பிரதாப் தலையைச் சொறிந்து கொண்டார். அவருக்கு நான்கு மகள்கள். இரண்டு மகன்கள். ஆறு பேருக்கும் திருமணம்

செய்து வைக்க வேண்டும். மூத்த மகன் அமெரிக்காவுக்குப் படிக்கப் போவதாக சொல்லிக் கொண்டிருந்தான்.

அடுத்த இரண்டு ஆண்டுகளில் குறைந்தபட்சம் பத்து லட்சத்திற்கு செலவு இருந்தது. பெரிய நிறுவனம் என்று பெயர் பெற்றிருந்தாலும் சிக்மா டிடெக்டிவ் ஏஜென்ஸியின் வருமானம் லாபகரமாக இல்லை. ஸ்ரீகல்யாணியைப் போன்ற கஸ்டமர்கள் ஓரிருவர் இருந்ததால் வண்டி ஓடிக் கொண்டிருந்ததே தவிர இல்லாவிட்டால் இந்தியாவில் இப்படிப்பட்ட டிடெக்டிவ் ஏஜென்ஸிகளுக்கு வியாபாரம் எப்படி நடக்கும்?

ஏதாவது ஒன்றைச் செய்து பத்து லட்சங்களை சம்பாதிக்க வேண்டும். என்ன செய்ய முடியும் அவரால்? பிரதாப் யோசித்துக் கொண்டிருந்தார்.

★

''இதோ உன் அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டர். இன்று மாலையில் நாம் புறப்படுகிறோம்'' என்றான் பீட்டர்.

''எங்கே சார்?'' கார்த்திகேயன் கேட்டான்.

''ராஜஸ்தான்.''

''ராஜஸ்தானா? இன்னும் மூன்று மணி நேரத்திலா?'' வியப்படைந்தவனாக கேட்டான் கார்த்திகேயன்.

''நமக்கு இவ்வளவு சம்பளம் பின்னே எதுக்காக கொடுக்கிறாங்க? எந்த நிமிடம் தேவைப்பட்டாலும் அந்த நிமிடமே புறப்பட்டு விடணும்.''

''சும்மாதான் கேட்டேன் சார். எனக்கு என்ன? எந்த பந்தங்களும் இல்லாதவன். எப்போ சொன்னாலும் புறப்படத் தயார்தான்.''

அன்று மாலையில் இருவரும் புறப்பட்டதும் பீட்டர் சொன்னான். ''ஜோத்பூரில் வேலை இருக்கு. அங்கேயிருந்து ஜைசல்மீர் போவோம். ராஜ்மாண்டிற்கு அருகில் நாமிரு வரும் பிரிந்து விடுவோம். நீ இந்த உறையை ராணி காட்டில் தரவேண்டும். நான் இந்தப் பெட்டியை லக்ஷ்மண் பூரில் கொடுத்து விட்டு வருகிறேன். இருவரும் மறுபடியும், ராஜ்மண்டில் சந்தித்துக் கொள்ளலாம். புரிந்ததா?''

கார்த்திகேயன் தலையை அசைத்தான். அவ்வளவு தூரம் போகிறவன் தானே இரண்டையும் கொடுத்து விட்டு வரலாமே? இவ்வளவு செலவு எதற்காக என்று நினைத்துக் கொண்டான். ஆனால் வெளியே சொல்லவில்லை.

ஜோத்பூருக்கு போய்ச் சேரும் போது இரவு பத்தரை மணியாகி விட்டது. உடனே ஜைசல்மீருக்கு ரயில் ஏறினார்கள். தமிழ்நாட்டை போல் அங்கே ஒவ்வொரு ஐந்து கிலோ மீட்டருக்கும் ஒரு ஊர் இருக்காது. ஒரு ஊரின் எல்லையைத் தாண்டிவிட்டால் வெட்ட வெளியும், மணல் பரப்புகளும்தான். மறுபடியும் இன்னொரு ஸ்டேஷன் எப்பொழுதோதான் வரும். காலை பதினோரு மணிக்கு ரயில் ஜைசல்மீருக்கு வந்து சேர்ந்தது. தார் பாலைவனத்தின் எல்லையில் இருந்தது ஜைசல்மீர். அங்கிருந்து இருவரும் பஸ்ஸில் ராஜ்மண்டிற்கு போனார்கள். மூன்று மணி நேரப் பயணம். பஸ் புறப்பட்ட அரை மணி நேரத்திற்குள் பாலைவனம் தொடங்கிவிட்டது. எங்கு பார்த்தாலும் மணற் பரப்பு. நடுநடுவிலே சின்னச் சின்ன புதர்கள் ராணுவக் கட்டுப்பாடு அந்த இடத்தில் அதிகமாக இருந்தது அந்தப் பாலைவனத்தைச் சேர்ந்த எல்லையிலிருந்து தான் பாகிஸ்தானைச் சர்ந்த தீவிரவாதிகள் இந்தியாவுக்குள் நுழைவார்கள்.

ராஜமாண்ட் போய்ச் சேர்ந்தபோது மதியம் [illegible]றாகிவிட்டது. ஒரு பக்கம் சுட்டெரிக்கும் வெயில். [illegible]னொரு பக்கம் நீண்ட பயணம் செய்ததால் ஏற்பட்ட [illegible]ப்பு.

''இவ்வளவு சம்பளம் ஏன் தராங்கன்னு புரிந்ததா?'' [illegible]ஸை விட்டு இறங்கியதுமே பீட்டர் கேட்டான்.

''இதில் பத்தில் ஒரு பங்கு சம்பளத்திற்காக இதைக் [illegible]டிலும் பத்து மடங்கு உழைக்கிறவர்கள் இருக்கிறார்கள் [illegible] நாட்டில்'' என்று சொல்ல நினைத்தான் கார்த்திகேயன். [illegible]னால் சொல்லவில்லை.

பீட்டர் சொன்னான். ''இங்கிருந்து உனக்காக ஒரு [illegible]டகத்தை ஏற்பாடு செய்கிறேன். நீ போய் அந்தக் [illegible]தத்தைக் கொடுத்து விட்டு வந்துவிடு. உன்னிடம் பணம் [illegible]வது இருக்கா?''

''இல்லை.''

''இந்தா. இந்த ஐந்து ரூபாயை வைத்துக் கொள். [illegible]டகச் சவாரிக்கு வேண்டியதை நான் கொடுத்து [illegible]டேன். நீ ஒன்றும் தரவேண்டியது இல்லை. சுமார் [illegible]ண்டு மணி நேரப் பயணம். போக வர ஐந்து மணி நேரம் [illegible]கும். திரும்பி வந்து இதே இடத்தில் எனக்காக காத்திரு. [illegible]ருவருமாக சேர்ந்து திரும்பிப் போகலாம். நான் [illegible]ஷ்மண்பூர் போகணும். அதோ என் பஸ் ரெடியாக [illegible]ருக்கு.''

பஸ் ஹாரன் அடித்தது.

''நானும் உன்னோடு வரலாம் என்றுதான் [illegible]னைத்தேன். ஒட்டகப் பயணம் எனக்குக் கூட ரொம்ப [illegible]டிக்கும்தான். ஆனால் லக்ஷ்மண்பூரில் இந்த லட்சம்

ரூபாயைத் தராமல் போனால் நம் கஸ்டமரின் குடி மூழ்கிப் போய் விடும். சரியாக ஐந்து மணி நேரம் கழித்து இங்கே சந்தித்துக் கொள்வோம். சரிதானே?''

பஸ் ஹாரன் கடைசி முறையாக கேட்டது. பீட்டர் பரபரப்புடன் ஓடிப்போய் பஸ்ஸில் ஏறிக் கொண்டான். புழுதியைக் கிளப்பிக் கொண்டே பஸ் புறப்பட்டது.

ஒட்டகக்காரன் அருகில் வந்து ''சலேங்கே க்யா சாப்?'' என்றான். போகலாம் என்பது போல் கார்த்திகேயன் தலையை அசைத்தான்.

★

மேற்கு ராஜஸ்தான் பஸ் ரூட்டில் கடைசி ஊர் அது. அங்கிருந்து எல்லாமே மணல் பரப்புதான். ஒட்டகத்தில் சுமார் இரண்டு மணி நேரப் பயணம்.

ராணிமட் என்ற இடத்தில் சுமார் ஐம்பது வீடுகள் இருக்கலாம். ராஜஸ்தான் மாநிலத்தில் அவ்வளவு வீடுகள் இருந்தால் அதுவே ஒரு கிராமம்.

கார்த்திகேயனுக்கு இந்தப் பயணம் பிடித்திருந்தது. சுற்றிலும் கடல் போன்ற மணல் வெளி. தொலைவில் ஆங்காங்கே நீர்க் குட்டைகள் இருப்பது போன்ற பிரமை. கானல்நீரைப் பற்றி புத்தகங்களில் படித்திருக்கிறான், அவ்வளவுதான். இப்பொழுது நேரில் பார்ப்பது வித்தியாசமான அனுபவம்.

ஒட்டகம் நடக்கும் போது உடம்பு தூக்கித் தூக்கிப் போட்டது. கார்த்திகேயனுக்கு அதன் மீது உட்காருவது சிரமமாக இருந்தது. பழக்கம் இருந்தால் தவிர ஒட்டகத்தின் மீது பயணம் செய்வது கஷ்டம்.

சுமார் இரண்டு மணி நேரத்தில் அவர்கள் ராணிமட் வந்து சேர்ந்தார்கள். கார்த்திகேயன் கையிலிருந்த உறையின் மீது இருந்த முகவரியை பார்த்தான்.

'Hand over to Hotel Ashoka, Rani Mutf' என்று இருந்தது. சிறிய கடை அருகில் சென்று ஹிந்தியில் ''ஹோட்டல் அசோகா எங்கே?'' என்று கேட்டான். அந்த ஊர் மொத்தத்திற்கும் அது ஒன்றுதான் கடை போல் இருந்தது. ஒரு பக்கம் காய்கறிகள், இன்னொரு பக்கம் பிஸ்கெட் பாய்லர், ஒரு மூலையில் மளிகைச் சாமான்கள் இருந்தன.

''என்ன?'' என்று கேட்டான் கடைக்காரன் புரியாமல்.

''ஹோட்டல் அசோகா.''

பைத்தியக்காரனைப் பார்ப்பது போல் அவனைப் பார்த்து விட்டு'' ஹோட்டல் இருக்கிறாற்போல் அவ்வளவு பெரிய ஊராக தென்படுகிறதா இது?'' என்று கேட்டான்.

அது உண்மைதான் என்று தோன்றியது. ஆம்பாடிகுடிசைகளைப் போன்று சுமார் இருபத்தைந்து குடிசைகள் இருந்தன. அந்தக் கடைக்காரன் திரும்பவும் சொன்னான். ''இதோ, இந்த டீக்கடை, காய்கறி விற்பனை, மளிகைச் சாமான் விற்பனை எல்லாம் சேர்த்து மொத்தம் எனக்கு எவ்வளவு வருகிறது தெரியுமா? தினமும் பத்தோ இருபதோ. இங்கே ஹோட்டலா?'' என்று பலமாக சிரித்தான்.

அதற்குள் பின்னாலிருந்து ஒட்டகக்காரன் வந்து ''சார்! எனக்குப் பணம்?'' என்றான்.

''திரும்பிப் போனதும் தரேன்னு சொல்லவில்லையா அவர்?''

''இல்லை சாப். இது தான் எங்க ஊர். தொரை இது வரைக்கும் தான் பேசினார்.''

கார்த்திகேயனுக்கு முதல் முறையாக சந்தேகம் வந்தது. ''எவ்வளவு?'' என்று கேட்டான்.

''ஐந்து ரூபாய் சாப்.''

ராஜஸ்தானில் ஒட்டகப் பயணம் ரொம்ப மலிவு. ஆனால் அதைப் பற்றி யோசிக்கவில்லை கார்த்திகேயன். ஜேபியில் சல்லிக்காசு இல்லாமல் திரும்பி ராஜ்மாண்ட் போய் சேருவது எப்படி என்று தான் யோசித்துக் கொண் டிருந்தான். என்ன செய்வது என்று புரியாமல் கையில் இருந்த உறையை பார்த்தான். இந்த குடிசைகளுக்கு நடுவில் ஹோட்டலைத் தேடுவது முட்டாள்தனம் என்று தோன்றியது.

இப்பொழுது எப்படி திரும்பிப் போவது? மறுபடியும் கவரை பார்த்தான். கவர் ஒட்டப்படாமல் இருந்தது. உள்ளே இருந்த காகிதத்தை எடுத்தான். அழகான கையெழுத்து. அதில் ஒரே ஒரு வாக்கியம்.

'இனி ஒரு போதும் பெண்கள் நள்ளிரவில் போன் பண்ணியதுமே எல்லாம் தெரிந்தாற் போல் பேசாதே.'

அந்த எழுத்துகளுக்கு பின்னால் 'நான் யாருன்னு உன்னால் தெரிந்து கொண்டு விட முடியாது' என்ற அர்த்தம் இருந்தது. 'பார்த்தாயா, உனக்கு நன்றாக பாடம் கற்பித்து விட்டேன்' என்று இறுமாப்புடன் கூடிய சிரிப்பு தென்பட்டது.

கையில் ஒற்றை ரூபாய் கூட இல்லாமல் நாட்டின் இந்தக் கோடியிலிருந்து அந்தக் கோடிக்கு எப்படி போவது?

மாலை ஐந்து மணியாகி விட்டது. பாலைவனத்தில் இருள் சூழ்ந்து கொள்ளத் தொடங்கி விட்டது.

பாலைவனப் பிரதேசங்களில் மாலை நேரம் வந்து விட்டால் போதும். சூழ்நிலை திடீரென்று குளிர்ந்து விடும். அகன்றறந்த பட்சம் கம்பளியாவது இருந்தால்தான் இரவைக் கழிக்க முடியும். ஜேபியில் காசு இல்லாமல் பாலைமிமட்டிலிருந்து ராஜ்மாண்ட், ஜைசல்மீர்... ஜோத்பூர்... டெல்லி... சென்னை.

எப்படி?

கார்த்திகேயன் தளர்ந்து போய் டீ கடைக்கு முன்னாலிருந்த பெஞ்சியில் சரிந்தான். தனக்கு புத்தி புகட்ட வேண்டும் என்ற அற்ப காரணத்திற்காக ஒருத்தர் இவ்வளவு செய்தார்கள் என்றால் அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. 'ஏமாற்றப்பட்டுவிட்டதை' அவள் இவ்வளவு சீரியஸாக எடுத்துக் கொண்டிருக்கிறாள் என்றால் மனிதர்கள் மீது அவளுக்கு எவ்வளவு கோபம் இருந்திருக்கும் என்று புரிந்தது. அவள் மனநிலையின் மீது இரக்கம் பிறந்தது.

அவன் யோசித்துக் கொண்டிருந்த போதே இருள் மேலும் சூழ்ந்து கொண்டது. பசி வயிற்றைக் கிள்ளியது. இரண்டு ஜதை உடைகளை விற்றால் ஐந்து ரூபாய் வராதா என்று நினைத்துக் கொண்டான். அப்பொழுதுதான் அவன் பார்வை சூட்கேஸின் மீது விழுந்தது.

சட்டென்று சலனம் ஏற்பட்டது அவனிடம். பீட்டர் கொண்டு வந்த சூட்கேஸ் அது. பஸ் ஹாரன் அடித்ததும் பரபரப்புடன் சூட்கேஸை மறந்து போய் பஸ்ஸில் ஏறி விட்டான். அவன் சாமான்களோடு சேர்ந்து அந்த சூட்கேஸும் வந்து விட்டது.

அவனுக்கு பீட்டர் சொன்னது நினைவுக்கு வந்தது. 'லக்ஷ்மண்பூரில் கஸ்டமரிடம் இந்தப் பணத்தைத் தராமல் போனால் குடி மூழ்கிப் போய் விடும். இன்று மாலைக்குள் ஒப்படைக்க வேண்டும்.'

கார்த்திகேயன் யோசனையில் ஆழ்ந்தான். தான் ஏமாற்றப்பட்டு விட்டதும், தனக்கு கூரியர் சர்வீஸ் வேலை கிடைக்காததும் உண்மைதான். ஆனால் தன்னை ஏமாற்றும் முயற்சியில் பீட்டர் தன் கடமையை கோட்டை விட்டு விட்டான். தம் இருவரின் தகராறுக்கு நடுவில் லக்ஷ்மண்பூர் கஸ்டமர் நஷ்டமடைந்து விடக் கூடாது இல்லையா?

இந்த யோசனை வந்ததுமே அவன் மேலும் தாமதிக்காமல் கடைக்காரனை நோக்கித் திரும்பி ''எனக்கு ஏதாவது வாகனம் கிடைக்குமா? அர்ஜெண்டாக போகணும்'' என்றான்.

''இரவு நேரத்தில் ஒட்டகத்தின் மேல் யாரும் பயணம் செய்யமாட்டார்கள். திருடர்கள் பயம் அதிகம்'' என்றான் கடைக்காரன்.

அங்கே பீட்டர் தனக்காக ராஜ்மாண்டில் காத்துக் கொண்டிருப்பான். வேலை விஷயத்தில் தன்னை அவன் (அவளுடைய உத்தரவின்படி) ஏமாற்றினாலும் சரி, நடந்த தப்பிதத்தால் அவன் தன் வேலையை இழந்து விடக் கூடாது.

அந்த யோசனை வந்ததுமே கார்த்திகேயன் மேற்கொண்டு தாமதம் செய்யாமல் தன் சாமான்களையும் சூட்கேஸையும் எடுத்துக் கொண்டு எழுந்து கொண்டான்.

சூரியன் அஸ்தமித்துக் கொண்டிருக்கும் வேளையில் கடல் போன்ற மணல் பரப்புக்கு நடுவில் நடந்து போய்க்

[illegible]ண்டிருந்த அந்த முன்பின் தெரியாதவன் ஏன் வந்தான், [illegible] திரும்பிப் போகிறான் என்று புரியாமல் கடைக்காரன் [illegible]புடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

5

ஸ்ரீகல்யாணிக்கு வாழ்க்கையில் என்றுமே [illegible]வளவு கோபம் வந்ததில்லை.

பிரதாப் தலை குனிந்தபடி உட்கார்ந்திருந்தார்.

பீட்டர் கைகளைப் பிசைந்து கொண்டே [illegible]றிருந்தான்.

நடந்த விஷயம் இதுதான். ஸ்ரீகல்யாணிக்கு ஜோத் [illegible]லிருந்து ஒரு மிஷினரி சப்ளை ஆகவேண்டியிருந்தது. [illegible]தற்காக ஒரு லட்சம் ரூபாயை கணக்கில் காட்டாமல் ([illegible]யாக்கில்) ஒருவருக்கு அனுப்ப வேண்டும். செக்யூரிட்டி [illegible]ஸில் யாராவது நம்பகமானவர்களின் மூலமாக அதை [illegible]ப்பச் சொல்லி பிரதாப்பிடம் கேட்டிருந்தாள். சிக்மா [illegible]ஜென்ஸியில் வேலை பார்த்துக் கொண்டிருந்த பீட்டரை [illegible] காரியத்திற்கு தேர்வு செய்தார் பிரதாப்.

பீட்டருடன் கார்த்திகேயனையும் அனுப்பி [illegible]லைவனத்திற்கு நடுவில் விட்டு விட்டு வரச் சொன்னது [illegible] அவள்தான். அங்கிருந்து தான் நாடகம் தொடங்கி [illegible]கிறது. கார்த்திகேயனுக்கு வேலை தந்தது போல் [illegible] பீட்டர் தன்னுடன் அழைத்துச் சென்றான். [illegible]கேயனின் ஜேபியில் ஒற்றை ரூபாய் கூட இல்லாமல் [illegible]விட்டு அவனை ராணிமட்டுக்கு அனுப்பி வைத்தான்.

ஆனால் ஜோத்பூருக்கு எடுத்துக் கொண்டு போக வேண்டிய சூட்கேஸை அந்த அவசரத்தில் மறந்து விட்டான்.

''இவ்வளவு பொறுப்பு இல்லாமல், சொன்ன வேலையை கெடுத்து விட்டு வந்திருப்பவன் என் கீழே வேலை பார்ப்பவனாக இருந்தால் இந்த நிமிடமே டிஸ்மிஸ் செய்திருப்பேன்.'' அனல் தெறிக்க கத்தினாள் ஸ்ரீ கல்யாணி. பிரதாப் பதில் பேசவில்லை.

''உங்கள் சிக்மா ஏஜென்ஸியைப் பற்றி பெரிதாக ஐம்பமடித்துக் கொண்டீங்க. உங்களிடம் ஜேம்ஸ்பாண்ட் போன்ற ஏஜெண்டுகள் இருக்கிறார்கள் என்று சொன்னீங்க. ஆனால் உங்கள் சீக்ரெட் ஏஜெண்டுகள் பஸ்ஸுக்கு நேரமாகி விட்டதென்ற அவசரத்தில் சூட்கேஸை மறந்து விட்டு ஓடும் பஃபூன்கள் என்று இப்பொழுது தான் தெரிகிறது.''

பீட்டர் தன் தலை எவ்வளவு பெரிதாக வீங்கியிருக்கு என்று தொட்டுப் பார்த்துக் கொண்டான்.

பிரதாப் தைரியம் கொடுப்பதுபோல் ''நீ ஒன்றும் கவலைப் படாதேம்மா. அந்த கார்த்திகேயன் வந்ததுமே அவனிடமிருந்து லட்சம் ரூபாயை வாங்கித் தரும் பொறுப்பு என்னுடையது'' என்று சொன்னார்.

அவள் கையிலிருந்த பேப்பர்களை தரையில் விட்டெறிந்தாள். ''பிச்சைக்காசு லட்சம் ரூபாய்! நான் வருத்தப்படுவது அதற்காக இல்லை. நான் எவ்வளவு முட்டாளடிக்கப் பட்டேன் என்று நினைத்துப் பார்த்தால் எனக்கு நாக்கைப் பிடுங்கிக் கொள்ளலாம் போலிருக்கு. பெரிய மேதாவி போல் லெட்டர் வேறு எழுதி கவரில் வைத்திருக்கிறேன், அதைப் படித்து விட்டு அங்கே அவன்

[illegible] எல்லாம் சிரித்திருப்பானோ'' என்று நிறுத்தி விட்டு [illegible]ள் சொல்லிக் கொள்வது போல் ''அது சரி. நாம் யார் [illegible] தெரிந்து விடும் ஆபத்து இருக்கிறதோ'' என்றாள்.

பீட்டர் சட்டென்று ''இல்லை மேடம். அந்த [illegible]கசில் பணத்தைத் தவிர வேறெதுவும் இல்லை'' [illegible]ன்.

''வாழ்நாளெல்லாம் மறந்து போய் விட முடியாத [illegible] சம்பவமாக இருக்கும்னு நினைத்தேன். ஆனால் [illegible]நாள் முழுவதும் சிரிக்கக் கூடிய கேலிக் கூத்தாகி [illegible]து.''

அவன் மீது பகையுடன் இருக்கும் அவளுக்கு தகுந்த [illegible]னை சொல்லி உதவி செய்ய நினைத்தான் பீட்டர். ''[illegible] பணம் தொலைந்து போய் விட்டதென்று [illegible]சாரிடம் புகார் கொடுத்து அவனை அரெஸ்ட் செய்யச் [illegible]னால்-?'' என்றான்.

''வில் யூ ப்ளீஸ் கீப் யுவர் மௌத் ஷட்?'' என்றாள் [illegible]லுடன்.

அவளுக்கு அவனை ஜெயிலில் தள்ளி நாசம் செய்ய [illegible]ண்டும் என்ற கோபம் இல்லை. அவள் ரகசியமாக [illegible]த்த சிருங்கார காட்சியைப் பற்றி அவளாக [illegible]னதைக் கேட்டுவிட்டு பெரிய மேதாவி போல் [illegible]னை தந்தான். அதற்கு பழி வாங்குவது போல் [illegible]டின் மறு மூலையில் இருக்கும் பாலைவன [illegible]தேசத்திற்கு கொண்டு போய் அவனை விட்டுவிட்டு [illegible]வேண்டும் என்றுதான் நினைத்தாள். அவளுடைய [illegible]வை அவன் காயப்படுத்தினான். அவனுக்கு [illegible]வுடைய சாமர்த்தியம் எப்படிப்பட்டது என்பதை

காட்டிவிட வேண்டும் என்று நினைத்தாள். ஆனால் இப்பொழுது கதை தலைகீழாகிவிட்டது. அவள் எரிச்சலுக்கு காரணம் அதுதான்.

அவள் டில்லிக்கு போன் செய்து தன் பிரதிநிதியை அவசரமாக ஜோத்பூருக்கு போய் லட்ச ரூபாயை தரச் சொன்னாள்.

பிரதாப் பக்கம் திரும்பி ''உங்க ஆபீஸில் இது போல் ஏதாவது தவறு நடந்து உங்களுக்கு லட்ச ரூபாய் நஷ்டம் ஏற்படுவதோடு, நீங்கள் நினைத்த காரியமும் நடக்காமல் போனால் அந்த நபரின் மீது எப்படிப்பட்ட நடவடிக்கை எடுப்பீங்க?'' என்று கேட்டாள்.

''அவனை வேலையிலிருந்து நீக்கி விடுவேன்.''

''இன்னும்?''

''அவனால் நஷ்டமடைந்த ரூபாய்களை எப்படி வரவழைப்பது என்று யோசிப்பேன்.''

''ஒருக்கால் அந்த கார்த்திகேயன் நம் கைக்கு அகப்படாமல் போய் பணமும் திரும்பி வரவில்லை என்றால்?''

பிரதாப் எதோ சொல்ல வந்தபோது கதவிற்கு அருகில் சந்தடி கேட்டது. மூவரும் அந்தப் பக்கமாக திரும்பினார்கள். வெளியேயிருந்து வந்து கொண்டிருந்த வெளிச்சத்திற்கும், உள்ளேயிருந்த மங்கலான ஒளிக்கும் நடுவில் ஒரு கோட்டுச் சித்திரம் போல் நின்று கொண்டிருந்தான் அவன். அவன் ஆடைகள் புழுதிப் படிந்திருந்தன. தலைமுடி, எண்ணைப் பசையில்லாமல் கலைந்திருந்தது. அவனைப் பார்த்ததும் பீட்டருக்கு இதயம் நின்று விட்டாற்போல் இருந்தது.

நம்ப முடியாத காட்சியைப் பார்க்க நேரிட்டது போல் பீட்டர் நாற்காலியை விட்டு எழுந்து நின்றான். ஆனால் வந்தது யாரென்று ஸ்ரீகல்யாணிக்குத் தெரியாது. ''என்ன வேண்டும்?'' அதிகாரம் கலந்த குரலில் கேட்டாள்.

அவன் அவளைப் பார்க்கவில்ல. பீட்டரையே பார்த்துக் கொண்டிருந்தான். இது வரையில் ஏதாவது சந்தேகம் இருந்தால் அது தீர்ந்து விட்டாற் போலவும், தான் சரியான இடத்திற்குத்தான் வந்திருக்கிறோம் என்ற நிம்மதியும் அவன் முகத்தில் தென்பட்டது.

''என்ன வேண்டும்? உன்னை யார் உள்ளே விட்டது? கேட்டதற்கு ஏன் பதில் சொல்ல மாட்டேங்கிறாய்?'' அவள் மறுபடினாள்.

பின்னாலிருந்து குறுக்கிட்ட பீட்டர் தடுமாறும் குரலில் ''மேடம்! இவன்... இவன் தான் கார்த்திகேயன்'' என்றான்.

அவ்வளவுதான். அந்த அறையில் ஊசி விழுந்தாலும் கேட்கும்படியான நிசப்தம் நிலவியது. ஸ்ரீகல்யாணிக்கு அவனைப் பார்த்ததுமே ஏற்பட்ட முதல் ஃபீலிங் ''இவனா அன்றிரவு தன்னுடன் செக்ஸ் பற்றிப் பேசியது?''

இரண்டாவது ஃபீலிங் ''இவனையா தான் பாலைவனத்திற்கு நடுவில் விட்டு விட்டு வரச் சொன்னது?''

மூன்றாவது ஃபீலிங் ''எந்த இடத்திலேயும் தான் பிடிபட்டு விடாமல் நிலைமையை எப்படி கையாளுவது?''

ஆமாம். இதெல்லாம் அவன் யாரென்று தெரியாத போது செய்தது. இப்பொழுது எப்படி கண்டுபிடித்தானோ

தெரியாது, இங்கேயே வந்துவிட்டான். இங்கே ரகளையை ஏற்படுத்தலாம். அவளை உலுக்கி எடுக்கலாம். எல்லா வற்றையும் விட முக்கியமாக அவள் தோற்றுவிட்டதாக காட்டிக் கொள்ளக் கூடாது. அப்படி செய்தால் தவறு அவளுடையது என்று அவள் உணர்ந்து கொண்டு விட்டதாக பாவித்து எதிராளி டாமினேட் செய்யக் கூடும். அதனால்தான் அவள் கடினமான குரலில் ''யார் நீ?'' என்று கேட்டாள்.

அவன் பீட்டரை சுட்டிக்காட்டி ''அவரிடம் வேலை செய்கிறவன்'' என்றான்.

''பின்னே இங்கே ஏன் வந்தாய்?''

''அவரோடு கொஞ்சம் வேலை இருக்கு.''

அவள் மேலும் குரலை உயர்த்தி ''உன் முதலாளி யுடன் உனக்கு வேலை இருந்தால் நீ அவரை உங்கள் ஆபீசில் சந்தித்துக் கொள்ளணும்'' என்றாள்.

அவன் பதில் சொல்லவில்லை.

''போ... போ... இப்படி அவர் எங்கே இருக்கா என்று தேடிக் கொண்டு வரக் கூடாது.'' எச்சரிப்பது போல் சொன்னாள்.

அவன் ஓரடி முன்னால் வைத்தான். கையிலிருந்த ப்ரீஃப் கேஸை நீட்டிக் கொண்டே, ''இதில் பணம் இருக்கு அவசரத்தில் இதை எடுத்துக் கொள்ள அவர் மறந்து போய்விட்டார்'' என்றான்.

அவள் விக்கித்துப் போய் அவனைப் பார்த்தாள். தாம் தவறு செய்து விட்டோம் என்று நிரூபிப்பதற்காக அவன் வலையை விரிப்பதாக நினைத்துக் கொண்டாள். அதனால்

''அதிர்ஷ்டசாலிதான்! இப்பொழுதுதான் உன்மேல் போலீஸ் ரிப்போர்ட் கொடுக்கலாம் என்று இருந்தோம். பணத்தை ப்ரீஃப்கேஸோடு ஒப்படைத்து விட்டதால் பிழைத்துக் கொண்டு விட்டாய்'' என்றாள்.

அவன் அதைப் பொருட்படுத்தியதாக தெரியவில்லை. பீட்டரை பார்த்து ''இதிலிருந்து என் வழிச் செலவுக்கு ஐம்பதாற்று முப்பது ரூபாய் எடுத்துக் கொண்டேன். கணக்கு எழுதி ப்ரீஃப்கேஸில் வைத்திருக்கிறேன்'' என்றான்.

அவள் ஏளனமாக ''ப்ரீஃப்கேஸின் பூட்டை உடைத்து உள்ளே எவ்வளவு பணம் இருந்தது என்று பார்த்தாயா?'' என்றாள்.

அவன் உணர்ச்சியற்ற பார்வையுடன் அவளைப் பார்த்தான். பீட்டரை சுட்டிக்காட்டி ''இவர் லக்ஷ்மண்பூரில் இந்தப் பெட்டியைக் கொடுக்கணும். ரொம்ப அர்ஜெண்ட் என்றார். எனக்கோ அந்த லக்ஷ்மண்பூர் அட்ரெஸ் தெரியாது. ப்ரீஃப்கேஸுக்குள் இருக்குமோன்னு வலுக்கட்டாயமாக திறந்தேன்'' என்றான்.

''அவ்வளவுதானே தவிர பணத்திற்காகத் திறக்க வில்லை என்கிறாய். அதுதானே? ''ஆத்திரத்துடன் கேட்டார் பிரதாப். அவருக்கு தன் அசிஸ்டெண்டான பீட்டர் இந்த விதமாக திட்டத்தை எல்லாம் பாழடித்து விட்டது அவமான மாக இருந்தது.

''நான் பணத்திற்காக திறக்கவில்லை. என் கையில் கொடுக்கப்பட்ட கவரில் என் மேல் பழிதீர்த்துக் கொள்ளும் எண்ணத்துடன் என்னை பாலைவனத்திற்கு அனுப்புவதாக இருந்தது. அது எனக்கும் ஸ்ரீகல்யாணி அவர்களுக்கும் சம்பந்தப்பட்ட விஷயம். எங்கள் இருவருக்கும் இடையே

நடந்த ரகளையில் அனாவசியமாக (பீட்டரை சுட்டிக் காட்டி) இவரை எதற்காக பலிவாங்கணும் என்று தோன்றியது. அதனால்தான் அவசர அவசரமாக ராஜ்மாண்ட் வரைக்கும் இவரை தேடிக் கொண்டு போனேன். அங்கே இவர் இல்லாமல் போகவே சந்தேகம் வந்தது, இவரும் உங்களுடைய ஆளாக இருக்கலாமோ என்று அப்பொழுது தான் ப்ரீஃப்கேஸைத் திறந்தேன்.''

''அதுவரை ப்ரீஃப்கேஸைத் திறக்கவே இல்லை. அப்படித்தானே?'' பாயிண்ட் கிடைத்து விட்டாற் போல கேட்டாள்.

''இல்லை.''

''ஏன்?''

''அது கஸ்டமரின் பணம் என்பதால்.''

''உன்னிடம் பணம் இருந்ததா?''

''இல்லை.''

''பின்னே உன் கையில் சல்லிக் காசு இல்லாமல் ராணிமட்டிலிருந்து ராஜ்மாண்ட் வரையிலும் இரவோடு இரவாக பத்து கிலோ மீட்டர் தூரம் எப்படி வந்தாய்?''

''ஓடினேன்.''

குளிர்ந்த காற்று திடீரென்று தாக்கினாற்போல் அம்மூவரும் லேசாக நடுங்கினர். அவனுடைய நேர்மை அவ்விடத்து நிசப்தத்தோடு சேர்ந்து அவர்களுடைய மனதைத் துளைத்தெடுத்துக் கொண்டிருந்தது.

அவள் அவனுக்குக் கடிதம் எழுதி ஏளனம் செய்ய நினைத்தாள். தான் ஏற்பாடு செய்த ஆள் லட்சம் ரூபாயை அவனிடம் விட்டு விட்டு வந்து விட்டதாக தெரிந்ததும் அவளுக்குக் கோபம் வந்து விட்டது. ஆனால் இப்பொழுது

அவன் அந்த லட்ச ரூபாயை திருப்பிக் கொண்டு வந்தது அவளுக்கு மேலும் சங்கடத்தை ஏற்படுத்தியது. மனிதர்களில் இவ்வளவு நேர்மையானவர்களை பார்ப்பது அவளுக்கு இதுதான் முதல் தடவை. அது மட்டுமே இல்லை. அவ்வளவு இருட்டில் அந்தப் பாலைவனத்தில் எல்லா சாமான்களையும் தூக்கிக் கொண்டு ஓடியது... எலும்பை உலுக்கி எடுக்கும் குளிரில், காலடியில் புதைந்து போகும் மணலில் பத்து கிலோமீட்டர்தூரம் ஓடி வந்தது! அதுவும் யாருக்காக? தன்னை ஏமாற்றிய நபரை கண்டு பிடித்து அவனுக்கு உதவி செய்வதற்காக...

அவள் அவனை நிமிர்ந்து பார்க்க முடியாதவளாக தலையைக் குனிந்து கொண்டாள். இந்த விவகாரத்தில் சந்தோஷமாக இருந்தவன் பீட்டர் ஒருவன்தான். காணாமல் போய் விட்டதாக நினைத்த லட்ச ரூபாய் திரும்ப கிடைத்து விட்ட சந்தோஷம். அந்த சந்தோஷத்தில் அவன் கார்த்திகேயனைப் பார்த்து ''எங்க அட்ரெஸ் உனக்கு எப்படி கிடைத்தது?'' என்று கேட்டான்.

''நான் ஒரு தடவை இந்த பிரதாப் சாரிடம் இண்டர்வியூவுக்குப் போனேன். அப்பொழுது இந்த மேடத்திடமிருந்து போன் வந்தது. 'யாரு? கல்யாணியா?' என்று பிரதாப் கேட்டார். மறுமுனையிலிருந்து இவங்க ஏதோ கேட்டபோது ''அந்த டாக்டரின் பெயர் அஸ்வத்தாமன்'' என்று அதற்கப்புறமாக என்னைப் பற்றிய பேச்சு வந்தது. ஸ்ரீகல்யாணி என்னைப் பற்றி இன்வெஸ்டிகேட் பண்ணும்படி இவரிடம் சொன்ன போது நான் அங்கேயேதான் இருந்தேன்.''

பூமி இரண்டாக பிளந்து தான் அதில் புதைந்து விட்டால் தேவலை போலிருந்தது பிரதாப்பிற்கு. அது வரை

அவர் மிகப் பெருமையாக எல்லோரிடமும் 'சிக்மா டிடெக்டிங் கம்பெனி மிக உயர்ந்த நிறுவனம். அங்கிருந்து ஒரு ரகசியம் கூட வெளியே வந்து விடாது' என்று சொல்லிக் கொண்டிருப்பார். ஆனால் இப்பொழுது தானே எவ்வளவு பொறுப்பில்லாமல் நடந்து கொண்டு விட்டார்?

அங்கிருந்த ஸ்ரீகல்யாணியின் நிலைமை மோசமாக இருந்தது. அவன் யார் என்று அவளுக்குத் தெரிவதற்கு முன்னாடியே அவள் யாரென்று அவனுக்குத் தெரிந்து போய் விட்டது. இந்த உண்மை அவள் மனதைத் துளைத்தது.

இனி அங்கே தனக்கு வேலை இல்லை என்பது போல் கார்த்திகேயன் அங்கிருந்து வெளியேறினான். இந்தச் சந்தடியில் பிரதாப் எப்பொழுது நழுவினாரோ தெரியாது. ஸ்ரீகல்யாணி இன்னும் அதிர்ச்சியிலிருந்து மீளவில்லை.

இவ்வளவு நாடகத்தனமான சம்பவத்திலும் தன் கடமையை மறந்து போகாதவன் பீட்டர் ஒருத்தன்தான். இமயமலையின் உயரத்திற்கு வளர்ந்து விட்ட கார்த்திகேயனுக்கு நன்றி சொல்ல வேண்டியது தன் கடமை என்று உணர்ந்து ஓட்டமாக ஓடி வெளியே வந்தான். உள்ளே கல்யாணி இன்னும் சிலையாக நின்றிருந்தாள்.

கார்த்திகேயன் செருப்புகள் அணிந்து கொண்டிருந் தான். அவனருகில் சென்று, ''இந்த ரகளையில் எனக்கு சம்பந்தம் இல்லை. நான் வெறும் கருவி மட்டும்தான்'' என்றான் பீட்டர்.

''எனக்குத் தெரியும்.''

''லட்சம் ரூபாயைத் திருப்பிக் கொண்டு வந்து தந்து என் வேலை போகாமல் காப்பாற்றினாய். தாங்க்ஸ்.''

''பரவாயில்லை'' என்று சொல்லிக் கொண்டே கார்த்திகேயன் கிளம்ப முற்பட்டான்.

''ஒரு கேள்வி கேட்கிறேன். பதில் சொல்லுவாயா?'' பின்னாலிருந்து பீட்டர் கேட்டான்.

கார்த்திகேயன் நின்றான்.

பீட்டர் கேட்டான் ''உன்னைப் பற்றி தெரிந்து கொள்வதற்கு அவள் டிடெக்டிவ்வை நியமித்தாள். நீ செய்த சின்ன தவறுக்கு உன்னை பாலைவனத்திற்கு நடுவில் கொண்டுபோய் விட்டுவிடச் சொன்னாள். அவள் யார் என்றும் உனக்குத் தெரியும். அவளால் உனக்கு வேலை போய்விட்டது என்று கூட தெரியும். ஆனாலும் கூட நீ ஏன் பேசாமல் இருந்தாய்? அவள் மீது உனக்குக் கோபம் வரவில்லையா?''

கார்த்திகேயன் மெதுவாக நிமிர்ந்தான். ''இல்லை'' என்றான். ''மனிதனுக்கு உத்தமமான குணம் 'உறுதி'. ஹீனமான உணர்வு 'பகை'. உத்தமமான உறுதியை தாழ்வான பகைமைக்காக பயன்படுத்துவது வீண் என்பது என்னுடைய அபிப்பிராயம்.''

பீட்டர் சங்கடத்துடன் பார்த்தான். ''எனக்குப் புரியவில்லை.

''என் மீது கோபத்தால் அவள் கொஞ்சம் நாட்கள் அமைதியை இழந்தாள். அவள் மீது இரக்கத்தால் நான் மன அமைதியுடன் இருந்தேன். இது தான் வித்தியாசம்'' என்று சொல்லிவிட்டு அங்கிருந்து போய் விட்டான்.

அவ்விருவரும் பேசிக் கொண்டது கல்யாணியின் காதில் தெளிவாக விழுந்தது.

பீட்டர் கேட்டான். ''கடைசியாக ஒரு கேள்வி.''

கார்த்திகேயன் நின்றான்.

''என் மேல் உனக்கு கோபம் எதுவும் இல்லையே?''

''எனக்கு என்றுமே யார் மீதும் கோபம் வராது.''

கல்யாணி ஜன்னல் வழியாக பார்த்தாள். கார்த்திகேயன் படியிறங்கி போய்க் கொண்டிருந்தான். அவள் சுவற்றில் மாட்டியிருந்த விவேகானந்தரின் படத்தைப் பார்த்தாள். ஏனோ தெரியவில்லை. அந்தப் படம் முன்னைவிட பிரகாசமாக தென்பட்டது.

6

நகரத்தின் மிகச் சந்தடியான சாலை அது. ஸ்ரீ கல்யாணி தன் டயோட்டா காரை ஓட்டிக் கொண்டிருந்தாள்.

''அதாவது உங்கள் பெரிய மகனை அமெரிக்காவுக்கு அனுப்பணும். உங்கள் மகளுக்குக் கல்யாணம் செய்து வைக்கணும்.''

பிரதாப் பதில் பேசவில்லை.

''இந்த இரண்டிற்கும் சேர்த்து இரண்டு லட்சமாவது வேண்டும்.''

''ஆமாம்.''

''உங்களுடைய இந்தப் பணம் என்னிடமிருந்து அடவான்ஸாக வேண்டுமா? கடனாக வேண்டுமா?'' என்று கேட்டாள்.

''இரண்டிற்கும் வித்தியாசம் என்னம்மா?''

''வட்டி!''

கன்னத்தில் அறைந்தாற்போல் இருந்தது பிரதாப்பிற்கு. வாயடைத்துப் போனவராக பார்த்தார். வியாபார மேதை என்றால் எப்படி இருப்பாள் என்று அவருக்குப் புரிந்தது. உண்மையில் தன் விருப்பத்தைச் சொன்னதுமே, 'அதற்கென்ன வந்தது? வாங்கிக் கொள்ளுங்கள்' என்று சொல்லுவாள் என்றுதான் எண்ணிக் கொண்டிருந்தார். இவ்வளவு கேள்விகள் கேட்பாள் என்று எதிர்பார்க்கவில்லை. தலையைத் திருப்பி அவள் பக்கம் பார்த்தார். அவள் காரை ஓட்டுவதில் கவனமாக இருந்தாள்.

''உன் இஷ்டம் அம்மா. நீ எப்படி விரும்புகிறாயோ அப்படியே தா. எனக்கு மட்டும் ஒரு வாரத்திற்குள் பணம் வேண்டும்.''

மார்க்கெட் வந்ததுமே அவள் காரை ஒரு பக்கமாக நிறுத்தினாள். ''அகௌண்டெண்டிடம் சொல்கிறேன். மற்ற விஷயங்களை அவர் பேசுவார்'' என்று காரை விட்டு இறங்கியவள் ''வாங்க'' என்றாள்.

பிரதாப்பின் மனம் காயப்பட்டது. அவளுக்கு நெருக்கமாக வேண்டும் என்று முயன்றவர்களில் பிரதாப்பும் ஒருவர். காதலனாக இல்லை. ஒரு தந்தையின் ஸ்தானத்தில். சிறு வயதிலேயே கோடீஸ்வரியாகி விட்ட, தனியான ஒரு பெண்ணிற்கு யாருமே நெருக்கமாக வேண்டுமென்றுதான் முயற்சி செய்வார்கள். யோசனைகள் வழங்குவார்கள். அந்த விதமாக அவரும் முயற்சி செய்தார். அவள் மட்டும் அவரை தொலைவிலேயே வைத்திருந்தாள். அவரை மட்டுமே இல்லை. எல்லோரையுமே.

எல்லோரிடமிருந்தும் யோசனைகளை பெற்றுக் கொள்வாள். ஆனால் மனதிற்கு நெருக்கமாக வரவிட

மாட்டாள். அதுதான் அவளுடைய சுபாவம். அந்த விஷயம் தெரிந்ததும் பிரதாப் அவளுடன் பிசினெஸ் உறவை மட்டுமே வைத்துக் கொண்டு அப்பொழுதிலிருந்து சந்தோஷமாக இருந்து வந்தார்.

இரட்டை மாடி கட்டிடம் கொண்ட சூப்பர் மார்க்கெட் அது. அவள் ஷாப்பிங்கை முடித்துக் கொள்வதற்கு அரைமணி ஆயிற்று. சாமான்களை எடுத்துக் கொண்டு படியிறங்கிக் கொண்டே ''உங்களுக்கு இன்னும் மூன்று மகள்கள் இருக்கிறதாக சொன்னீங்க. தொடர்ந்து மூன்று வருஷங்களுக்கு வரிசையாக இப்படி ஒரு லட்சம் வேண்டியிருக்கும்னு நினைக்கிறேன்'' என்றாள்.

அவர் அழாத குறையாக சிரித்துக் கொண்டே ''ஆமாம்'' என்று தலையை அசைத்தார்.

கார் சாலைக்கு அந்தப் பக்கமாக பார்க் செய்யப் பட்டிருந்தது. அவள் கடைசி படியில் இறங்கிக் கொண் டிருந்தபோது செருப்பு அறுந்து விட்டது. மேற்கொண்டு நடக்க முடியாமல் போனதால் அவள் பக்கத்திலேயே இருந்த பாலிஷ் போடும் ஆளிடம் போய் செருப்பை அவன் முன்னால் வைத்து விட்டு நின்றாள்.

''என்னிடம் பாலிஷ் சாமான்கள் மட்டும்தான் இருக்கும் மேடம்'' என்றான் அவன்.

''ஓ காட்! இந்தச் செருப்புடன் தெருவை எப்படித் தாண்டுவது?'' தனக்குள் சொல்லிக் கொண்டாள்.

பிரதாப் குறுக்கிட்டு ''புது செருப்பு வாங்கிக் கொள்ளலாம். சூப்பர் மார்க்கெட்டில் கிடைக்கும்'' என்றார்.

''நீங்கள் இரண்டு நிமிஷம் இங்கே காத்திருக்க முடியும் என்றால் நான் போய் தைத்துக் கொண்டு வருகிறேன்'' என்றான் நிமிர்ந்து பார்த்துக் கொண்டே.

அவனைப் பார்த்து விட்டு ''நீயா!'' என்றாள் வியப்புடன்.

அவன் எழுந்து நின்று ''இரண்டே நிமிஷத்தில் வந்து விடுகிறேன்'' என்றான். செருப்பை எடுத்துக் கொண்டு அவன் போன பிறகு ''இவன் யாரோ ரொம்ப வித்தியாசமான ஆளாக இருக்கிறான்'' என்றார் பிரதாப்.

''அவன் உங்களிடம் இண்டர்வியூவுக்கு வந்ததாக சொன்னீங்க இல்லையா?''

''ஆமாம்.''

''எந்த வேலைக்காக?''

''ஆபீஸ் பாய் வேலைக்காக. அது கூட கிடைக்காமல் போனதால் வயிற்றுப் பிழைப்பிற்காக இந்த வேலையைத் தொடங்கியிருப்பான் போலிருக்கு'' என்றார்.

அவள் மேற்கொண்டு எதுவும் பேசவில்லை. அதற்குள் கார்த்திகேயன் செருப்பை தைத்துக் கொண்டு வந்து விட்டான். அவள் பத்து ரூபாய் நோட்டைத் தந்தாள். அவன் மூன்று ரூபாயைத் திருப்பித் தந்து விட்டு ''அங்கே ஆறு ரூபாய் வாங்கிக் கொண்டாங்க மேடம்'' என்றான்.

அவள் தலையை அசைத்து விட்டு காரை நோக்கி நடந்தாள். பிரதாப்பை அவர் ஆபீஸில் விட்டு விட்டு அவள் ஆபீசுக்குப் போனாள். போகும் முன் பிரதாப்பிடம் பீட்டரை ஒரு முறை தன்னிடம் அனுப்பும்படி கேட்டுக் கொண்டாள்.

அவள் தன் ஆபீசிற்கு வந்து சேர்ந்த அரைமணிக் கெல்லாம் பீட்டர் வந்தான்.

''கார்த்திகேயன் உங்களிடம் நாலைந்து நாள் வேலை செய்தான் இல்லையா? அவனைப் பற்றி உங்கள்

அபிப்பிராயம் என்ன?'' பீட்டர் வந்து உட்கார்ந்த பிறகு கேட்டாள்.

அவள் எதற்காக கூப்பிட்டாளோ, மறுபடியும் என்ன பிரச்னை வந்து விட்டதோ என்று பயந்த பீட்டர் அவள் இந்தக் கேள்வியை கேட்டதும் திகைத்துக் போனவனாக, ''நல்லவனாகத்தான் தென்படுகிறான் மேடம். இல்லா விட்டால் ஒரு லட்சம் ரூபாயை...'' என்று ஏதோ சொல்லப் போனான்.

அவன் வார்த்தைகளை இடைமறித்து விட்டு ''அந்த விஷயம் எனக்குத் தெரியும். அவன் குவாலிஃபிகேஷன் என்ன?'' என்றாள்.

''எனக்குத் தெரியாது மேடம்.''

''அவன் அட்ரெஸ் உங்களுக்குத் தெரியும் இல்லையா? ஒரு முறை அவனை என்னிடம் அனுப்புங்கள்.'' என்றாள். பீட்டர் தலையை அசைத்தான். ''இதற்காகத்தான் கூப்பிட்டேன். இனி நீங்கள் போகலாம்.''

★

அவள் காலையில் எழுந்து கொள்ளும் போது மணி எட்டாகி விட்டது. அவள் தயாராகி கீழே வந்தாள்.

விசிட்டர்களின் அறையில் உட்கார்ந்திருந்தான் கார்த்திகேயன். அவளைப் பார்த்து விட்டு எழுந்து நின்றான். அவள் போய் அவனுக்கு எதிரே இருந்த சோபாவில் உட்கார்ந்து கொண்டு ''ப்ளீஸ்! சிட்டவுன்'' என்றாள்.

''பரவாயில்லை. சொல்லுங்கள்.''

''உனக்கு எங்கேயுமே வேலை கிடைக்க வில்லைன்னு நினைக்கிறேன்.''

''கிடைக்கவில்லை.''

''அந்த டாக்டர் உன்னை வேலையிலிருந்து நீக்கியபிறகு டிடெக்டிவ் ஏஜென்ஸிக்கு இண்டர்வியூவுக்குப் போனாய் இல்லையா?''

''ஆமாம்.''

''அந்த டாக்டரிடம் என்ன வேலை செய்து கொண்டிருந்தாய்?''

''ஒரு வேலைன்னு இல்லைங்க. காபி வாங்கிக் கொண்டு வருவேன். நோயாளிகளை உள்ளே அனுப்பி வைப்பேன்.''

''உன் குவாலிஃபிகேஷன் என்ன?''

''பிளஸ்டு.''

''அவ்வளவு குறைச்சலாக படித்திருக்கிறவன், மனவியலைப் பற்றி அவ்வளவு நன்றாக பேசினாயே எப்படி? அது எப்படி?''

''எனக்குத் தெரிந்த வரையில் சொன்னேன். அவ்வளவுதான்.''

''உன் நேர்மை எனக்குப் பிடித்து விட்டது. லட்ச ரூபாய் கிடைத்த போது கூட எடுத்துக் கொள்ளாமல் திருப்பிக் கொண்டு வந்து கொடுத்தது-'' என்றாள். நேர்மை மட்டுமே இல்லை அவளுக்கு பிடித்திருந்தது. அவ்வளவு கோபம் ஏற்படுத்திய போதிலும் அவன் சாதாரணமாக இருந்தது, அதோடு உறுதியைப் பற்றி அவன் பேசிய விதம், எல்லாமே பிடித்திருந்தன.

''உனக்கு ஏதாவது வேலை போட்டுக் கொடுக்கலாம் என்று நினைக்கிறேன். உனக்கு என்ன வேலை தெரியும்?''

''மெக்கானிக்காக வேலை செய்திருக்கிறேன். தற்காலிகமாக பேங்கில் அகௌண்டெண்டாக இருந்திருக்கிறேன். நன்றாக சமைப்பேன்.''

''இவ்வளவு வேலைகள் செய்யத் தெரிந்தவன் பூட்பாலிஷ் வேலை ஏன் செய்து கொண்டிருந்தாய்?''

''வயிற்றுப் பிழைப்பிற்காக.''

அந்த பதிலைக் கேட்டு அவள் மேற்கொண்டு அதிகமாக கேள்வி கேட்கவில்லை. பேச்சை மாற்றிக் கொண்டே ''உனக்கு என்ன வேலை கொடுக்கலாம்னு யோசித்தேன் - டிக்னிடி ஆஃப் லேபர் இல்லை என்பதால் எங்கள் வீட்டில் சமையல் வேலை செய்கிறாயா?''

''செய்கிறேன் மேடம்.''

''குட். நேற்றுதான் எங்க வீட்டு சமையல்காரி வேலையை விட்டு விட்டாள். நீ சம்பளத்தைப் பற்றி ஒன்றும் யோசிக்க வேண்டாம். உங்கள் டாக்டர் தந்ததை விட அதிகமாகவே தருகிறேன். கொஞ்ச நாள் போன பிறகு எங்க ஆபீசிலேயே ஏதாவது ஒரு வேலை போட்டு தர முயற்சி செய்கிறேன். உன்னைப் போன்ற நேர்மையானவர்கள் எங்கள் அபீசுக்கு மிகவும் தேவை'' என்று சொல்லிவிட்டு எழுந்து கொண்டாள்.

அவளுக்கு ரொம்ப நிம்மதியாக இருந்தது. அவுட்ஹவுசில் நிறைய குடும்பங்கள் இருந்த போதிலும் வீட்டில் இருந்த நால்வருமே பெண்கள்தான். அவனைப் போன்ற சிநேகிதனோ அல்லது அண்ணனோ இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று எண்ணும்படியான தோற்றம் அவனுடையது.'மழை பெய்த பிறகு பளிச்சென்ற

இலைகளோடு தலை நிமிர்ந்து நிற்கும் செடியை போல் இருந்தது அவன் முகம்.

ஹாலுக்கு பக்கத்திலிருந்த அறையை அவனுக்குக் காண்பித்து ''நீ தங்கியிருக்கப் போகிற அறை இது. உன் சாமான்களை எல்லாம் எடுத்துக் கொண்டு வந்து விடு'' என்றாள்.

அவன் தலையை அசைத்தான்.

மறுநாள் காலையிலேயே சிக்மா டிடெக்டிவ் ஏஜென்ஸியின் டைரக்டரான பிரதாப்பை அழைத்தாள். ''நீங்கள் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை அனுப்பி வைக்கும் பெர்சனல் ஸ்க்ரூடினி லிஸ்டில் சத்யன் பெயரையும் சேர்த்துக் கொள்ளுங்கள், அவன் நடவடிக்கைகள், பழக்க வழக்கங்கள். பணப் பிரச்னையில் இருக்கிறானா இல்லையா போன்ற விஷயங்களை உடனே தெரியப்படுத்துங்கள்'' என்றாள்.

பிரதாப் வியப்பை அடக்கிக் கொண்டே ''அப்படியே செய்கிறேன்'' என்றார்.

''அது மட்டுமே இல்லை. சத்யனின் காதலி யாரு? அவளுடைய கடந்த காலம் பற்றிய விவரங்களையும் தெரிந்து கொள்ளுங்கள்.''

★

இது நடந்த ஒரு மணி நேரத்திற்கெல்லாம் பிரதாப் சத்யனை சந்தித்தார்.

''ஒரு காலத்தில் நீ என்னிடம் வந்தாய். உன்னுடன் சேர்ந்து கொண்டால் என்னைப் பணத்தால் மூழ்கடித்து விடுவதாக சொன்னாய். நான் டிடெக்டிவ் ஏஜென்ஸி

தொடங்கிய புதுசு. நான் ஒப்புக் கொள்ளவில்லை. இந்த விஷயத்தை வெளியே சொன்னால் என் உயிரை எடுத்து விடுவேன் என்றாய். உன் விஷயம் எதையும் நான் வெளிப்படுத்தவில்லை.''

''இதையெல்லாம் இப்போ எதுக்காக சொல்றீங்க?''

''எனக்கு இப்பொழுது பண நெருக்கடி அதிகமாக இருக்கிறது. மகளுக்குக் கல்யாணம் செய்து வைக்கணும். மகனை அமெரிக்காவுக்கு அனுப்பணும். இரண்டிற்கும் இரண்டு லட்சமாவது வேண்டும். அதைத் தந்தால் உன்னுடன் சேர்ந்து கொள்கிறேன். உனக்கு ஒரு முக்கியமான ரகசியம் சொல்கிறேன்.''

''என்ன?''

''பணத்தை கொடுத்தால் சொல்கிறேன்.''

''ஒரு லட்சம் ரூபாயா?''

''உன் தந்தைக்குப் பக்கவாதம் வந்த பொழுது கல்யாணி ஒரு லட்சம் ரூபாயை சுவாமிகளிடம் தந்து சொத்தை எழுதி வாங்கிக் கொண்டாள். அந்தச் சொத்தை மறுபடியும் பெற வேண்டும் என்றால் நீ எனக்கு ஒரு லட்சம் தந்துதான் ஆகணும்.''

சத்யன் லட்சம் ரூபாயைக் கொண்டு வந்து கொடுத்தான். ''என்ன ரகசியம் அது?''

பணத்தை வாங்கிக் கொண்டே பிரதாப் சொன்னார். ''எங்கள் ஏஜென்ஸி சிலரை கண்காணித்து உடனுக்குடன் தகவலை ஸ்ரீகல்யாணிக்கு அனுப்பிக் கொண்டிருக்கிறது. இதெல்லாம் ரகசியமாக நடந்து வருகிறது, மிஸ்டர் சத்யன்! இன்றிலிருந்து உன் பெயரைக் கூட அந்த லிஸ்டில் சேர்த்துக்

பெண்ணைச் சொல்லி ஸ்ரீகல்யாணி எங்கள் ஏஜென்ஸியிடம் சொல்லியிருக்கிறாள்.''

சத்யனின் முகம் கோபத்தாலும், ஆத்திரத்தாலும் சுருங்கி விட்டது. அரும்பாடுபட்டு தன்னை அடக்கிக் கொண்டு ''சரி. அவளுக்கு எப்படி பாடம் கற்பிப்பது என்று எனக்குத் தெரியும்'' என்றான்.

பிரதாப் எழுந்து கொண்டார். ''உனக்கு என் மனைவிக்குடன் இந்தத் தகவல் எல்லாம் வேண்டுமா?'' என்று கேட்டார்.

''நீங்கள் என்னைப் பற்றி நல்லதாக ரிபோர்ட் தரணும் என்றுதான் லட்சம் ரூபாயைத் தந்தேன்.''

''நான் கேட்கிறதும் அதைத்தான். உன்னைப் பற்றி நல்ல விதமாக ரிபோர்ட் கொடுத்தால் போதுமா? அவள் என்ன செய்கிறாள் என்று உனக்கு விவரமாக சொல்லணுமா?

''விவரமாக சொல்லணும்.''

''அதற்கு மேலும் இரண்டு லட்சம் ஆகும்.''

சத்யன் கண்ணிமைக்காமல் பிரதாப்பையே பார்த்தான். பிறகு மனதில் நினைத்துக் கொண்டான் - 'யாங்கிக் கொள் கிழவா! முதலில் அந்த கல்யாணியின் விஷயம் ஒரு முடிவுக்கு வரட்டும். அப்புறமாக உன்னைப் பார்த்துக் கொள்கிறேன்.'

★

சத்யன் அங்கிருந்து நேராக அஸ்வத்தாமனிடம் போனான். ''நாம் சீக்கிரமாக வேலையை முடிக்கணும். இந்த சைகாலஜி ட்ரீட்மெண்டுகள், பயமுறுத்தல்கள்

இதெல்லாம் லாபமில்லை. அவளுக்கு சந்தேகம் வந்து விட்டது'' என்றான்.

''சாத்தியமே இல்ல. மனிதர்களின் மன இயல்புகள் மீது விளையாடுவது என்பது இருபத்தைந்து வருஷமாக பழக்கப்பட்டு போன விஷயம்.''

சத்யன் எரிச்சலுடன் ''எனக்கு வேண்டியது உன் அனுபவம் இல்லை. என் வேலை முடிய வேண்டும்'' என்றான்.

''கரெக்ட்!'' என்ற குரல் கேட்டது. இருவரும் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தார்கள். வாசலில் பிரதாப் நின்று கொண்டிருந்தார். சத்யன் கோபமாக எழுந்து நின்று ''நீ இங்கே எப்படி வந்தாய்?'' என்றான்.

''நான் ஒரு டிடெக்டிவ். உன்மீது ஒரு கண் வைத்திருக்கும்படி சொன்னாள் கல்யாணி. அதில் ஒரு பகுதிதான் இதெல்லாம்.''

''ஆனால் நான் உனக்குப் பணம் கொடுத்திருக்கிறேன்.''

''ஆமாம். அதற்காகத்தான் வந்தேன். நான் நம்பிக்கை துரோகி இல்லை. உனக்கு உதவி செய்யத்தான் வந்தேன். சத்யன்! உனக்கு இந்த மாதிரி காரியங்களில் எல்லாம் அனுபவம் இல்லை. அதனால்தான் குறைந்த பட்சம் கதவைக் கூட சாத்திக் கொள்ளாமல் பேசிக் கொண்டிருந்தீர்கள். உங்கள் திட்டம் வெற்றி பெற்று அந்த கல்யாணியை கொல்ல முடிந்தாலும் இரண்டே நாளில் போலீசாரிடம் பிடிபட்டு விடுவீங்க.''

சத்யனின் முகம் வாடிவிட்டது. பிரதாப்பை தங்களுடன் சேர்த்துக் கொள்வது எவ்வளவு நல்லது என்று

இப்பொழுது புரிந்தது. குருட்டு மாடு வயலில் புகுந்தாற் போல் தாமிருவரும் வெறுமே ஸ்லோபாயிசன் மூலமாக வேலையை முடித்து விடலாம் என்று நினைத்துக் கொண்டிருந்தார்கள். தாம் எவ்வளவு தவறான வழியில் போய்க் கொண்டிருக்கிறோம் என்பது இப்பொழுதுதான் புரியத் தொடங்கியது.

''நம்முடைய தற்போதைய வேலை என்ன?'' சத்யன் கேட்டான்.

''பேய் பிசாசு பெயரைச் சொல்லிக் கொண்டு கொலை செய்வது எனக்கு ஏனோ பிடிக்கவில்ல. எந்தக் காலத்தில் நடக்கப் போகிறது அது? அதற்குள் அவள் கிழவியாகி விடுவாள். அல்லது மேலும் இரண்டு பாடி கார்டுகளை வைத்துக் கொண்டால் எந்த நள்ளிரவிலேயோ நீங்கள் கையும் களவுமாக பிடிபட்டு விடுவீங்க. இது போன்ற விஷயங்களில் தாமதம் கூடாது'' பிரதாப் சிரித்தார்.

''பின்னே என்ன செய்யலாம்?''

''நேராக விஷத்தை கொடுத்து விடலாம்.''

''மூவருமாக சேர்ந்து தூக்கு மேடைக்கு போகலாம்.'' அதுவரை மௌனமாக இருந்த அஸ்வத்தாமன் வாய்ப்பு கிடைத்தாற் போல் சொன்னார். ஏற்கெனவே அவர் கோபத்தின் உச்சியில் இருந்தார். திட்டத்திற்கு நடுவில் வந்து புகுந்து கொண்ட பிரதாப் நிமிஷத்தில் தன்னை டாமினேட் செய்து விட்டதோடு தன்னை எதற்குமே லாயக்கு இல்லாதவனாக நிரூபித்து விட்டார் என்பதும் புரிந்தது. அந்தக் கோபத்தில் மேலும் சொன்னார். ''அந்த யோசனை எனக்கும் வந்தது. ஆனால் ஸ்ரீகல்யாணியின் சொத்துக்கு வாரிசு சத்யன்! போஸ்ட்மார்ட்டம் ரிபோட்டில்

கல்யாணியின் மரணத்திற்குக் காரணம் தெரிந்து விட்டால் சத்யன் கம்பி எண்ண வேண்டியிருக்கும்.''

''ஸ்ரீகல்யாணி மரணமடைந்தால்தானே போஸ்ட்மார்ட்டம் பற்றிய பிரஸ்தாபனை வரும்?'' பிரதாப் சிரித்தார். ''அவள் மரணமடையாமல் உடல் முழுவதும் சுவாதீனமிழந்து நடைபிணமாக ஆகிவிட்டாள் என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்பொழுது போஸ்ட்மார்ட்டம் என்ற பேச்சுக்கே இடமிருக்காது. அதோடு யாருக்குமே சந்தேகம் வராது. அதற்குப் பிறகு அதிர்ச்சி தரக் கூடிய செய்தி ஏதாவது சொல்லுவோம். உதாரணமாக ஏதாவது லீகல் கேஸில் கோடி ரூபாய் நஷ்டமடைந்து விட்டதாக கதை கட்டுவோம். லீகல் விவகாரங்களைப் பார்த்துக் கொள்வது சத்யன்தான். அதனால் அந்த விஷயத்தை மிகச் சுலபமாக ஏற்பாடு செய்ய முடியும். அன்று இரவே அவள் மரணமடைந்தாள் என்று வையுங்கள். யாருக்குமே சந்தேகம் வராது. அந்த அதிர்ச்சியில் போய் விட்டாள் என்று நினைப்பார்கள். கண் முன்னால் வளைய வந்து கொண்டே திடீரென்று இறந்து போனால் போஸ்ட்மார்ட்டமும் விஷப் பிரயோகம் வெளிப்படுவதும் நடக்கும். நடைபிணமாக இருந்தவள் இறந்து போனால் யாருமே பெரிதாக பொருட்படுத்த மாட்டார்கள்.''

''அபாரமான யோசனை'' என்றான் சத்யன். ''எப்பே அமுலாக்கலாம்?''

''புதிதாக ஒரு விஷத்தைப் பற்றி புத்தகத்தி படித்திருக்கிறேன். அதன் பெயர் XIC-20 உயிர் போகாமே தவிர உடலில் எந்த அவயவமும் சுவாதீனத்தில் இருக்காது பக்கவாதம் வந்தாற்போல் உடல் சுவாதீனத்தை இழந் விடும். அந்த விஷத்தை சம்பாதிக்க வேண்டும் முதலி

என் நண்பன் ஒருவன் எத்தோப்பியாவில் இருக்கிறான். அங்கிருந்து வரவழைக்கணும்.''

''XIC-20! பெயரே வித்தியாசமாக இருக்கிறதே?''

''ஒரு இனத்தை சேர்ந்த பாம்பின் விஷத்திலிருந்து தயாரிக்கப்படும் விஷம் இது. மார்ஃபியாவைக் காட்டிலும் தீவிரமாக போதைப் பழக்கத்திற்கு அடிமையானவர்கள் அந்தப் பாம்பை பிடித்து தங்கள் நாக்கில் கொத்த வைத்துக் கொள்வார்கள். ரொம்ப பயங்கரமான விஷம். நரம்பில் நேரிடையாக வீரியத்தைக் காட்டி செயலிழக்கச் செய்து விடும்.''

7

''ooபெண்டாஸ்டிக்!'' என்றாள் ஸ்ரீகல்யாணி. ''நீ இவ்வளவு நன்றாக சமைப்பாய் என்று எனக்குத் தெரியாது. ரொம்ப அனுபவம் இருந்திருக்கணும் உனக்கு.''

கார்த்திகேயன் சிரித்து விட்டுப் பேசாமல் இருந்தான்.

அவள் சொன்னாள். ''நீ என்னிடம் பொய் சொல்லியிருக்கிறாய். இதற்கு முன்னால் யார் வீட்டிலோ ரொம்ப நாட்கள் சமையல் வேலை செய்து கொண்டிருந்தாய் இல்லையா?''

அதைக் கேட்டு அவன் மனம் சுருக்கென்றது. இருந்தாலும் அந்த உணர்வை வெளியே காட்டிக் கொள்ளாமல் ''இவ்வளவு சின்ன விஷயத்திற்குப் போய் எதற்காக பொய் சொல்லணும்? எனக்கு கொஞ்சம் அனுபவம் உண்டு சமையலில்'' என்றான் மெதுவாக.

''இதோ பாரு. நான் ஏறக்குறைய பத்து வருடங்களாக கோடிக்கணக்கான ரூபாய்களுடன் வியாபாரம் செய்து வருகின்றேன். நூறு பேர் வரை வேலைக்கு வைத்துக் கொண்டிருக்கிறேன். யாருக்கு அனுபவம் இருக்குன்னு நிமிஷத்தில் கண்டு பிடித்து விட முடியும் என்னால்.''

''கொஞ்சம் சாதம் பரிமாறட்டுமா?''

''பேச்சை மாற்றினாலும் தெரிந்து கொள்ளக் கூடிய அனுபவம் எனக்கு இருக்கு.''

அவன் பதில் பேசவில்லை.

''ஏன் பேசமாட்டேங்கிறாய்?''

''உங்களுக்குக் கீழே வேலை செய்கிறவன். என்ன பேச முடியும் என்னால்?''

''உண்மையைச் சொல்வதற்கு தைரியம் வேண்டும்.''

''என்னை வேலையிலிருந்து நீக்கிவிட மாட்டீங்களே?''

''மாட்டேன், சொல்லு.''

''ஒரு சிறிய கேள்வி. யார் எப்படிப் பட்டவர்கள் என்று கண்டுபிடித்து விடக் கூடிய அனுபவம் வியாபாரம் ஆரம்பித்த எவ்வளவு வருஷங்களுக்கு பிறகு உங்களுக்கு ஏற்பட்டது?''

''எத்தனையோ வருடங்களுக்கு பிறகு என்ன? கம்பெனி என் கைக்கு வந்த முதல் வருஷமே லாபத்தை ஈட்டியது. யார் எப்படிப் பட்டவர்கள் என்று சில நாட்களிலேயே புரிந்து கொண்டு விட்டேன்.''

''அதற்கு அனுபவம் தேவையில்லையா?''

''கொஞ்சம் அறிவு இருந்தால் போதும்.''

''யார் எப்படிப் பட்டவர்கள் என்று கண்டு பிடிப்பதற்கே அனுபவம் தேவையில்லாத போது சமையல் நன்றாக செய்வதற்கு அனுபவம் எதுக்குங்க?''

அவளுக்கு புரை ஏறியது. அதை அடக்கிக் கொள்ள முயன்றபடியே அவன் சிரிக்கிறானா என்று ஓரக் கண்ணால் பார்த்தாள். அவன் அவ்வாறு செய்யாமல் ''நீங்கள் கோபித்துக் கொள்ள மாட்டேன் என்றால் ஒரு விஷயம் சொல்கிறேன்'' என்றான். சொல் என்பது போல் ஜாடை காட்டினாள். அவள் கொஞ்சம் சுதாரித்துக் கொண்ட பிறகு அவன் சொன்னான்.

''நீங்கள் யாரென்று தெரியாத போது உங்களுடன் தைரியமாக பேச முடிந்தது. இப்பொழுது என் வேலை போகாது என்று நீங்கள் தைரியம் கொடுத்ததால் சொல்கிறேன். மனிதர்கள் மீது உங்களுக்கு ரொம்பவும் தாழ்வான அபிப்பிராயம் இருக்கிறது. உங்கள் மீது உங்களுக்கு அளவு கடந்த நம்பிக்கை இருப்பதில் தவறு இல்லை. ஆனால் நம் கொள்கைதான் சரியானது என்று நினைப்பதும் அடுத்தவர்கள் மீது நம்பிக்கை இல்லாமல் போவதும் சரியில்லை. சமையல் எப்படி செய்வாய் என்று கேட்டீங்க. நான் வாழ்க்கையில் முதல் முறையாக சமைத்த பொழுது உருளைக் கிழங்கு சரியாக வேகவில்லை. காரமாக இருந்தது. முன்னாடியே உப்பும், காரமும் சேர்த்து, உருளைக் கிழங்குத் துண்டங்களை எண்ணெயில் வதக்கினால் சீக்கிரமாக, சமமாக மசாலா பரவும் என்று அனுபவத்தில் புரிந்து கொண்டேன். அதே போல் குறுகிய பாத்திரத்தைக் காட்டிலும் அகலமான பாத்திரத்தில் அதிகம் நீர் சேர்த்து சமைத்து கஞ்சியை வடித்தால் சாதம் உதிர்

உதிராக இருக்கும் என்று இரண்டு நாள் அனுபவத்தில் கற்றுக் கொண்டேன். சமையலின் நெளிவு சுளிவுகளை சில பெண்கள் சட்டென்று கிரகித்துக் கொள்ளக் கூடும். வேறு சிலர் பேரன் பேத்தி பிறந்த பிறகு கூட தெரிந்து கொள்ளாமல் இருக்கலாம். அதனால் நன்றாக சமைப்பதற்கு ஆண்டுக் கணக்காக அனுபவம் தேவையில்லை. கொஞ்சம் அறிவு இருந்தால் போதும்'' - அவள் சொன்ன வார்த்தைகளை அவளுக்கே ஒப்பிப்பது போல் சொன்னான்.

அவள் முகம் சிவந்து விட்டது. ''இதைச் சொல்லத் தானா சமையல் பற்றி இவ்வளவு நீண்ட சொற்பொழிவு ஆற்றினாய்? இதெல்லாம் எனக்கும் தெரியும். என்னாலும் சமைக்க முடியும்'' என்றாள்.

''அப்படி என்றால் சொல்லுங்கள். சாதம் வெந்ததுமே பிரெஷர் குக்கர் என்ன காரணத்தினால் விசில் அடிக்கிறது?''

பதில் தெரியாததாலோ அல்லது அவன் கேட்ட விதத்தினாலோ தெரியாது, அவள் முகம் மேலும் சிவந்து விட்டது. அவளை மேலும் எரிச்சலடையச் செய்வதற் காகவே சொன்னாற்போல் அவன் சொன்னான்.

''அதனால் அந்தந்தத் துறையில் இருப்பவர்களுக்கு அந்தத் துறையைத் தவிர மீதி எல்லாமே சுலபமானதாக தோன்றும். இப்பொழுது நீங்கள் என்ன நினைக்கிறீங்கன்னு கூட என்னால் சொல்ல முடியும்.''

ஒரு சமையல்காரன் தன்னை உலுக்கி எடுத்துக் கொண்டிருந்த விதத்தைப் பார்த்து ஏற்பட்ட கோபத்தை குரலில் காட்டியபடி,'' என்ன நினைக்கிறேன்?'' என்றாள்.

''என்னை வேலைலியிருந்து நீக்கிடணும்னு நினைக்கிறீங்க.''

ஸ்ரீ கல்யாணி திடுக்கிட்டாலும் உடனே சமாளித்துக் கொண்டு ''தவறு, நான் அப்படி நினைக்கவில்லை'' என்றாள். உண்மையில் நீக்கி விட வேண்டுமென்றுதான் நினைத்தாள்.

'அம்மாடி! பிழைத்தேன்' மனதில் நினைத்துக் கொண்டான்.

★

அன்று இரவு அவளுக்குக் காளராத்திரியாகி விட்டது. ஒன்பதரை மணிக்கு மார்பில் லேசாக எரிச்சல் தொடங்கியது. வெளியே ஹோவென்று மழை பெய்து கொண்டிருந்தாலும் அவள் உடம்பு வியர்வையால் தொப்பலாகிவிட்டது. நாக்கு உள்ளே இழுத்துக் கொண்டது. ஐந்து நிமிடங்களில் அவள் உடம்பு சுவாதீனத்தை இழக்கத் தொடங்கியது.

உடம்பிலிருந்த நைட்டியை வீசியெறிந்துவிட்டு பக்கத்திலேயே ஸ்டூல்மீது இருந்த கூஜாவிலிருந்த நீரை எடுத்து முகத்திலும் உடம்பிலும் ஊற்றிக் கொண்டாள். முகத்தின்மீது நீர் பட்டதுமே அவளுக்குக் கொஞ்சம் ஸ்மரணை வந்தது. அது ஒரு வினாடிதான். அந்த வினாடி நேரத்தில் அவள் கை இண்டர்காம்மீது பட்டது. பிறகு என்ன நடந்ததோ அவளுக்குத் தெரியாது.

விடாமல் ஒலித்துக் கொண்டிருந்த இண்டர்காம் அத்தத்திற்கு கார்த்திகேயன் விழித்துக் கொண்டான். அப்பொழுதுதான் லேசாக தூக்கத்தில் ஆழ்ந்திருந்தான். எழுந்து ஒரே பாய்ச்சலில் மாடிக்கு ஓடினான்.

கட்டில் மீது ஆடையில்லாத நிலையில் கிடந்தாள் அவள். அபூர்வ அழகி இல்லை என்றாலும் ஆரோக்கிய

மானவள். கை தேர்ந்த சிற்பி ஒருவன் செதுக்கிய சிற்பம் போல் இருந்தாள் அவள்.

அவன் வேகமாக அவள் அருகில் சென்றான். அவள் கண்கள் மூடியிருந்தன. அவள் கை இன்னும் இண்டர்காம் மீது இருந்தது. நீலநிற பெட்ஷீட்டின் மீது அவளுடைய வெண்மையான உடலை பார்க்கும் போது கடலுக்கு நடுவில் தீவு போல் தோன்றியது.

ஆனால் அவன் அதைப் பார்க்கவில்லை. அந்த அசந்தர்ப்பத்திற்குக் காரணம் என்னவாக இருக்கும் என்று யோசித்தபடியே இண்டர்காம் மீது இருந்த அவள் கையை எடுக்கப் போனான். ஷாக் அடித்தாற் போல் அப்படியே நின்று விட்டான். அவள் உடம்பு நெருப்பாக கொதித்துக் கொண்டிருந்தது. அது ஜுரம் இல்லை. உதடுகள் கறுத்து கன்றிப் போயிருந்தன. அரைமணிக்கு முன்னால் அவள் சாதாரணமாகத்தான் இருந்தாள். இதற்குள் இப்படி உடல்நலம் பாதிக்கப்பட்டதற்கு காரணம் சாதாரணமானது இல்லை என்று அவனுக்குப் புரிந்தது. இமைகளை உயர்த்திப் பார்த்தான்.

அவன் சந்தேகப்பட்டது உண்மைதான். மின்னல் வேகத்தில் சமையலறைக்கு ஓடினான். உப்புத் தண்ணீரை கலந்து எடுத்து வந்தான். அவள் தலையை மடியில் வைத்துக் கொண்டு அவளுக்கு அதைக் குடிக்கக் கொடுத்தான். அவள் விழுங்கவில்லை. அதற்குள் நரம்புகள் மீது பாதிப்பு தொடங்கிவிட்டது. பற்கள் கிட்டித்துப் போய் தண்ணீர் உள்ளே போகவில்லை. அவன் அவளை விட்டு விட்டு பாத்ரூமுக்குள் போய் டப்பில் தண்ணீரை நிரப்பி விட்டு மறுபடியும் பெட்ரூமுக்கு வந்தான்.

அவள் இன்னும் அப்படியே இருந்தாள். ஒரு கையை முழங்காலுக்குக் கீழேயும், இன்னொரு கையை அழுந்திற்குக் கீழேயும் கொடுத்து சிறு குழந்தையை தூக்குவது போல் தூக்கிக் கொண்டு பாத்ரூமுக்கு போய் பாத்டப்பில் அவளை இறக்கினான். முகத்தோடு சேர்த்து அவள் உடம்பு முழுவதையும் தண்ணீருக்குள் அழுத்தினான்.

ஒரு வினாடிக்குப் பிறகு அவளிடம் சலனம் ஏற்பட்டது. மூக்கில் தண்ணீர் புகுந்து விட்டதால் தன்னை அறியாமல் வாயைத் திறந்தாள். உப்பு நீரை வாயில் வாற்றினான். அதன் ருசியை பார்த்து விட்டு சுயநினைவு இல்லாத நிலையிலும் அதை குடிக்க மறுத்ததால் மறுபடியும் பாத்டப்பில் முக்கினான். இந்த விதமாக தொடர்ந்து செய்து உப்புத் தண்ணீரை முழுவதுமாக குடிக்கச் செய்தான்.

இந்த விதமான சமயோஜிதம் வெறும் மருத்துவம் படித்தால் வந்து விடாது. அதுவும் அவன் டாக்டர் படிப்பை முடிக்கவும் இல்லை. அனுபவம் இல்லாததால் அவன் பின்ன தவறு செய்து விட்டான். இந்த விஷயம் ஐந்து நிமிடங்களுக்கு பிறகு அவனுக்குத் தெரிந்தது.

உப்பு நீரை முழுவதும் குடிக்கச் செய்த பிறகு அவன் அவளை தரையில் நிற்க வைத்தான். கீரைத்தண்டாக துவண்டு அவள் தரையில் சரியத் தொடங்கினாள். இரு கைகளாலும் பிடித்துக் கொண்டு அவள் வயிற்றை கைகளால் அழுத்திக் கொண்டே கழுத்து வரை மேல் நோக்கி கொண்டு வந்து வயிற்றில் இருந்ததை வெளியே கொண்டு வருவதற்கு முயற்சி செய்யத் தொடங்கினான்.

ஐந்து நிமிடங்கள் கழித்து அவன் முயற்சி பலித்தது. அவள் மெதுவாக தேறிக் கொள்ளத் தொடங்கினாள்.

ஆனால் அப்பொழுது அவன் சற்றும் எதிர்பார்க்காத விளைவு ஏற்பட்டது. மூச்சுக் குழாயில் ஏதோ அடைத்துக் கொண்டதால் அவளுக்கு விக்கல் எடுக்கத் தொடங்கியது. கொஞ்ச நேரத்தில் அவள் மூச்சு நின்று விட்டது.

அவளை அப்படியே தரையில் விட்டு விட்டு அவன் மறுபடியும் கீழே ஓடினான். கியாஸ் அடுப்பில் தண்ணீரை சுட வைத்து, புதிய பிளேடை அதில் போட்டான். தண்ணீர் கொதிப்பதற்குள் குடும்ப டாக்டருக்கு போன் செய்து விஷயத்தை சொன்னான்.

''உடனே ஆஸ்பத்திரிக்கு அழைத்துக் கொண்டு போ.'' மறுமுனையில் டாக்டர் பதற்றத்துடன் ஏதோ சொல்லப் போனார்.

''அவ்வளவு சமயம் இல்லை டாக்டர்'' என்றான் அவன்.

''பின்னே என்ன செய்யப் போகிறாய்?''

''ட்ரெகியாடமி'' என்றான் கார்த்திகேயன். ''நீங்கள் உடனே வாங்க, தையல் போடுவதற்கு.''

''ஆனால் நீ...'' டாக்டர் ஏதோ சொல்ல வருவதற்குள் போனை வைத்து விட்டு கார்த்திகேயன் மாடிக்கு ஓடினான்.

அதற்கு ஸ்ரீகல்யாணியின் நிலைமை மோசமாகி விட்டது. மூச்சுக் குழாய்க்குள் காற்று நுழைய முடியாதபடி போய் விட்டதால் அவள் உடம்பில் மறுபடியும் சலனம் அடங்கிவிட்டது. இன்னும் சில வினாடிகள் கழிந்தால் அவள் தரிக்கமாட்டாள் என்று தெரியும் அவனுக்கு. அதற்கு மேல் தாமதிக்கவில்லை. ப்ளேடை அவள் கழுத்தில் வைத்து நேராக கீறினான்.

[illegible]த்தம் புஸ்ஸென்று பொங்கியது. சரியாக அரை [illegible]த்திற்குப் பிறகு அவன் அவள் தொண்டைக் குழாயில் [illegible]த்துக் கொண்டிருந்த அடைப்பை நீக்கி விட்டான். [illegible] வந்த ரத்தத்தை கையால் அழுத்திப் பிடித்துக் [illegible]டு போர்வையை எடுத்து அவள் மீது போர்த்தினான். [illegible]ள் கீழே டாக்டர் வந்த சத்தம் கேட்டது. மற்ற வேலக் [illegible]களுக்கு மாடியில் ஏதோ விபரீதம் நடந்திருப்பது [illegible]பொழுதுதான் தெரிய வந்தது. சலசலப்பு தொடங்கி [illegible]து. டாக்டர் பரபரப்புடன் மாடிக்கு வந்தார்.

''நீடில்ஸ் கொண்டு வந்தீங்களா?''

''கொண்டு வந்திருக்கிறேன்.'' டாக்டர் சொன்னார்.

அவன் ஒதுங்கிக் கொண்டான். டாக்டர் தையல் [illegible]த் தொடங்கினார். அந்த வேலை முடிந்த பிறகு அவர் [illegible]னார். ''இந்த வீட்டை விட்டு விடுன்னு சொன்னேன். [illegible] வெளிப்பட்ட போதே முதல் அசம்பாவிதம் [illegible]ந்தது. இப்பொழுது இது. ஆமாம், கல்யாணியின் [illegible]பெல்லாம் ஈரமாக இருக்கிறதே ஏன்? சில பேய்கள் [illegible]த்தான். அவை உடலில் புகுந்து கொண்டு விட்டால் [illegible]பெல்லாம் எரியும். அதனால்தான் நள்ளிரவில் [illegible] போயிருப்பாள்.''

கார்த்திகேயன் மௌனமாக அவரையே பார்த்துக் [illegible]டிருந்தான். மேற்கொண்டு பேசுவது வியர்த்தம். [illegible] அறியாமையைப் போக்கடித்து விடும் என்று [illegible]வந்துக் கொள்வது கூட அறியாமைதான்.

வாஷ்பேசினில் கைகளைக் கழுவிக் கொண்டே [illegible] சொன்னார். ''நீங்கள் இந்த நேரத்தில் இங்கே [illegible]ந்தது அதிர்ஷ்டம். நீங்கள் ஸ்ரீகல்யாணியின் [illegible]னரா?''

''இங்கே நான் வேலை பார்த்துக் கொண்டிருக்கிறேன்.''

''ஸ்ரீகல்யாணி சொந்த டாக்டரை எப்பொழுது ஏற்பாடு செய்து கொண்டாள்?'' வியப்புடன் கேட்டார் டாக்டர்.

''நான் டாக்டர் இல்லை. சமையல்காரன்.''

பாதி திறந்த டாக்டரின் வாய் அப்படியே நின்று விட்டது.

★

''டாக்டர்! உங்களுக்கு என் நன்றியை எப்படி தெரிவிப்பது என்று தெரியவில்லை. என் உயிரைக் காப்பாற்றினீங்க.'' என்றாள் ஸ்ரீகல்யாணி.

அவள் தற்சமயம் நகரத்திலேயே விலை உயர்ந்த ஆஸ்பத்திரியில் இருந்தாள். எமெர்ஜென்ஸி நிலைமை தாண்டி விட்ட பிறகு நிமிஷத்தில் இந்தச் செய்தி வெளியே பரவிவிட்டது. அவளை உடனே ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றதும், சுவாசத்தை சரி செய்ததும், அதற்குப் பிறகு மூச்சுவிட முடியாதபடி விசிட்டர்கள் வருவதும் நடந்தேறி விட்டன.

அந்தப் பரபரப்பெல்லாம் ஓய்ந்த பிறகு அவள் தன் குடும்ப டாக்டரிடம் ''சும்மா தெரிந்து கொள்ளணும் என்ற ஆர்வத்தில் கேட்கிறேன். அந்த நிலைமையில் என்னை ஆஸ்பத்திரிக்கு எடுத்துக் கொண்டு போயிருந்தால் பிழைத்திருக்க மாட்டேன் இல்லையா?'' என்று கேட்டாள்.

''சான்ஸ் குறைவு. நிமிஷத்தில் பண்ண வேண்டிய ஆபரேஷன் அது.''

''மைகாட்! நினைத்துப் பார்த்தாலே பயமாக இருக்கு. அப்படி மட்டும் நடந்திருந்தால் இப்பொழுது இந்த மாதிரி உங்களுடன் பேசிக் கொண்டு இருக்க முடியாது. ஆபரேஷன் சின்னதுதான் என்றாலும் கண்மூடி திறப்பதற்குள் அதைச் செய்து உயிரைக் காப்பாற்றிய உங்களுக்கு லட்சம் ரூபாய் பீசு கொடுத்தாலும் போறாது.''

டாக்டர் சங்கோஜத்துடன் சிரித்தார்.

அவள் கார்த்திகேயனை நோக்கித் திரும்பி ''முதலில் உன்னைத்தான் பாராட்டணும், இன்னொரு பக்கத்தில் நன்றாக கடிந்து கொள்ளணும். ஏன் என்று கேட்க மாட்டாயா? அஃப் கோர்ஸ்! இது போன்ற சின்னச் சின்ன அந்தேகமெல்லாம் உனக்கு வராது இல்லையா? உடனே டாக்டருக்கு போன் செய்ததற்கு பாராட்டணும். ஆனால் அவ்வளவு சீரியஸாக இருக்கும் போது உடனே டாக்டரிடம் அழைத்துப் போகாமல், சாவகாசமாக டாக்டருக்கு போன் செய்து வீட்டுக்கு வரச் சொன்னதற்கு டோஸ் கொடுக்கணும். டாக்டர் மட்டும் வாயு வேகத்தில் பறந்து வந்திருக்கவில்லை என்றால் என்ன நடந்திருக்கும்?'' என்றாள்.

''அவ்வளவு நேரம் இல்லை மேடம்'' என்றான்.

''அந்த விஷயத்தை முடிவு செய்ய வேண்டியது நீ இல்லை. டாக்டர். டாக்டர்! நீங்கள் சொல்லவில்லையா ஆஸ்பத்திரிக்கு அழைத்துக் கொண்டு போகச் சொல்லி.''

அவளிடமிருந்து பாராட்டு பெறும் எண்ணத்துடன் டாக்டர் உடனே சொன்னார். ''நானும் போனில் அதைத்தான் சொன்னேன்.''

இந்த இடத்தில்தான் அவர் தவறு செய்து விட்டார்.

எதிராளியை தனக்கு வேண்டிய இடத்தில் வேண்டிய விதமாக சிக்க வைத்து அவர்கள் அதிலிருந்து மீள முடியாதபடி இடுக்கிப்பிடி போடுவது கல்யாணிக்கு கை வந்த கலை. அன்றைக்கு நடந்ததை எல்லாம் ஒன்று விடாமல் வேலைக்காரர்கள் மூலமாக தெரிந்து கொண்டாள். தன்னுடைய நைட்டி தரையில் கிடந்ததால் பாத்டப்பில் அவன் தன்னை மூழ்க வைத்ததை கூட அவளால் ஊகித்துக் கொள்ள முடிந்தது. வெட்கத்தால் நாக்கைப் பிடுங்கிக் கொள்ளணும் போலிருந்தது. ஓரிரண்டு நிமிஷங்கள் கார்த்திகேயனை நிமிர்ந்து பார்க்கக் கூட தயங்கினாள். ஆனால் எத்தனையோ பேருடன் எத்தனையோ விதமாக சமாளித்த அனுபவம் இருந்ததால் அந்த நிலைமையிலிருந்து சீக்கிரமாகவே மீண்டு விட்டாள்.

அதற்குப் பிறகு அவள் பேப்பர்கள் மூலமாகவும், நண்பர்கள் மூலமாகவும் நடந்ததை எல்லாம் வேறுவிதமாக கேள்விப்பட்டாள். தனக்கு அபாயம் நேர்ந்த உடனே டாக்டர் மின்னல் வேகத்தில் வந்து ஆபரேஷன் செய்து உயிரைக் காப்பாற்றினார். இதுதான் அந்தச் செய்தி.

ஒருத்தருக்குக் கிடைக்க வேண்டிய புகழை இன்னொருத்தர் தட்டிக் கொண்டு போவது என்பது பல இடங்களில் நடப்பதுதான். கொஞ்சம் செல்வாக்கும், வாக் சாதுரியமும் இருந்து விட்டால் போதும்.

கார்த்திகேயன் போனில் டாக்டரோடு பேசி அவசரமாக வரச் சொன்ன பொழுது அந்த உரையாடலை கேட்ட வேலைக்காரர்கள் கல்யாணியிடம் ஒன்று விடாமல் எல்லாவற்றையும் சொல்லிவிட்டார்கள்.

'நீங்கள் உடனே வாங்க, தையல் போடுவதற்கு' என்று சொல்லிவிட்டு கூடவே ஏதோ ஆங்கில வார்த்தையையும் சொன்னதாக தெரிவித்தார்கள்.

எந்த விஷயமாக இருந்தாலும் முழு விவரங்களுடன் தெரிந்து கொள்வது கல்யாணியின் வழக்கம். கோடிக் கணக்கில் வியாபாரம் செய்து வந்ததால் அவளுக்கு அந்த விதமான பழக்கம் ஏற்பட்டு விட்டது. அதனால்தான் இப்பொழுது டாக்டரை இந்த விதமான உரையாடலில் ஈடுபடுத்தினாள். அவள் எப்படி 'லீட்' செய்கிறாள் என்று தெரியாத டாக்டர் ''நான் போனில் அதைத்தான் சொன்னேன், ஆஸ்பத்திரிக்கு அழைத்துப் போகச் சொல்லி'' என்றார்.

''அதற்கு ஐந்து நிமிஷங்கள் பிடித்திருக்கும். அந்தனை நேரம் நான் உயிருடன் இருந்திருப்பேனா?'' என்றுமே தெரியாதவள் போல் கேட்டாள்.

டாக்டர் திணறிப் போனதால் பதில் சொல்ல முடியாமல் தடுமாறினார். சட்டென்று பதில் தோன்றியது. ''அவ்வளவு நேரம் கஷ்டம். அதனால் உடனே கிளம்பி வந்தேன்'' என்றார்.

''நான் பிளாஸ்டிக் சர்ஜனோடு பேசினேன். கழுத்து வெட்டுக் காயத்தின் வடு தென்படாமல் செய்து விட முடியும் என்றார். இன்னும் இரண்டு மாதங்கள் கழித்து சர்ஜரி வைத்துக் கொள்வதாக சொன்னார்'' என்றாள்.

யாருமே பதில் சொல்லவில்லை. மறுபடியும் அவளே சொன்னாள். ''அவர் இந்தக் காயத்தைப் பரிசோதித்து விட்டு, யாரோ நாட்டுப்புற வைத்திய முறையில் கீறியிருப்பதாகவும், இந்தத் தழும்பு மறைவதற்கு கொஞ்சம் கஷ்டப்படணும் என்றும் சொன்னார். நான் சொன்னேன். 'சரியான சமயத்தில் எதுவும் கிடைக்காமல் எங்கள் டாக்டர் சமயோஜிதமாக பிளேடை

பயன்படுத்தி ஆபரேஷன் செய்து விட்டார்' என்று. நான் சொன்னது உண்மைதானே டாக்டர்?''

''நூற்றுக்கு நூறு உண்மை.''

அவள் சிரித்துக் கொண்டே ''பிளேடை வென்னீரில் போட்டு கொதிக்கவாவது வைத்தீங்களா?'' என்று கேட்டாள்.

டாக்டர் கொஞ்சம் தடுமாறி விட்டு ''ஆம். தகுந்த ஜாக்கிரதைகளை எடுத்துக் கொண்டேன்'' என்றார்.

''உங்களுக்கு ட்ரெகியாடமி செய்யணும் என்று ஏன் தோன்றியது?''

''என்ன இது மிஸ் கல்யாணி? நீங்கள் மூச்சு விட முடியாதபடி துடிதுடித்துக் கொண்டிருக்கும் போது...'' என்று சொல்லிக் கொண்டிருந்த டாக்டரின் வார்த்தைகளை இடையிலேயே தடுத்து நிறுத்தி விட்டு ''புறப்படுவதற்கு முன்னாடியே உங்களுக்கு ட்ரெகியாடமி செய்ய வேண்டும் என்று தெரியுமா? இங்கே வந்த பிறகு அந்த முடிவை எடுத்துக் கொண்டீங்களா?'' என்று கேட்டாள்.

''பேஷண்டின் நிலைமையைப் பற்றி போன் செய்து இவன் சொன்னதுமே அதற்கு என்ன செய்ய வேண்டுமோ உடனே எனக்குத் தெரிந்து விட்டது.'' பெருமை பொங்கும் குரலில் சொன்னார்.

அப்பொழுது அவள் கடைசி கேள்வியைக் கேட்டாள்.

''ட்ரெகியாடமி செய்வதற்காக வந்து விட்டு தையல் போடுவதற்காக ஊசியைக் கொண்டு வந்த நீங்கள் கழுத்தில் ஓட்டை போடுவதற்காக கத்தியை ஏன் கொண்டு வரவில்லை? ப்ளேடை ஏன் பயன்படுத்த வேண்டி வந்தது?''

அந்த அறையில் ஊசி விழுந்தாலும் கேட்கும் அளவுக்கு நிசப்தம் வந்து சூழ்ந்து கொண்டது. டாக்டரின் முகம் ரத்தம் வற்றிவிட்டாற்போல் வெளிறிப் போய் விட்டது. கைகளை பிசைந்தபடி நின்றார். அவள் தன் பக்கத்திலிருந்த உள்ளூர் செய்தித் தாளை அவருக்கு முன்னால் தள்ளிக் கொண்டே '' 'சமயோஜிதமாக ஆபரேஷன் செய்து பிரபல தொழிலதிபதியை காப்பாற்றிய டாக்டர்' என்று கொட்டை எழுத்துக்களில் பிரசுரிக்கச் செய்திருக்கும் பத்திரிகை நிருபருக்கு இவ்வளவு சின்ன சந்தேகம் ஏன் வரவில்லையோ?'' என்றாள்.

''அதில்லை மேடம்-'' டாக்டர் ஏதோ சொல்லப் போனார்.

ஸ்ரீகல்யாணி ''இனி நீங்கள் போகலாம்'' என்றாள் கடுமையாக.

அவர் தலை குனிந்தபடி போய் விட்டார். கார்த்திகேயன் ஒருத்தன் தான் அவளுடன் அறையில் இருந்தான். அவளுடைய முகம் இப்பொழுது பிரசன்னமாக இருந்தது.

''நீ ஏன் என்னிடம் பொய் சொன்னாய்?'' என்று கேட்டாள்.

அவன் திகைத்துப் போய் ''பொய்யா?'' என்றான்.

''உன் படிப்பு விஷயத்தில்.''

''நான் உண்மையைத்தான் சொன்னேன் மேடம். இண்டர்மீடியட் படித்தேன். அதற்குப் பிறகு மருத்துவம் நான்கு ஆண்டுகள் படித்து விட்டுவிட்டேன்.''

அவள் வியந்து போனாள். மருத்துவப் படிப்பை கூட நடுவில் அதுவும் கடைசி வருடத்தில் விட்டு

விடுபவர்கள் இருப்பார்கள் என்று அவளுக்குத் தெரியாது. அந்த வியப்பை மறைத்துக் கொள்ளாமல் ''ஏன்?'' என்று கேட்டாள்.

''பணம் இல்லாததால்.''

அவள் ரொம்ப நேரம் பதில் பேசவில்லை. பிறகு தனக்குத்தானே பேசிக் கொள்வது போல் ''அவ்வளவு வருடங்கள் படித்தவன் இன்னும் ஒரு வருடம் படித்திருக்கக் கூடாதா? உன் பெற்றோர் உயிருடன் இருக்காங்களா?'' என்றான்.

''இல்லை.''

''நீங்கள் ஃபைனல் இயர் படித்துக் கொண்டிருந்த போது?''

''இருந்தாங்க.''

''இருந்தாங்களா?'' அவள் மேலும் ஆச்சரிய மடைந்தவளாக ''பின்னே ஏன் படிக்க வைக்கவில்லை. ஓ... பணம் இல்லாமல் என்று சொன்னீங்க இல்லையா? என்னதான் பணம் இல்லாவிட்டாலும் கடைசி ஆண்டு படித்துக் கொண்டிருக்கும் போது படிப்பை நிறுத்து வார்களா? வாயை வயிற்றைக் கட்டியாவது படிக்க வைத்திருக்க வேண்டாமா? உங்களுடைய தந்தை யாரு? என்ன வேலை செய்து கொண்டிருந்தார்?'' என்று கேட்டாள்.

அவன் சொன்ன பதிலைக் கேட்டு அவள் அதிர்ந்து போய் விட்டாள். அவள் குரல் கிறீச்சென்று ஒலித்தது. ''ஜமீன்தார் ஜெகதீஷ் வர்மா உங்களுடைய தந்தையா?'' கேட்டாள் உத்வேகத்துடன்.

அவன் தலையை அசைத்தான்.

''ஆனாலும் கூட பணம் இல்லாமல் உங்கள் படிப்பு நின்று விட்டதா?'' கோபமாக கேட்டாள்.

அவன் பதில் பேசவில்லை.

''ஐயாம் சாரி.''

அவன் தலையை குனிந்து கொண்டான்.

''எதற்காக என்று கேட்க மாட்டீங்களா?''

''எதற்காக?''

''அப்படிப்பட்ட தந்தைக்கு மகனாகப் பிறந்ததற்கு,'' கடுமையான குரலில் சொன்னாள்.

அவன் சட்டென்று நிமிர்ந்தான். அவள் தொடர்ந்தாள் - ''உங்க அப்பாவைப் பற்றி நான் கேள்விப் பட்டிருக்கிறேன். லட்சக் கணக்கான சொத்துக்கள் வைத்துக் கொண்டு பெற்ற மகனை கடைசி ஒரு வருடம் படிக்க் வைக்க முடியாமல் போய் விட்டார். இருந்த சொத்தை எல்லாம் வைப்பாட்டிக்கு தாரை வார்த்து விட்டு மனைவியை, மகனை பிச்சையெடுக்கும் படியாக செய்து விட்டாராமே? கடைசியில் அந்தக் காதலி அவரை ஓட்டாண்டியாக்கி விட்டு தெருவில் விரட்டி விட்ட பிறகு, மறுபடியும் மனைவி மக்களிடமே அடைக்கலம் தேடிப் போனாராமே. மைகாட்! நினைத்துப் பார்க்கும் போதே பயங்கரமாக இருக்கிறது. உலகத்தில் இப்படிப்பட்ட மனிதர்கள் கூட இருப்பார்களா என்று நினைக்க தோன்றுகிறது.''

வெளியே ஏதோ சந்தடி கேட்டதும் அவன் அங்கிருந்து வெளியே போக முயன்றான்.

''ஒரு கேள்விக்கு பதில் சொல்றீங்களா?'' அவன் நின்றான்.

''உங்க அப்பாவைக் கண்டால் உங்களுக்கு வெறுப்பாக இல்லையா?''

''இந்த டாபிக்கை விட்டு விடுங்கள். இதைப் பற்றி வாதம் புரிய எனக்கு விருப்பமில்லை.''

அவள் ஆவேசமாக ''ஏன் விருப்பமில்லை?'' என்று கேட்டாள்.

கார்த்திகேயன் உணர்ச்சியற்ற முகத்துடன் ''சில விஷயங்களைப் பற்றி சிலருக்குப் பேச பிடிக்காது. அவ்வளவுதான்'' என்றான்.

அவள் மேலும் ஆவேசமடைந்தவளாக குரலை உயர்த்தினாள். ''பிடிக்காதுன்னு இல்லை. பயம்! உங்கள் மனப் போக்கு எனக்கு நன்றாக புரிந்து விட்டது. உங்களுக்கு வாழ்க்கையுடன், பிரச்னைகளுடன், எதிராளி யுடன் போராடுவதற்கு துணிச்சல் இல்லை. உங்களுக்கு பிரச்னைகள் என்றாலே பயம். உண்மை என்றாலும் பயம். பணம் சம்பாதிக்க தெரியாத கையாலாகாதவர் நீங்க. ஒரு விதத்தில் சொல்லணும் என்றால் பணம் சம்பாதிப்பதற்குக் கூட தைரியம், துணிச்சல், போராடும் குணம் எல்லாம் வேண்டும். அவை உங்களிடம் இல்லை. நிறைய பேரிடம் அந்த குணங்கள் இருக்காது. அதனால்தான் நிறைய பேர் சாதாரணமாக வாழ்ந்து கொண்டிருப்பாங்க. ஆனால் இந்த விஷயத்தில் உங்களுக்கு சாமர்த்தியம் அதிகம். உங்கள் கோழைத்தனத்திற்கு நல்ல பெயர் வைத்துக் கொண்டீங்க. பெரிய பெரிய கொள்கைகளை வாய்கிழிய பேசுறீங்க. 'நான் பொய் சொல்ல மாட்டேன். நான் நேர்மையானவன். எனக்குக் கோபம் வராது' என்று சொல்லிக் கொண்டு உங்களை நீங்களே ஏமாற்றிக் கொள்றீங்க. பாலைவனத்தில் லட்சம் ரூபாய் கிடைத்தவன் திருப்பிக் கொண்டு வந்து

கொடுப்பதில் நேர்மை இருக்கிறது. ஆனால் அதைத் திருடினால் போலீசார் பிடித்து விடுவார்களோ என்ற பயமும் இருக்கிறது.

''அன்றைக்கு நடந்தது உங்களுக்கு நினைவு இருக்கிறதா? என் செருப்பு அறுந்து விட்ட போது உங்களிடம் பத்து ரூபாயைத் தந்து தைத்துக் கொண்டு வரச் சொன்னேன். தையல் கூலி ஆறு ரூபாய் ஆயிற்று என்று சொல்லி மூன்று ரூபாயை திருப்பிக் கொடுத்தீர்கள். ஏன் அவ்வாறு செய்தீர்கள் என்று எனக்குத் தெரியும். தைத்துக் கொண்டு வந்ததற்கு உங்கள் சார்ஜ் ஒரு ரூபாய். உண்மையில் நீங்கள் கணக்கு எதுவும் சொல்லாமல் போனாலும் நான் ஒன்றும் நினைத்துக் கொள்ள மாட்டேன். ஆனால் நீங்கள் பண விஷயத்தில் கச்சிதமாக நடந்து கொள்வீர்கள் என்று எனக்கு தெரியப்படுத்த வேண்டும் என்பது உங்கள் எண்ணம். இங்கேதான் உங்கள் சாமர்த்தியம். வேறு யாராவதாக இருந்தால் மூன்று ரூபாயை திருப்பிக் கொடுத்து விட்டு பேசாமல் இருந்திருப்பார்கள். இப்பொழுது உங்கள் படிப்பு விஷயத்தில் கூட அதே முறைதான். நீங்கள் டாக்டருக்கு படித்திருக்கீங்கன்னு என்றாவது ஒருநாள் வெளிப்பட்டு விடும் என்று கூட உங்களுக்கு தெரியும். அது எனக்கு நிடீரென்று தெரிய வேண்டும் என்பது உங்கள் உத்தேசம். அப்பொழுது நான் உங்களை 'நீ' என்று அழைப்பதிலிருந்து 'நீங்கள்' என்று மாற வேண்டும். நான் த்ரில் ஆக வேண்டும். அப்படித்தானே.....?

''ஆமாம் என்று நீங்கள் ஒப்புக் கொள்ள மாட்டீங்க. உங்களால் வாதாடக் கூட முடியாது. நான்தான் சொன்னேனே, வாதம் புரிவதற்குக் கூட தைரியம் வேண்டும் என்று. பலபேருடன் பலவிதமாக பழக

முடிந்தவர்களால்தான் பணம் சம்பாதிக்க முடியும். பலவிதமாக முயற்சி செய்தால்தான் எந்தத் துறையிலும் புகழ் பெற முடியும். கோபம், ஆவேசம், துக்கம், துணிச்சல், இவையெல்லாம் மனிதனின் இயற்கை குணங்கள். இவையெல்லாம் கொஞ்சமாவது சேர்ந்து இருந்தால்தான் உண்மையான மனிதன். இதெல்லாம் இல்லாதவன் வேதாந்தி இல்லை, கையாலாகாதவன். கையாலாகாத் தனத்திற்கு வேதாந்தம் என்று பெயர் வைத்துக் கொள்வது ஆத்மவஞ்சனை. ஒரே வார்த்தையில் சொல்ல வேண்டும் என்றால் எந்தப் பரபரப்பும் இல்லாமல், யாரோடும் சண்டை போடாமல், எந்த ரசனையும் இல்லாமல் வாழ்வது வியர்த்தம். முதலில் வாழ்க்கையே ஒரு பெரிய வியாபாரம். எந்த லாபமும் இல்லாவிட்டால் வாழ்வது எதற்கு என்பது என்னுடைய உத்தேசம். நீங்கள் என்ன சொல்றீங்க?''

''என்ன சொல்வேன் மேடம்? ஒரு முதலாளி தன் சமையல்காரனுடன் இவ்வளவு நேரம் வாதாடுவதில் எந்த லாபமும் இல்லை என்பேன்.'' பணிவாக சொல்லிவிட்டு அங்கிருந்து போய் விட்டான்.

இவ்வளவு கொடுமையாக அவளை யாருமே இதுவரை வீழ்த்தியது இல்லை. ஸ்ரீகல்யாணியின் மனம் சலசலவென்று கொதித்தெழுந்தது.

அவன் அதிகமாக பேசாததும், ஆவேசமடையாததும் அவள் ஆத்திரத்தை மேலும் தூண்டிவிட்டன. எந்த விஷயத்தில் மனிதன் தோல்வி அடைகிறானோ அந்த விஷயத்தில்தான் வெற்றி பெற வேண்டும் என்ற வேட்கை அதிகமாகி விடும். கார்த்திகேயன் விஷயத்தில் வெற்றி பெறுவதற்காக அவள் ஒரு சின்ன திட்டத்தை தீட்டினாள். தன்னுடைய ஈகோவை திருப்தி படுத்த வேண்டு

மென்பதற்காக அவள் செய்த அந்தக் காரியம் அவனைச் சங்கடத்தில் ஆழ்த்தி விட்டது. அவன் கோபத்தையும், துக்கத்தையும் தூண்டிவிட்டு அவன் ஆவேசத்தோடு வந்துவதை பார்க்க வேண்டும் என்பது அவள் விருப்பம். மனிதர்கள் மீது தனக்கு இருந்து வந்த அபிப்பிராயத்தை உடனுக்குடன் உறுதிப்படுத்திக் கொள்வது அவளுக்கு பழக்கமாகிவிட்டது. முன்பின் யோசித்துப் பார்க்காமல் அவள் செய்த அந்தக் காரியம் மூவரின் வாழ்க்கையின் போக்கை முற்றிலுமாக மாற்றிவிட்டது.

8

மழை நாளாக இருந்ததால் சூரியன் இன்னும் மேகத்திரைக்குள்ளேயிருந்து வெளியே வரவில்லை.

அப்பொழுது தான் உறக்கத்திலிருந்து விழித்துக் கொண்ட கல்யாணி ஏ.சி.யை அணைத்து விட்டு வெளியே பால்கனிக்கு வந்தாள். அதிகாலையில் வீசிய குளிர்ந்த காற்று இதமாக இருந்தது. அந்தக் காற்றில் பாடல் ஒன்று மிதந்து வந்தது.

மல்லிகைப் பூ படுக்கையின் மீது
பால் போன்ற வெண்ணிலவே,
நெஞ்சநல்லாம் பரவிய சந்தோஷம்
கண்கோடியில் கன்னத்தில் உருளும்
முத்துகளாக...

அந்தக் குரலில் உயர்ந்த 'கலை' இல்லை. தேர்ந்த பாடகனின் குரல் இனிமை கூட இல்லை. ஆனால் அந்தப் பாட்டின் பொருள் வித்தியாசமாக இருந்தது.

அவள் கீழே இறங்கினாள்.

ஸ்டோர் ரூமில் ஓவியம் வரைந்து கொண்டே பாட்டை முணுமுணுத்துக் கொண்டிருந்தான் கார்த்திகேயன். பாடகன் இல்லை என்றாலும் சிறந்த ஓவியன் என்பது அவன் தீட்டிய ஓவியத்திலிருந்தே புரிந்தது.

வசந்த காலத்தை கண்முன்னாடி கொண்டு வந்து நிறுத்தினாற் போல் இருந்தது அந்த ஓவியம். அவள் அதைப் பார்த்து விட்டு ''உங்களுக்கு இதில் கூட பயிற்சி உண்டா?'' என்று கேட்டாள்.

திடீரென்று பின்னாலிருந்து கேட்ட அந்தக் கேள்விக்கு அவன் திரும்பிப் பார்த்தான். அவளைக் கண்டு பதற்றமடைந்து ''மன்னித்துக் கொள்ளுங்கள் மேடம். நீங்கள் எழுந்து விட்டீர்கள் என்று தெரியாது. காபி கொண்டு வருகிறேன்'' என்று பரபரப்புடன் சமைய லறைக்கு ஓடினான், தூரிகையை அங்கேயே வைத்து விட்டு.

அவள் மறுக்கவில்லை.

அவன் காபி டம்ளருடன் உள்ளே வந்து கொண்டே ''காலையில் நீங்கள் சீக்கிரமாக எழுந்து கொள்ள மாட்டீங்கன்னு தான் நான் காபி கலந்து வைக்கவில்லை'' என்றான்.

''இட்ஸால் ரைட்'' என்றாள் அவள் டம்ளரை வாங்கிக் கொண்டே.

அவன் இன்னும் குற்ற உணர்வுடன் நின்று கொண்டிருந்தான்.

அவள் சொன்னாள். ''நேற்று இரவு நான் யோசித்தேன். உங்களை சமையல்காரனாக வைத்துக் கொண்டிருப்பது எனக்கு சங்கடமாக இருக்கு.''

அவன் முகம் வாடி விட்டது. ''நீக்கி விட போறீங்களா மேடம்?'' என்றான்.

''இல்லை. நீங்கள் மருத்துவப் படிப்பை முடியுங்கள். உங்கள் செலவையெல்லாம் நானே ஏற்றுக் கொள்கிறேன்.''

''வேண்டாம் வேண்டாம்'' என்றான் அவன் பதற்றத்துடன்.

''சும்மா வேண்டாம். நீங்கள் என் உயிரைக் காப்பாற்றியதற்கு நன்றியாக என்று வைத்துக் கொள்ளுங்கள். அல்லது நட்பு முறையில் என்று வைத்துக் கொள்ளுங்கள். எதுவாக இருந்தாலும் உங்கள் இஷ்டம்.''

அவன் பதில் சொல்லவில்லை. அவள் மேலும் சொன்னாள். ''இவ்வளவு மெடீரியலிஸ்டாக இருக்கிறவள், ஒவ்வொரு ரூபாய்க்கும் கணக்கு பார்க்கிறவள் இப்படி பேசுகிறாளே என்று நினைக்கிறீங்களா? போகட்டும். கடனாக வாங்கிக் கொள்ளுங்கள். அப்புறமாக தீர்த்துக் கொள்ளலாம்.''

''இல்லை. எனக்கு படிக்கணும் போல் இல்லை. முடிந்தால் கொஞ்சம் பணம் சம்பாதித்துக் கொண்டு கல்கத்தாவுக்குப் போய் சாந்தி நிகேதனில் சேரணும் என்று நினைக்கிறேன்.''

அவள் வியப்புடன் ''சாந்தி நிகேதனிலா? எதுக்கு?'' என்று கேட்டாள்.

''ஓவியக் கலையில் எனக்கு ஆர்வம் அதிகம். அதை வளர்த்துக் கொள்வதற்காக.''

''வளர்த்துக் கொண்டு-?'' அவள் புரியாமல் கேட்டாள்.

''வேறு எதற்காகவும் இல்லை. வளர்த்துக் கொள்ளணும். அவ்வளவுதான்.'' சொல்லிக் கொண்டிருந்த

போதே அவன் தன் கனவு உலகத்தில் ஆழ்ந்து போய் விட்டான்.

''ஓவியக் கலையை தொழிலாக மாற்றிக் கொள்ள உத்தேசித்து இருக்கீங்க போலிருக்கு. உங்களுடைய ஓவியங்களை விற்பீங்களா?''

''இல்லை. என்னுடைய திருப்திக்காக போடுவேன். வேறு எதிலுமே எனக்கு திருப்தி கிடைக்காது. ஒரு கேன்வாசையும், தூரிகையையும் கொடுத்துவிட்டால் போதும். உணவு, உறக்கம்கூட தேவையில்லை. இதோ இந்த ஓவியத்தில் நான் காதலன் காதலியின் பிணைப்பை வரைந்திருக்கிறேன். 'வானளவு உலகம் எனக்கெதற்கு? உன் பக்கத்தில் ஒண்டிக் கொள்ள சாண் இடம் இருக்கும் போது' என்பது போல் எப்படி ஒன்றிப் போயிருக்கிறாள் பாருங்கள். இது முதல் முத்தம்! காதல் கீதத்திற்கு முத்தத்தைக் காட்டிலும் உயர்ந்த பின்னிசை ஏது? அவள் கண்களில் அந்த முதல் முத்தத்தின் உணர்வை வெளிப் படுத்துவதில் நான் வெற்றி அடைந்திருக்கிறேனா?''

அவன் பலவீனம் அவளுக்குப் புரிந்து விட்டது. எப்பொழுதும் தான் உண்டு தன் வேலை உண்டு என்று இருக்கும் கார்த்திகேயன் இல்லை இவன். புதிய கார்த்திகேயனாக இருந்தான். பட்டத்தை பறக்கவிடும் சிறுவன் போல் இருந்தான். ஸ்ரீகல்யாணிக்கு உற்சாகம் ஏற்பட்டது.

''எவ்வளவு நாட்களாக வரைந்து கொண்டிருக்கீங்க இந்தப் பட்த்தை?'' என்று கேட்டாள்.

''ஒரு மாதமாக... தினமும் விடியற் காலையிலேயே எழுந்து கொண்டு இரண்டு மூன்று மணி நேரம் வரைந்து கொண்டிருப்பேன். இன்னும் முடியவில்லை.''

''மைகாட்! இவ்வளவு சிரத்தையை, கவனத்தை வியாபாரத்தில் செலுத்தியிருந்தால் இந்நேரத்திற்கு லட்சாதிபதியாகி இருப்பீங்க.''

தென்திசையிலிருந்து வந்து வீசிய குளிர்ந்த காற்று உல்லாசத்தை தந்தது. அவன் சிரித்தான். சிறு குழந்தையின் சிரிப்பு. உண்மையான கலைஞன் மட்டுமே சிரிக்கக் கூடிய நிர்மலமான புன்னகையுடன் அவன் சொன்னான். ''இன்றைய பிரச்னைகளை நாளைக்கு எப்படி சமாளிப்பது என்ற கவலையுடன் வியாபாரி உறங்குவான். இன்றைக்கு மனதில் தோன்றிய ஊகத்திற்கு நாளைக்கு எப்படி உருவகம் தருவது என்ற யோசனையுடன் கலைஞன் உறங்குவான். அதுதான் வித்தியாசம்.''

அவள் வியப்படைந்தாள். இரண்டே வரிகளில் எவ்வளவு பெரிய விஷயத்தை சொல்லி விட்டான்!

''ஆனால் இத்தனை பேரை போஷிக்கிறேன்; இத்தனை பெரிய வியாபாரத்தை நிர்வகிக்கிறேன் என்ற திருப்தி இருக்கும் இல்லையா?'' என்றாள்.

அவன் தலையை அசைத்தான். ''நானும் சும்மாதான் சொன்னேன். அவங்கவங்க சந்தோஷம் அவங்கவங்களுக்கு. வியாபாரத்தில் பிரச்னைகள் இல்லை என்றால் உங்களுக்கு தூக்கம் வராமல் போகலாம்.''

''உண்மையிலேயே நீங்கள் பாடிய பாட்டு ரொம்ப நன்றாக இருந்தது. எந்த சினிமாவில் வந்தது?''

''இல்லை. நானே இட்டுக் கட்டினேன்.''

''அது சரி. மனமெல்லாம் சந்தோஷத்தால் நிரம்பி வழிந்தால் கண்களில் கண்ணீர் வருவதாவது? அதெப்படி?'' அப்பாவியாக முகத்தை வைத்துக் கொண்டு கேட்டாள்.

''வரும். உங்களுக்கு தெரியாமல் இருக்கலாம். உண்மையிலேயே வரும்.''

அவளுக்கு அலை அலையாக சிரிப்பு பொங்கிக் கொண்டு வந்தது.

அவன் அதைப் பொருட்படுத்தவில்லை. ''ஆமாம். நான் ஒரு தடவை படம் வரைந்து முடிந்ததும் அழுது விட்டேன் தெரியுமா?'' என்றான்.

''ஏன்? படம் நன்றாக வரவில்லையா?'' சிரிப்பை அடக்கிக் கொண்டே கேட்டாள்.

''ரொமப் நன்றாக வந்தது. அதான் அழுது விட்டேன்.''

''நீங்கள் போட்ட மற்ற ஓவியங்களை காட்டுவீங்களா?''

''அதற்கென்ன வந்தது? காட்டுகிறேன்.'' அவன் சின்னப் பையனைப் போல் உள்ளே ஓடிப் போய் பழைய டிரங்க் பெட்டி ஒன்றை எடுத்து வந்தான். அதிலிருந்து கேலண்டர் கட்டு போல் சுருட்டி வைக்கப்பட்டிருந்த ஓவியங்களை வெளியே எடுத்தான்.

''இதெல்லாம் நீங்கள் போட்ட படங்களா?'' வியப்படைந்தவளாக கேட்டாள்.

''ஆமாம். பதினாறு வயதிலிருந்தே போட்டு வருகிறேன்.''

அவள் கைக் கடியாரத்தை பார்த்துக் கொண்டாள். இன்னும் ஏழடிக்கவில்லை. ஆபீசுக்குக் கிளம்புவதற்கு இன்னும் நேரம் இருந்தது. இன்னும் கொஞ்ச நேரம் அழ வைக்கலாம்.

''ஏதோ படம் போட்டு முடித்ததும் அழுததாக சொன்னீங்களே. அது எது?'' என்று கேட்டாள்.

அவன் அதை வெளியே எடுத்தான். மிக அபூர்வமான படம். பார்த்தாலே தெரிந்தது.

வானம் என்ற கேன்வாஸின் மீது சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் உருவாக்குவதற்கு எத்தனை ஆயிரக் கணக்கான யுகங்கள் பிடித்ததோ தெரியாது. ஆனால் அந்த படம் வரைந்த ஓவியனுக்கு ஏற்பட்ட திருப்தி பல மடங்கு மேலாகத்தான் இருந்திருக்கும்.

கடற்கரையில் ஒரு பெண் நின்று கொண்டு தொலை வெளியிலிருந்து வந்து கொண்டிருந்த படகை பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவள் கேட்டாள். ''இந்தப் படத்திற்குக் கீழே வேதனை என்று எழுதியிருக்கிறதே. ஏன்?''

''பிரிவை காட்டிலும் அதிக வேதனை தரக் கூடியது எது?''

''பிரிவா? நீங்கள் எப்பொழுதாவது காதலில் ஆழ்ந்திருக்கீங்களா?''

''இல்லை.''

''உங்கள் காதலியை நினைத்து வரைந்தீர்களோ என்று நினைத்தேன். அனுபவம் இல்லாமல் கூட விஷயத்தைச் சொல்ல முடியும் போலிருக்கு. புதிய வியாபாரத்தில் நுழையும் போது நாங்கள் கூட எல்லாம் தெரிந்தாற்போல் நடிப்போம்.''

கலையை வியாபாரத்துடன் ஒப்பிட்டது அவனுக்கு கொஞ்சம் வேதனையாக இருந்தது. ஒன்பதுமாதம் சுமந்து

பெற்ற குழந்தையை அன்புடன் தடவிக் கொடுக்கும் தாய் போல் அவன் அந்தப் படத்தை பார்வையாலேயே ஸ்பர்சித்தான்.

''இவ்வளவு நல்ல படத்தை ஃப்ரேம் கூட போடாமல் பழைய பெட்டிக்குள் வைத்திருக்கீங்களே, ஏன்?''

''நாளுக்கொரு வீடு மாறிக் கொண்டு இருப்பவன் நான். ஃப்ரேம் போட்டு எங்கே மாட்டுவது? இவை யெல்லாம் மாட்டணும் என்றால் அரண்மனைதான் வேண்டும்.''

''யாராவது இளவரசி காதலிக்கிறாளா என்று பாருங்கள்.'' சிரித்துக் கொண்டே சொன்னாள்.

அவன் பதில் சொல்லவில்லை. மீண்டும் அவளே சொன்னாள். ''உங்களை யார் காதலிப்பார்கள் என்று நினைக்கிறீங்களா? நம் நாட்டில் எது இருந்தாலும் இல்லாவிட்டாலும் கலையை அபிமானிப்பவர்களுக்கு என்ன குறைவு?''

அவள் வார்த்தைகள் சாதாரணமாக இருந்த போதிலும் அவள் மனதை கண்ணாடி போட்டுக் காட்டினாற்போல அமைந்து விட்டன. அவள் உத்தேசத்தில் மனிதர்கள் இரண்டு விதமானவர்கள். கஷ்டப்பட்டு வேலை செய்பவர்கள் ஒரு பிரிவு என்றால் மற்றது எந்த வேலையும் இல்லாமல் நாள் முழுவதும் பாட்டு கேட்டுக் கொண்டும் நண்பர்களுக்கு கடிதம் எழுதிக் கொண்டும் கற்பனை உலகத்தில் சஞ்சரித்துக் கொண்டும் எதற்கும் உதவாதவர்கள். ஸ்ரீகல்யாணியின் உணர்வுகளில் மெடீரியலிசம் நிரம்பியிருந்தது. வியாபாரத்தைப் பற்றி

ஆபாதனை அவள் மனதில் சிறுவயதிலிருந்தே வளர்ந்து வந்திருக்கிறது. அதற்குக் காரணம் அவள் வாழ்க்கை முறை.

ஒரே மனிதனிடம் நிர்வாகத் திறமையும் கலையும் சேர்ந்து இருக்கக் கூடும் என்பது அவள் கற்பனைக்கு எட்டாத விஷயம். ஒரு ஓவியத்தை தீட்டுவதற்கு சுபர்த்திகேயன் நூறு நாள் கழித்தான் என்றால் அவளுக்கு அது எட்டாவது அதிசயம். அவள் அந்த ஓவியத்தை கையில் வைத்துக் கொண்டு காற்றில் ஆட்டிக் கொண்டே ''கலையை விட பணத்தின் முக்கியத்துவம் அதிகம் என்று இந்த ஓவியமே சொல்கிறது பாருங்கள். குறைந்த பட்சம் ஃப்ரேம் போட்டு மாட்டணும் என்றாலும் பணம் வேண்டும். இல்லாவிட்டால் சின்ன காற்றிற்குக் கூட இப்படி...'' என்று ஆட்டினாள். ஏற்கெனவே கிழியத் தயாராக இருந்த அந்த ஓவியம் அந்தச் சின்ன அசைவிற்கே நடுவில் சர்ரென்று கிழிந்து விட்டது.

நீலக்கடல் மீது கண்ணாடியைப் போன்ற அலை தடாலென்று விழுந்து உடைந்த தொனி அவன் இதயத்தில் ஏற்பட்டது.

உண்மையாகவே வருத்தமடைந்த அவள் ''ஐ யாம் சாரி'' என்றாள் மனப்பூர்வமாக. அவன் பதில் பேசவில்லை. மௌனமாக அவள் கைகளுக்கிடையே இருந்த ஓவியத்தை வாங்கிக் கொண்டான். அவன் விரல்கள் நடுங்குவதை அவள் பார்த்தாள். கண்களில் நீர்த்திரையிட்டது தெளிவாக தென்பட்டது.

''மன்னியுங்கள். இப்படி ஆகும் என்று நான் நினைக்கவில்லை.''

ஓவியங்களை மறுபடியும் டிரங்க் பெட்டிக்குள் வைத்துக் கொண்டிருந்தவன் பதில் பேசவில்லை.

''அதற்கான விலையை நான் தந்து விடுகிறேன்'' என்றாள் விளக்கம் சொல்வது போல்.

''அதற்கான செலவு என்ன இருக்கும் பெரிதாக? காகிதமும் வர்ணங்களும் தானே? விடுங்கள்.''

அவன் குரல் வேதனையை அடக்கிக் கொண்டு சாதாரணமாக இருக்க முயன்று தோற்றுப் போய் கலங்கினாற் போல் ஒலித்தது.

''நீங்கள் வேதனைப்படுவது எனக்கு பிடிக்கவில்லை. என்னால் தவறு நேர்ந்து விட்டது. அதை திருத்திக் கொள்ள வாய்ப்பு கொடுங்கள்.''

''எனக்கு வேதனை இல்லை என்று மனச்சாட்சிக்கு விரோதமாக பேசமாட்டேன். ஆனால் யார் தான் என்ன செய்ய முடியும்?''

''என்னால் முடியும். இந்த ஓவியத்தை வரைவதற்கு இரண்டு மாதங்கள் பிடித்தது என்ற சொன்னீங்க. அந்தச் சம்பளத்தை வெறுமே வாங்கிக் கொள்ளுங்கள். மற்ற ஏற்பாடுகள் எல்லாவற்றையும் நான் பார்த்துக் கொள்கிறேன். இன்னும் நல்ல உயர்தரமான காகிதமும், நல்ல வர்ணங்களும்...''

அவன் சிரித்தான். ''பணம் உங்கள் ரத்தத்தில் நன்றாக ஊறிவிட்டது. காகிதமும், வர்ணங்களும் நிலம் என்றால் என் சம்பளம் உழைப்பு... உங்கள் பணம் முதலீடு. நன்றாக இருக்கிறது. ஆனால் பச்சை வயல்களையும், மலர்ந்த கனவுகளையும் எந்த ஃபேக்டரியாலும் உருவாக்க முடியாது. ஒரு ஓவியம் போனால் இன்னொரு ஓவியத்தை வரைந்து கொள்வதற்கு மனம் ஒன்றும் ரூபாய் நோட்டுகளை அச்சடிக்கும் இயந்திரம் இல்லை.''

''போகட்டும். இன்னொரு ஓவியத்தை வரைய வேண்டாம். கிழிந்த ஓவியத்தின் விலையை சொல்லுங்கள். இல்லாவிட்டால் என் மனம் நிம்மதியாக இருக்காது.''

அவன் சிரிக்க முயன்றபடி ''நான் அதை உங்களுக்கு பரிசாக தந்து விட்டதாக நினைத்துக் கொள்ளுங்கள். போதுமா?'' என்றான் சூழ்நிலையை லேசாக்க விரும்பியபடி.

அவள் அபிமானம் அடியுண்டது. கடுமையான குரலில் ''நான் யாரிடமிருந்தும் இலவசமாக பரிசுகளை வாங்கிக் கொள்ள மாட்டேன்'' என்றாள்.

''நான் கூட என் ஓவியங்களுக்கு விலை போட மாட்டேன்.''

அவளுடைய கோபம் மேலும் அதிகரித்தது. ''இப்போ என்னால் சேதமாகாமல் இருந்திருந்தாலும் நீங்கள் வைத்திருக்கும் லட்சணத்திற்கு அந்தப் படம் அதிகமாக போனால் இன்னும் ஒரு வருடத்தில் நைந்து போகத்தான் போகிறது. அந்தப் படத்தை எனக்கு விற்பதன் மூலமாக நீங்கள் மற்ற ஓவியங்களை காப்பாற்றிக் கொள்ள முடியும். இந்த லாஜிக்கைக் கூடவா உங்களால் யோசித்துப் பார்க்க முடியவில்லை?''

''சில உணர்வுகளுக்கு லாஜிக் இருக்காது.''

''பத்தாயிரம் தருகிறேன். அந்த ஓவியத்தை எனக்குக் கொடுங்கள்.''

''மன்னியுங்கள். அவை என் திருப்திக்காக நான் வரைந்து கொண்டிருக்கும் ஓவியங்கள். அவற்றின் மதிப்பு பத்தாயிரம் அல்ல.''

அவள் மேலும் பிடிவாதத்தோடு ''அத்தனை படங்களையும் கொடுங்கள். பத்து லட்சம் தருகிறேன்'' என்றாள்.

அவன் வியப்படைந்தவனாக பார்த்தான். அவள் வெற்றி பெற்று விட்டாற்போல் சிரித்துவிட்டு, ''ஆச்சரிய மடைந்து விடாதீர்கள். எனக்கு பிடிவாதம் வந்து விட்டால் அவ்வளவுதான். பணம் ஒரு பிரச்னை இல்லை. பத்து லட்சத்தை எடுத்துக் கொண்டு சாந்தி நிகேதனில் சேருங்கள். உங்கள் கலையை மேலும் அபிவிருத்தி செய்து கொள்ளுங்கள். உங்கள் படங்களை அழகாக இந்த வீட்டில் மாட்டி அவற்றுக்கு மேலும் அழகை சேர்க்கிறேன். உங்களுக்கு எப்பொழுது வேண்டுமோ அப்பொழுது வந்து பார்த்துக் கொள்ளலாம்'' என்று நிறுத்தி விட்டு ''என்ன அப்படி பார்க்கிறீங்க? எந்த ஓவியனுக்குமே கிடைக்காத பணம் உங்க ஓவியங்களுக்கு கிடைக்கப் போவதை நினைத்து ஆச்சரியமாக இருக்கா?'' என்று கேட்டாள்.

''ஆமாம். ஆச்சரியமாகத்தான் இருக்கு. பத்தாயிரத்திற்கு விற்காதவன் பத்து லட்சத்திற்கு விற்பான் என்று எப்படி நினைத்தீங்க? இவ்வளவு நாளாக பிசினெஸ் செய்து கொண்டிருந்தாலும், யாரோடு எப்படி வியாபாரம் செய்வது என்று உங்களுக்கு தெரியாமல் போனது ஆச்சரியமாகத்தான் இருக்கு.''

அவள் முகம் சிவந்து விட்டது. ''உங்களோடு எப்படி வியாபாரம் செய்வது நீங்களே சொல்லுங்களேன். பார்க்கலாம்'' என்றாள் கடுமையாக.

''நான்தான் விற்க மாட்டேன் என்று சொல்லி விட்டேனே. உங்களுக்கு அந்த ஓவியத்தை சும்மாவே தருகிறேன். வாங்கிக் கொள்ளுங்கள்.''

''தேவையில்லை. உங்களை எப்படியாவது சம்மதிக்க வைத்து விடுகிறேன்.''

''நீங்கள் என்னை வேலையை விட்டு நீக்கினாலும் சரி. உங்களுடைய செல்வாக்கை பயன்படுத்தி எனக்கு எங்கேயும் வேலை கிடைக்காமல் செய்தாலும் சரி. என்னால் கொடுக்க முடியாது.'' உறுதியாக சொன்னான்.

''கோடி ரூபாய் தருகிறேன்.''

''முடியாது.''

''பத்து காகிதங்கள் மீது நான்கு தூரிகைகளைக் கொண்டு ஏழு வர்ணங்களை கலந்து தீட்டிய கோடுகளுக்கு கோடி ரூபாயைத் தருவதாக சொன்னால் கூட விற்க மாட்டீங்களா?''

''உங்கள் மீது உங்களுக்கு அளவு கடந்த நம்பிக்கை இருக்கிறாற் போல் இருக்கே?''

அவள் மூச்சுக் காற்று அவளுக்கு உஷ்ணமாக பட்டது. இவ்வளவு மோசமாக அவமானப்பட்டது இதுதான் முதல் தடவை. மூச்சை இழுத்து விட்டுக் கொண்டே சொன்னாள். ''என் சொத்தை முழுவதும் தருகிறேன். தருவீங்களா?''

''தருகிறேன்.''

அந்த வார்த்தைகள் திரிசூலமாக மாறி அவள் செவிப்பறையை அடைந்து, அதன் அர்த்தம் புரிந்த போது ஸ்ரீகல்யாணியின் முகம் சுண்ணாம்பாக வெளுத்துப் போய் விட்டது.

அவன் அவளிடம் வந்தான். மேலும் நெருங்கி வந்து அவளிடம் சொன்னான். ''பாம்பு ஒன்று வாழ்க்கையின் உண்மையை தெரிந்து கொண்டு வேதாந்தி ஆயிற்றாம். ஒரு முனிவரின் அறிவுரையின் பேரில் கடிப்பதை விட்டு விட்டதாம். அதை பயன்படுத்திக் கொண்டு மக்கள்

கல்லால் அடிக்க தொடங்கினார்களாம். பிறகு எப்பொழுதோ அந்த வழியாக வந்த முனிவர் க்ஷீண நிலையில் இருந்த அந்தப் பாம்பைப் பார்த்து ஆச்சரிய மடைந்து ''நான் கடிக்க வேண்டாம் என்று சொன்னேன் தவிர சீற வேண்டாம் என்று சொல்லவில்லையே' என்று சொன்னாராம். அந்த உண்மையை இப்பொழுதுதான் நானும் உணர்ந்தேன்.'' அவன் நிறுத்தினான்.

அவள் இன்னும் தேறிக் கொள்ளவில்லை.

''உன் மேல் எனக்கு இரக்கம் இருந்தது. ஒரு லட்சாதிபதியின் மகள் சிறுவயதிலேயே உறவினர்கள், நண்பர்கள் மூலமாக ஏமாற்றப்பட்டு மனிதர்கள் மீது நம்பிக்கையை இழந்து மானசீகமாக தனியளாகி விட்டாளே என்று இரக்கப்பட்டேன். ஒருநாள் இரவில் நீ எனக்கு போன் செய்து 'நான் ஏதாவது மனநோயால் பாதிக்கப்பட்டிருக்கிறேனா?' என்று கேட்டாய். நினைவு இருக்கிறதா? உண்மையிலேயே உனக்கு சிகிச்சை செய்ய வேண்டிய அவசியம் நிறைய இருக்கிறது. அடுத்தவர்களை எப்படி புரிந்து கொள்வது என்று உனக்குக் கற்றுத் தரணும். உன் புத்திசாலித்தனத்தின் மீது உனக்கு அபாரமான நம்பிக்கை இருக்கிறது. மற்றவர்களை உன் சுண்டு விரலால் ஆட்டி வைக்க முடியும் என்ற நம்பிக்கையும் உனக்கு அதிகம். இந்தப் போக்கு எதிர்காலத்தில் உனக்கு ரொம்ப ஆபத்தானது. இந்த மனநோய் போக வேண்டும் என்றால் சில நாட்கள் நீ பிச்சையெடுத்து வாழவேண்டும். அல்லது யார் வீட்டிலாவது சமையல் வேலை செய்து பிழைக்க வேண்டும்'' அவன் சிரிக்கவில்லை. சீரியஸாகவே சொன்னான்.

''என் ஓவியங்களின் விலை கோடி ரூபாய்க்கும் மேலே. உன் சொத்தையும் விட அதிகம்தான். ஆனால் ஒரு

பெண்ணை மனதளவில் குணப்படுத்துவதற்கு அவை பயன்பட்டால் அதை விட பெரிய மதிப்பு அவற்றுக்கு வேறெதுவும் இருக்காது என்ற உத்தேசத்துடன் அவற்றை விற்கிறேன்.''

அவள் இன்னும் திகைப்பிலிருந்து விடுபடவில்லை. நான் பேசியதையும், அவன் அதற்கு ஒப்புக் கொண்டதையும் அவளால் இன்னும் ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை. வியாபார விஷயத்தில் ஒவ்வொரு வார்த்தையையும் அளந்து பேசுகிற அவளா இவ்வாறு வாய் தவறி சொல்லி விட்டாள்? அவளால் நம்பவே முடியவில்லை.

அவன் சொன்னான். ''நான் டாக்டருக்கு படித்திருக்கிறேன் என்று தெரிந்ததுமே என்னை 'நீ' என்று விளிப்பதிலிருந்து 'நீங்கள்' என்று மாறிவிட்டதாக சொன்னாய். இப்பொழுது நீ பைசாவுக்கு கதியில்லாதவள் என்றாகி விட்டதால் நான் உன்னை கூப்பிடுவதும் நீங்களிலிருந்து நீ என்று மாறிவிட்டது. அவ்வளவு ஏன்? உன் மனப் போக்கைப் பற்றி ஒரு உதாரணம் சொல்கிறேன். கேட்டுக் கொள். உனக்கு ட்ரெகியாடமி செய்தது நான்தான். உன் ஃபேமிலி டாக்டர் இல்லை. ஒரு கேள்வியை நேராக கேட்டிருந்தால் நாங்கள் அந்த விஷயத்தை உன்னிடம் சொல்லியிருப்போம். நீ அவ்வாறு செய்யவில்லை. அறைக்குள் கதவுகளை எல்லாம் சாத்திவிட்டு பூனையை அடித்தாற்போல் அந்த டாக்டரை பொய் சொல்ல வைத்து விட்டு, அதற்குப் பிறகு ரொம்ப சாமர்த்தியமாக அவரிடமிருந்து உண்மையை வரவழைத்தாற் போல் அவரை முட்டாளாக்கி விட்டாய். மனிதர்கள் மீது அவ்வளவு அவநம்பிக்கை கூடாது கல்யாணி! மனிதன் கஷ்டங்களில் இருக்கும் போதுதான் அவன் கொள்கைகள் மாறுகின்றன.

கொஞ்ச நாள் கஷ்டங்களை அனுபவி. இதோ என் ஓவியங்கள். உன் சொத்துக்களை எழுதித் தா.''

அவளிடம் ஓவியங்களை தரப் போனவன் நின்று சொன்னான். ''வேண்டுமென்றால் இந்த நிமிடத்தில் கூட நீங்க உங்கள் வார்த்தையை வாபஸ் வாங்கிக் கொள்ளலாம் மேடம். 'நான் அந்த வார்த்தைகளை சொல்லவில்லை' என்று நீங்கள் சொன்னால் உங்கள் சொத்து உங்களிடமே இருக்கும். சொல்லுங்கள், காண்ட்ராக்டை கேன்சல் செய்து விடுவோமா?''

அவள் அவனை நேராக நிமிர்ந்து பார்த்துக் கொண்டே ''தேவையில்லை. நாளைக்கே ரிஜிஸ்ட்ரேஷனுக்கு ஏற்பாடு செய்கிறேன்'' என்று அவன் கையிலிருந்த ஓவியங்களை வேகமாகப் பிடுங்கிக் கொண்டாள். ''வியாபாரம் என்றால் வியாபாரம்தான் கார்த்திகேயன்! வாழ்க்கையில் பொய் சொல்லி உனக்கு எப்படி பழக்கம் இல்லையோ அதே போல் வியாபாரத்தில் வாக்குத் தவறுவதும் எனக்கு பழக்கம் இல்லை.''

9

இரவு பத்து மணிக்கு அஸ்வத்தாமன் மூன்றாவது பெக்கில் இருந்த போது தடாலென்று கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தான் சத்யன்.

அஸ்வத்தாமன் தூக்கத்தால் சொருகிக்கொண்டு போன கண்களை வலுக்கட்டாயமாக திறந்து பார்த்தார். சத்யனின் கேசங்கள் கலைந்து கண்கள் சிவந்து ஏறக்குறைய பைத்தியக்காரனைப் போல் இருந்தான்.

''ஏன் இவ்வளவு டென்ஷனாக இருக்கிறாய்?'' டம்ளரை அவன் முன்னால் தள்ளிக் கொண்டே கேட்டார் அஸ்வத்தாமன்.

''குடி மூழ்கிப் போய் விட்டது. கல்யாணி சொத்தை எல்லாம் விற்று விட்டாள்.''

அஸ்வத்தாமன் கண்களை இடுக்கிக் கொண்டு ''விற்று விட்டாளா?'' என்று கேட்டார். ''எதற்காக?''

''என்ன நடந்தது என்று தெரியவில்லை.''

''சொத்தையெல்லாம் டாலராக மாற்றிக் கொண்டு எங்கேயாவது வெளிநாட்டில் போய் செட்டில் ஆகி விடலாம்னு நினைக்கிறாளோ என்னவோ? அப்படி என்றால் உன் வேலை இன்னும் சுலபமாகிவிடும். அது சரி என்ன விலைக்கு விற்றாள்?''

''பத்து பழைய ஓவியங்களுக்கு.''

★

இரவு பத்து மணிக்கு அவர்கள் அங்கே என்ன செய்யலாம் என்று யோசித்துக் கொண்டிருந்த அதே சமயத்தில் ஸ்ரீகல்யாணி தன் படுக்கை அறையில் மல்லாந்து படுத்துக் கொண்டிருந்தவள் எழுந்து கீழே கம்பளத்தில் வந்து படுத்துக் கொண்டாள், 'நாளை முதல் இப்படித்தானே படுத்துக் கொள்ளணும்' என்று நினைத்துக் கொண்டே.

ஐந்து நிமிடங்களில் உடம்பெல்லாம் வலிக்கத் தொடங்கிவிட்டது. தன் யோசனை தனக்கே அற்பத்தனமாக தோன்றியது. திரும்பிப் போய் படுக்கையில் படுத்துக் கொண்டாள்.

சொத்து போய் விட்ட அடுத்த நிமிடமே தான் பிச்சைக்காரியாக நடுத் தெருவுக்கு வர வேண்டியிருக்கும்

என்றும், வறுமையை அனுபவிக்க வேண்டியிருக்கும் என்றும் அவள் ஒரு நாளும் நினைக்கவில்லை. எத்தனையோ கம்பெனிகள் அவளை மேனேஜிங் டைரக்டராக எடுத்துக் கொள்ள தயாராக இருக்கும். எத்தனையோ வங்கிகள் அவளுக்கு கடன் கொடுக்க தயாராக இருக்கும். அவளுக்கு இருந்த அனுபவத்திற்கும், திறமைக்கும் ஒரு வருடத்திற்குள் சொந்தக் காலில் நிற்கவும் முடியும். ஆனால் பிரச்னை அது இல்லை.

கார்த்திகேயன்!

எவ்வளவு குறி பார்த்து வீழ்த்தி விட்டான்! எல்லாவற்றையும் சொன்ன பிறகு அவன் சிரித்த சிரிப்பு! அதை நினைத்துப் பார்த்தாலே உடம்பு பற்றி எரிந்தது. அவள் இதயம் அவமானத்தால் தகித்துக் கொண்டிருந்தது. தோல்வியை ஒப்புக் கொள்ளும் குணம் அவளுக்கு இல்லை. சொத்து விஷயம் ஒரு பக்கம் இருக்கட்டும். வட்டியும் முதலுமாக அவனுக்கு எப்படி பாடம் கற்பிப்பது என்ற யோசனையில் அவளுக்கு தூக்கம் வரவில்லை.

எந்த விஷயமாக இருந்தாலும் சரி இறுதி வெற்றி அவளுடையதாக இருக்க வேண்டும். அதற்காக என்ன செய்யலாம் என்று தீவிரமாக யோசிக்கத் தொடங்கினாள். அவள் லட்சியம் ஒன்றுதான். கார்த்திகேயன் தலை குனிய வேண்டும். அவள் எப்படி நின்றாளோ அதே போல் அவனும் அவளுக்கு முன்னால் அதே போல் இயலாமை யுடன் தலைகுனிந்து நிற்க வேண்டும். அப்பொழுது சொல்ல வேண்டும் - "பார்த்தாயா? அன்றைக்கு ஒழுக்கத்தின் மதிப்பீடுகளை பற்றி அவ்வளவு கதை அளந்தாயே? பண விஷயம் வந்ததுமே நீயும் அது போலவேதான் நடந்து கொண்டாய்" என்று சொல்ல வேண்டும்.

அதற்காக என்ன செய்ய வேண்டும்?

என்ன வேண்டுமானாலும் செய்யலாம்.

எதுவாக இருந்தாலும் சரி.

தன் அகம் திருப்தியடைவதற்காக, தன் தியரி சரியானது என்று நிரூபிப்பதற்காக, பணம் இல்லாத போது இருந்த ஒழுக்கக் கட்டுப்பாடு, பணம் இருக்கும் போது இருக்காது என்று சொல்வதற்காக...

ஏதோ ஒன்றைச் செய்ய வேண்டும்.

அவள் யோசிக்கத் தொடங்கினாள். வியாபாரத்தில் எதிரியை வீழ்த்துவதற்காக, தன் நிறுவனத்தில் லஞ்ச ஊழல் பண்ணும் ஊழியரை கையும் களவுமாக பிடிப்பதற்காக, எவ்வளவு ஜாக்கிரதையாக திட்டம் தீட்டுவாளோ, அவ்வளவு தீவிரமாக யோசித்தாள். பிறகு யாருக்கோ போன் செய்தாள்.

அதே நேரத்தில் கீழே சமையலறைக்கு முன்னால் இருந்த ஹால் தரையில் படுத்துக் கொண்டிருந்த கார்த்தி கேயன் மட்டும் எந்த யோசனையும் இன்றி நிம்மதியாக தூங்கிக் கொண்டிருந்தான்.

தூக்கத்தில் அவன் கனவுகண்டு கொண்டிருந்தான். பச்சைப் பசேலென்ற வயல் வெளி, அப்பொழுதுதான் உறக்கத்திலிருந்து விழித்துக் கொண்ட குளிர்காலம் சோம்பல் முறித்துக் கொண்டே மெதுவாக இதழ் விரித்துக் கொண்டிருந்த ரோஜா மொட்டுகளுக்கு சுப்ரபாதம் சொல்லிவிட்டு, மறுபடியும் இரவில் திரும்பி வருவதாக பனித்துளிகளிடமிருந்து விடை பெற்றுக் கொண்டு சூரியனுக்கு எட்டாமல் மேற்கு நோக்கி ஓடிக் கொண்டிருந்த வேளை...

கடல் அலைகள் போன்ற கான்வாஸின் மீது, வைகறை பனிமூட்டத்தில் வர்ணங்களை ஒன்று சேர்த்து அழகான பெண்ணொருத்தியின் கூந்தலின் நுனியை போலிருந்த தூரிகையால் ஓவியம் தீட்டுவது போன்று கனவு திடீரென்று கலைந்து போனதால்...

கண்களைத் திறந்தான்.

கால்மாட்டில் ஒரு உருவம் உயிருள்ள சிற்பமாக தோன்றியது. சட்டென்று எழுந்து உட்கார்ந்து கொண்டு விளக்கைப் போட்டான். அவள் ஸ்ரீகல்யாணி.

அப்பொழுது நேரம் ஒரு மணி.

வியந்து போனவனாக ''நீங்களா?'' என்றான். ''இந்த வேளையில் நீங்கள் இங்கே...'' என்றான் குழப்ப மடைந்தவனாக.

அவள் மெதுவாக நிமிர்ந்து பார்த்தாள். ''நீங்கள் என்னை கல்யாணம் செய்து கொள்வீங்களா கார்த்திகேயன்?'' என்று கேட்டாள்.

திடீரென்று அவளிடமிருந்து வெளிவந்த இந்தப் பிரஸ்தாபனையைக் கேட்டு அவன் வாயடைத்துப் போனான். அது கனவு இல்லை என்று நன்றாக தெரிந்து கொண்டதும் ''நீங்கள் என்ன பேசுறீங்கன்னு உங்களுக்கே புரிகிறதா?'' என்று கேட்டான்.

''நீங்கள் அகம்பாவம் என்று நினைக்கவில்லை என்றால் ஒரு வார்த்தை சொல்கிறேன். நான் எந்த முடிவையும் சீக்கிரத்தில் எடுக்கமாட்டேன். உங்களுக்கு என்ன குறைச்சல்? குணமும், அழகும் நிறைந்தவர். எல்லாவற்றுக்கும் மேலாக சுயநலம் இல்லாதவர். எனக்குத்

தெரிந்த வரையில் பணத்திற்கு அடிமையாக ஒரே ஒரு ஆள் நீங்கள் தான். மேற்கொண்டு ஒரு வருடம் படித்தால் டாக்டர் ஆகிவிடுவீங்க. கையில் உயர்ந்த கலை இருக்கிறது. வேறு என்ன வேண்டும்? ஒன்றை மட்டும் நம்புங்கள். இழந்த சொத்தை மறுபடியும் அனுபவிக்க வேண்டும் என்று இந்த விருப்பத்தை நான் வெளியிடவில்லை. இந்த பிசினெஸ் விஷயங்கள் அத்தனையும் விட்டுவிடு என்று சொன்னாலும் விட்டு விடுகிறேன். எல்லாவற்றையும் நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள்'' என்றாள்.

அவன் வியப்பிலிருந்து இன்னும் மீளவில்லை.

''நீங்கள் என்னை நம்பவில்லையா? இந்த வசதிகளை எல்லாம் இழக்க விரும்பாமல் சொத்துக்காகவே உங்களை இந்தக் கல்யாணத்திற்கு 'பிரபோஸ்' செய்ததாக நினைக்கிறீங்களா?''

அவன் மனம் நெகிழ்ந்து விட்டது. ''ச்சே...அப்படி எல்லாம் நினைக்கவில்லை'' என்றான். அதற்குப் பிறகு என்ன பேசுவது என்று அவனுக்குப் புரியவில்லை. அவள் பணத்திற்காக தன்னைத் திருமணம் செய்து கொள்ள நினைக்கவில்லை. அது மட்டும் நிச்சயம். ஸ்ரீகல்யாணியைப் போன்ற பெண்கள் எதை வேண்டுமானாலும் சகித்துக் கொள்வார்கள். ஆனால் தனித்தன்மையை இழக்க மாட்டார்கள்.

அந்தக் குழப்பமான நிலைமையில் அவன் சற்று நேரம் தடுமாறிவிட்டு ''என்னை கொஞ்சம் யோசிக்க விடுங்கள்'' என்றான் கடைசியில்... இம்முறை அவள் திகைத்துப் போய் விட்டாள். இந்தப் பதிலை அவள் எதிர்பார்க்க வில்லை. அவளையறியாமல் கண்களில் நீர் சுழன்றது.

''தற்சமயம் நான் எதற்குமே தகுதியில்லாதவள் என்பது தானே உங்கள் உத்தேசம்? அதற்காகத்தானே யோசிப்பதற்கு அவகாசம் வேண்டும் என்று சொல்றீங்க?''

''ப்ளீஸ்... விடியட்டும், சொல்கிறேன்'' என்றான் கார்த்திகேயன் சுருக்கமாக.

அவள் மெதுவாக எழுந்து ''உங்கள் விருப்பம்'' என்று சொல்லிவிட்டு அங்கிருந்து போய் விட்டாள்.

சரியாக அப்பொழுது கடியாரத்தில் இரண்டு மணி அடித்தது.

அன்றிரவு அவளுக்கு உறக்கம் வரவில்லை. தன்னை அறியாமல் தூக்கத்தில் ஆழத் தொடங்கிய போது போன் மணி ஒலித்தது. அப்பொழுது நேரம் ஐந்து மணியை நெருங்கிக் கொண்டிருந்தது. அவள் போனை எடுத்து ஹலோ என்றாள்.

ஃபோனோகிராம் அது!

அந்தச் செய்தியைக் கேட்டதுமே போர்வையை உதறிவிட்டு படுக்கையில் எழுந்து உட்கார்ந்து கொண்டாள். உடனே சத்யனுக்கு போன் செய்து புறப்பட்டு வரச் சொன்னாள்.

''இவ்வளவு காலையிலா?''

''ஆமாம். ரொம்ப முக்கியமான விஷயம்.'' தன் உணர்வுகளை கட்டுப்படுத்திக் கொண்டே சொன்னாள். அவள் இப்பொழுது முழுக்க முழுக்க வியாபார மேதையாக இருந்தாள். வரிசையாக நாலைந்து போன்கள் செய்தாள். அவள் பதற்றத்தை கவனித்து விட்டு சூரியன் கூட சீக்கிரமாக வெளிவந்து விட்டான். ஐந்தரைக்கே கிழக்கு வெளுத்து விட்டது.

போனில் பேசி முடித்த பிறகு அவள் டிரெஸ்ஸிங் டேபிள் அருகில் சென்றாள். அங்கே இருந்தது ஒரு சின்ன பாக்கெட். பக்கத்திலேயே சின்ன கடிதம். அவள் வியப்புடன் அதைப் பிரித்துப் படித்தாள்.

ஸ்ரீகல்யாணிக்கு,

வணக்கம். நேற்றிரவு நீங்கள் எந்த மனநிலையில் என்னிடம் வந்து உங்கள் உத்தேசத்தை சொன்னீர்களோ எனக்கு புரியவில்லை. நாமிருவரும் எப்பொழுது பேசிக் கொண்டாலும் அது கொள்கை பற்றிய சர்ச்சையாகவோ, விவாதமாகவோதான் முடிகிறது. இந்தத் தடவையும் அதே போல்தான் என்று நினைக்காமல் இருந்தால் ஒரு விஷயம் சொல்கிறேன். காதல் என்பது இரவு பத்து மணிக்கு ஜனித்து பன்னிரெண்டு மணிக்கு திருமணத்திற்கு வழிவகுப்பது அல்ல. அது உணர்வுகளுடன் பிணைக்கப்பட்ட இனிமை யான அனுபவம்.

நீங்கள் ரொம்ப உயர்ந்தவர். நிறையபேர் போல் வெறுமே வாய் பேச்சு பேசிக் கொண்டிருக்காமல் நினைத்ததை செய்து காட்டுகிறீர்கள். பத்து பேருக்கு வேலை கொடுத்து காப்பாற்றிக் கொண்டு இருக்கிறீர்கள். பத்து பேரால் பாராட்டப்படுபவராக இருக்கிறீர்கள். கோடி கணக்கில் வியாபாரம் செய்து கொண்டு இருக்கிறீர்கள். உங்கள் துறையில் நீங்கள் பெரிய ஆள்.

நான் ஒரு ஓவியன். சூரிய உதயத்தின் செஞ்சிவப்பை, அஸ்தமனத்தின் அழகை, தூரிகையால் எப்படி தீட்டலாம் என்று யோசித்துக் கொண்டே காலையிலிருந்து மாலை வரை கழித்துக் கொண்டிருக்கும் ரசிகன்.

ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு சுபாவமும், விருப்பும், வெறுப்பும் இருக்கும். அடுத்தவருக்கு அது

பலவீனமாக தோன்றலாம். என் ரசனை உங்களுக்கு சாரமில்லாமல் தோன்றலாம். இரவு பகல் பாராமல் நீங்கள் உழைக்கும் உழைப்பு எனக்கு மெட்டீரியலிஸமாக தோன்றலாம்.

நேற்று இரவு நீங்கள் வந்து விட்டு போன பிறகு எனக்கு இந்த உண்மை புரிந்தது. உங்களுடைய சொத்தை அபகரித்துக் கொண்டு நான் உங்களுக்குப் பாடம் கற்பிப்ப தாவது? எனக்கே வெட்கமாக இருக்கிறது. வியாபாரத்தில் நீங்கள் அனுபவிக்கும் டென்ஷனை ஒருநாள் அனுபவிக்க நேர்ந்தால் எனக்கு பைத்தியம் பிடிப்பது உறுதி. அந்த உயர்ந்த பண்பை, வித்தியாசத்தை புரிந்து கொள்ளாமல் என்னை நானே மனநல நிபுணராக எண்ணிக் கொண்டு உங்களை குணப்படுத்த வேண்டும் என்று நினைத்தேன் பாருங்கள். அதற்காக நானே ஒரு டாக்டரிடம் போக வேண்டும்.

நேற்றிரவு நீங்கள் எடுத்துக் கொண்ட முடிவை நினைத்து இப்பொழுது உங்களுக்கே சிரிப்பு வந்திருக்கும். அதை ஒரு சாதாரண விஷயமாக நினைத்து மறந்து போய் விடுங்கள். நாளைக்கு நான் கல்கத்தாவுக்கு போய் விடப் போகிறேன். எப்படியாவது சாந்தி நிகேதனில் சேர்ந்து விட வேண்டும் என்பது என் விருப்பம்.

உங்கள் சொத்து சம்பந்தப்பட்ட அக்ரிமெண்ட் காகிதங்களை இங்கேயே வைத்து விட்டுப் போகிறேன். 'எனக்கு உன் தானம் தேவையில்லை' என்று மட்டும் சொல்லாதீங்க ப்ளீஸ்! நாம் நல்ல நண்பர்களாக பிரிந்து போவோம். நீங்கள் ஒரு வார்த்தையைச் சொன்னீர்கள், நினைவு இருக்கிறதா? என் ஓவியங்கள் உங்கள் ஹால் சுவற்றில் மாட்டியிருந்தால் இன்னும் அழகாக தென்படும்

என்று. உண்மைதான். வித்தியாசமான நம் அறிமுகத்திற்கு அடையாளமாக இந்தச் சின்ன பரிசை ஏற்றுக் கொள்ளுங்கள்...

என் ஓவியங்களை, அவற்றை பேக் செய்வதற்கு ஆகாயத்தைத் துண்டாக கத்தரித்து, வானவில்லை ரிப்பனாக கட்டி, நட்சத்திரங்களை கோர்த்து தருகிறேன். மறுக்காதீர்கள்.

கார்த்திகேயன்

கடிதத்தை படித்து முடித்தாள் கல்யாணி. மேஜை மீது ஓவியங்களும், அக்ரிமெண்ட் காகிதங்களும் இருந்தன. அவள் அப்படியே நாற்காலியில் சரிந்தாள். அவள் மனதில் என்ன இருந்ததோ தெரியாது. முகத்தில் மட்டும் எந்த உணர்ச்சியும் இருக்கவில்லை. அவள் ரொம்ப நேரம் அப்படியே உட்கார்ந்திருந்தாள். அவள் யோசித்தது கார்த்திகேயனைப் பற்றி அல்ல.

கொஞ்சம் நேரம் கழித்து படிகளில் சத்தம் கேட்டது.

சத்யன் பரபரப்புடன் உள்ளே வந்தான் ''என்ன இது? நீ சொன்னது உண்மைதானா?'' மாடிப் படி ஏறி வந்ததால் மூச்சிரைத்தபடி கேட்டான்.

அவள் நிமிர்ந்து அவனைப் பார்த்தாள். டெலிகிராம் காகிதத்தை அவனிடம் நீட்டினாள். நடுங்கும் கைகளோடு அவன் அதை வாங்கிப் படித்து விட்டு ''மை காட்!'' என்றான். அவள் முகம் இன்னும் உணர்ச்சியற்று இருந்தது.

அதை கவனித்து விட்டு ''ஒன்றுமே நடக்காதது போல் இப்படி உட்கார்ந்திருக்கிறாயே?'' என்றான்.

அவள் நிமிர்ந்து ஒருமுறை அவனை பார்த்து விட்டு தலைகுனிந்து கொண்டாள்.

அவன் டெலிகிராமை மற்றொருமுறை பார்த்து விட்டு ''உன்னால் ஒன்றும் செய்ய முடியாதா?'' என்றான்.

அவள் சரேலென்று நாற்காலியை விட்டு எழுந்து கொண்டு ''என்ன செய்ய சொல்கிறாய்? இன்ஷ்யூர் செய்யாத கப்பல் மூழ்கிப் போய் விட்டது என்று பேப்பரில் விளம்பரம் கொடுக்கச் சொல்கிறாயா? இரண்டு கோடி நஷ்டம் ஏற்பட்டு ஸ்ரீகல்யாணி ஏஜென்ஸி திவாலாகி விட்டது என்று பால்கனியில் நின்று கொண்டு கத்தச் சொல்கிறாயா? இருக்கிற சொத்தை எல்லாம் விற்றாலும் இன்னும் ஐம்பது லட்சம் கடன் பாக்கி இருக்கும். கடன்காரர்கள் கோர்ட்டுக்கு போனால் நமக்கு ஜெயில் தண்டனை கிடைக்கும் என்று நட்ட நடு வீட்டில் உட்கார்ந்து கொண்டு அழச் சொல்கிறாயா?'' என்று கத்தினாள்.

அவள் அந்த மாதிரி கத்தி அவன் என்றுமே பார்த்த தில்லை. அவள் சொன்னதெல்லாம் உண்மைதான். கல்யாணி ஏஜென்ஸிஸ் ஒரு பெரிய காண்ட்ராக்டிற்கு ஒப்புக் கொண்டிருந்தது.

இன்ஷ்யூரென்ஸ் இல்லாமல் அந்தச் சரக்கு மூழ்கிப் போய் விட்டதென்றால் இரண்டு கோடி ரூபாய் நஷ்டம்!

சொத்தையெல்லாம் விற்றாலும் கூட அவ்வளவு தேறாது. கோடிக் கணக்கில் வியாபாரம் இருக்கலாம். ஆனால் ரொக்கமாக எவ்வளவு இருக்கும் என்பதுதான் கேள்வி. நாளைக்கு அந்தச் சரக்கின் சொந்தக்காரன் கோர்ட்டில் கேஸ் போட்டால் குறைந்தது ஏழாண்டுகள் சிறைவாசம்.

''இதெல்லாம் எப்படி நடந்தது? இன்ஷ்யூரென்ஸ் இல்லாமல் ஷிப்பிங் நடக்காதே?'' சத்யன் கேட்டான்.

''நடக்காது. தவறு நடந்திருக்க வழியில்லை. இன்ஷ்யூர் செய்திருப்பது போல் நடித்து விட்டு கடைசி சமயத்தில் யாரோ ஏமாற்றி இருக்கிறார்கள். பம்பாய்க்கு பேசினேன். காலை முதல் வேலையாகத்தான் இருக்கிறேன்.''

''அது சரி. உன் சொத்தை எல்லாம் அந்த கார்த்திகேயனுக்கு விற்று விட்டாய் இல்லையா?''

''ஆமாம். ஆனால் அவன் வாங்கிக் கொள்ளவில்லை. எல்லாவற்றையும் திருப்பித் தந்து விட்டு இந்த ஓவியங் களையும் பரிசாக தந்து விட்டு போய் விட்டான்.''

''கொடுப்பது, வாங்கிக் கொள்வது எல்லாம் அவன் இஷ்டமில்லை. எல்லாம் சட்டத்தின் படி நடக்கணும். அக்ரிமெண்ட் நடந்தது. ஆனால் கேன்சலேஷன் நடக்க வில்லையே?'' சத்யன் அருகில் வந்து உட்கார்ந்து கொண்டான். ஒரு சமாசாரத்தைச் சோதித்துத் தெரிந்து கொண்டு விட்ட சந்தோஷம் அவன் முகத்தில் தென்பட்டது. ''உன்னுடைய சொத்து முழுவதும் என்றால் அசையாத சொத்துக்கள் மட்டுமே இல்லை. கடன்கள் கூட இருக்கும். எல்லா வற்றையும் சேர்த்து தான் அவன் வாங்கிக் கொண்டான்.''

அவள் சரேலென்று அவனைப் பார்த்தாள். அவன் என்ன சொல்ல வருகிறான் என்று அவளுக்கு புரிந்தது. இந்தக் கடனுக்கு அவள் பொறுப்பாளி இல்லை என்ற அவளுடைய சட்ட ஆலோசகர் என்று முறையில் அவன் யோசனை சொல்கிறான். கப்பல் மூழ்கிப் போவதற்கு முன்பே அவள் கல்யாணி ஏஜென்ஸியை கார்த்திகேயனுக்கு விற்று விட்டதால் இந்தக் கடனுக்கு அவன்தான் பொறுப்பாளி. கடனை தீர்க்க முடியாமல் போனால்...

அவன்தான் ஜெயில் தண்டனையை அனுபவிக்க வேண்டும்.

அவள் மறுத்து தலையசைத்து விட்டு ''நோ... என்னால் ஒப்புக் கொள்ள முடியாது. இது அரக்கத்தனம்'' என்றாள்.

சத்யன் சிரித்து விட்டு ''இருக்கலாம். அதற்கு மற்றொரு பெயர்தான் வியாபாரம்'' என்றான்.

''அவன் இதற்கெல்லாம் ஒப்புக் கொள்ளாமல் போகலாம். இந்த லிடிகேஷனுடன் தனக்கு எந்தச் சம்பந்தமும் இல்லை என்று மிக சுலபமாக, நியாயமான வழியில் தப்பித்துக் கொள்ளலாம்'' என்றாள் கல்யாணி.

''அதை எல்லாம் கோர்ட் தானே முடிவு செய்ய வேண்டும்? இனி இந்த விஷயத்தில் நீ தலையிடாதே.''

சத்யன் பிரதாப்புக்கு போன் செய்தான். ''உங்கள் ஆட்கள் அத்தனை பேரையும் அனுப்பி அந்த கார்த்திகேயன் எங்கே இருந்தாலும் தேடிக் கண்டு பிடியுங்கள். ஒருக்கால் கல்கத்தாவுக்குப் போகும் ரயிலில் அவன் இருக்கலாம். உடனே அவனை இங்கே அழைத்துக் கொண்டு வாங்க.''

''என்ன விஷயம்? என்ன நடந்தது?'' உற்சாகத்தோடு கேட்டார் பிரதாப்.

''அப்புறமாக சொல்கிறேன்'' என்று போனை வைத்து விட்டான் சத்யன்.

அதுவரை பார்வையாளராக வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த கல்யாணி குறுக்கிட்டு ''நீ அவசரப் படுகிறாய் என்று தோன்றுகிறது சத்யன்'' என்றாள்.

''இல்லை. லீகல் அட்வைசர் என்ற முறையில் என் கடமையை செய்கிறேன்.''

''நீ செய்வது நியாயத்தின்படி பார்த்தால் தவறு.''

''சட்டத்தின்படி கரெக்ட்'' என்றான் சத்யன்.

அரை மணியில் பிரதாப்பின் கார் வந்து நின்றது. ஏறக்குறைய கழுத்தைப் பிடித்துக் கொண்டு குற்றவாளியை இழுத்து வருவது போல் கார்த்திகேயனை அழைத்து வந்தார் பிரதாப்.

''வெரிகுட்! ரொம்ப சீக்கிரமாக பிடித்து விட்டீர்களே'' என்றான் சத்யன்.

''இவன் வீடு பீட்டருக்கு தெரியும். புறப்படுவதற்கு தயாராக சாமான்களை பேக் செய்து கொண்டிருந்த போது பீட்டர் பிடித்து விட்டான். என்ன செய்தான்? எதையாவது திருடி விட்டானா?'' கார்த்திகேயனை சந்தேகத்துடன் பார்த்துக் கொண்டே கேட்டார் பிரதாப்.

சத்யன் நடந்ததையெல்லாம் சொன்னான். எல்லாவற்றையும் சொல்லிவிட்டு ''சொத்துக்கள் அத்தனையும் நீ வாங்கிக் கொண்டாயா இல்லையா?'' கார்த்திகேயனைப் பார்த்துக் கேட்டான்.

''வாங்கிக் கொண்டேன். ஆனால் அதற்குப் பிறகு எனக்கே சில்லியாக தோன்றியதால் திருப்பிக் கொடுத்து விட்டேன்.''

''உனக்கு எப்படி தோன்றியது என்பதல்ல கேள்வி. ஸ்ரீகல்யாணி ஏஜென்ஸியை நீ வாங்கிக் கொண்டாயா இல்லையா? அதைச் சொல்லு.''

''வாங்கிக் கொண்டேன்.''

''நேற்று காலையிலிருந்து நீ கல்யாணி ஏஜென்ஸியின் முதலாளி இல்லையா?''

''ஆமாம். இதையெல்லாம் ஏன் கேட்கிறீங்க?''

''நேற்றிரவு ஏஜென்ஸி சரக்கை ஏற்றிக் கொண்டு வந்த கப்பல் மூழ்கிப் போய்விட்டது. இன்ஷ்யூரென்ஸ் இல்லை.

இரண்டு கோடிக்கு மேல் நஷ்டம் வந்து விட்டது. சொத்து முழுவதையும் விற்றாலும் அதை ஈடு கட்ட முடியாது. ஐம்பது லட்சத்திற்கு மேல் கடன் பாக்கியிருக்கும். நமக்கு காண்ட்ராக்ட் கொடுத்தவர்கள் கோர்ட்டில் வழக்கு போட்டால் ஏழு ஆண்டுகளுக்குக் குறையாமல் ஜெயில் தண்டனை கிடைக்கும். இந்தத் தண்டனையை யார் அனுபவிப்பாங்க? நீயா? நாங்களா?''

கார்த்திகேயனின் முகம் வாடிவிட்டது; வேதனை அவன் முகத்தில் தெளிவாகத் தென்பட்டது. இந்த விஷயத்தை நம்ப முடியாதவனாக தத்தளித்தான். மூவரும் அவனையே பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவன் மெதுவாக கல்யாணியிடம் வந்தான். ''எப்படி? இரவோடு இரவாக சொத்தெல்லாம் போய்விட்டால் நீங்கள்... நீங்கள் எப்படி இருப்பீங்க?'' என்றான்.

அவளுக்கு அவன் கேட்டதன் அர்த்தம் புரிந்ததும் முதுகுத் தண்டு சிலிர்த்தது. உடல் லேசாக நடுங்கியது. அவன் யோசித்துக் கொண்டிருந்தது அவனைப் பற்றி அல்ல. அவளைப் பற்றித்தான் யோசித்துக் கொண்டிருக் கிறான். எல்லா விஷயத்தையும் சொல்லி விடலாமா என்று நினைத்தாள். அவள் ஏதோ சொல்ல வருவதற்குள் சத்யன் இடைமறித்துச் சொன்னான்.

''அவள் எப்படி இருப்பாள் என்பதெல்லாம் உனக்கு எதுக்கு? அவளுக்கு வேண்டியவர்கள் நாங்கள் எல்லோரும் இல்லையா? கல்யாணி ஏஜென்ஸீஸ் போய் விட்டால் அவன் நடுத்தெருவுக்கு வந்து விடுவாளா? முதலில் உன் விஷயத்தைச் சொல். அவள் சொத்துக்களுக்கும் கடன் களுக்கும் நீ அக்ரிமெண்ட் எழுதியதால் இப்பொழுது கடன்காரர்களுக்கு பதில் சொல்ல வேண்டிய பொறுப்பும்

உன்னுடையதுதான். அந்த விஷயத்தை நீ ஒப்புக் கொள்கிறாயா இல்லையா?''

''ஆமாம். பொறுப்பு என்னுடையதுதான்.''

''கப்பல் மூழ்கிப் போவதற்கு முன்பே அக்ரிமெண்ட் ஆகிவிட்டதால் நஷ்டம் உன்னுடையது தானே?''

''ஆமாம். என்னுடையதுதான். கடனைத் தீர்க்க வேண்டிய பொறுப்புகூட என்னைத்தான் சேர்ந்தது.''

''நாளைக்கு கோர்ட்டுக்கு போனாலும் உன்னால் ஜெயித்து விட முடியாது.''

அவன் வியப்படைந்தவன் போல் தென்பட்டான். ''இவ்வளவு சின்ன விஷயத்திற்கு கோர்ட் எதற்கு? ஒருக்கால் இப்படிப்பட்ட அபாயம் விரைவில் வரப் போகிறதென்று தான் கடவுள் ஸ்ரீகல்யாணிக்கு சொத்தை எல்லாம் விற்று விட வேண்டும் என்ற யோசனையை தந்திருப்பார். ஆனாலும் நாம் எல்லோரும் இருக்கும் போது அவங்களை ஜெயிலுக்கு எப்படி அனுப்புவோம்?''

அந்த 'ரிடார்ட்'க்கு சத்யன் அடியுண்டவனாய்ப் பார்த்தான். ஆனால் உடனே சமாளித்துக் கொண்டு ''அது இருக்கட்டும். அவளைப் பற்றி இல்லை. உன்னைப் பற்றி சொல்லு'' என்றான்.

''நான்தான் ஒப்புக் கொண்டு விட்டேனே. எங்கள் இருவருக்கும் நடுவல் நடந்தது காண்ட்ராக்ட் மட்டும்தான். ரிஜிஸ்டிரேஷன் இல்லை. ஆனாலும் சரி, நான் இதை எந்த கோர்ட்டிலும் சவால் செய்ய மாட்டேன். ஏனென்றால்...'' அவன் குரலைத் தாழ்த்திக் கொண்டு சொன்னான். ''நீதி மன்றத்தை விட மனச்சாட்சி தரும் தண்டனை பெரியது.'' சொல்லிவிட்டு அங்கிருந்து போய்விட்டான்.

10

''இதென்ன அங்கிள்? சாமான்களை எல்லாம் பெட்டியிலிருந்து அடுக்கி வைக்கிறீங்களே?'' வீட்டுச் சொந்தக்காரரின் மகள் கேட்டாள்.

''கல்கத்தாவுக்குப் போகவில்லை பாப்பா! இங்கேயே இருக்கப் போகிறேன்'' என்றான் கார்த்திகேயன்.

''ஹையா'' என்று கத்திக் கொண்டே அந்தச் சிறுமி வெளியே ஓடினாள். கார்த்திகேயனுக்கு சிரிப்பு வந்தது. 'இங்கேயே இருக்கப் போகிறேன்' என்றால் இந்த வீட்டில் என்று எண்ணிவிட்டாள் அந்தப் பெண்.

அவன் தன் தூரிகைகளையும், ஓவியங்களையும் எடுத்து வைத்துக் கொண்டிருந்த பொழுது அந்தச் சிறுமி மறுபடியும் அம்பு போல் ஓடி வந்தாள். ''அங்கிள்! உங்களை தேடிக் கொண்டு காரில் யாரோ வந்திருக்காங்க'' என்றாள்.

அவன் வியப்புடன் ''என்னைத் தேடிக் கொண்டு காரிலா?'' என்றாள்.

''ஆமாம். இவ்வளவு பெரிய கார்'' என்றாள் இரண்டு கைகளையும் அகல விரித்துக் காட்டியபடி. கார்த்திகேயன் வியப்படைந்தவனாக வெளியே வந்தான்.

தெருமுனையில் டயோட்டா நின்று கொண்டிருந்தது. டிரைவிங் சீட்டில் இருந்த கல்யாணியை பார்த்து விட்டு ''நீங்களா?'' என்றான்.

''பிசியாக இருக்கீங்களா?'' என்று கேட்டாள்.

''என்னைப் போன்றவனுக்கு பிசி வேறேயா?''

''அப்படி என்றால் என்னுடன் வாங்க. டின்னருக்குப் போகலாம்.''

அவன் ஆச்சரியம் தாங்க முடியாதவனாக ''உங்களுடன் சேர்ந்து டின்னருக்கா?'' என்றாள்.

''எப்படியும் நம் சொத்தெல்லாம் கடன்காரர் களுக்குத்தானே போகப் போகிறது. அதற்குள் நம்மால் எவ்வளவு முடியுமோ அவ்வளவு செலவழித்து விடுவது நல்லது. அஃப் கோர்ஸ், நான் இப்படி பேசினால் நீங்கள் மறுபடியும் மாரல் வேல்யூஸ், கோட்பாடுகள் என்று பேசத் தொடங்கி விடுவீர்களோ என்னவோ... வாங்க... சீக்கிரமாக போகலாம்'' என்றாள்.

கார் மெதுவாக போய்க் கொண்டிருந்தது.

''ஏதாவது பேசுங்கள்.''

அவன் சிரித்துவிட்டு ''நான் இன்னும் ஆச்சரியத்தி லிருந்து மீளவில்லை. நீங்கள் என்னை டின்னருக்கு அழைத்துப் போவதாவது?'' என்றான்.

''இதில் ஆச்சரியம் என்ன இருக்கு?''

''ஆச்சரியத்தை விட பயம்தான் அதிகம். உங்களுடன் நிகழும் ஒவ்வொரு சம்பவமும் என்னை ஒரு எதிர்பாராத திருப்பத்திற்கு கொண்டு போய் விடுகிறது.''

''இதுதான் கடைசி திருப்பம்'' என்றாள் காரை ஹோட்டலுக்குள் வளைத்துத் திருப்பிக் கொண்டே. ''இன்றிரவுக்கு பிறகு என் பக்கத்திலிருந்து உங்களுக்கு எந்தத் திருப்பங்களும் இருக்காது'' என்றாள் காரை நிறுத்திவிட்டு.

அவள் சொன்னதற்கு நேர்மாறாக அவர்கள் வாழ்க்கையில் மிக முக்கியமான திருப்பம் அந்த ஹோட்டலில்தான் அரைமணி நேரம் கழித்து நிகழ்ந்தது.

''**கா**ல் ஃபிரம் பாம்பே சார்.'' ஆபரேட்டரின் குரல் டெலிபோனில் கேட்டது. பிரதாப் போனை வாங்கிக் கொண்டார். ஒரு வினாடிக்குப் பிறகு மறுமுனையிலிருந்து கட்டையான குரல் கேட்டது. ''மிஸ்டர் பிரதாப்!''

''ஸ்பீக்கிங்.''

''ஸ்ரீ கல்யாணி ஏஜென்ஸி கப்பல் மூழ்கியதை பற்றி விசாரணை செய்யச் சொன்னீங்க இல்லையா?''

''இன்ஷ்யூரென்ஸ் கட்டாமல் போனதற்கு பின்னால் யாருடைய கை இருந்தது என்று விசாரணை செய்யச் சொன்னேன்.''

''இரண்டிற்கும் ஒரே பதில்தான் மிஸ்டர் பிரதாப்!'' என்று மறுமுனையிலிருந்து அந்தக் கட்டைக்குரல் சொல்லத் தொடங்கியது. இரண்டு நிமிடங்கள் பேசி விட்டு பிரதாப் போனை வைத்து விட்டார். அவர் முகம் கறுத்து விட்டிருந்தது.

அவர் உடனே சத்யனுக்கு போன் செய்தார். ''நீயும் வா. நாம் உடனே போகணும்.''

''எங்கே?''

''வந்த பிறகு சொல்கிறேன்'' என்று அவர் எழுந்து நின்று கண்ணாடியில் ஒரு முறை பார்த்துக் கொண்டு வெளியே வந்து சத்யனுக்காக காத்துக் கொண்டிருந்தார். அவர் கையில் XIC-20 பாட்டில் இருந்தது.

அப்பொழுது மணி ஏழு நாற்பத்தைந்து ஆகியிருந்தது.

★

கார்த்திகேயனும், கல்யாணியும் ஹோட்டலுக்குப் போன பொழுது இரவு மணி எட்டு. மூலையில் இருந்த மேஜைக்கு முன்னால் உட்கார்ந்து கொண்டார்கள். நறுமணம் அந்த ஹால் முழுவதும் பரவி, லேசாக ஒலித்துக் கொண்டிருந்த இசைக்கு துணையாக மனதை உற்சாகப் படுத்திக் கொண்டிருந்தது.

''நீங்க விஸ்கி, பிராந்தி ஏதாவது குடிப்பீங்களா?''

''இல்லை... இல்லை'' என்றான் பதற்றத்துடன்.

அவள் சிரிப்பை அடக்கிக் கொண்டு ''இல்லை என்று ஒரு தடவை சொன்னால் போதாதா?'' என்று சொல்லி விட்டு ஸ்டூவர்ட் பக்கம் திரும்பி ''இரண்டு பிளாண்டர்ஸ் பஞ்ச். அத்துடன் ஃபிரைட் பான்ஸ் ஒரு ப்ளேட்'' என்றாள்.

அவன் போன பிறகு கார்த்திகேயன் கேட்டான். ''பிளாண்டர்ஸ் பஞ்ச் என்றால்?''

''குடித்துப் பாருங்கள், தெரியும்.''

''அது சரி. நீங்கள் இப்படி என்னை அழைத்து வந்த காரணம் எனக்குப் புரியவில்லை. ஆச்சரியமாகவும் இருக்கு.''

''அதான் சொன்னேனே, எப்படியும் மூழ்கிப் போய் விடப் போகிறோம் என்று தெரிந்தால் வயிறு முட்ட தண்ணீரை குடித்து விட்டு செத்துப் போவது நல்லது. ஐ.பி. பிடிஷன் போடுவதற்கு முன்னால் பெரும்பாலானவர்கள் பாதி சொத்தை பதுக்கி வைத்து விடுவார்கள்.''

''எனக்குப் புரியாதது நீங்கள் எதுக்காக வந்தீங்க என்று இல்லை. என்னை எதுக்கு அழைத்து வந்தீங்க என்று தான்.''

''உங்களுக்கும் எனக்கும் என்ன வித்தியாசம் இருக்கு? இருவரும் ஒரே நிலைமையில் இருக்கிறோம். பார்க்கப் போனால் இப்பொழுது நான் தரப் போகும் பில் பணம் கூட உங்களுடையதுதான். இப்போ நான் உங்களை இங்கே எதற்காக அழைத்து வந்தேன் என்றால் ஐ.பி. பிடிஷன் போடுவதற்கு இன்னும் ஒரு மாதகாலம் அவகாசம் இருக்கிறது. இந்த ஒரு மாத காலத்திற்குள் ஒரு பத்து இருபது லட்சங்கள் எடுத்து ஒளித்து வைக்கட்டுமா என்று கேட்கத்தான்.''

''எதற்காக எடுத்து வைக்கணும்?''

''இந்த ரகளை எல்லாம் ஓய்ந்த பிறகு பயன்படும்.''

''நான் ஜெயிலிலிருந்து திரும்பி வந்த பிறகா?'' என்றான்.

''ச்செ..... நான் அந்த உத்தேசத்தில் சொல்லவில்லை.''

''என் விஷயம் இருக்கட்டும். உங்களைப் பற்றி சொல்லுங்கள். நீங்கள் என்ன செய்வதாக இருக்கீங்க?''

''இரண்டு வேளையும் ஜெயிலுக்கு கேரியரில் சாப்பாடு எடுத்துக் கொண்டு வருவேன்'' என்று சொல்லி விட்டு சட்டென்று அவன் மனம் நோகும்படியாக கிண்டல் செய்து விட்டோமோ என்று பார்த்தாள். அவன் அதை பொருட்படுத்தவில்லை. அவளுக்கு ஏனோ அந்த மாலைப் பொழுது மிகச் சந்தோஷமாகவும், மனம் வானில் பறந்து கொண்டிருப்பது போலவும் தோன்றியது.

அவன் கேட்டான். ''கோடிக் கணக்கில் வியாபாரம் செய்து பழக்கப்பட்டுப் போயிருக்கீங்க. நாளை முதல் என்ன செய்வீங்க? எப்படி பொழுது போகும்?''

வெயிட்டர் டம்ளர்களையும் தட்டுக்களையும் கொண்டு வைத்தான்.

அவள் டம்ளரை உயர்த்தி ''சியர்ஸ்'' என்று சொல்லிவிட்டு ஒரு மடங்கு குடித்து விட்டு ''எப்படி இருக்கு?'' என்று கேட்டாள்.

''நன்றாக இருக்கு'' என்றான்.

அவள் பிரான்ஸ் பிளேட்டை அருகில் இழுத்துக் கொண்டாள். ரிகார்ட் ப்ளேயரில் பாட்டு முடியும் தருவாயில் இருந்தது. கடைசியில் கிடாரின் இசை அபசுருதியாய் ஒலித்தது.

''என் கேள்விக்கு பதில் சொல்லவில்லை நீங்கள்.'' அவன் மறுபடியும் கேட்டான்.

''எனக்கு தெரிந்தவர்கள் நிறைய பேர் இருக் கிறார்கள். யாராவது கண்ணை மூடிக் கொண்டு பார்ட்னர்ஷிப் தருவார்கள். சிறிய லெவலில் வியாபாரத்தை தொடங்கி அபிவிருத்தி செய்வேன். நீங்கள் திரும்பி வருவதற்குள் பழைய நிலைக்கு வந்து விடுவேன்.''

அவன் சிரித்தான்.

அவள் ரோஷத்துடன் ''நான் திரும்பத் திரும்ப ஜெயிலைப் பற்றி இத்தனை தடவை சொன்ன போதும் உங்களுக்கு கோபமே வரவில்லையா?'' என்றாள்.

''கோபித்துக் கொண்டு என்ன செய்ய முடியும்? அப்படி சொல்லாதீங்க என்று சொன்னால் மேலும் மேலும் அதைப் பற்றியே பேசுவீங்க.''

''ஆமாம். நான் ஏன் எப்போதும் நெகடிவ் ஆக பேசுகிறேன்?'' முழங்கையை மேஜை மீது ஊன்றிக்

கொண்டு உள்ளங்கையில் முகவாயைத் தாங்கிக் கொண்டே கேட்டாள்.

அவன் திகைத்துப் போய் ''எனக்கு எப்படி தெரியும்?'' என்றான்.

''அன்றைக்கு போனில் சொன்னீங்களே. அதே போல சொல்லுங்கள்.''

''உண்மையிலேயே எனக்குத் தெரியாதுங்க.''

''மெடிசன் கொஞ்சம் படித்திருக்கீங்க. சைக்கியாட்ரிஸ்டிடம் வேலை பார்த்திருக்கீங்க. இவ்வளவு நாளாக என்னை கவனித்து வந்திருக்கீங்க. சொல்லுங்கள், நான் ஏன் எப்போதும் எதிர்மறையாக பேசுகிறேன்?''

அவன் கண்களை தாழ்த்திக் கொண்டு யோசிக்கத் தொடங்கினான். தட்டில் இருந்த இறால்களை சின்ன தட்டில் மாற்றி அவன் முன்னால் தள்ளி விட்டு தானும் ஒன்றை எடுத்துக் கொண்டு ஃபோர்க்கால் குத்தினாள். அதற்குள் அவன் பேசத் தொடங்கியதும் அதை தட்டிலேயே விட்டு விட்டாள். துரத்தி வந்த துரதிர்ஷ்டம் தற்காலிகமாக தொலைவுக்கு போனாற் போல் இறால் மறுபடியும் தட்டிலேயே நழுவியது. அதற்குள் அவன் சொன்னான்.

''சாதாரணமாக இரண்டு பேர் பேசிக் கொள்ளும் போது அங்கே இல்லாத மூன்றாவது நபரைப் பற்றி கெடுதலாகவோ, ஏளனமாகவோ பேசுவார்கள். எதற்காக தெரியுமா? தாம் நல்லவர்கள் என்று பரஸ்பரம் மறை முகமாக சொல்லிக் கொள்வதற்காக. நம்மிடமுள்ள இன்செக்யூரிடி உணர்வை போக்கிக் கொள்வதற்காக. இல்லையா?''

அவனுடைய நுட்பமான கண்ணோட்டத்தை உணர்ந்து வியப்படைந்தவளாக தலையை அசைத்தாள். தட்டில் இருந்ததை மறுபடியும் ஃபோர்க்கில் எடுக்கப் போன போது கரெண்ட் போய் விட்டது.

''மைகாட்!'' என்றாள். அவன் தொடர்ந்தான். ''மனிதன் தான் எவ்வாறு வாழ வேண்டும் என்று நினைக்கிறானோ அதைத் தான் சப்போர்ட் செய்வானே தவிர தான் எப்படி வாழ்ந்து கொண்டிருக்கிறானோ அதை சப்போர்ட் செய்ய மாட்டான். இரண்டு குடும்பங்கள் பக்கத்து பக்கத்து வீடுகளில் குடியிருக்கிறார்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். அதில் ஒருத்தனுக்கு இரண்டாவது மனைவி இருக்கிறாள் என்ற செய்தி வெளியில் வந்து விட்டால் அடுத்த போர்ஷனில் இருக்கும் ஆள் தன் மனைவியிடம் அவனைப் பற்றி வசைபாடுவான், இவனுக்கு இரண்டாவது செட்டப் இருந்தாலும் சரி.''

அவள் உரத்த குரலில் சிரித்தாள். அவள் அவ்வாறு வெளிப்படையாக சிரிப்பது அரிது.

''நான் உங்களை போரடிக்கிறேனா?''

''இல்லை இல்லை. சொல்லுங்கள்.'' உற்சாகத்துடன் சொன்னாள். அவள் மனதில் ஒரு எண்ணம் மெல்ல மெல்ல உருப் பெற்றுக் கொண்டிருந்தது. வெளியில் ஜெனரேட்டரை போட்டு விட்டார்கள் போலும். குளிர்ந்த காற்று வீசிக் கொண்டிருந்தது. மனிதனின் அதிர்ஷ்டத்தை பரிசோதிக்கும் சோழிகளைப் போல் தட்டில் இறால்கள் அப்படியே இருந்தன.

''மேலே நான் சொன்ன இரண்டு உதாரணங்களும் தன் மேலேயே தனக்கு நம்பிக்கை இல்லாத மனிதர்களைப்

பற்றி. எப்பொழுது தன் மீது தனக்கு நம்பிக்கை ஏற்படுகிறதோ அப்பொழுது மனிதன் தன் கொள்கைகளை வெளிப்படுத்தத் தொடங்கி விடுவான். இது சமுதாயத்திற்கு பிடிக்காது. அவனை நெகடிவ் ஆக உருவகப்படுத்தும். அவனும் அதை ஒரு தகுதியாக எடுத்துக் கொண்டு விடுவான். தற்சமயம் நீங்கள் கூட அதே நிலையில் தான் இருக்கீங்க என்பது என் உத்தேசம், கொஞ்சம் ஓவர் டோஸில்.''

அவள் மனம் தெளிவடைந்தது. தான் சொல்ல வேண்டிய தருணம் நெருங்கி விட்டது. தன் நாடகத்தைப் பற்றி... திருமண விஷயத்தில் அவனிடம் சொன்ன பொய்யைப் பற்றி.

''இந்த விதமாக எதிர்மறையாக வெளிப்படுத்து கிறவர்களை மற்றவர்களால் லேசில் புரிந்து கொள்ள முடியாது.''

'ஏன் முடியாது. நீங்க புரிந்து கொள்வீங்க. கார்த்திகேயனால் புரிந்து கொள்ள முடியா விட்டால் வேறு யாராலுமே புரிந்து கொள்ள முடியாது' என்று நினைத்துக் கொண்டே அவள் ஃபோர்க்கால் இறாலை வாய்க்கு அருகில் கொண்டு போனாள். அதன் மீது இருந்த மசாலா வாழ்க்கையின் மீது மரணம் தெளித்த கறுப்பு கரையை போல் இருந்தது.

அவள் சொன்னாள். ''இப்போ நான் உங்களை ஹோட்டலுக்கு அழைத்து வந்த உண்மைக் காரணத்தைச் சொல்லி விடுகிறேன். என் சொத்து... அதான்... ஐ மீன்...'' அவள் நிறுத்தி விட்டு இறாலை வாயிலை போட்டுக் கொண்டாள்.

அவளுக்குப் புறை ஏறியது. விழுங்கிவிட்டு நண்ணீரைக் குடித்தாள். ஆனாலும் இருமல் நிற்கவில்லை.

கார்த்திகேயன் கைக்குட்டையை நீட்டினான்.

அவளுக்கு தலை சுற்றுவது போல் இருந்தது. மேஜையின் விளிம்பை பற்றிக் கொள்ள முயன்றாள். எட்டவில்லை.

உடல் சுவாதீனம் இல்லாதது போல் முன்னால் சாய்ந்தாள்.

கார்த்திகேயன் பதற்றத்துடன் ''கல்யாணி!''என்று அழைத்தது மட்டும் காதில் விழுந்தது. தன்னை நோக்கி ஓடி வந்து கொண்டிருந்த ஹோட்டல் ஊழியர்களும், எழுந்து நின்று கொண்ட கஸ்டமர்களும் மங்கலாக தென்பட்டுக் கொண்டிருந்தார்கள். உடம்பை அனலில் வாட்டுவது போல் இருந்தது. அவள் விழிகள் சொருகிக் கொண்டன. தொண்டைக் குழிக்குள் சத்தம் அடங்கிப் போய் நிசப்தத்தில் ஆழ்ந்து போயிற்று. அடுத்த நிமிஷம் அவள் நினைவிழந்து விட்டாள்.

★

''ஐயாம் சாரி மிஸ்டர் சத்யன்! விஷ உணவை உட்கொண்டதால் ஸ்ரீகல்யாணிக்கு இந்த விதமாக பெராலிஸிஸ் வந்து விட்டது. அவள் உட்கொண்ட இறால் விஷ மயமானது.''

''எப்பொழுது குணமாகும் டாக்டர்?''

''சொல்ல முடியாது. ஒரு வருஷம் ஆகலாம். அல்லது பத்து வருடங்களும் ஆகலாம். வாழ்நாள் முழுவதும் குணமாகாமலும் போகலாம். நரம்பு மண்டலம் முற்றிலும்

பாதிக்கப்பட்டிருக்கிறது. பேசும் திறன் போகாமல் இருந்தது அதிர்ஷ்டம்.''

''வெறும் விஷ உணவு உட்கொண்டதால் கையும் காலும் சுவாதீனம் இல்லாமல் போக வாய்ப்பு இருக்கிறதா டாக்டர்?''

''ரொம்ப அரிதான கேஸ் இது, சத்யன்! அந்த இறாலைப் பற்றிய ரிப்போர்ட் கூட வந்துவிட்டது. அதிலுள்ள விஷத்தைப் பற்றி ரசாயன பரிசோதனை மூலமாக கூட தெரிந்து கொள்ள முடியவில்லை. அந்த இறால்களை கடலில் எந்தப் பகுதியில் பிடித்து வந்தார்களோ தெரியவில்லை. ரொம்ப ஆபத்தானவை.''

சத்யன் தன் முகத்தில் எந்த உணர்ச்சியும் காட்டாமல், ''எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை டாக்டர்! எங்கள் கல்யாணி நல்லபடியாக குணமாக வேண்டும்'' என்றான்.

இங்கே இந்த உரையாடல் நடை பெற்றுக் கொண்டிருந்த அதே சமயத்தில் உள்ளே கல்யாணி கட்டில் மீது படுத்தபடி ஜன்னல் வழியாக வெளியே பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் முகம் ரத்தம் வற்றி விட்டது போல் வெளிறிப் போயிருந்தது.

கார்த்திகேயன் அவளைச் சமாதானப் படுத்த நினைத்து ''வருத்தப்படாதீங்க'' என்றான். அவ்வாறு சொன்னானே தவிர அவள் மனக்குமுறலை அவனால் ஊகித்துக் கொள்ள முடிந்தது. சுதந்திரமாக சுறுசுறுப்பாக சுற்றிக் கொண்டு, கீழே இருப்பவர்களிடமிருந்து வேலைகளை வாங்கிக் கொண்டு கோடிக் கணக்கில் வியாபாரத்தை நிர்வகித்துக் கொண்டிருந்த ஒரு பெண்

திடீரென்று படுத்த படுக்கையாகி விட்டது எவ்வளவு பெரிய அதிர்ச்சியாக இருக்கும் என்று அவனால் உணர முடிந்தது.

அவள் அருகில் குனிந்து ''இந்தச் சமயத்தில் எதைச் சொன்னாலும் அது ஆறுதலாகவோ, வைராக்கியமாகவோ தோன்றலாம். நான் சொல்லக் கூடியது ஒன்றுதான் கல்யாணி! வாழ்க்கையில் மேடுபள்ளங்கள் என்பது சகஜம். கஷ்டம் வந்த போதுதான் நாம் இன்னும் தைரியமாக இருக்கணும். இதெல்லாம் உங்களுக்கு தெரியாதது இல்லை.''

அவள் மெல்ல நிமிர்ந்து பார்த்தாள். ''உண்மைதான். மேடுபள்ளங்களை தவிர்க்க முடியாது. ஆனால் என்னால் ஏறவே முடியாத உயரம் இந்த மேடு. நான் ஊகித்தும் பார்த்திராத பள்ளம் இது.''

''அப்படி ஏன் நினைத்துக் கொள்ளணும்? மருத்துவம் எவ்வளவோ முன்னேறி இருக்கிறது. சீக்கிரத்தில் குணமாகும் வாய்ப்பும் இருக்கக் கூடும்.''

''நான் டாக்டரிடம் பேசினேன்.'' சுருக்கமாக சொன்னாள். ''என்னிடம் பொய் சொல்லக் கூடிய தைரியம் டாக்டருக்கு இல்லை.''

அவனுக்கு என்ன சொல்வதென்று புரியவில்லை. நிசப்தம் கூட பயமுறுத்தக் கூடியது என்று புரிந்தது.

அவள் தன் கைகளை பார்த்துக் கொண்டாள். கீரைத் தண்டாய் துவண்டு தொங்கிக் கொண்டிருந்தன. சிரித்துக் கொண்டே சொன்னாள். ''ஓய்வு நேரத்தில் என்ன செய்வது என்று நேற்று வரையில் சலித்துக் கொண்டிருந்தேன். இப்பொழுது எனக்கு நல்ல பொழுது போக்கு கிடைத்து விட்டது.''

அவன் நிமிர்ந்து அவளை வெறுமையாக பார்த்தான். சலனமற்ற தன் உடலை ஒரு பார்வையாளர் போல் பார்த்துக் கொண்டே சொன்னாள்.

''கால் கட்டை விரலையும், கையின சுண்டு விரலையும் அசைக்க முடியுமா என்று எனக்கு நானே பந்தயம் வைத்துக் கொண்டு நாட்களையும் வருடங் களையும் கழித்து விடலாம்.''

அவன் நடுங்கிவிட்டான். ஒரு சின்ன வாக்கியத்தில் தன் எதிர்கால வாழ்க்கையைப் பிணைத்து அவள் சொன்னது அவன் உள்ளத்தைத் தட்டி எழுப்பி விட்டது. அவன் அவளிடம் நெருங்கி வந்து குனிந்தான். அன்போடு நெற்றியிலும், காதலோடு உதட்டிலும், பரிவோடு கன்னத்திலும், பாசத்தோடு கண்களிலும், கனிவோடு வகிட்டிலும் முத்தமிட்டுவிட்டு ''நான் உன்னைக் கல்யாணம் செய்து கொள்கிறேன் கல்யாணி!'' என்றான்.

அந்த எதிர்பாராத காதல் வெளிப்பாட்டிற்கு அவள் வியந்து போனாள். மரத்திலிருந்து உதிர்ந்து விழும் ஒவ்வொரு பழுத்த இலையின் கதையும் வேதனை நிறைந்தது அல்ல. முடிந்து போன கதையும் அல்ல. புதிய துளிருக்கு இடம் கொடுக்கும் முயற்சி. உன் நட்பு நிலவின் வெளிச்சமாக மலர்ந்து, உன் அன்பு காவேரியின் வெள்ளமாக பாய்ந்து அந்த வெள்ளத்தில் சந்தோஷமாக அடித்துக் கொண்டு போகிறேன்.

முடிவில்லாத பயணத்தில், திருப்பத்தில் என்ன இருக்குமோ என்ற பரபரப்பு அவளைத் துளைத்தெடுத்துக் கொண்டிருந்தது. தயங்கிக் கொண்டே ''ஆனால்...'' என்றாள்.

அவன் அதை வேறு விதமாக புரிந்து கொண்டான். ''உன்னிடம் பணம் இல்லை என்றும், எதற்கும் பயன்படாதவள் என்றும் சொல்ல நினைக்கிறாய். அதுதானே உன் சந்தேகம். நீ எனக்கு அப்படித்தான் வேண்டும் கல்யாணி! உன் சொத்துக்களோடு, பணத்தோடு எனக்கு சம்பந்தம் இல்லை. 'என்னைக் கல்யாணம் செய்து கொள்கிறாயா' என்று நீ கேட்ட அன்றைக்கு நான் அதற்காகத்தான் பயந்து கடிதம் எழுதி வைத்து விட்டுப் போய் விட்டேன். நான் கஷ்டப்பட்டு உழைத்து உன்னைக் காப்பாற்றுகிறேன் கல்யாணி! பெரிய டாக்டராக பார்த்து காட்டுவோம். என்றாவது ஒரு நாள் அதிர்ஷ்டம் நம் வீட்டுக் கதவைத் தட்டாமல் போகாது. அது வரை சொத்து போய் விட்டது என்றும், உடம்பு சுவாதீனத்தை இழந்து விட்டது என்றும் மனம் தளர்ந்து போகாதே. உனக்கு நான் இருக்கிறேன். என்னை நம்பு.''

அவள் கண்ணீர் மல்க அவனைப் பார்த்தாள். நரம்புகள் பலமிழந்து நடைப்பிணமான போது கூட வரவில்லை. அவள் இப்போதைக்கு குணமாக மாட்டாள் என்று டாக்டர் சொன்னபோது கூட வரவில்லை. இப்பொழுதுதான் கண்ணீர் வந்தது அவளுக்கு.

''ஐயோ! சொத்து எங்கேயும் போய்விடவில்லை'' என்றாள் அழுதுகொண்டே, ''நான் உங்களை வேடிக்கை யாக பரிசோதிக்க வேண்டும் என்று நினைத்தேன். கடவுள் என்னை நிஜமாகவே சோதித்து விட்டார்.''

அவன் திகைத்துப் போய் விட்டான். அப்படி என்றால்... அப்படி என்றால்... ஸ்ரீகல்யாணி 'ஸ்ரீ' கல்யாணி தான்.

அவள் சொன்னாள். ''நீங்கள் என் சொத்தை யெல்லாம் வாங்கிக் கொண்டு விட்ட அன்றைக்கு உங்களை

எப்படி வீழ்த்தலாம் என்று யோசித்த போது இந்த யோசனை வந்தது. நள்ளிரவில் உங்களிடம் வந்து கல்யாணம் செய்து கொள்வீர்களா என்று கேட்டேன். நீங்கள் பதில் சொல்லவில்லை. அதற்கு முன்னால் அன்றிரவே பம்பாய்க்கு போன் செய்து கப்பல் மூழ்கிப் போய் விட்டது என்ற செய்தியை அனுப்பச் சொன்னேன். நான் கேட்டதுமே கல்யாணத்திற்கு ஒப்புக் கொள்வீர்கள் என்று நினைத்தேன். மறுநாள் நான் பிச்சைக்காரியாகி விட்டேன் என்ற செய்தியை அறிந்து கொண்டு திருமணத்திற்குப் பின் வாங்குவீர்கள் என்றும், அப்பொழுது நான் உங்களை ஜெயித்து விட்டதாக ஆகும் என்றும் நினைத்தேன். ஆனால் நீங்கள் திருமணத்திற்கு சம்மதிக்கவில்லை. சொத்தை எனக்குத் திருப்பி எழுதி வைத்து விட்டு போய்விட்டீர்கள். அதற்குள் சத்யன் இன்னொரு விஷயத்தைச் சொன்னான், கடன்காரர்கள் கோர்ட்டுக்கு போனால் ஜெயில் தண்டனை கிடைக்கும் என்று. அப்பொழுதாவது நீங்கள் எனக்கு, 'இந்தக் கடன்களுக்கும் எனக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை' என்று சொல்வீர்கள் என்று நினைத்தேன். அப்பொழுது உடனே 'பார்த்தாயா. விஷயம் தன் வரைக்கும் வந்து விட்டால் மனிதன் எப்படி பேச்சு மாறுகிறான் பார். இந்த உலகத்தில் பணத்திற்கு இருக்கும் மதிப்பு வேறு எதுக்கும் இல்லை' என்று உங்களிடம் சொல்வதற்காக இத்தனை விதமாக ஜோடித்தேன். கடைசியில் தெய்வம் என்னை ஒரு நடைப்பிணமாக்கி விட்டு இனி ஒரு போதும் இது போல் சவால் விட முடியாமல் செய்து விட்டது. ஒரு காலத்தில் தலை நிமிர்ந்து, மிடுக்கோடு எந்த ஆணையாவ்து பார்த்து 'என்னையும் என் சொத்தையும் ஏற்றுக் கொள்' என்று சொல்ல எண்ணியிருந்தேன். அத்தனை மிடுக்கு தகாது

என்று மறுபடியும் தலையெடுக்க முடியாமல் செய்து விட்டது விதி. இப்பொழுது உங்கள் கையால் பணிவிடை செய்ய வைத்துக் கொண்டு, ஒவ்வொரு நிமிஷமும் எனக்குள் குமுறிக் கொண்டே...''

அவன் கை அவள் வாயை பொத்தியது, இனி நிறுத்து என்பது போல். ''ஒரு நிபந்தனையின் பேரில் நான் உன்னைக் கல்யாணம் செய்து கொள்கிறேன்'' என்றான்.

எதிர்பாராத இந்த திடீர் பரிணாமத்திற்கு அவள் வாயடைத்துப் போய் விட்டாள்.

''இனி ஒரு நாளும் நீ உன் இயலாமையைப் பற்றி வருத்தப் படக் கூடாது. பழைய கல்யாணியாக, திமிராக, குறும்பாக இருக்கணும். அதுதான் என் நிபந்தனை நம் திருமணத்திற்கு.''

அவள் கண்ணீரோடு சிரித்தாள். வேதனையையும் ஆனந்தத்தையும் இணைப்பதற்காக கட்டிய வாராவதியைப் போலிருந்தது அந்தச் சிரிப்பு.

ஆனந்தமே கண்ணீராக கன்னத்தில் உருண்டு விழுவது என்றால் என்னவென்று அப்பொழுதுதான் அவளுக்குப் புரிந்தது.

11

சத்யன் வேகமாக வீசியெறிந்த டம்ளர் கண்ணாடியின் மேல்பட்டு சிலீரென்று உடைந்தது. சத்யன் மனிதனாக இருக்கவில்லை. அரக்கன் போல் இருந்தான். பிரதாப் சத்யனை அந்த நிலையில் பார்ப்பது அது தான் முதல் தடவை. மனிதர்கள் வெளிப்பார்வைக்கு சாதுவாக

இருந்து கொண்டு குடித்து விட்டால் குரூரமான அவதாரத்தை எடுப்பார்கள் என்று படித்திருக்கிறார். அதை அனுபவத்தில் முதல் முறையாக உணர்ந்தார். ''உள் மனிதனை வலுக் கட்டாயமாக அடக்கி வைத்திருப்பதாலோ என்னவோ இப்படிப்பட்ட சமயங்களில் அந்த அரக்கன் வெளியே வந்து குரூரதாண்டவமாடத் தொடங்கிவிடுவான் போலும்' என்று நினைத்துக் கொண்டார்.

நிலைமையை சாதாரண நிலைக்குக் கொண்டு வரவேண்டிய பொறுப்பு தன் மீது இருப்பதை உணர்ந்த அஸ்வத்தாமன், ''இறால் உணவில் விஷம் கலந்திருப்பதாக ஸ்ரீகல்யாணிக்கு சந்தேகம் வராமல் போனது அதிர்ஷ்டம்தான். ஆனாலும் அவ்வளவு துரிதமாக முடிவு எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற யோசனை வந்ததற்கே உங்களைப் பாராட்ட வேண்டும்'' என்றார்.

அந்தப் பாராட்டுக்கு பிரதாப் உருகிப் போய் விடுவார் என்று அஸ்வத்தாமனுக்குத் தெரியும். என்ன இருந்தாலும் சைக்கியாட்ரிஸ்ட் இல்லையா? அவர் நினைத்தது உண்மையாகிவிட்டது.

பிரதாப் சொன்னார். ''அன்று இரவு எனக்கு பம்பாயிலிருந்து கப்பல் மூழ்கவில்லை என்ற செய்தி வந்தது. சத்யனை அழைத்துக் கொண்டு ஹோட்டலுக்குப் போனேன். இரண்டே இரண்டு சொட்டு விஷம். அவ்வளவுதான்.''

''அந்த இறாலை ஒருக்கால் கார்த்திகேயன் முதலில் சாப்பிட்டிருந்தால்?'' என்றார் அஸ்வத்தாமன்.

அதைக் கேட்டு சத்யன் எரிச்சலுடன் எழுந்து கொண்டான். ''கார்த்திகேயன் சாப்பிட்டிருந்தால் ஸ்ரீ

கல்யாணி அவனை டிரைவருடன் ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்திருப்பாள். அவ்வளவுதான்.''

''சத்யன்! நீ ஆவேசப்படாதே. உட்கார்ந்து கொள். இப்பொழுது நம் பிரச்னை ரொம்பவும் சிக்கலாகி விட்டது. அதைப் பற்றி யோசிக்காமல் நாம் வீணாக சண்டை போட்டுக் கொண்டு இருக்கிறோம்'' பிரதாப் சமாதானப் படுத்தினார்.

''என்ன சிக்கல் வந்து விட்டது?''

''ஸ்ரீகல்யாணியின் கொலை நடந்தால் உடனே சந்தேகம் சத்யன் மீது வரும் என்றுதானே நாம் இவ்வளவு ஜாக்கிரதைகளை எடுத்துக் கொள்கிறோம்? இப்பொழுது அவர்களுடைய திருமணம் நேற்று மாலையே முடிந்து விட்டது. அதனால் கல்யாணி இறந்து போனால் சொத் தெல்லாம் கார்த்திகேயனுக்குத்தான் போகும். கார்த்தி கேயன் இறந்து போனால் அவனுக்கு வாரிசு இல்லை என்பதால் சத்யனுக்கு வரும். ஆனால் அதே போல் சி.பி.ஐ. காரர்களின் சந்தேகம் கூட சத்யன் மீது தான் வரும்.''

''உங்களுக்கு ரொம்ப தொலை நோக்கு இருக்கே?'' அஸ்வத்தாமன் கிண்டலடித்தார்.

பிரதாப் அந்த வார்த்தைகளை பொருட்படுத்தாமல் சொன்னார். ''இப்போ நம் வேலை இரட்டிப்பாகி விட்டது. யாருக்கும் சந்தேகம் வராமல் கல்யாணியை மட்டுமே இல்லை. கார்த்திகேயனையும் கொல்ல வேண்டும்.''

''அப்படி என்றால் இருவரையும் ஒரே விபத்தில் கொல்லணும்.''

''சந்தேகம் வராமல் அப்படி செய்ய முடிந்தால் நல்லது. ஆனால் இருவரும் சேர்ந்து வெளியே போக

மாட்டார்கள். கல்யாணி நடமாடும் நிலையில் இல்லை. குறைந்த பட்சம் கையை அசைக்கக் கூடிய நிலையில் கூட இல்லை.''

''அப்படி இருக்கும் போது கல்யாணம் எப்படி செய்து கொண்டாள்? கல்யாணத்தில் எப்படி மாலை போட்டாள்?''

''பதிவுத் திருமணம்.''

''கையெழுத்தாவது போடணும் இல்லையா?'' கேட்டார் அஸ்வத்தாமன் ஆர்வத்துடன்.

''கார்த்திகேயன் அவள் கையைப் பிடித்து ரிஜிஸ்டரில் கை நாட்டு போடச் செய்தான். போதுமா?'' சத்யன் எரிந்து விழுந்தான். ''நீங்க யோசிக்க வேண்டியது காரியத்தை எப்படி முடிப்பது என்றுதான். அவ்வளவுதானே தவிர அவள் எப்படி கல்யாணம் செய்து கொண்டாள் என்பது பற்றி இல்லை.''

''எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது.'' என்றார் பிரதாப்.

இருவரும் உற்சாகத்துடன் ''என்ன?'' என்றார்கள்.

''கார்த்திகேயனின் தந்தை ஒரு ஜமீன்தார். சொத்தை எல்லாம் வைப்பாட்டியின் பெயருக்கு எழுதி வைத்து விட்டார். அதே போல் நம் ஆளை யாரையாவது, கார்த்திகேயன் மீது ஏவிவிட்டால் எப்படி இருக்கும் என்று யோசிக்கிறேன்?''

''ரொம்ப அழகுதான். உங்க யோசனைகள் எல்லாம் பழைய பஞ்சாங்கமாக இருக்கு. நான் போகிறேன். எனக்கு ரொம்ப கோபம் வருகிறது. போன வருடமே அவள் காரில்

பிரேக்கை எடுத்து விட்டிருந்தால் ஆக்ஸிடெண்ட் ஆகி செத்துத் தொலைந்திருப்பாள். இப்போ இந்தக் கல்யாணம் வேறு. கார்த்திகேயன் சொத்துக்கு வாரிசாகி விட்டான். ச்சீ... ச்சீ... நினைத்துப் பார்த்தாலே ஆத்திரம் வருகிறது. நான் போகிறேன்.'' சத்யன் அங்கிருந்து போய்விட்டான்.

சரியாக ஒரு மணி நேரம் கழித்து அஸ்வத்தாமன் நாலாவது பெக்கில் இருந்த பொழுது பிரதாப் கேட்டார். ''உனக்கும் சத்யனுக்கும் எப்படி அறிமுகம்?''

''அவன் ஒரு சைக்கோ பேஷண்டாக என்னிடம் வந்தான். அப்பொழுது ஏற்பட்ட பழக்கம்.''

பிரதாப் ஆர்வத்துடன் ''என்ன பிரச்னையாம் அவனுக்கு?'' என்று கேட்டார்.

''ஹெலூசினேஷன்ஸ்! பேய் பிசாசுகள் கனவில் வரும். ஒரு பெண் தன்னை கொலை செய்ய வருவது போல் அடிக்கடி பயந்து கொண்டிருந்தான். அதோடு செக்ஸ் வாழ்க்கையில் பிரச்னை இருந்தது. அதனால் ஏற்பட்ட தாழ்வு மனப்பான்மையை மறைப்பதற்காக சூடோ சுபீரியாரிடியைக் காட்டிக் கொண்டிருப்பான். அந்தத் தாழ்வு மனப்பான்மையின் காரணமாக ஒரு வருடத்திற்கு முன்னால் அவன் ஒரு கொலையைச் செய்தான்.''

பிரதாப் சட்டென்று அவர் வார்த்தைகளை இடைமறித்து விட்டு ''யாரை?'' என்றார்.

''அவனுடைய கேர்ல் பிரண்டை. அந்தப் பெண் அவனுடன் ரொமப் சிநேகமாக இருந்தாள். இரண்டு வருடங்களுக்குப் பிறகு அவளுக்குக் கல்யாணம் ஆகிவிட்டது.''

''பெயர்?''

''மனோஜா'' என்றார் அஸ்வத்தாமன். ''நடந்ததை எல்லாம் ஹிப்னாடிக்டிரான்ஸில் என்னிடம் சொன்னான்.''

''அந்தக் கொலையை எதற்காக செய்தான்?''

''கல்யாணம் ஆன பிறகு அந்தப் பெண் இவனிடம் வருவதை விட்டு விட்டாள். அது வரை செக்ஸ் என்றால் இரண்டு நிமிட நேர சந்தோஷம்தான் என்று நினைத்துக் கொண்டிருந்தாள். கல்யாணம் ஆன பிறகு கணவன், அவள் வாழ்க்கையில் இரண்டாவது ஆண், சிருங்காரம் என்றால் என்னவென்று புரியவைத்தான். அதனால் இவன் பக்கம் திரும்பி பார்ப்பதையே விட்டு விட்டாள்.''

''அதற்காக கொலை செய்ய வேண்டிய அவசியமில்லையே?''

''அவன் ஒரு சைக்கிக். இந்தக் காம்ப்ளெக்ஸ் இருப்பவர்கள் எதற்கும் துணிந்து விடுவார்கள். கல்யாணம் ஆன பிறகும் அந்தப் பெண் தன் ஆதீனத்தில் இருக்கணும் என்றும், தன்னிடமிருந்து இரக்கத்தைப் பெற வேண்டும் என்று எதிர்பார்த்தான். அந்தப் பெண் கொஞ்சம் குறும்புக்காரி. அவனுக்கு ஒரு கடிதம் எழுதினாள். அந்தக் கடிதத்தைப் பார்த்து விட்டு ஆத்திரமடைந்து போய் கொலை செய்தான்.''

''என்னதான் எழுதினாள் அந்தக் கடிதத்தில்?''

''அவனுடைய குறையைச் சுட்டிக்காட்டி 'லட்சம் தடவை இம்பொஸிஷன் எழுதிக் காட்டு வருகிறேன்' என்று எழுதினாள்.'' அஸ்வத்தாமன் விழுந்து விழுந்து சிரித்துக் கொண்டே சொன்னார்.

பிரதாப் பதில் பேசவில்லை. அவரால் புரிந்து கொள்ள முடியும். தாழ்வு மனப்பான்மை மனிதனை

எதற்கும் துணியும் படியாக செய்து விடும். அதற்கு லாஜிக் இல்லை.

அஸ்வத்தாமன் இன்னொரு பெக்கை டம்ளரில் ஊற்றிக் கொண்டே சொன்னார். ''அவர்கள் இரண்டு பேரும் இன்னும் எத்தனை நாட்களுக்கு இருக்கப் போறாங்க? சீக்கிரமாக செத்தால் நாம் விஸ்கியிலிருந்து ஸ்காட்ச்சுக்கு மாறி விடலாம்.''

''அது அவ்வளவு சுலபம் இல்லை. இரண்டு பேரும் ஒரே நேரத்தில் இறந்து போனால் கண்டிப்பாக சந்தேகம் வரும். விசாரணை ஏதாவது தொடங்கினால் நம்மால் நிம்மதியாக இருக்க முடியாது. சொத்து கைக்குக் கிடைத்த சந்தோஷம் கூட இருக்காது. வேறு ஏதாவது திட்டம் போடணும். யாராலும் ஊகித்துப் பார்க்க முடியாத திட்டம்'' என்றார் பிரதாப்.

''உண்மையிலேயே அவ்வளவு கஷ்டப்படணுமா?''

''உனக்குத் தெரியாது அஸ்வத்தாமன்! போலீஸ் டிபார்ட்மெண்டில் வேலை பார்த்திருக்கிறேன். இண்டெலிஜென்ஸ் டிபார்ட்மெண்ட் நினைத்துக் கொண்டால் எவ்வளவு ஆழத்திற்கு வேண்டுமானாலும் தோண்டி உண்மையைக் கண்டுபிடித்துவிடும்.''

''கார்த்திகேயன் ஊரில்தானே இருக்கிறான்?''

''இருக்கிறதாவது? இன்றைக்குத்தான் முதலிரவு.''

''முதலிரவா! ஹா... ஹா... ஹா.'' பெரிதாக சிரித்தார் அஸ்வத்தாமன். பதிவுத் திருமணத்தில் கையெழுத்துப் போட முடியாத பெண்ணுடன் முதலிரவா?'' என்று தள்ளாடித் தள்ளாடி, போதை அதிகரிக்கவே நினைவு தப்பி கீழே விழுந்தார்.

மனம் என்ற பூக்களால் நிறைந்த அறையில், அன்பு என்ற கட்டிலை போட்டு விரகம் என்ற போர்வையின் மீது மௌனத்தை மல்லிகைப் பூக்களாக தூவி உத்வேகம் என்ற கதவிற்கு அப்பாலிருந்து கேட்கும் அன்யோனியம் என்ற காலடிச் சத்தத்திற்காக எதிர்பார்க்க வேண்டிய நாள்... முதலிரவு.

சின்ன வித்தியாசத்துடன் அவர்களுடைய முதலிரவு கூட அதே போல்தான் நடந்தது.

அவன் வெளியேயிருந்து வந்தான். அவள் உள்ளே இருந்தாள். அவ்வளவுதான் வித்தியாசம்.

''பால் சொம்பைக் கூட நீங்களே கொண்டு வந்து விடுவீங்களோன்னு வெட்கத்தால் குறுகிப் போய் விட்டேன்'' என்றாள் அவள்.

அவன் வந்து படுக்கையில் உட்கார்ந்து கொண்டான். அந்த பூப்படுக்கை கூட அவன் செய்த ஏற்பாடுதான். இந்த ஏற்பாடுகளுக்கெல்லாம் அவள் ஒப்புக் கொள்ளவில்லை. வேண்டவே வேண்டாம் என்றாள்.

''ஏன்?''

''எல்லோரும் சிரிப்பார்கள். 'இந்த நடைப்பிணத்திற்கு முதலிரவு வேறா?' என்று கேலி செய்வார்கள்.''

''நாம் வாழ்வது மற்றவர்களுக்காக இல்லை கல்யாணி, நமக்காக. சரி, நீ அவ்வளவு தூரம் சொல்வதால் படுக்கை அறை ஜோடனையை நானே செய்கிறேன்.''

அவள் வியப்போடு ''என்ன செய்வீங்க?'' என்று கேட்டாள்.

''அதான் பார்க்கப் போகிறாயே?''

அன்றிரவு பத்து மணிக்கு அவன் அவளிடம் வந்தான். ''கண்களை மூடிக் கொள்'' என்றான்.

''எதற்கு?''

''மூடிக் கொள் முதலில். மறுபடியும் நான் சொன்ன பிறகுதான் திறக்க வேண்டும்'' என்று அவளை இரண்டு கரங்களாலும் தூக்கிக் கொண்டான். அவள் வீலென்று கத்தி விட்டு கண்களை மூடிக் கொண்டாள். தன்னை அவன் படிகள் வழியாக மாடிக்கு தூக்கிக் கொண்டு போவதை உணர்ந்தாள். முதலில் லேசாக வந்து வீசிக் கொண்டிருந்த மல்லிகைப் பூக்களின் நறுமணம் மெல்ல மெல்ல அதிகமாயிற்று.

அவன் அவளைப் படுக்கையின் மீது மெதுவாக இறக்கி விட்டான்.

அதற்குப் பிறகு நிசப்தம். அவள் ஒரு நிமிடம் கழித்து ''கண்களைத் திறக்கட்டுமா?'' என்று கேட்டாள். பதில் இல்லை.

''நீங்கள் இங்கேயே தானே இருக்கீங்க?''

நிசப்தம் பதிலாக வந்தது. அவள் மெல்ல கண்களைத் திறந்தாள். அந்த அற்புதக் காட்சியைப் பார்த்து அவள் கண்களோடு மனமும் சிதறிவிட்டது. தன் கணவன் ஒரு ஓவியன் என்று மறந்து போய் விட்டதற்கு தன்னைத் தானே நிந்தித்துக் கொண்டாள். இரவும் பகலும் பாடுபட்டு ஒரு ஆர்ட் டைரக்டரால் கூட அவ்வளவு அழகாக அமைத்திருக்க முடியாது. கட்டிலில் கட்டியிருந்த மல்லிகைச் சரங்கள் நிலவின் தோரணங்களாய். ஒரு ஓவியனால் மட்டுமே உணரக் கூடிய நிறங்களின் சேர்க்கையோடு ஜன்னல் திரைச் சீலைகளும், கட்டில் மீது போர்வைகளும். ஒரே

வார்த்தையில் சொல்லணும் என்றால் 'மோனாலிசா' ஓவியம் போல் இருந்தது அந்த அறை.

ஐந்து நிமிடங்கள் கழித்து அவன் உள்ளே வரும் வரையில் அவள் இன்னும் அந்த அறையின் அழகை ரசித்துக் கொண்டே இருந்தாள்.

''ஏன் அப்படியே பார்த்துக் கொண்டிருக்கிறாய்?''

அவள் அவனை அன்புடன் பார்த்துக் கொண்டே ''உங்களுடைய கலர் காம்பினேஷன் ரொம்ப அற்புதமாக இருக்கு. நீங்கள் மட்டும் இண்டீரியர் டெகரேஷன் துறையில் புகுந்தால் ஒரே வருஷத்தில் லட்சக்கணக்கில் சம்பாதிக்கலாம்'' என்றாள்.

''அழகாகத்தான் இருக்கு. முதலிரவன்று முதல் முதலாக ஒரு பெண் வார்த்தைகள் இதுதானா?'' என்றான் குரலில் போலி வருத்தம் காட்டியபடி.

''நான் இந்த நாளைப் பற்றி எவ்வளவு ஊகித்துக் கொண்டிருந்தேன் தெரியுமா? How to fight with your rivals in business என்ற புத்தகத்தின் சாரத்தை இந்த இரவில் உங்கள் மீது பிரயோகம் செய்ய வேண்டும் என்றும், ரொமான்ஸுக்கும் இண்டெலிஜென்ஸ் வேண்டும் என்று நிரூபித்து உங்களுடைய ஒப்புதலையும் பெற வேண்டும் என்றும் நினைத்திருந்தேன். ஆனால் துரதிர்ஷ்டம்...''

''உஷ்! அதுதான் கூடாது'' என்றான் அவள் இதழ்கள் மீது கையை வைத்து தடுத்துக் கொண்டே. ''இந்த நிபந்தனையைத்தான் எல்லாவற்றுக்கும் முதலில் சொன்னேன், நீ வருத்தப்படக் கூடாது என்று...''

அவன் சொல்லிக் கொண்டிருந்த போதே அவள் துக்கம் கட்டு மீறிப் போய் விட்டது. ''வருத்தப்படாமல்

எப்படி இருக்க முடியும்? குறைந்த பட்சம் பால் டம்ளரைக் கூட உள்ளே எடுத்துக் கொண்டு வர முடியாத கையாலாகாதவள்'' என்று ஹோவென்று அழுதுவிட்டாள். ஆனால் படித்தவள், உலகம் அறிந்தவள் என்பதால் பெண்மைக்கே உரிய கோழைத்தனத்திலிருந்து உடனே விடுபட்டு ''ஐ யாம் சாரி'' என்றாள்.

''இதோ பார் கல்யாணி! எல்லாம் நாம் நினைத்துக் கொள்வதில்தான் இருக்கிறது. இல்லாததை நினைத்து வருத்தப்படுவதை விட இருக்கிறதை பயன்படுத்திக் கொள்வது எப்படி என்று யோசிப்பது நல்லது இல்லையா?''

''எதைப் பற்றி யோசிக்க முடியும்? என்னால் என்ன செய்ய முடியும்? உங்கள் மீது அளவு கடந்த அன்பு ஏற்பட்ட பொழுது கூட உங்களை அருகில் இழுத்துக் கொள்ள முடியாது. சின்ன விருப்பம் ஏற்பட்டாலும் வாயைத் திறந்து ''அருகில் வாங்க'' என்று உங்களைக் கூப்பிடணும் கடவுளே! இந்த நரகம் எந்தப் பெண்ணுக்குமே வரக் கூடாது.''

அதைக் கேட்டதும் அவன் நெகிழ்ந்து போய் விட்டான். ஆனால் அதை வெளியில் காட்டிக் கொள்ளாமல் ''கல்யாணி!'' என்றான் சிரித்துக் கொண்டே. ''வாய்விட்டு தான் கூப்பிடணும் என்று இல்லை. கண்களே கூட போதும். நாமிருவரும் ஒரு சங்கேத மொழியை ஏற்பாடு செய்து கொள்வோம்.''

''சங்கேத மொழியா?''

''ஆமாம். சீக்ரெட் கோட்! இடது கண்ணை மூடி வலது கண்ணைத் திறந்தால் முத்தமிட வேண்டும்

போலிருக்கு. வலது கண்ணை மூடி இடது கண்ணைத் திறந்தால் முத்தம் வாங்கிக் கொள்ளணும் போல் இருக்கு. ஒரு கண்ணை மட்டும் சிமிட்டினால் உன் பக்கத்தில் படுத்துக் கொள்ள வேண்டும் போல் இருக்கு. படுத்துக் கொண்ட பிறகு நாக்கை வெளியே நீட்டி அசைத்தால்...''

''ஷட்டப்!'' என்றாள். அவள் முகம் வெட்கத்தால் சிவந்து விட்டது. வருத்தம் தொலைவுக்கு ஓடிப் போய் விட்டது. அவன் அவளிடம் நெருங்கி வந்தான்.

ஐந்து நிமிடங்களுக்குப் பிறகு அவள் யோசனை யிலிருந்து மீண்டு கேட்டாள். ''ஆமாம். இவ்வளவு நல்ல யோசனைகளை வைத்திருக்கும் நீங்கள் பிசினெஸ் துறைக்கு ஏன் வரவில்லை? வந்திருந்தால் லட்சக் கணக்கில்... கோடிக்கணக்கில்...''

''ஷட்டப்!'' என்றான்.

அரைமணிக்குப் பிறகு அவள் எல்லாவற்றையும் மறந்து போய் நிம்மதியாக தூங்கத் தொடங்கிய பிறகு அவன் எழுந்து ஜன்னல் அருகில் வந்து நின்று வெளியே பார்த்தான்.

கீழே தோட்டத்திலிருந்து தென்றல் காற்று இரக்கத்தோடு விசாரித்து விட்டுப் போயிற்று.

''எத்தனை ஊகித்துக் கொண்டேன் தெரியுமா, இந்த இரவை பற்றி.'' அவள் சொன்னது நினைவுக்கு வந்தது. ''வியாபாரத்தில் எதிராளியுடன் போட்டி போடுவது போல படுக்கையிலும் வாழ்க்கைத் துணையோடு போராட வேண்டும் என்று நினைத்திருந்தேன்.''

'நானும் கற்பனை பண்ணியிருந்தேன். உன் விரல்கள் என் முதுகில் அபூர்வமாக பிணைந்து சுந்தர சங்கமமாகும்

என்றும், உன் இதழ்கள் என் மார்பில் அபூர்வமான ஓவியத்தை வரையும் என்றும்... உன் இதயத் துடிப்பு...'

வேண்டாம். சில கனவுகள் உயிரோட்டம் பெறாமல் இருந்தாலே நன்றாக இருக்கும்.

★

''இட் மார்னிங் அம்மா! சௌக்கியமா?'' பிரதாப் வந்து நாற்காலியில் உட்கார்ந்து கொண்டே கேட்டார்.

ஸ்ரீகல்யாணி முறுவலித்து விட்டு பேசாமல் இருந்தாள். அவள் முகம் ஒளியுடன் மலர்ந்திருப்பதை பிரதாப் கவனித்தார்.

கொஞ்ச நேரம் பொதுவாக பேசிய பிறகு பிரதாப் கேட்டார். ''டாக்டர் என்ன சொல்கிறார்?''

''ஃபுட் பாயிஸனிங்கின் தாக்கம் முதலில் ரொம்பவும் அதிகமாக இருக்குமாம். பிறகு அதன் பிரபாவம் கொஞ்சம் குறையும் என்றார். கொஞ்சம் என்றால் ரொம்பவும் கொஞ்சமாக என்று அர்த்தமாம். குறைந்த பட்சம் கைகளை அசைக்க முடியும் என்றார். அதற்கு அப்புறம் ஷாக் ட்ரீட்மெண்ட் கொடுத்தால் ரொம்ப நாள் கழித்து அதாவது ஐந்து வருடங்களோ, பத்து வருடங்களோ - கழிந்த பிறகு உடம்பு முழுவதும் குணமாகி விடும் என்றார்.'' சிரித்த முகத்துடன் சொன்னாள்.

பிரதாப் வியப்போடும், கொஞ்சம் பொறாமை யோடும் பார்த்தார் அவளை. அவளிடம் கொஞ்சம் கூட கவலை தென்படவில்லை. நேற்றிரவு முதலிரவு நடந்தது என்றதுமே ஏளனமாக சிரித்துக் கொண்டார். காலையில் அவள் அன்று மலர்ந்த மலராக இவ்வளவு மலர்ச்சியுடன் தென்படுவாள் என்று அவர் எதிர்பார்க்கவில்லை.

''வியாபாரத்தை என்ன செய்வதாக இருக்கிறாய்? சத்யன் பார்த்துக் கொள்வதாக சொல்லிவிட்டானா?''

''சத்யன் எதுக்கு? என் கணவர்தான் இருக்கிறாரே, சின்னப் பையனை பள்ளிக்கு அனுப்பி வைப்பது போல் இன்றைக்குத் தான் அவரை ஆபீசுக்கு அனுப்பி வைத்தேன்.''

''கோடிக் கணக்கில் நடக்கிற வியாபாரத்தை பார்த்துக் கொள்வதற்கு கார்த்திகேயனை அனுப்பியிருக்கிறாயா? பாவம்! அந்த ஓவியனால் ஃபைல்களை எப்படி பார்க்க முடியும்? ஏதோ படத்தை போட்டுக் கொண்டு உட்கார்ந் திருக்க முடியுமே தவிர...''

அங்கே ஆபீஸில் கார்த்திகேயன் என்ன செய்து கொண்டிருந்தான் என்று தெரிந்தால் இங்கே இவ்வளவு நிம்மதியாக பேசிக் கொண்டு இருந்திருக்க மாட்டார்.

ஸ்ரீகல்யாணி சிரித்துக் கொண்டே ''கொஞ்சம் கஷ்டப் படட்டும். அவருக்கு பணவிஷயத்தில் கொஞ்சம் கூட ஆர்வம் இல்லை. இந்த விதத்திலேயாவது நம் உலகத்திற்கு அடியெடுத்து வைக்கட்டுமே'' என்றாள்.

பிரதாப் தயங்கிக் கொண்டே ''அவனுக்கு பணத்தின் மீது ஆர்வம் இல்லையா? அதாவது கப்பல் மூழ்கிப் போனதைப் பற்றி சொன்னதெல்லாம் வெறும் நாடகம் தான் என்று நீ சொல்வதற்கு முன்னாடியே அவன் உன்னைப் பண்ணிக் கொள்கிறேன் என்றானா?'' என்று கேட்டார்.

''ஆமாம்'' என்றாள் அவள் நெற்றியை சுளித்துக் கொண்டே.

அவர் கொஞ்சம் பொறுத்து ''இதை எல்லாம் உன்னிடம் சொல்லலாமோ கூடாதோ தெரியவில்லை. நான்

கேவலம் உங்கள் ஊழியர்கள்மீது ஒரு கண் வைத்திருக்கும் டிடெக்டிவ் மட்டும்தான். நீ கார்த்திகேயனை கல்யாணம் செய்து கொள்ளப் போவதாக தெரிந்த பிறகு கொஞ்சம் துப்புத் துலக்கினேன்'' என்றார்.

''என்ன துப்புத் துலக்கினீங்க?''

''கப்பல் மூழ்கிப் போகவில்லை என்ற செய்தி அவனுக்கு அன்றிரவே தெரியும்.''

''எப்படி தெரியும்?''

''தன் அறைக்குப் பக்கத்திலுள்ள பப்ளிக் டெலிபோன் பூத்திலிருந்து அவன் டிரங்கால் செய்திருக்கிறான்.''

''யாருக்கு?''

அவர் மெதுவாக சொன்னார். ''அவன் போன் செய்தது பம்பாய் ஷிப்பிங் கம்பெனிக்கு.''

ஸ்ரீகல்யாணி ரொம்ப நேரம் ஒன்றுமே பேசவில்லை. பிறகு நிமிர்ந்து பிரதாப்பைப் பார்த்து ''அவர் பம்பாய்க்கு ஏன் பேசினார் என்று எனக்குப் புரியவில்லை. உங்களால் ஏதாவது ஊகிக்க முடிகிறதா?'' என்று கேட்டாள்.

''இதோ பாரும்மா. நான் டிடெக்டிவ் டிபார்ட் மெண்டை சேர்ந்த ஆள். உண்மையைத் தெரிந்து கொள்ளத் தான் என்னால் முடியுமே தவிர அதற்குப் பின்னால் இருக்கிற காரணங்களையும், உத்தேசங்களையும் என்னால் ஊகித்துக் கொள்ள முடியாது'' என்றார்.

''ஆனால் குற்றவாளி ஒரு காரியத்தைச் செய்தால், அவன் எந்த உத்தேசத்துடன் அந்தக் காரியத்தைச் செய்திருப் பான் என்று ஒரு டிடெக்டிவ் ஆக நீங்கள் ஊகித்திருக்க முடியும் இல்லையா?''

அதைக் கேட்டு கலவரமடைந்த பிரதாப் ''அது... வந்து... அவன் குற்றவாளி என்பது என் உத்தேசம் இல்லை'' என்றார்.

''நீங்களாகவே போய் கார்த்திகேயன் எங்கே தங்கியிருக்கிறார்? அந்தத் தெருக் கோடியில் டெலிபோன் பூத் இருக்கிறதா? அதில் ரிஜிஸ்தர் இருக்கிறதா? அந்த ரிஜிஸ்தரில் கார்த்திகேயன் பம்பாய்க்குப் போன் செய்தாற் போல் பதிவு ஆகியிருக்கிறதா? போன்ற விஷயங்களை விசாரணை செய்திருக்கீங்க என்றால் உங்களுக்கு ஏதோ சந்தேகம் வந்திருக்கிறது என்று தானே அர்த்தம்? என்ன சந்தேகம் அது? எப்பொழுது ஏற்பட்டது?''

தான் நன்றாக புதைமணலில் மாட்டிக் கொண்டு விட்டோம் என்று பிரதாப்பிற்கு புரிந்து விட்டது. இதிலிருந்து ஜாக்கிரதையாக மீண்டு விட வேண்டும் என்று எண்ணிக் கொண்டார்.

''இதோ பாரும்மா! நீ கோடீஸ்வரி. உன் மீது ஆயிரம் பேருக்கு கண் இருக்கலாம். உனக்கு நெருக்கமாக வேண்டும் என்று எவ்வளவோ முயற்சி செய்யலாம். ஒரு செக்யூரிடீ ஏஜெண்டாக அவர்கள் மீது ஒரு கண் வைத்திருப்பது என் கடமை இல்லையா?''

''நான் கேட்டதற்கு பதில் இதில் இல்லை.''

''உடம்பு சுவாதீனத்தில் இல்லாத பெண்ணைக் கல்யாணம் செய்துகொள்ள முன் வந்த பொழுதே சந்தேகம் வந்தது. சொத்து முழுவதும் போய் ஓட்டாண்டியாகி விட்டதாக நீ நாடகம் ஆடினாய். ஆனால் அது நாடகம் என்று அவனுக்குத் தெரியாது இல்லையா? ஒரு பிச்சைக் காரியை, அதிலும் கட்டிலோடு விழுந்து கிடக்கும் ஒருத்தியை கல்யாணம் செய்து கொள்கிறேன் என்று

எவனாவது முன் வருவானா? எதற்காக ஒப்புக் கொண்டான் என்ற சந்தேகம் வந்ததால் என்குயரி செய்தேன்.''

''கார்த்திகேயன் என் சொத்துக்காகத்தான் இதை எல்லாம் செய்திருப்பதாக சொல்றீங்களா? நான் ஒட்டாண்டி யாகவில்லை, கப்பல் மூழ்கவில்லை என்று தெரிந்து கொண்டு நான் செயலிழந்து விட்டதுமே இந்தப் பிரபோசலை வெளிப்படுத்தியிருக்கிறார் என்று சொல்றீங்களா?''

பிரதாப் பதில் பேசவில்லை.

''அந்த விஷ உணவைப் பற்றி ஏதாவது தெரிந்ததா?''

''மீதி இறால்கள் எல்லாம் நன்றாகவே இருந்தன. போலீசார் அந்த ஹோட்டல்காரர்களையும், சர்வர்களையும் விசாரணை செய்து வருகிறார்கள். அந்த ஒரு ப்ளேட்டில் மட்டுமே யாரோ விஷம் கலந்திருப்பதாக சந்தேகம்.''

''ஹோட்டலில் மற்றதெல்லாம் நன்றாக இருக்கும் போது எங்கள் ப்ளேட்டில் மட்டும்தான் விஷம் இருந்ததாமா? ரசாயன பரிசோதனையில் ஏதாவது தெரிந்ததா?'' அவள் கேட்டாள்.

''என்ன விஷம் என்று தெரியவில்லை. ஆனால் இயற்கையான - அதாவது தாவரங்களிடமிருந்தோ அல்லது ஜந்துக்களிடமிருந்தோ வந்து கலந்திருக்கும் விஷம் என்கிறார்கள்.''

''குறிப்பாய் ஒரு இறால் மட்டுமே கடலுக்கு அடியில் ஏதாவது விஷ தாவரத்தைத் தின்று இருக்கலாம். தவறுதலாக அதையே நானும் சாப்பிட்டிருக்கலாம்.''

பிரதாப் மறுப்பது போல் தலையை அசைத்து விட்டு ''ப்ளேட்டில் எல்லா இறால்களும் விஷமயமாகத் தான்

இருக்கு. கடலில் விஷத்தாவரத்தைத் தின்ற இறால்கள் அத்தனையும் ஒரே ப்ளேட்டில் வருவது அசம்பவம்'' என்றார்.

அவள் யோசனையில் ஆழ்ந்தபடி அப்படியே உட்கார்ந்திருந்தாள். பிரதாப் மேலும் சொன்னார். ''முதலில் கார்த்திகேயன். அதைச் சாப்பிட்டிருந்தால் அவன் பாதிக்கப் பட்டிருப்பான்'' - ''சொல்லி விட்டு அவளுடைய ரியாக்ஷனுக்காக காத்திருந்தார்.

''ரொம்ப நேரம் யாருமே சாப்பிடவில்லை. பேசிக் கொண்டே உட்கார்ந்திருந்தோம்'' என்றாள்.

''அப்படி என்றால்-'' ''தயங்கிக் கொண்டே சொன்னார் பிரதாப். ''நீ சாப்பிடும் வரைக்கும் அவன் காத்துக் கொண்டிருந்தானா?''

திடீரென்று பாம்பு தீண்டியது போல் அவள் சரேலென்று நிமிர்ந்தாள்.

''மன்னித்து விடும்மா. நான் அப்படி பேசியிருக்கக் கூடாது.''

அவள் ஒரு முடிவுக்கு வந்தவளைப் போல் ''அந்த டெலிபோன் பூத் சம்பந்தப்பட்ட ரிஜிஸ்தர் காப்பி உங்களிடம் இருக்கிறதா?'' என்றாள்.

அவர் ஃபைலிலிருந்து ஜெராக்ஸ் காபியை எடுத்துத் தந்தார்.

''பெற்றுக் கொள்வதற்கு எனக்குக் கைகள் இல்லை. அந்த டிராயரில் வைய்யுங்கள். பார்த்ததுமே தென்பட்டு விடாமல் நாலைந்து பேப்பர்களுக்கு அடியில் வைய்யுங்கள்.''

12

ஜெனரல் மேனேஜர், ஃபைனான்ஸ் மேனேஜர், மார்க்கெட்டிங் மேனேஜர், காஸ்ட் அகௌண்டெண்ட், சேல்ஸ் எக்ஸிக்யூடிவ், செகரெட்ரி, மற்ற வேறு அதிகாரிகள் எல்லோருடனும் சுமார் மூன்று மணி நேரம் பேசினான் கார்த்திகேயன். ஒவ்வொரு விஷயத்தையும் நிதானமாக கேட்டுத் தெரிந்து கொண்டான். அவன் கேள்வி கேட்ட விதமும், பதில் வரவழைத்துக் கொண்ட விதமும் எல்லோருக்கும் பிடித்து விட்டது.

அதற்கு முன்னால் கல்யாணி யாரோ ஏழை ஓவியனை மணந்து கொள்ளப் போகிறாள் என்று தெரிந்ததுமே பல விதமான வதந்திகள் பரவின. அதுவும் ஸ்ரீகல்யாணியின் உடல் பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டு விட்டதாக தெரிந்ததுமே இனி கம்பெனி எப்படி நடக்கப் போகிறதோ என்று பயந்தார்கள். ஆனால் கார்த்திகேயன் காட்டிய அக்கறை அவர்களுக்கு பிடித்து விட்டது.

கார்த்திகேயன் மட்டும் ரொம்பவும் களைத்துப் போய்விட்டான். அவன் ஒரு கலைஞன். கலைஞனால் வியாபாரத்தில் ஒன்றிப் போக முடியாது. ஒரு காரியம் செய்ய முடியாமல் போவது வேறு, செய்யப் பிடிக்காமல் போவது வேறு. ஆபீஸ் வேலைகளை எல்லாம் குறை இல்லாமல் செய்து முடித்து விட்டு நாற்காலியின் பின்னால் சாய்ந்து கொண்டான்.

அப்பொழுது பார்த்து விசிட்டர்ஸ் கார்ட் ஒன்று வந்தது. அதைப் பார்த்ததுமே அவன் சட்டென்று எழுந்து வெளியே வந்தான்.

ரிசெப்ஷனிஸ்டிற்குப் பக்கத்திலேயே உட்கார்ந்து ஊர் கதை பேசிக் கொண்டிருந்தான் உஸ்மான். கார்த்திகேயன் அவ்வாறு திடீரென்று ஹாலுக்குள் வந்ததைப் பார்த்து விட்டு ஊழியர்கள் எல்லோரும் மிரண்டு போய் எழுந்து நின்றார்கள். அவன் உஸ்மானை உள்ளே அழைத்துக் கொண்டு போனான்.

சேம்பருக்குள் போய் உட்கார்ந்து கொண்டதும் கார்த்திகேயன் கேட்டான். ''என்ன உஸ்மான்? என்ன திடீர் விஜயம்? ரொமப் சந்தோஷமாக தென்படுகிறாயே?''

உஸ்மான் அவன் கேட்டதற்கு பதில் சொல்லாமல் சுற்றிலும் பார்வையிட்டு ''நீ என்ன வேண்டுமானாலும் சொல்லு பாய்! பணம் தருவது போல் வேறு எதுவும் சந்தோஷத்தை தராது'' என்றான்.

கார்த்திகேயன் முறுவலுடன் ''அதைச் சொல்வதற் காகத்தான் இவ்வளவு தூரம் வந்தாயா?'' என்றான்.

''இல்லை. இரண்டு நாட்களுக்கு முன்னால் சின்ன வேடிக்கையான சம்பவம் ஒன்று நடந்தது. நம் தெருவில் இருக்கிற என் டெலிபோன் பூத்துக்கு யாரோ வந்தாங்க. போலீசார் என்று சொல்லிக் கொண்டு ரிஜிஸ்டர்களை எடுத்துக் கொண்டு போய் ஒரு மணி நேரம் கழித்து திருப்பிக் கொண்டு வந்து கொடுத்தாங்களாம். நான் அந்தச் சமயத்தில் கடையில் இல்லை.''

''நான் ஏதாவது கண்டுபிடிக்கட்டுமா, யார் எதற்காக எடுத்துக் கொண்டு போனாங்க என்று?''

''இவ்வளவு சின்ன விஷயத்திற்குப் போய் உன் நேரத்தை வீணாக்குவேனா? நான் வந்தது எதற்காக என்றால்'' என்று நிறுத்தி விட்டுச் சொன்னான்.

''போலீஸ்காரங்க என்று சொல்லிக் கொண்டு அவர்கள் வந்து விட்டு போன பிறகு எனக்கு ஒன்றுமே புரியவில்லை. அந்த ரிஜிஸ்தரை எல்லாம் பார்த்தேன். ஆச்சரியப் பட்டேன். சில நாட்களுக்கு முன்னால் நீ பம்பாய்க்கு போன் செய்திருப்பது போல் இருந்தது அதில். உன் பெயரை நான் எப்பொழுதுமே ரிஜிஸ்தரில் எழுத மாட்டேன். அதோடு நீ போன் செய்ததாக சொல்லப்படும் அன்று இரவு நான் டெலிபோன் பூத்திலேயேதான் இருந்தேன். எல்லாவற்றையும் விட முக்கியமாக அது நான் எழுதியது இல்லை. கையெழுத்து அப்படியே இருக்கிறதே ஒழிய என் பேனா எப்படி எழுதும் என்று எனக்கு நன்றாக தெரியும்.''

கார்த்திகேயன் கலக்கமடைந்து விட்டான் என்பதை அவன் முகமே பறைசாற்றிக் கொண்டிருந்தது. ''அந்த பாம்பே நம்பர் என்ன?'' என்று கேட்டான்.

''அதைத் தெரிந்து கொள்ளாமல் இருப்பேனா பாய்.'' ஜேபியிலிருந்து காகிதத்தை எடுத்துத் தந்தான். ''அது ட்ரான்ஸ் வேர்ல்ட் ஷிப்பிங் கம்பெனி.''

கார்த்திகேயன் பாரமாக மூச்சு விட்டுக் கொண்டான். ''தாங்க்ஸ் உஸ்மான்! பெரிய உதவியை செய்திருக்கிறாய்'' என்றான். மேலும் கொஞ்ச நேரம் பேசிவிட்டு உஸ்மான் போய்விட்டான். கார்த்திகேயன் சிக்மா ஏஜென்ஸிக்கு போன் செய்தான். மறுமுனையில் பீட்டர் போனை எடுத்ததுமே, ''நான் தான் கார்த்திகேயன். நீங்க ஒருமுறை உடனே வர முடியுமா?'' என்று கேட்டான்.

''ஷ்யூர் சார்'' என்றான் பீட்டர்.

அரைமணி கழித்து பீட்டர் வந்து சேர்ந்தான். வந்ததும் வராததுமாய் ''எனக்கு ரொம்ப சந்தோஷமாக இருக்கு.

எனக்கு கீழே வேலை பார்த்த ஒருவன் இந்த விதமாக கோடீஸ்வரன் ஆனது'' என்றான்.

'மனப்பூர்வமாக சந்தோஷப்பட்ட மிகச் சொற்பமான வர்களில் நீங்கள் ஒருத்தர் என்று சொல்லுங்கள்' என்று நினைத்துக் கொண்டான்.

கொஞ்ச நேரம் பொதுவாக உரையாடிய பிறகு ''நீங்கள் எனக்கு ஒரு உதவி செய்ய வேண்டும்'' என்று உஸ்மான் சொன்ன விவரங்களைச் சொன்னான். எல்லா வற்றையும் சொல்லிவிட்டு கடைசியாக ''நீங்கள் இதையெல்லாம் சிக்மா ஏஜென்ஸியின் சார்பில் இல்லாமல் என்னுடைய நண்பன் என்ற முறையில் செய்யணும்.'' குரலை தாழ்த்திக் கொண்டு கடைசி வார்த்தையை அழுத்தி உச்சரித்தான்.

''கண்டிப்பாக செய்கிறேன்.'' பீட்டர் எழுந்து கொண்டான். ஏனோ தெரியவில்லை. அவன் கண்களில் தன்னையறியாமல் நீர் தளும்பியது. ''ஐந்து ரூபாயை ஒட்டகக்காரனிடம் தந்து விட்டு உன்னைப் பாலைவனத் திற்கு நடுவில் தனியாக அனுப்பி வைத்த பொழுது கர்வமாக சிரித்துக் கொண்டேன். லட்ச ரூபாய் இருந்த சூட்கேஸுடன் நீ திரும்பி வந்து என் வேலையை காப்பாற்றிய போது வெட்கத்தால் தலை குனிந்தேன். இப்பொழுதுதான் என் நன்றியைத் தீர்த்துக் கொள்வதற் கான வாய்ப்பு எனக்கு கிடைத்திருக்கிறது. என் துப்பறியும் சாமர்த்தியம் முழுவதையும் பயன்படுத்தி நீ சொன்ன விஷயங்களை எல்லாம் கண்டுபிடித்து விடுகிறேன்'' என்று சொல்லி விட்டு அங்கிருந்து போய் விட்டான்.

மதியம் சாப்பிடுவதற்காக வீட்டுக்குப் போனான் கார்த்திகேயன்.

''எப்படி இருக்கு உங்கள் வேலை. அதான்... புதிய பொறுப்பு?'' கேட்டாள் கல்யாணி.

''ரொம்ப தொல்லையாக இருக்கு.'' முறுவலுடன் சொன்னான் கார்த்திகேயன். ''ஒருத்தரை விட்டு இன்னொருத்தரை கண்காணிக்கச் சொல்வதும், அப்பாவி மக்களின் ஏமாளித்தனத்தை பயன்படுத்திக் கொண்டு லாபங்களை சம்பாதிப்பதும்.''

''ஒரே நாளில் இப்படி சலித்துக் கொண்டால் எப்படி?''

''செய்ய முடியாத கையாலாகாத்தனம் இல்லை. செய்யப் பிடிக்காத விரக்திதான்.''

அவள் கொஞ்சம் தாமதித்து ''வியாபாரம் என்றதும் நினைவுக்கு வருகிறது. உங்களுக்கு பம்பாயில் தெரிந்தவர்கள் யாராவது இருக்காங்களா?'' என்று கேட்டாள்.

''யாரும் இல்லையே?''

''ஏதாவது ஷிப்பிங் கம்பெனி?''

''தெரியாது. ஏன் கேட்கிறாய்?''

''ஒன்றுமில்லை. அந்த வியாபாரத்தில் நுழைந்து பார்க்கலாமே என்று தான்.'' பேச்சை மாற்றினாள்.

சாப்பிட்டு முடிந்ததும் அவன் திரும்பி ஆபீசுக்கு வந்த போது பிரதாப் அவனுக்காக காத்திருந்தார்.

''என்னை வரச் சொல்லி தகவல் அனுப்பி யிருந்தீங்களாமே?'' என்றார்.

''ஆமாம். ஒரு சின்ன இன்ஃபர்மேஷன் வேண்டி யிருப்பதால்.'' ஃபைலில் கையொப்பமிட்டுக் கொண்டே

சொன்னான் கார்த்திகேயன். ''சிக்மா ஏஜென்ஸியை மூடி விடப் போவதாக செய்தி வந்தது. அது எவ்வளவு தூரம் உண்மை?''

''அப்படி எதுவும் இல்லையே. பிசினெஸ் இல்லை என்பது உண்மைதான். ஆனால் உங்களைச் சேர்ந்த நிறுவனங்கள் இருக்கே. அவை போதும்.''

''எங்களுடையதைத் தவிர வேறு எதுவும் இல்லையா?''

''ஏறக்குறைய இல்லை என்றுதான் சொல்லணும்.''

கார்த்திகேயன் பேனாவை உதறினான். பிரதாப்பிடம் ''உங்கள் பேனாவைக் கொஞ்சம் தர்றீங்களா?'' என்று பேனாவை வாங்கிக் கொண்டு மீதி ஃபைல்களில் கையெழுத்துப் போட்டு முடித்தான்.

''உங்கள் பேனா ரொம்ப பருமனாக எழுதுகிறதே?''

''ஆமாம்.''

''எப்பொழுதும் பச்சை இங்க்தான் பயன்படுத்து வீங்க போலிருக்கு.''

''ஆமாம்'' என்றார் பிரதாப்.

அதற்குள் போன் ஒலித்தது. மறுமுனையில் பீட்டர். ஏறக்குறைய ஐந்து நிமிடங்கள் பேசினான். முகத்தில் எந்த உணர்ச்சியையும் காட்டிக் கொள்ளாமல் கார்த்திகேயன் கேட்டுக் கொண்டான். போனை வைத்து விட்டு பிரதாப்பிடம் ''ஊம், சொல்லுங்கள். உங்கள் பெரிய மகன் அமெரிக்காவுக்கு போய் விட்டானா?'' என்று கேட்டான்.

''போய் விட்டான்.''

''முந்தா நாள் திருமண அழைப்பிதழைப் பார்த்தேன். மகளுடைய திருமணம் கூட முடிந்து விட்டது என்று நினைக்கிறேன்.''

இவ்வளவு குசல விசாரிப்புகள் எதற்காக கேட்கிறான் என்று புரியாமல் ஆகிவிட்டது.

''அவளுக்குச் சந்தேகம் வரவில்லை என்று நினைக்கிறேன்.''

''என்ன சந்தேகம்?''

கார்த்திகேயன் நாற்காலியில் பின்னால் சாய்ந்து கொண்டே நிதானமான குரலில் சொன்னான்:

''நீங்கள் ஏற்கெனவே கல்யாணியிடம் ஒரு லட்சம் ரூபாய் கேட்டிருந்தீங்க. நினைவு இருக்கிறதா? பெரிய மகனை அமெரிக்காவுக்கு அனுப்பணும் என்றும், மகளுக்கு திருமணம் செய்யணும் என்றும் கேட்டீங்க. கடனாக வேண்டுமா, முன்பணமாக வேண்டுமா என்று அவள் கேட்டாள். இரண்டிற்கும் வித்தியாசம் என்னவென்று நீங்கள் கேட்டதற்கு 'வட்டி' என்று அவள் கொன்னாள். நினைவு இருக்கிறதா?''

''இதை எல்லாம் நீங்கள் என்னிடம் ஏன் சொல்றீங்க?''

கார்த்திகேயன் நாற்காலியை விட்டு எழுந்து மேஜையைச் சுற்றிக் கொண்டு பிரதாப் உட்கார்ந்திருந்த நாற்காலிக்குப் பின்னால் வந்து நின்றான். அவர் தோள் பக்கம் குனிந்து கேட்டான். ''அந்த ஒரு லட்சம் ரூபாயை வாங்கிக் கொள்ளாமல் நீங்கள் உங்கள் மகனை அமெரிக்காவுக்கு எப்படி அனுப்பி வைத்தீங்க? மகளுக்கு எப்படி கல்யாணம் செய்தீங்க?''

பிரதாப் சரேலென்று நாற்காலியை விட்டு எழுந்து கொண்டார். ''இதையெல்லாம் உங்களிடம் சொல்ல வேண்டிய அவசியம் எனக்கு இல்லை.''

''உங்களுக்கு எங்கள் நிறுவனத்தைத் தவிர பணம் தரக் கூடிய கம்பெனி எதுவும் இல்லை. உங்களுக்கு சொத்துக்கள் கூட எதுவுமே இல்லை. பின்னே அந்த லட்சம் ரூபாய் உங்களுக்கு எங்கிருந்து வந்தது? உங்கள் இன்கம்டாக்ஸ் ரிடர்னில் கூட அந்தப் பணத்தைப் பற்றிய பேச்சே இல்லை.''

பிரதாப் முகம் சிவந்து விட்டது. ''என் மீதே துப்பறியத் தொடங்கி விட்டீர்களா?''

கார்த்திகேயன் அதைப் பொருட்படுத்தவில்லை. ''சத்யனைப் பற்றி துப்பறியச் சொல்லி ஸ்ரீகல்யாணி உங்களிடம் கேட்டுக் கொண்டிருந்தாள். அதை நீங்கள் இன்னும் முடிக்கவில்லை.''

''இன்னும் பரிசோதனை நடந்து கொண்டே தான் இருக்கிறது.''

''அதற்குள் கல்யாணிக்கு நிகழவேண்டிய தீங்கு நடந்து முடிந்து விட்டது.''

''அதற்கு காரணமானவர்களை விரைவில் பிடித்துவிடுவோம்.''

''தேவையில்லை. அதை என்னால் தெரிந்து கொண்டு விடமுடியும். உங்களைக் கண்டு பிடிக்கச் சொன்னது சத்யனுக்குப் பின்னால் இருக்கிறவங்க யார் என்றுதான். மிஸ்டர் பிரதாப்! ஸ்ரீ கல்யாணி ஏஜென்ஸியின் பவர் ஆஃப் அடர்னி ஹோல்டராக உங்களிடமிருந்து விளக்கம்

கேட்கிறேன். உங்களுக்கு அந்தப் பணம் எங்கிருந்து வந்தது?''

''அது என் பர்சனல் விஷயம்.''

''அப்படி என்றால் சரி. இந்த நிமிஷத்திலிருந்து சிக்மா டிடெக்டிவ் ஏஜென்ஸி சர்வீஸ்களை நான் ரத்து செய்கிறேன். கணக்காளரிடம் சென்று உங்களுக்கு வர வேண்டிய செக்கை வாங்கிக் கொண்டு போய் விடுங்கள்.''

பிரதாப் உள்ளங்கையை ஓங்கி மேஜையில் குத்தினார். கோபத்தால் அவர் கண்கள் சிவந்தன. ''அதிகாரத்திற்கு வந்த ஒரே நாளில் என்னையே நீக்கக் கூடிய நிலைக்கு வந்து விட்டாயா? இதை எல்லாம் உன் மனைவி ஒப்புக் கொள்வாள் என்று நினைக்கிறாயா?''

''ஒப்புக் கொள்வாள்.''

''எந்தத் தைரியத்தில் சொல்கிறாய்?''

கார்த்திகேயன் மேஜையிலிருந்து ஒரு காகிதத்தை எடுத்து அவரிடம் காண்பித்து விட்டு ''இந்தத் தைரியத்தில் தான் சொல்கிறேன்'' என்றான். ''ஐந்து நிமிடங்களுக்கு முன்னால் என் பேனா சரியாக எழுதவில்லை என்று உங்களிடமிருந்து பேனாவை வாங்கிக் கொண்டேன். நினைவு இருக்கா? அந்தப் பேனாவால் எழுதிய எழுத்துக்கள் இவை'' என்று டிராயரிலிருந்து இன்னொரு காகிதத்தை வெளியே எடுத்தான். ''இது உஸ்மான் என்ற என் நண்பனின் டெலிபோன் பூத் ரிஜிஸ்டர் காகிதம். இதில் என் பெயரை எழுதியிருக்கும் பேனாவும், உங்க பேனாவும் ஒன்றேதான் என்பதை மறுக்க முடியுமா?''

பிரதாப் முகம் ரத்தமில்லாததுபோல் சுண்டிவிட்டது.

''சொல்லுங்கள். இதை எழுதியது நீங்கள் இல்லை என்று சொல்றீங்களா?'' அதட்டினான்.

பிரதாப் சுதாரித்துக் கொண்டு வீம்பு பிடிப்பது போல் ''இல்லை. எனக்கு பம்பாய் போன் நம்பர் கூட தெரியாது'' என்றார்.

''தெரியாதா? தெரியாமல் தான் கப்பல் மூழ்கிப் போய்விட்டது என்ற செய்தி வந்த அன்றைக்கு இரவு உங்கள் ஆபீசிலிருந்து பம்பாய் கப்பல் கம்பெனிக்கு போன் செய்தீங்களா?'' துப்பாக்கிக் குண்டு போல் வெளி வந்தன வார்த்தைகள்.

''நான் பண்ணவில்லை.''

''பண்ணவில்லையா? இதோ உங்கள் ஆபீஸ் டிரங்கால் ரிஜிஸ்டர். என்னிடம் எப்படி வந்தது என்று ஆச்சரியப்பட வேண்டியதில்லை. பண்ணினீங்களா இல்லையா? அதைச் சொல்லுங்கள்'' என்று ரிஜிஸ்டரை அவருக்கு முன்னால் தள்ளினான்.

அணுகுண்டு வெடித்த பிறகு ஏற்படும் நிசப்தம் அந்த அறையில் வந்து சூழ்ந்து கொண்டது. நாலாப் பக்கமும் சாத்தப்பட்ட அறையில் மாட்டிக் கொண்ட பூனையைப் போல் பிரதாப் உணர்ந்தார்.

''போயிட்டு வாங்க மிஸ்டர் பிரதாப்! You are Sacked.''

பிரதாப் மெதுவாக நாற்காலியை விட்டு எழுந்து கொண்டார். ''போகிறேன்.'' கதவு வரைக்கும் போய் திரும்பிப் பார்த்து விட்டு சொன்னார். ''இந்த நிமிஷத்தி லிருந்து நான் உன் கண்ணில் படவே மாட்டேன். ஆனால்

உனக்கு ஒரு முடிவு கட்டும் வரையில் ஓயமாட்டேன். என் இருபத்தைந்து வருட போலீஸ் அனுபவத்தால் நிட்டங்களை தீட்டி உன் தந்தையைப் போலவே உன்னை பிச்சைக்காரனாக்கிக் காட்டுகிறேன்.'' அவரைத் தொடர்ந்து கதவு தானாக மூடிக் கொண்டது.

பிரதாப் போனபிறகு கார்த்திகேயன் ரொம்ப நேரம் அப்படியே உட்கார்ந்திருந்தான், விருப்பமில்லாத போரில் வெற்றி பெற்ற அரசனாக. இனம் புரியாத வைராக்கி நிலை.

பிறகு தேறிக் கொண்டு பீட்டருக்கு போன் செய்தான். ''ரொம்ப தாங்க்ஸ். விலை மதிப்பற்ற விவரங்களை மிகக் குறைவான நேரத்தில் தெரியப்படுத்தி உதவி செய்திருக்கீங்க.''

''அதான் சொன்னேனே கார்த்திக்! நீ எனக்கு உதவி செய்து என் வேலையைக் காப்பாற்றினாய். அத்துடன் ஒப்பிட்டால் நான் செய்த உதவி ரொம்ப சிறியது.''

''ஆனால் என் காரணமாக இப்போ உங்கள் வேலை போகப் போகிறது.''

''வாட்!'' பீட்டரின் குரல் கிறீச்சென்று ஒலித்தது. ''என் வேலை போகப் போகிறதா?'' என்றார் கம்மிய குரலில்.

''சிக்மா ஏஜென்ஸியை ஸ்ரீ கல்யாணி எண்டர் பிரைஸெஸ் நீக்கி விட்டது. அதன் விளைவாக உங்களுக்கு வேலை போய் விடும். மேலும் பிரதாப்பிற்கு இந்நேரம் உங்கள் மீது சந்தேகம் வந்திருக்கக் கூடும். எனக்கு விவரங்களை தரக் கூடிய நபர் நீங்கள் ஒருத்தர்தானே?''

மறுமுனையில் பீட்டர் பதில் பேசவில்லை. அவன் இன்னும் அதிர்ச்சியில் இருந்தான்.

''பீட்டர்!''

''சொல்லு கார்த்திக்.'' பீட்டரின் குரல் பலவீனமாக ஒலித்தது.

''ஸ்ரீகல்யாணி ஏஜென்ஸியின் செக்யூரிடீ பொறுப்பை உங்களால் எடுத்துக் கொள்ள முடியுமா?''

''வாட்!'' பீட்டரின் குரல் மறுபடியும் கிறீச்சென்று ஒலித்தது. ஆனால் இந்த முறை அதிர்ச்சியாலோ, துக்கத்தினாலோ அல்ல. ''நான்... நான் செக்யூரிடீ பொறுப்பை எடுத்துக் கொள்வதா?'' சந்தோஷத்தால் அவன் குரல் நடுங்கியது.

''நீங்க உடனே கிளம்பி இங்கே வாங்க. மற்ற விஷயங்களை நேரில் பேசிக் கொள்வோம்.''

பீட்டர் பத்து நிமிடங்களில் அங்கே வந்தான். அவன் முகத்தில் இன்னும் பிரமிப்பு தென்பட்டது.

''நான்... நான்... ஸ்ரீகல்யாணி ஏஜென்ஸியின் விஜிலென்ஸ் ஆபீசரா?'' என்றான்.

''ஆமாம். அங்கே பாலைவனத்தில் உங்களுடைய வெகுளித்தனத்தை, பரபரப்பை பார்த்தேன். இன்று செய்த வேலையில் உங்களுடைய நேர்மையை, சறுசுறுப்பை, பார்த்தேன். இவ்வளவு தகுதிகளைக் கொண்ட ஒரு ஆள் எனக்கு வேறு எங்கே கிடைப்பான்? அதோடு நாம் இந்த ஊரிலிருந்து ஜைசல்மீர் பாலைவனம் வரையில் சேர்ந்து பயணம் செய்திருக்கிறோம்.''

பீட்டரின் கண்களில் நீர் சுழன்றது. ''ஆமாம். சேர்ந்து சுற்றினோம். ஆனால் அப்போ என் மனதில் இருந்த உத்தேசம் வேறு. 'இந்தப் பையனுக்கு எப்படி டிமிக்கிக்

கொடுத்து பாலைவனத்தின் நடுவில் விட்டுவிடுவது' என்ற அரக்கத்தனமான எண்ணம் தான். அப்படிப்பட்ட என்னை நீ இன்று...'' அதற்கு மேல் அவனால் பேசமுடியவில்லை. உண்மையில் வேலை போய் விட்டால் குடும்பம் நடுத் தெருவுக்கு வந்து விடக் கூடிய பொருளாதார நிலைமை அவனுடையது.

கார்த்திகேயன் சொன்னது போல் அவன் வெகுளி என்பதோடு உலகம் தெரியாத ஆசாமியாகவும் இருந்தான். உழைப்பைத் தவிர காசு பணம் சேர்த்து வைத்துக் கொள்ளத் தெரியாது. முதல் அறிமுகத்திலேயே கார்த்திகேயன் இந்த குணங்களை புரிந்து கொண்டு விட்டான் என்றும் தெரியாது. அதனால் பிரதாப் மீது சந்தேகம் வந்த போது அவனைப் பற்றி துப்புத் துலக்குவதற்கு பீட்டரை தேர்வு செய்தான் கார்த்திகேயன். அவன் எதிர்பார்த்தது போலவே ஆறு மணி நேரத்திற்குள் அவனுக்கு வேண்டிய விவரங்களை சேகரித்து தந்து விட்டான்.

பீட்டர் வந்ததுமே ஆபீசர்கள் எல்லோரையும் அழைத்தான் கார்த்திகேயன். ''இவரை இன்றைய தினத்திலிருந்து நம் நிறுவனத்தின் விஜிலென்ஸ் ஆபீசராக நியமித்திருக்கிறேன்'' என்று அறிமுகப்படுத்தினான்.

பரஸ்பர அறிமுகங்கள் முடிந்தபிறகு டீயை குடித்து விட்டு எல்லோரும் அங்கிருந்து அகன்றார்கள். பீட்டரை கார் வரையில் கொண்டு விடுவதற்காக வெளியில் வந்த கார்த்திகேயன் கேட்டான். ''சிக்மா ஏஜென்ஸியில் வேலை பார்ப்பதற்கு முன்னால் நீங்க எங்கே வேலை பார்த்துக் கொண்டிருந்தீங்க?''

''ராணுவத்தில்.''

கார்த்திகேயன் முகத்தில் தன்னை அறியாமல் முறுவல் மலர்ந்தது. ''பிரதாப் போகும் போது என்னை ஒரு கை பார்த்து விடுவதாக மிரட்டிவிட்டுப் போனார். ஒரு போலீஸ் அதிகாரியின் பிடியிலிருந்து எங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்கு ஒரு ராணுவ அதிகாரியை நியமித்துக் கொண்டிருக்கிறேன் என்று சொல்லுங்கள்'' என்றான்.

அதைக் கேட்டு பீட்டர் பொங்கிப் போய் விட்டான். ''போலீஸ்காரன் லஞ்சத்திற்கு மசிந்து விடுவானோ என்னவோ, ஆனால் ராணுவ வீரன் எதற்கும் பணிந்து போய்விடமாட்டான் கார்த்திக்'' என்றான் உணர்ச்சி வசப்பட்டுக் கொண்டே. ''நான் உன்னை பாலைவனத் திற்கு நடுவில் விட்டுவிட்டு வந்து விட்டேன். நீ என்னைப் புதைகுழியிலிருந்து வெளியே இழுத்துக் காப்பாற்றினாய். நீ இன்றைக்குச் செய்த இந்த உதவிக்கு உன் பாதுகாப்பிற்காக என் உயிரையே வேண்டுமானாலும் தருவேன்.''

★

''முதல் நாள் ஆபீஸ் அனுபவம் எப்படி இருந்தது என்று நீங்கள் சொல்லவே இல்லை. எத்தனையோ சொல்வீங்கன்னு எதிர்பார்த்தேன்'' என்றாள் கல்யாணி உற்சாகத்துடன்.

அவன் அவளை வெறுமையுடன் பார்த்துவிட்டு ''உண்மையைச் சொல்லச் சொல்கிறாயா?''

''சொல்லுங்கள்.''

அவன் ஏதோ சொல்ல வந்து நிறுத்திக் கொண்டான். என்னவென்று சொல்லுவான்?

ஊர் பெயர் தெரியாத ஓவியன் ஒருவன் கான்வாஸ் மீது என் மனதை படம் பிடித்து சித்திரமாக தீட்டினால், என்

மனம் இவ்வளவு விகாரமாக இருக்கிறதா என்று குமுறலுடன் தற்கொலை செய்து கொள்வது நிச்சயம்.

அது வெறும் நாற்காலி இல்லை. விக்கிரமாதித்ய னின் சிம்மாசனம். அதில் உட்கார்ந்ததுமே நான் முற்றிலும் மாறிவிட்டேன். ஒருத்தனை துப்புத்துலக்கி பகைமையை வளர்த்துக் கொண்டு வேலையை விட்டு நீக்கினேன். எல்லாவற்றையும் விட முக்கியமாக என் தூரிகை... மனம் எனும் தூரிகை... சப்தவர்ணங்களையும் நட்புடன் குசலம் விசாரிக்கும் என் தூரிகை...

இன்று ஒரு யதார்த்தத்தை உள்ளது உள்ளபடி சித்தரித்து இருக்கிறது. இதையெல்லாம் உன்னிடம் எப்படி சொல்லுவேன்?

''ஏன் பேச மாடேங்கிறீங்க?''

அவன் சுதாரித்துக் கொண்டு ''கல்யாணி! நீ ஒன்றும் நினைத்துக் கொள்ளாமல் இருந்தால் என்னை இந்த பந்தத்திலிருந்து விடுதலை செய்து விடு'' என்றான்.

அவள் வியப்படைந்து உடனே தேறிக் கொண்டு சிரித்து விட்டாள். ''என்ன இது? ஏதோ புத்தகத்தில் வருவது போல் பேசுறீங்களே?'' என்றான்.

''இல்லை கல்யாணி! நான் இந்த வியாபார உலகத்திற்குத் தகுதியில்லாதவன். வேறு யாரையாவது நியமித்துக் கொள்வோம். இல்லையா எல்லாவற்றையும் விற்று விடலாம்.''

''நீங்கள் வியாபார உலகத்திற்குத் தகுதி யில்லாதவரா? யாராவது கேட்டால் சிரிப்பாங்க. இன்றைக்கு நீங்கள் செய்த காரியங்களையும், எடுத்துக்

கொண்ட முடிவுகளையும் பார்த்து விட்டு நம் ஊழியர்கள் அத்தனை பேரும் ஸ்டன் ஆகிவிட்டார்கள்.''

''செய்ய முடிவது வேறு. செய்ய விருப்பம் இல்லாமல் போவது வேறு.''

அவள் முகத்திலிருந்த சிரிப்பு மாயமாகிவிட்டது. ''ஏன் விருப்பம் இல்லை? பணம் இல்லாவிட்டால் நம்மால் எப்படி வாழ முடியும்?'' என்றாள் புரியாதவள் போல்.

''ஏ.சி. பெட்ரூம், ஏ.சி. கார், வருடத்திற்கு ஒரு முறை வெளிநாட்டுப் பயணம் எல்லாவற்றையும் சேர்த்துக் கொண்டாலும் சொத்திலிருந்து வருடத்திற்கு வட்டியாக வரும் பத்து லட்சம் ரூபாய்கள் நமக்கு போதும் கல்யாணி! வீண் டென்ஷன் எதுக்கு?''

''பின்னே நாள் முழுவதும் என்ன செய்யப் போகிறோம்?''

'நாள் முழுவதும் ஒன்றுமே செய்ய வேண்டாம் என்று சொல்லவில்லை நான். நாள் முழுவதும் வேலை வேண்டாம் என்கிறேன். நம் வாழ்க்கையில் ஷாப்பிங், வி.சி.ஆர். இவற்றைத் தவிர வேறு எதுவும் மிச்சமில்லை கல்யாணி! லேசான ஒரு சிரிப்பு, மழை பெய்து கொண்டிருக்கும் இரவில் குடும்பத்தாருடன் சேர்ந்து உரையாடிக் கொண்டிருப்பது, அன்புடன் கழுத்தை பிணைத்துக் கொள்ளும் கரங்கள் இதெல்லாம் தொலைந்து விட்ட வாழ்க்கை நம்முடையது. பள்ளிக்குப் போகும் குழந்தை டாடா சொல்லும் போது அதையும் இயந்திர கதியில் எடுத்துக் கொள்கிறோமே தவிர அந்தப் பிஞ்சு மனதில் இருக்கும் ஏக்கத்தை உணருவதில்லை.

இரவு முழுவதும் உதிர்ந்து விழுந்திருக்கும் மல்லிகைப் பூக்களை விடியலில் பார்த்து மகிழும் சக்தி இல்லை. நான் ஏதோ கவிதை உலகத்தைப் பற்றி பேசவில்லை கல்யாணி! தினந்தோறுமோ, மாதத்திற்கு ஒரு தடவையோ, அல்லது வருடத்திற்கு ஒரு முறையோ ஏதாவது ஒரு அழகு அல்லது சந்தோஷம் மனதை வருடாமல் போனால் இனி அந்த வாழ்க்கைதான் எதற்கு?

ஆனால் நம் சந்தோஷம் அடுத்தவர்களின் தோல்வி யின் மீது ஆதாரப்பட்டுக் கொண்டிருப்பது எவ்வளவு துரதிர்ஷ்டமான விஷயம்? நான் இதையெல்லாம் செய்ய முடியாமலோ, வியாபாரத்தை நடத்த முடியாமலோ இப்படிச் சொல்லவில்லை. திருப்தியை மிஞ்சிய திருப்தி வேறு ஒன்றும் இல்லை. பக்கத்துவீட்டு கணவன் மனைவி சண்டையை விட வானத்திலிருந்து விழும் மழையின் துளியைப் பார்ப்பது திருப்தியைத் தரும். லட்ச ரூபாய் இன்கம் டாக்ஸை ஏய்ப்பதை விட ஒரு நல்ல புத்தகத்தைப் படிப்பது திருப்தியைத் தரும். ஒரு ஜமீன்தாரின் மகனாக, ஒரு பிச்சைக்காரனின் வாரிசாக என்னால் இந்த உண்மையைச் சொல்ல முடியும். எங்கே நீல மேகங்கள் புனிதமாக முறுவல் பூத்தபடி மழையாக ஆசிகளை பொழியுமோ, எங்கே அன்பு என்ற அலைகள் தாய்ப்பாலை போல் தூய்மையாக பொங்கி புரண்டு கொண்டிருக்குமோ, எங்கே புறாக்களின் இறகுகள் நிழலில் மனிதன் அமைதியாக வாழ முடியுமோ, அங்கேதான் சந்தோஷம் இருக்கும்.'

''என்ன ஆச்சு? ஒன்றுமே பேசவில்லையே நீங்கள்?''

அவன் திடுக்கிட்டு ''என்ன கேட்டாய் நீ?'' என்றான்.

''நாள் முழுவதும் என்ன செய்யப் போகிறோம் என்று கேட்டேன்.''

'நான் அதற்கு பதில் சொல்லவில்லையா? என் வாய் கூட மனதுடன் ஒத்துழைக்க மறுக்கிறதா? இது வரை கைகள் மட்டும் தான் என்று நினைத்துக் கொண்டு இருந்தேனே.'

அவன் சுதாரித்துக் கொண்டு ''அது போகட்டும். உன் இதயம் நின்று விடும்படியாக ஒரு செய்தியை சொல்லப் போகிறேன். தயாராக இரு'' என்றான்.

அவள் சிரித்துவிட்டு ''சந்தோஷத்தாலா வருத்தத்தி னாலா?''

''அதிர்ச்சியால்.''

''என்ன விஷயம்?''

''சிக்மா டிடெக்டிவ் ஏஜென்ஸியின் பிரதாப்பை வேலையிலிருந்து நீக்கிவிட்டேன்.''

''எ...ன்...ன?'' அவன் தன்னையறியாமல் கத்தினாளா அல்லது அதிர்ச்சிதான் ஏற்பட்டு விட்டதா தெரியாது. குரல் கிறீச்சிட்டது.

''ஆமாம் கல்யாணி'' என்று நடந்ததை எல்லாம் சொன்னான்.

அவள் ரொம்ப நேரம் பேசவில்லை. அவன் சங்கடத் துடன் ''நான் செய்தது தவறான காரியம் என்கிறாயா?'' என்றான்.

எப்படி சொல்வது என்பது போல் அவள் கண்கள் அகல விரிய பார்த்தாள். அவள் கண்களில் குறும்புத்தனம் பளிச்சிட்டது. ''இப்படி அருகில் வாங்க'' என்றாள்.

அவன் வேறு மூடில் இருந்து ''எதற்கு?'' என்றான்.

அவள் குறும்புடன் ஒரு கண்ணை மூடி இன்னொரு கண்ணைத் திறந்து இமைகளைத் தாழ்த்தினாள்.

அவன் புரிந்து கொண்டு அவளை நோக்கி குனிந்தான்.

''நீங்கள் ரியல்லீ ஜீனியஸ்'' என்றாள்.

''எதுக்கு?''

''இவ்வளவு நாளாக எனக்கு அந்த லட்ச ரூபாய் பற்றி சந்தேகமே வரவில்லை. நீங்க ஒரே நாளில் பிடித்து விட்டீர்கள். இதை எல்லாம் தானே செய்ததாக ஒப்புக் கொண்டார் என்று சொல்லுங்கள். எது என்னவாக இருந்தாலும் நீங்கள் என்னைவிட பெரிய தொழில் மேதை ஆகி விடுவீங்க.''

''ஐயோ! வேண்டாம். இன்னொரு நான்கு நாட்கள் இந்த வியாபாரத்தில் தொடர்ந்து இருந்தேன் என்றால் சன்னியாசம் வாங்கிக் கொண்டு தேசாந்திரம் போய் விடுவேன்.''

''அப்படிச் சொல்லாதீங்க. ததாஸ்து தேவதைகள் இருப்பாங்களாம்'' என்றாள்.

ஸ்ரீ கல்யாணி போன்ற பெண் கூட அப்படிப் பேசியது வேடிக்கையாக இருந்தது. ''அது சரி. அடுத்த மாதம் நான் சிம்லாவுக்குப் போகிறேன். இரண்டே நாட்கள்தான். வந்தபிறகு யோசிக்கலாம்'' என்றான்.

''நீங்கள் இல்லாமல் இரண்டு நாட்களா?'' என்றாள் கவலையுடன்.

அவன் சிரித்துவிட்டு ''கல்யாணம் ஆகி ஒரு வாரம் கூட ஆகவில்லை'' என்றான் அவளை டீஸ் செய்வது போல்.

''இதயம் வர்ஜின் ஆக இருக்கிறவங்க கல்யாணம் ஆன முதல் நாளே கணவன் மீது கண்மண் தெரியாத அன்பில் மூழ்கிவிடுவாங்க. அப்படி இல்லாவிட்டால் அவர்களிடம் ஏதோ குறை இருக்கிறது என்று அர்த்தமாம்.''

''அப்படி என்றால் என் இதயம் வர்ஜின் இல்லை என்கிறாயா?''

''என்னவோ. சிம்லா என்கிறீர்கள்.'' குறும்புடன் சிரித்தாள். ''ஏற்கெனவே குளிர்காலம் வருகிறது. அங்கேயோ பனிமலைகள்'' என்று சொல்லிக் கொண்டே போனவள் அவன் காதைப் பிடித்துத் திருகியதும் ''ஐயோ சாமி! விடுங்கள். அது சரி. சிம்லாவுக்கு எதுக்காகவாம்?'' என்றாள்.

''கல்சுரல் மீட்டிங் இருக்கிறது. நாட்டியம், நாடகம், ஓவியக் கலைகளில் தலை சிறந்த பரிசுகளைத் தரக் கூடிய போட்டிகள் நடைபெறும். நேஷனல் லெவல் காம்பெடிஷன்கள்.''

''அதற்கு நீங்கள் எண்ட்ரி அனுப்பியிருக்கீங்களா?''

''எண்ட்ரியா? அழகாய் தான் இருக்கு. எண்ட்ரித் ஃபீசு ஐயாயிரம் ரூபாய்.''

''அது ஒரு தொகையா?''

''இப்போ அப்படி இருக்கலாம். ஒரு வாரத்திற்கு முன்னால் என் சகல உடைமைகளையும் விற்றாலும் ஐநூறு ரூபாய் கூட வந்திருக்காது. ஆனாலும் இப்பொபது எண்ட்ரி அனுப்ப நேரம் இல்லை. வெறுமே பார்வையாளராக போகிறேன்.''

''உங்களிடம் எனக்குப் பிடித்த இன்னொரு விஷயம் என்ன தெரியுமா? ஒரு முறை இது என் சம்பந்தப்பட்ட

விஷயம் என்று தீர்மானித்துக் கொண்டு விட்டால் பிறகு யாருடைய யோசனையும் கேட்காமல் நீங்களே எல்லா முடிவுகளையும் எடுத்துக் கொண்டு விடுவீங்க. இவ்வளவு நாட்களாக நமக்காக வேலை செய்து கொண்டிருந்த சிக்மா ஏஜென்ஸியை ஒரே நிமிஷத்தில் நீக்கி விட்டீங்க. குறைந்தபட்சம் என்னிடம் சொல்ல வேண்டும் என்று கூட தோன்றாமல் போனதுதான் நல்ல நிர்வாகியின் லட்சணம். பொறுப்பை மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டவர்களுக்குத் தான் அந்த முடிவுக்கு வரக் கூடிய உறுதி இருக்கும். உங்கள் கையில் இந்த கல்யாணி, ஸ்ரீகல்யாணி ஏஜென்ஸி இரண்டுமே நிம்மதியாக இருக்க முடியும்.''

''தாங்க்ஸ்'' என்றான் மனப்பூர்வமாக. அவளை அருகில் இழுத்து அணைத்துக் கொண்டு தன் முகவாய்க்குக் கீழே தலையைச் சாய்த்துக் கொண்டு தன் மூச்சுக் காற்றுக்கு அசையும் அவள் கேசங்களை பார்த்துக் கொண்டே தூங்குவது அவனுக்குப் புதிதாக பழக்கமாகி விட்டிருந்தது. இன்றும் அவன் அதே போல் தூங்க முயன்று கொண்டிருந்த போது அவள் மெதுவாக சொன்னாள். ''எவ்வளவு ஏமாந்து விட்டேன். மதியம் அந்த பிரதாப் வந்து நீங்கள் பம்பாய்க்கு போன் செய்ததாக சொன்னபோது கூட நான் நம்மிரு வருக்கும் இடையே ரகளை உண்டாக்குவதற்காகத்தான் இவ்வாறு நாடகம் ஆடுகிறார் என்று தெரிந்து கொள்ளாமல் போய் விட்டேன். ஏதோ பெரிய விஷயத்தைத் துப்புத் துலக்குகிறார் என்று எண்ணி விட்டேன்.''

சந்தேகம் மெழுகுவர்த்தியின் வெளிச்சம் போல் படபடக்க ''எப்பொழுது வந்தார்?'' என்று கேட்டான்.

''காலையில் பதினோரு மணிக்கு.''

உள்ளங்காலிலிருந்து இதயம் வரையில் விஷப்பூச்சி ஒன்று குடைந்தாற் போன்ற உணர்வு. அவன் உடல் லேசாக

நடுங்கியது. காலையில் பதினோரு மணிக்கு! அப்படி என்றால் அவன் லஞ்சிற்கு வருவதற்கு முன்னால். அது தெரிந்தும் கூட அவன் வீட்டிற்கு வந்த போது அவன் மனைவி அவனிடம் இந்த விஷயத்தைச் சொல்லவில்லை. உத்தம நிர்வாகியின் லட்சணம். இது என் சம்பந்தப்பட்ட விஷயம் என்று நினைத்துக் கொண்டது... யாருக்கும் சொல்லத் தேவையில்லை என்று நினைப்பது. அ...வ...னிடம் கூடவா...?

அவன் மனதை திடப்படுத்திக் கொண்டான். ''அந்த டெலிபோன் ரிஜிஸ்டர் காகிதத்தின் நகலை உன்னிடம் காட்டினாரா?''

''ஆமாம்?''

தன் மனைவி தன்னைக் காட்டிலும் அவன் மீதுதான் அதிகமாக நம்பிக்கையை வளர்த்துக் கொண்டிருக்கிறாள் என்று சற்று முன்னால் கூட அவன் நினைத்தானே! ஒரு நிமிஷத்தில் அவன் சந்தோஷமெல்லாம் மாறிவிட்டதே. வேதனை வேதாந்தமாக உருமாறி விட்டதே!

தூக்கம் வராமல் அவன் கீழே வந்தான்.

ஹாலில் அவனை வரவேற்பது போல் பெயிண்டிங் ஸ்டாண்ட்! அவன் கையில் தூரிகையை எடுத்துக் கொண்டான். இதயத்திலிருந்த வேதனையை வர்ணங்களில் தோய்த்து வரையத் தொடங்கினான்.

வர்ணச் சேர்க்கையில் கொஞ்ச நேரம் இதயக் குமுறல்கள் வெளிப்பட்டதும் அவன் ஆவேசம் தணிந்தது.

அவள் செய்த தவறுதான் என்ன? மெதுவாக சொல்லலாம் என்று எண்ணியிருக்கக் கூடும் என்று

நினைத்தான். அதற்குள் மணி அடித்தது. கைகளை அசைக்க வேண்டிய அவசியமில்லாமலேயே வேலைக்காரர்களுக்கு ஆணைகளை தருவதற்காகவும், தானாகவே டயல் ஆகும் படியாக ஏற்பாடு செய்யப்பட்ட போனை ஸ்ரீ கல்யாணியின் படுக்கைக்கு பக்கத்தில் அமர்த்தியிருந்தார் கள் மணியின் சத்தத்தைக் கேட்டு விட்டு அவன் மாடிக்குப் போனான்.

அவளைப் பார்த்து, ''நீ இன்னும் தூங்க வில்லையா?'' என்றான்.

''இல்லை. சின்ன வேலை இருந்தது. அதை செய்து முடித்தேன்.''

''வேலையா? என்ன அது?'' வியப்படைந்தவனாக கேட்டான்.

''செகரெட்டரிக்கு போன் செய்து ஒரு வேலை செய்து முடிக்கச் சொன்னேன். அது கிடக்கட்டும். ஒரு கேள்விக்கு பதில் சொல்லுங்கள். நான் நல்லவளா இல்லையா?''

அவன் சிரித்துக் கொண்டே ''எத்தனையோ மனைவிகள் தங்கள் கணவன்மார்களை இதே கேள்வி கேட்டு பாசிடிவ் ஆகவும் ஆதரவாகவும் பதிலை பெற்று இருப்பார்கள். நெகடிவ் ஆக எந்தக் கணவனும் பதில் சொன்னதாக சரித்திரத்தில் இல்லை'' என்றான்.

''போதும் சாமீ! நாளை காலையில் உங்கள் சிம்லா டிக்கெட் வந்து விடும்.''

''இப்போ நீ போன் செய்தது டிக்கெட்டுக்காகவா?''

''இல்லை. அதைவிட நல்ல நியூஸ். அந்த டேப் ரிகார்டரை ஆன் பண்ணுங்கள். சொல்கிறேன்.''

அவன் ஆன் செய்து விட்டு ''அப்படி என்ன நல்ல நியூஸ்?'' என்றான். டேப்பிலிருந்து ஹிந்தி பாட்டு ஒலித்துக் கொண்டிருந்தது.

''நேஷனல் லெவல் போட்டியில் உங்கள் எண்ட்ரியைக் கூட சேர்த்துக் கொள்கிறார்கள்.''

அவன் வாயடைத்துப் போனவனாக அப்படியே நின்றுவிட்டான். ''உண்மையாகவா?'' என்றான் உத்வேகத்துடன். ''ஆனால் அந்தப் போட்டிக்குக் கடைசி தேதி...''

அவள் பெருமையுடன் நிமிர்ந்து ''பின்னே ஸ்ரீ கல்யாணி என்றால் என்னவென்று நினைத்துக் கொண்டீங்க? உங்கள் மனைவியைக் குறைவாக எடை போடாதீங்க. மனைவிகளை குறைவாக எடை போட்ட ஆண்கள் எல்லோரும் பிற்காலத்தில் முதுகுவலியால் அவதிப் பட்டிருக்காங்களாம்'' என்றாள்.

அவள் கடைசியாக சொன்னதை அவன் பொருட் படுத்தவில்லை. அழுது கொண்டிருக்கும் குழந்தையின் கையில் தாய் தின்பண்டத்தை வைத்ததுமே பொங்கி போய் விட்டது போல் ''தாங்க்ஸ் கல்யாணி'' என்றான்.

அவள் முறுவலுடன் ''இரண்டு நாட்களில் வந்து விடுங்கள். பனிமலைகள், வெண்மை நிறம் என்று மெய் மறந்து போய் அங்கேயே உட்கார்ந்து விடாதீங்க. ஏற்கெனவே சிம்லாவில் பனிப்புயல்கள் அதிகம்'' என்றாள்.

அவன் அவளை அருகில் இழுத்துக் கொண்டு மேற்கொண்டு பேசவிடவில்லை. டேப்பில் முகமத் ரஃபீயின் பாட்டு வந்து கொண்டிருந்தது.

13

சிம்லா!

எப்பொழுது கீழே பள்ளத்தாக்கில் விழுந்து விடுமோ என்பது போல் மலையின் விளம்பில் கட்டப்பட்டிருந்த ஊர்.

டிரைவர் ஊர் கோடியிலேயே காரை நிறுத்திவிட்டு பணத்தை வாங்கிக் கொண்டு போய் விட்டான். சிம்லா நகரத்திற்குள் கார் நுழைவதற்கு அனுமதி இல்லை. ஊர் எல்லையிலேயே நிறுத்தி விட வேண்டியதுதான்.

கார்த்திகேயன் சூட்கேஸை எடுத்துக் கொண்டு நடக்கத் தொடங்கினான். குளிர் தாங்கமுடியாமல் இருந்தது. பனிப்புயல் வரக் கூடிய அறிகுறிகள் தென் பட்டன. ஆனாலும் அங்கே இருந்த சூழ்நிலை மனதிற்கு உற்சாகம் தருவதாக இருந்தது. தொலைவில் உயரமான குன்றுகள். அவற்றின் மீது மழையாக தூறிக் கொண்டிருந்த பனி. பனியின் மீது பிரதிபலித்துக் கொண்டிருந்த நிலா வெளிச்சம். இவற்றிலிருந்து வேறுபட்டாற்போல் உயரமாக முக்கோண உருவில் சைப்ரஸ் மரங்கள்.

அவனுக்கு இடது பக்கத்திலிருந்த சாலை ஒன்று தொலைவில் மலைத்திருப்பத்தில் போய் முடிந்து கொண்டிருந்தது. நேபாலுக்குப் போகும் வழி அது. வெள்ளை நிற ரிப்பன் போல் தென்பட்டது அது.

கார்த்திகேயனின் தந்தை வீட்டை உதாசீனம் செய்வதற்கு முன்னால் மகனைத் தன்னுடன் பல ஊர்களுக்கு அழைத்துப் போயிருக்கிறார். எந்தத் தந்தையுமே தன் மகனுக்கு இதைவிட உயர்ந்த பரிசைத் தந்திருக்க

முடியாது பன்னிரெண்டு வயதிலேயே பலவிதமான கலாச்சாரங்களை காண்பித்தது. பயணங்களைக் காட்டிலும் மனதை முன்னேற்ற பாதையில் இட்டுச் செல்லக் கூடிய சிறந்த சாதனம் வேறு இல்லை.

சிறுவயதிலேயே கார்த்திகேயன் நாடு முழுவதும் சுற்றிப் பார்த்திருக்கிறான். கன்யாகுமரியில் கடல்களின் சங்கமம், கோவா நகரத்திற்கு நடுவில் படகில் கார்களில் பயணம் செய்வது, தேக்கடியில் கூண்டுகளைப் போன்ற படகுகளில் பயணம் செய்து கொண்டே சுதந்திரமாக சுற்றிக் கொண்டிருக்கும் யானைகளை பார்ப்பது, அஜந்தா எல்லோரா குகைகளின் வர்ண ஓவியங்கள், காசியில் பண்டாக்கள் அநியாயமாக பணம் பிடுங்குவது, 'கச்' சுக்கு அப்பாலிருந்து தென்படும் பாகிஸ்தான் கிராமங்கள்... படிக்கக் கூடிய கண்கள் இருந்தால் நாட்டை விட பெரிய புத்தகம் வேறு என்ன இருக்க முடியும்?

ஆனால் எல்லாவற்றையும் விட அவனுக்குப் பிடித்தது சிம்லா. எட்டு வயதிலேயே தந்தையின் சுண்டு விரலைப் பிடித்துக் கொண்டு தாயுடன் அந்த நகரத்திற்கு அடியெடுத்து வைக்கும் போதே அந்த நகரத்தின் அழகு அவன் மனதைக் கவர்ந்து விட்டது. அதற்குப் பிறகு வேறு எத்தனையோ ஊர்களைப் பார்த்த பொழுதும் சிம்லா மட்டும் அவன் மனதில் பசுமையாக நிலைத்து விட்டிருந்தது. அதற்குப் பிறகு திடீரென்று வறுமை அவனைச் சூழ்ந்து கொண்டு விட்டது. அது வேறு விஷயம்.

கடந்த காலத்தை அசை போட்டுக் கொண்டே அவன் சுற்றிலும் பார்த்தான். ஊர் மாறவேயில்லை. அதே நேபால் கலாச்சாரம். அதே மர வீடுகள். இடது பக்கம் மலை, வலது பக்கம் பள்ளத்தாக்கு.

அவன் மறுபடியும் நடக்கத் தொடங்கினான். அடுத்த பத்தாவது நிமிடம் ஹோட்டலுக்கு வந்து சேர்ந்தான். ஹோட்டல் பிரைட்!

ரிசெப்ஷன் அருகில் நிறைய பேர் இருந்தார்கள். அவன் தன் பெயரைச் சொன்னான். அவ்வளவு பரபரப்பிலும் மேனேஜர் ரிஜிஸ்டரைப் பார்த்து விட்டு ''எஸ் சார்! உங்கள் பெயரில் ரிசர்வ் ஆகியிருக்கு. ரூம் நம்பர் 22'' என்றான்.

அஸ்ஸாமி சிறுவன் ஒருவன் சாமான்களை எடுத்துக் கொண்டு போய் அறைக்குள் வைத்தான். கார்த்திகேயன் ஜன்னலைத் திறந்தான். குளிர்ந்த காற்று முகத்தில் வந்து படீரென்று அறைந்தது. அவன் திக்கு முக்காடிய படி சட்டென்று ஒதுங்கிக் கொண்டான்.

''ஹோட்டலில் ரொம்ப கூட்டம் இருக்கும் போலிருக்கே'' என்றான் கார்த்திகேயன்.

''இந்த ஹோட்டலில் மட்டுமே இல்லை சார். அசோகாவில் இதை விட கூட்டம் அதிகம். இருப்பதே நாலோ ஐந்தோ ஹோட்டல்கள்தான். இந்த மூன்று நாட்களும் மக்கள் வந்து கொண்டே இருப்பாங்க. நேஷனல் காம்பெடிஷன்ஸ் இருக்கு இல்லையா? அது சரி. நீங்களும் இந்தப் போட்டியில் கலந்து கொள்ள வந்தீங்களா அல்லது வெறுமே ஊரைச் சுற்றிப் பார்க்கவா?''.

''போட்டியில் கலந்து கொள்ளத்தான்.''

''எந்தப் போட்டியில் சார்?'' ஆர்வத்துடன் கேட்டான்.

''பெயின்டிங்'' என்றான் கார்த்திகேயன்.

பையனின் பார்வை கார்த்திகேயன் கையிலிருந்த ஓவியத்தின் மீது பட்டது. காகிதத்தைச் சுற்றிப் பேக் செய்யப்பட்டிருந்தது.

''நான் பார்க்கலாமா சார் அதை?'' என்று கேட்டுவிட்டு உடனே ''இப்பொழுதுதான் வந்திருக்கீங்க. ரெஸ்ட் எடுத்துக் கொள்ளுங்கள் சார்'' என்றான்.

கலைஞனாக இருப்பவன் தன் கலையின் மீது யாராவது ஆர்வம் காட்டினால் சின்னக் குழந்தையாகி விடுவான். கார்த்திகேயன் அதற்கு அப்பாற்பட்டவன் இல்லை. ''பாரேன், அதற்கென்ன வந்தது?'' என்றபடி பாக்கெட் மீது இருந்த பிளாஸ்டிக் ஷீட்டை விலக்கி வெளிச்சத்தில் பிடித்துக் கொண்டான்.

ஹோட்டல் பையன் முதலில் சாதாரணமாக பார்த்தான். பிறகு சூரியன் கிழக்கிலிருந்து மேலே எழும்பிக் கொண்டிருக்கும் போது வானம் எப்படி மெல்ல மெல்ல செம்மையாகுமோ அப்படி அவன் முகத்தில் ஆச்சரியம் எட்டிப் பார்த்தது. அது ஆச்சரியம் கூட இல்லை. பிரமிப்பு! அளவு கடந்த வியப்புடன் ''ஹா!'' என்றான். ''பிரைஸ் உங்களுக்குத் தான் சார்'' என்றான்.

கார்த்திகேயன் சிரித்து விட்டு ''நாட்டில் தலைச் சிறந்த ஓவியர்கள் எல்லோரும் போட்டியில் கலந்து கொள்வார்கள். உன் பெயர் என்ன?'' என்று கேட்டான்.

''ஹமாலி சாப்.''

''கொஞ்சம் டீ வாங்கிக் கொண்டு வருகிறாயா?''

''கட்டாயம்.'' ஹமாலி ஓடினான்.

வெளியே காற்றின் சத்தம் தீவிரமாயிற்று. கார்த்திகேயன் ஓவியத்தை மறுபடியும் பேக் செய்யப் போன பொழுது போன் மணி ஒலித்தது. ரிசீவரை எடுத்தான்.

''ஹலோ! நான்தான் கல்யாணி. அறை கிடைத்ததா?''

''கிடைத்தது கல்யாணி! எல்லாம் சரியாகத் தான் இருக்கு.''

''ஏதாவது தேவைப்பட்டால் கல்யாண் சிங்குடன் தொடர்பு கொள்ளுங்கள். ஹிமாசல் பிரதேஷின் கமிஷனர் ஆஃப் போலீஸ். சிம்லாவில் தான் இருப்பார்.''

''அந்த அளவுக்கு அவசியம் வராது என்று நினைக்கிறேன்'' என்றான்.

அவள் மேலும் கொஞ்ச நேரம் பேசினாள். போனை வைக்கப் போன பொழுது ஹமாலி தேநீர் கொண்டு வந்தான். அதைக் குடித்து விட்டு அவன் ஓவியத்தை பேக் செய்யும் போது மறுபடியும் போன் ஒலித்தது. ''ஹலோ!'' என்றான். மறுமுனையிலிருந்து ஒரு பெண்ணின் குரல் கேட்டது. ''குட் ஈவினிங் சார்! நான் தான் ரிசப்ஷனிஸ்ட் பேசுகிறேன். நீங்கள் ரூம் நம்பர் இருபத்தி ஒன்றை எடுத்துக் கொள்ளுங்கள். இதை விட அது நல்ல ரூம்'' என்றாள்.

''பரவாயில்லை. இது நன்றாகத்தான் இருக்கு.''

''இந்த அறை காற்றுக்கு எதிர் திசையில் இருக்கு சார். தூக்கம் வராது. அதிர்ஷ்டவசமாக அந்த அறை காலியாச்சு.''

''அப்படி என்றால் சரி.''

''சார்!'' கொஞ்சம் தயக்கம். ''நீங்கள் அட்வான்ஸ் எதுவும் தரவில்லை. ஐநூறு ரூபாய் அனுப்பினால்...''

''என்னிடம் கேட்கவில்லையே? அதற்கென்ன வந்தது? அனுப்பி வைக்கிறேன். பையனை அனுப்புங்கள்.''

''தாங்க்யூ சார்.'' அவள் போனை வைத்து விட்டாள். பக்கத்திலேயே இருந்த ஆறு பெண்களும் நான்கு

இளைஞர்களும் அந்தப் பெண்ணைப் பாராட்டுவது போல் பார்த்தார்கள்.

அவள் நிமிர்ந்து முறுவலுடன் பார்த்து விட்டு ''முதல் பகுதி வெற்றிகரமாக முடிந்து விட்டது.'' என்றாள் ஹிந்தியில், அதற்குப் பிறகு மறுடிபயும் போனை எடுத்து ''ரிசெப்ஷனுக்குக் கொடுங்கள்'' என்றாள். மறுமுனையில் மேனேஜர் லைனுக்கு வந்ததுமே பக்கத்திலிருந்த இளைஞனிடம் தந்து விட்டு ''நான் சொன்னது நினைவு இருக்கு இல்லையா? அப்படியே பேசு'' என்றாள்.

மறுமுனையில் மேனேஜர் ''ஹலோ... ஹலோ'' என்று கூப்பிட்டுக் கொண்டிருந்தார்.

அந்த இளைஞன் தொண்டையை செருமி கொண்டு ''நான்தான் கார்த்திகேயன் பேசுகிறேன். அறையை காலி செய்கிறேன். அந்த விஷயத்தைச் சொல்லத்தான் போன் செய்தேன்'' என்றான் கம்பீரமான குரலில்.

மேனேஜர் கலவரமடைந்து விட்டார். ''என்ன சார் நடந்தது? எங்க ஹோட்டலிலேயே அதுதான் ரொம்ப நல்ல ரூம். எங்களுடையது சின்ன ஹோட்டல்.''

''அதான் பெரிய ஹோட்டலுக்கு போகிறேன். ஹோட்டல் அசோகா.''

''போலீஸ் கமிஷனர் ஏதாவது நினைத்துக் கொள்வாரோ என்னவோ? அவர் சொன்னாரே என்று தான் வேறு யாருடையதோ கேன்சல் செய்து உங்களுக்கு தந்தேன்.''

''பரவாயில்லை. அவரிடம் நான் பேசிக் கொள்கிறேன். நீங்கள் பையனை அனுப்புங்கள். ஐநூறு ரூபாயை தருகிறேன். பில்லை செட்டில் செய்து விடுங்கள்.''

''பில்லா! வந்து ஐந்து நிமிடங்கள்தானே ஆகிறது? பில் வேண்டாம் சார்.''

''வாட் நான்சென்ஸ்! எனக்கு ஏதாவது தர்மம் செய்கிறீங்களா? நீங்கள் வாங்கிக் கொண்டுதான் ஆகணும். இல்லாவிட்டால் போலீஸ் கமிஷனரிடம் சொல்ல வேண்டியிருக்கும்.''

''ஐயோ வேண்டாம். நீங்கள் சொன்னபடியே ஆகட்டும் சார்.''

இளைஞன் போனை வைத்துவிட்டு மற்றவர்களை பெருமையுடன் பார்த்தான். எல்லோரும் கைதட்டினார்கள். ஒல்லியாக இருந்த பெண் ''இதெல்லாம் சரியாக வரும் என்று நினைக்கிறாயா? எனக்கு ஏனோ பயமாக இருக்கு'' என்றாள்.

''டில்லி ஜவஹர்லால் யூனிவர்சிடியின் மானத்தை வாங்காதே. அந்த அறை நமக்குத்தான் கிடைக்க வேண்டும். அது சரி. கொஞ்ச நேரத்தில் நாம் இந்த அறையை காலி செய்ய வேண்டும். அந்தப் பெரிய மனிதன் இங்கே வருவான். கோபால்! நீ போய் மீதி வேலையை - நம்பர் த்ரீயை - முடித்து விட்டு வா'' என்றாள் அனுஜா.

''மிலிட்டரி கமாண்டரைப் போல் ஆணைகளை தருகிறாயே.'' ஜீன்ஸ் அணிந்திருந்த பெண் சொன்னாள்.

''பின்னே? பந்தயத்தில் வெற்றி பெறவில்லை என்றால் பெயரை மாற்றிக் கொள்வதாக சொல்லியிருக்கிறாளே.'' யாரோ சொன்னார்கள்.

அதற்குள் கோபால் என்ற இளைஞன் வெளியே போய் வராண்டா கோடியில் இருந்த பையனைக் கூப்பிட்டான். ''ரூம் நம்பர் இருபத்தி இரண்டில் இருக்கிற

சாமான்களை எடுத்து வந்து இருபத்தி ஒன்றில் வை'' என்றான்.

''எதுக்கு சார்?''

''அதெல்லாம் உனக்கு எதுக்கு? அவர் எங்களுக்குத் தெரிந்தவர்.'' அதட்டினான் கோபால். அந்தப் பையன் மிரண்டு போய் ''சரி சார்'' என்று சொல்லி விட்டு போனான். அவன் போன சமயத்தில் இன்னொரு ரூம் பாயிடம் ஐநூறு ரூபாயை கொடுத்துக் கொண்டிருந்தான் கார்த்திகேயன்.

அவன் அதை வாங்கிக் கொண்டு போய் மேனேஜரிடம் கொடுத்தான். மேனேஜர் பில்லை போட்டு ஐநூறு ரூபாய்க்கு ரசீது எழுதி ரிஜிஸ்டரில் காலியாகி விட்டதாக எழுதிக் கொண்டார். ரிசப்ஷனுக்குப் பக்கத்திலேயே நின்று கொண்டிருந்த பெண் ''என்ன சார்? ரூம் எதோ எங்களுக்காகவே காலியாகி இருக்கு போலிருக்கே?'' என்றாள் ஏதும் அறியாதவளைப் போல்.

''உலகத்தில் இன்னும் நேர்மை பாக்கியிருக்கிறது போலிருக்கு. ஐந்து நிமிடங்கள் இருந்ததற்கே முழு வாடகையையும் தந்து விட்டுப் போகிறான் அந்தக் கஸ்டமர்'' என்றார் மேனேஜர்.

''எங்கள் அதிர்ஷ்டம் கூட நன்றாக இருக்கிறது போலிருக்கே. அந்த ரூமை எங்களுக்குத் தரீங்களா? பத்து பேரும் ஒரே அறையில் தங்குவது ரொம்ப நெருக்கடியாக இருக்கு.'' வேண்டுகோள் விடுப்பது போல் கேட்டாள் அந்தப் பெண்.

மேனேஜர் அந்த அறையை அவர்களுக்குத் தந்து கொண்டிருந்த அதே நேரத்தில் ரூம் பாய் கார்த்திகேயனின்

அறைக்குள் நுழைந்தான். ''சார்! உங்களுடைய லக்கேஜ்'' என்றான்.

''ரூம் நம்பர் இருபத்தி ஒன்றுக்கு மாற்றுவதற் காகவா?'' கார்த்திகேயன் கேட்டான்.

''ஆமாம் சார்.'' சாமான்களை எடுத்துக் கொண்டு வெளியே வந்தான். அதற்குள் ரூம் பாய் அறையை காலி செய்த ரசீதை எடுத்து வந்தான். ''இந்தாங்க சார் ரசீது'' என்ற கவரைக் கொடுத்தான். அதை வாங்கி ஜேபியில் வைத்துக் கொண்டு கார்த்திகேயன் பக்கத்து அறைக்குப் போய் விட்டான்.

21 ம் அறையில் பையன் சாமான்களை வைத்து விட்டு சல்யூட் செய்தான்.

''என்னப்பா இது? இரண்டு அறைகளும் ஒரே மாதிரி தானே இருக்கு. எதற்காக மாற்றினீங்க?'' கார்த்திகேயன் கேட்டான்.

''எனக்குத் தெரியாது சார்'' என்று சொல்லி விட்டு அந்தப் பையன் போய் விட்டான்.

கார்த்திகேயன் கட்டில் மீது உட்கார்ந்து கொண்டான். தான் உட்கார்ந்திருந்த கட்டிலுக்குக் கீழே மாணவர்களின் சாமான்கள் இருந்ததை அவன் கவனிக்கவில்லை.

கீழே மேனேஜர் ரூம் பையனை கடிந்து கொண் டிருந்தார் - ''கஸ்டமர்களின் சாமான்களை ஹோட்டல் வாசல் வரை எடுத்துக் கொண்டு போக முடியாமல் போய் விட்டதா?'' என்று.

''அவருக்கு பக்கத்து அறையில் யாரோ தெரிந்தவர்கள் இருக்காங்க போலிருக்கு. அங்கே போயிருக்கிறார்.''

உரையாடலைக் கேட்டுக் கொண்டிருந்த மாணவ, மாணவிகள் உள்ளூர சிரித்துக் கொண்டார்கள்.

''நாம் போய் அந்த ஆளை எழுப்பலாமா?''

''அதற்குள் வேண்டாம். உடனே போனால் ரகளை செய்யக் கூடும். நாம் முதலில் புது அறையில் செட்டில் ஆகலாம் வாங்க.''

எல்லோரும் 22ம் நம்பர் அறைக்குப் போய் செட்டில் ஆனார்கள்.

ஐந்து நிமிடங்கள் ஆயிற்று. கார்த்திகேயன் அறையை விட்டு வெளியே வந்து டைனிங் ஹால் பக்கமாக போவதை கவனித்தார்கள்.

இரவு ஒன்பதரை மணியை தாண்டிக் கொண் டிருந்தது. ஹிமாசல் பிரதேசத்தில் இரவு எட்டு மணிக் கெல்லாம் ஊர் அடங்கிவிடும். காற்றின் சத்தத்தைத் தவிர வேறு எந்தச் சத்தமும் இருக்காது. மலையின் மீது ஊர் அமைந்திருப்பதால் வீடுகள் அகலமாக இருக்காது. அடுக்கடுக்காக, குறுகலாக இருக்கும். கார்த்திகேயன் கீழே சாப்பிடும் இடத்திற்கு வந்து உட்கார்ந்து கொண்டான். ரொட்டியைச் சாப்பிட்டு விட்டு தேநீரைக் குடித்தான்.

அவன் மறுபடியும் தன் அறைக்கு வந்த போது மணி பத்தாகி விட்டது. கதவு வெறுமே சாத்தியிருந்ததைப் பார்த்து ஆச்சரியமடைந்து விட்டான். சாவி அவனிடம் இருந்தது. ஒருக்கால் ஹோட்டல்காரர்கள் திறந்திருப் பார்களோ என்ற சந்தேகத்துடன் கதவை மெதுவாக தள்ளினான்.

அறை இருட்டாக இருந்தது. திறந்து கொண்ட கதவுடன் கூடவே வராண்டாவிலிருந்த வெளிச்சம் ஒரு

ஒளிக்கிரணத்தைப் போல் அந்த அறைக்குள் நுழைந்தது. பனிப்படலத்தை நோக்கி டார்ச் விளக்கை அடித்தால் அந்த வெளிச்சம் ஒரு கற்றையாய் எப்படி விழுமோ அதே போல் கட்டில் மீது விழுந்தது. அவன் ஒரு வினாடி குழப்பத்துடன் பார்த்தான். அறை முழுவதும் பைகளும், பெட்டிகளும் இருந்தன. அவன் பார்த்தது அவற்றை அல்ல. கட்டில் மீது படுத்துக் கொண்டிருந்த பெண்ணை.

ரோஸ் நிற நைட்டீ, சிவந்த கன்னங்கள், மூடிக் கொண்டிருந்த போது கூட விசாலமாக தென்பட்ட கண்கள், செதுக்கினாற்போல் இருக்கும் மூக்கு.

ஒரு ஓவியனாக அந்த உருவத்தை தன் மனப் பலகையின் மீது முத்திரையாக பதித்துக் கொண்டான். அந்த வெளிச்சத்திற்கு புரண்டு படுத்தவள் மறுபடியும் சலனம் இல்லாமல் அப்படியே கண்களை மூடிப் படுத்திருந்தாள். இப்பொழுது அவள் முகம் நன்றாக தென்பட்டது. அவள் அழகையும் தோற்றத்தையும் ஒரே வார்த்தையில் சொல்ல வேண்டும் என்றால் அன்று மலர்ந்த பூவின் நடுவில் 'பனித் துளி' என்று சொல்லலாம்.

''எக்ஸ்க்யூஸ் மீ!''

''மேடம்!''

அவள் அப்பொழுதுதான் தூக்கத்திலிருந்து விழிப்பு வந்தது போல் கண்களைத் திறந்து ''யாரது?'' என்றாள்.

''மன்னியுங்கள். இது என்னுடைய அறை.''

''மை காட்!'' என்றாள் அவள் எழுந்து உட்கார்ந்து கொண்டு. ''இது உங்கள் அறையாக எப்படி இருக்க

முடியும்? இரண்டு நாட்களுக்கு முன்பே இதை நாங்கள் எடுத்துக் கொண்டு விட்டோமே.''

''இல்லை மேடம்! பக்கத்து ரூமிலிருந்து இரண்டு மணி நேரத்திற்கு முன்னால்தான் இந்த அறையை எனக்கு மாற்றிக் கொடுத்தார்கள்.''

''நான்சென்ஸ்! நாங்கள் இருக்கும் அறைக்கு உங்களை எப்படி மாற்றினார்கள்? வாங்க போய்க் கேட்கலாம்.''

மேனேஜர் அப்பொழுதுதான் ஹோட்டலுக்குப் பின் பக்கத்திலிருந்த தன் வீட்டிற்குப் புறப்பட்டுக் கொண் டிருந்தார். நான்கு மாணவர்களுடன் கார்த்திகேயன் வந்த போது பதறிப் போய் விட்டார். விஷயம் தெரிந்து கொண்டு மேலும் குழப்பத்தில் ஆழ்ந்து போனார்.

''அறையை காலி பண்ணுவதாகச் சொல்லி ஐநூறு ரூபாய் கொடுத்து அனுப்பினீங்களே சார்'' என்றார் கார்த்திகேயனிடம்.

''அட்வான்ஸ் அனுப்பச் சொல்லி போனில் நீங்கள்தானே சொன்னீங்க.''

''போலீஸ் கமிஷனர் அனுப்பிவைத்திருக்கும் கஸ்டமர் நீங்க. உங்களிடமிருந்து அட்வான்ஸா?''

''அறையை மாற்றிக் கொள்ளச் சொல்லி பையனைக் கூட அனுப்பி வைத்தீங்களே.''

''பையனை அனுப்பி வைத்தேனா? நானா?''

மேலும் இரண்டு நிமிடங்கள் பேசியபிறகு மேனேஜருக்கு நடந்ததெல்லாம் புரிந்து விட்டது. அது யார் போட்ட நாடகம் என்றும் புரிந்து விட்டது. பெண்களை

நோக்கி திரும்பி ''இதெல்லாம் என்ன மேடம்?'' என்று கேட்டார்.

''எங்களுக்கு என்ன தெரியும்? எங்கள் அறைக்குள் இரவு வேளையில் வந்த அவரிடம் கேளுங்கள்'' என்றார்கள் டபாய்ப்பது போல்.

மேனேஜர் ரூம் பாயிடம் ''உன்னிடம் சாமான்களை வேறு அறையில் கொண்டு போய் வை என்று சொன்ன ஆளை அடையாளம் காட்ட முடியுமா?'' என்று கேட்டார்.

அனுஜா குறுக்கிட்டு ''இதோ பாருங்கள். நாங்கள் எங்கள் கல்லூரி அதிகாரிகளிடம் பேசினோம். இரண்டு ரூம்களை புக் செய்யச் சொல்லி டெலிகிராம் ஒரு வாரத்திற்கு முன்னாடியே கொடுத்ததாக உறுதி படுத்தி னார்கள். நீங்கள் என்னவோ போலீசாரிடமிருந்து சிபாரிசு வந்ததும் எங்களுக்குத் தர வேண்டிய அறையைப் பிடுங்கி இன்னொருத்தருக்குத் தந்து விட்டீங்க. இப்பொழுது நாங்கள் அறையை 'நியாயமான' முறையில் திரும்ப பெற்றுக் கொண்டு விட்டோம். இனி இந்த அறையை யாருக்காகவும் விட்டுக் கொடுக்கமாட்டோம். யாரிடம் வேண்டுமானாலும் போய் சொல்லிக் கொள்ளுங்கள்'' என்று தீர்மானமாக சொல்லிவிட்டாள்.

பத்து நிமிடங்கள் வாக்குவாதம் நீடித்தது.

கார்த்திகேயன் இடையில் புகுந்து கொண்டு ''போகட்டும் விடுங்கள். அனாவசியமாக ரகளை செய்ய வேண்டாம். நான் வேறு ஹோட்டலுக்குப் போய்க் கொள்கிறேன் என்று சொல்லிவிட்டு மாடிக்கு போய் தன் சாமான்களையும் அரைகுறையாக பேக் செய்யப்பட்டிருந்த ஓவியத்தையும் எடுத்துக் கொண்டு வந்தான்.

''சாரி சர்! ஒரு அறை கூட காலியாக இல்லை. அந்த ஸ்டூடெண்ட்ஸ்களோடு சண்டை வைத்துக் கொண்டால் பிரச்னையாகி விடும்'' என்றார் மேனேஜர் மன்னிப்பு கேட்டுக் கொள்வதுபோல்.

''இட்ஸால் ரைட்!'' என்று கார்த்திகேயன் வெளியே வந்து விட்டான்.

ஆனால் நினைத்த அளவுக்கு சுலபமாக இருக்க வில்லை. எந்த ஹோட்டலிலுமே அறை கிடைக்கவில்லை.

சிம்லா நகரத்தின் சாலைகளில் நடப்பது அவ்வளவு சுலபம் இல்லை. திடீரென்று சாலை மறைந்து போய் படிகள் தென்படும். செங்குத்தாக சாலை மேலே போகும். அது போன்ற சாலையில் நடக்கும் போது மூச்சுமுட்டும். அவன் இரண்டு மூன்று ஹோட்டல்களில் விசாரித்து விட்டு திரும்புவதற்குள் நள்ளிரவாகி விட்டது.

அளவுக்கு மீறி பனி பெய்து கொண்டிருந்தது. கொஞ்ச தூரம் நடப்பதற்குள் தான் வழி தவறிவிட்டோம் என்று உணர்ந்தான் அவன். மினுக் மினுக்கென்று எரிந்து கொண்டிருந்த விளக்குகள் வீடுகளின் விளக்குகள் அல்ல. பனியில் பிரதிபலிக்கும் வெளிச்சம்.

பாலைவனத்தில் கானல் நீர் எப்படி மனிதனை பிரமையில் ஆழ்த்தி ஈர்த்துக் கொள்ளுமோ அது போல் பனியில் தொலை தூரத்து விளக்குகள் எதிர்ப்பதமான திசையில் தென்பட்டு மனிதனை ஏமாற்றி விடும். அவன் அதே போல் ஏமாந்து விட்டான்.

பனிப் புயல் தொடங்கிவிட்டது. வாய்விட்டு கத்தினாலும் ஏன் என்று கேட்க ஆளில்லாத விதமாக பனியால் போர்த்தப்பட்டு விட்டது அந்த ஊர். தன்னந்தனி

யாக அடியெடுத்து வைக்கவும் சிரமப்பட்டுக் கொண்டே அவன் கொஞ்சதூரம் நடந்தான். அந்தக் கஷ்டத்தை அனுபவித்தால் தான் தெரியும். முகத்தில் ஊசிகள் குத்துவது போல் பனி வந்து தாக்கியது. காதுகளைப் பிளக்கும் படியாக காற்றின் பேரிரைச்சல்.

அவன் மெதுவாக குனிந்தான். முழங்கால் மடிந்து சரிந்து விழுந்தான். அவன் ஓவியம் காற்றில் பறந்து தொலைவில் போய் விழுந்தது.

மிருகம் ஏதாவது செயலிழந்து இருக்கும் போது கழுகுகள் எப்படி பறந்து வந்து கொத்தவருமோ அதுபோல் அவன் கீழே விழுந்த அடுத்த நிமிடமே பனி அவன் மேல் படர்ந்து விட்டது.

ஃபிராஸ்ட் பைட்!

பயங்கரமான நோய். அது மட்டும் தாக்கினால் கைகளையும், கால்களையும், சருமத்தையும் தின்னத் தொடங்கிவிடும். 'அம்ப்யூடைட்' செய்து எடுத்தால் தவிர பிரயோஜனமில்லை என்ற அளவுக்கு நரம்புகளை நாசமாக்கி விடும்.

ஃபிராஸ்ட் பைட் தொடங்கி விட்டது. இன்னும் கொஞ்ச நேரம் அப்படியே இருந்தால் கார்த்திகேயன் மரணமடைந்திருப்பான்.

ஆனால் அதிர்ஷ்டம் நன்றாக இருந்தது.

ஏறக்குறைய அரைமணி நேரம்கழித்து ஹோட்டலுக்கு வெளியே வந்த ரூம் பாய் ஹமாலி அந்த வழியாக வர நேர்ந்தது. வழியில் பனியில் புதைந்து கிடந்த கருப்புத் துணி அவன் பார்வையில் பட்டது.

அருகில் போய்ப் பார்த்தால் அது ஒரு மனிதன். ஹமாலி குனிந்து பனியை கைகளால் அப்புறப்படுத்தினான். அப்பொழுதுதான் அது கார்த்திகேயன் என்று தெரிந்தது. தான் காப்பாற்றிய ஆள் கார்த்திகேயன் என்று தெரிந்ததுமே ஹமாலி மேற்கொண்டு தாமதம் செய்யவில்லை. கால்களையும், கைகளையும் தேய்த்து முதலில் உஷ்ணத்தை ஏற்படுத்த முயன்றான்.

கார்த்திகேயனின் சாமான்களையும், ஓவியத்தையும் பத்திரமாக எடுத்து வைத்தான். அந்தச் சிறுவனுக்கு கோபமும், யார் மீதென்றே தெரியாத ஆத்திரமும் ஏற்பட்டன. கார்த்திகேயன் ஹோட்டல் ரூமில் தான் ஓவியன் என்றும், தன்னுடைய ஓவியத்தை காண்பித்த போதே ஹமாலிக்கு அவனிடத்தில் பிரியமும் மதிப்பும் ஏற்பட்டன.

பிறகு அந்தப் பெண்கள் ஏமாற்றி அவனை வலுக்கட்டாயமாக அறையை காலி செய்ய வைத்த பொழுது முதலில் என்ன நடந்தது என்று அவனுக்கும் புரியவில்லை. பிறகு அது அந்தப் பெண்கள் ஆடிய நாடகம் என்று புரிந்தது. அந்தச் சாமர்த்தியத்தைப் பார்த்து அவன் மெய் மறந்து போய் விடவில்லை. தம்மை அவர்கள் வலையில் வீழ்த்தி விட்டதை எண்ணி கோபத்தால் கொந்தளித்துப் போய்விட்டான். கல்லூரி மாணவர்களோடு சண்டை வளர்ப்பதை விரும்பாமல் ஹோட்டல் மேனேஜர் பின் வாங்கி விட்டதையும் புரிந்து கொண்டான்.

ஆஸ்பத்திரியில் கார்த்திகேயனுக்கு சிகிச்சை அளித்த டாக்டர்களால் ஃபிராஸ்ட் பைட் பற்றி எந்த முடிவுக்கும் வர முடியவில்லை. கார்த்திகேயனுக்கு நினைவு திரும்புவதற்கு முன்னால் அவன் சம்பந்தப்பட்ட பொருட்களை

பரிசோதித்து பார்த்த பொழுது அதில் போலீஸ் கமிஷனர் கல்யாண்சிங்கின் விசிட்டிங் கார்ட் கிடைத்தது. அவருக்கு போன் செய்து கார்த்திகேயனைப் பற்றிச் சொன்னார்கள் டாக்டர்கள்.

கல்யாண்சிங் பதற்றமடைந்து வாயுவேகத்தில் ஆஸ்பத்திரிக்கு வந்தார்.

தான் யாருக்காக ஹோட்டல் அறையை புக் செய்திருந்தாரோ, அந்த நபர் நள்ளிரவில் சாமான்களை தூக்கிக் கொண்டு நடுத்தெருவில் பனிப்புயலில் சிக்கிக் கொள்ள வேண்டிய காரணம் என்னவென்று கமிஷனருக்குப் புரியவில்லை.

அப்பொழுது ஹமாலி குறுக்கிட்டு நடந்ததை எல்லாம் சொன்னான். ஏற்கெனவே அவனுக்கு ஆத்திரத்தில் உடல் பற்றி எரிந்து கொண்டிருந்தது. கமிஷனர் வந்து கேட்டதும் அந்தப் பெண்கள் செய்த மோசடியையும், கார்த்திகேயனின் பரிதாப நிலையைப் பற்றியும் சொன்னான். கார்த்திகேயன் நினைத்திருந்தால் அங்கேயே பெரிய ரகளை நடந்திருக்கும் என்றும், அவன் நல்லவ னாகவும், மென்மையான சுபாவம் படைத்தவனாகவும் இருந்ததால் தன் சாமான்களை எடுத்துக் கொண்டு பனியில் நடந்து வெளியேறி விட்டான் என்றும் சொன்னான்.

கமிஷனர் கல்யாண் சிங்கிற்கு இது சுயகௌரவத் திற்கு சம்பந்தப்பட்ட விஷயமாக தோன்றியது. இந்த அவமானம் தனக்கே நடந்து விட்டாற்போல் பாவித்தார்.

உடனே ஹோட்டலுக்கு போய் மேனேஜரை விசாரித்தார். அவரும் நடந்ததை எல்லாம் உறுதிப் படுத்தினார்.

''ரூம் நம்பர் 21, 22 ல் யார் யார் இருக்கிறார்களோ அழைத்து வா.'' கீழ் அதிகாரிக்கு கட்டளையிட்டார்.

இரண்டு நிமிடங்களுக்கு பிறகு கோவிந்த் அவருக்கு முன்னால் கொண்டு வந்து நிறுத்தப்பட்டான். அந்த இளைஞன் நடுங்கிக் கொண்டிருந்தான்.

''உன் பெயர்?''

''கோவிந்த்.''

''எங்கே படித்துக் கொண்டிருக்கிறாய்?''

''ஜவஹர்லால் யூனிவர்சிடி, டில்லி.''

''உன் நண்பர்கள் எல்லோரும் எங்கே?''

''எல்லோரும் ஷாப்பிங்கிற்கு போயிருக்காங்க.''

14

இந்த உரையாடல் இங்கே நடந்து கொண்டிருந்த அதே சமயத்தில் சந்தடி மிகுந்த கடைத் தெருவில் அனுஜா தன் சிநேகிதிகளுடன் வாக்குவாதம் புரிந்து கொண் டிருந்தாள்.

''ஆனாலும் இவ்வளவு டாக்ஸ் எதுக்கு எங்களுக்கு?'' சிநேகிதி ஒருத்தி அழாத குறையாக கேட்டாள்.

''நான் பந்தயத்தில் ஜெயித்து அறையை திரும்ப பெற்றால் என்ன கேட்டாலும் தருவதாக சொன்னீங்க, நினைவு இருக்கா?''

''அதான் ஏற்கெனவே இரண்டாயிரத்திற்கு பில் கொடுத்து விட்டாயே.''

''எல்லோருமே லட்சாதிபதிகளின் மகள்கள். உங்களுக்கு இரண்டாயிரம் ஒரு பொருட்டா?''

''சென்ட்ரல் மினிஸ்டரின் மகள் நீ. உனக்கு ஏன் இவ்வளவு பிடிவாதம்?''

''பிடிவாதம் இல்லை, பந்தயம். நான் மட்டும் தோற்றுப் போயிருந்தால் நீங்கள் சும்மா விட்டிருப்பீங்களா என்னை? ஆட்டி வைத்திருக்க மாட்டீங்களா?''

அங்கே ஹோட்டலில் கமிஷனர் கோவிந்தை கேட்டுக் கொண்டிருந்தார்.

''நேற்றிரவு கார்த்திகேயனின் குரலில் மேனேஜரோடு பேசியது யாரு?''

''.....''

''பதில் வேண்டும்.'' கடுமையாக ஒலித்தது கல்யாண்சிங்கின் குரல்.

''நா... நான்தான்'' என்றான் கோவிந்த்.

''கார்த்திகேயனுக்கு போன் செய்து அட்வான்ஸ் அனுப்பச் சொன்னது யாரு?''

''என் பிரண்ட்.''

''இதெல்லாம் இம்பர்ஸனேஷன் கீழே வரும் என்று உங்களுக்கு தெரியாதா?''

''நாங்கள்... நாங்கள்... இதையெல்லாம் விளையாட்டுக்காக செய்தோம்.''

''விளையாட்டாக செய்தீங்களா?'' நாற்காலியை பின்னால் தள்ளிக் கொண்டே ஆவேசமாக எழுந்தார் கல்யாண் சிங். ''நீங்கள் விளையாட்டுக்காக செய்தது ஒரு

ஆளை மரணத்தின் விளிம்பு வரையில் அழைத்துச் சென்றிருக்கிறது. பனிப்புயலில் சிக்கிக் கொண்டு வாழ்வுக்கும் சாவுக்கும் இடையே போராடிக் கொண்டிருக்கிறார் அவர். கல்லூரியில் ராகிங் செய்தது போல் இதையும் எண்ணி விட்டீர்களா? ஒரு நபரை நள்ளிரவில் பனிப்புயலில் வெளியே அனுப்புவதற்கு உங்களுக்கு எப்படி மனம் வந்தது? நீங்கள் மனிதர்கள்தானா?''

''ஆனால்... சார்...''

''நோ... நான் இனி எதையும் கேட்கப் போவதில்லை. மிஸ்டர் கோவிந்த்! யூ ஆர் அண்டர் அரெஸ்ட் ஃபார் இம்பர்ஸனேஷன் அண்ட் சீட்டிங்.''

★

மூச்சிரைக்க வந்து கொண்டிருந்த கிளாஸ்மேட்டை பார்த்து பெண்கள் அப்படியே நின்று விட்டார்கள்.

''என்ன நடந்தது?''

''கோவிந்தை போலீசார் அரெஸ்ட் செய்திருக்கிறார்கள்.''

''வ்... வாட்!''

''இப்பொழுதுதான் ஹோட்டலிலிருந்து அழைத்துக் கொண்டு போனாங்க. நாம் அறையை காலி செய்ய வைத்த அந்த அள் போலீசுக்கு ரிபோர்ட் செய்திருப்பான் போலிருக்கு. அவன் இங்கே கமிஷனர் ஆஃப் போலீஸுக்கு வேண்டியவன் என்று நினைக்கிறேன்.''

பெண்களின் முகத்தில் மிரட்சி தென்பட்டது. ''இப்போ என்ன செய்வது?'' என்றாள் ஒல்லியாக இருந்த பெண்.

''ஹோட்டலில் போலீசார் நமக்காக காத்துக் கொண்டு இருக்காங்க.'' கிளாஸ்மேட் சொன்னான்.

''ஊரைவிட்டு ஊர் வந்து எங்கேயோ கண்காணாத இடத்தில் போலீஸ் லாக்கப்பில் இருக்கணுமா?'' அழுகையினூடே புலம்பினாள் ஒரு பெண்.

''குழாயைத் திறக்காதே.'' எரிந்து விழுந்தாள் அனுஜா. ''நாம் என்ன தவறு செய்து விட்டோம்? பிரின்ஸ்பால் நமக்காக இரண்டு ரூம் புக் செய்திருக்கும் போது போலீசார் சிபாரிசு செய்ததால் ஒரு ரூமை கேன்சல் செய்துவிட்டு அவனுக்குக் கொடுத்து விட்டார்கள். நியாயமாக பார்த்தால் அது நம்முடைய ரூம். சின்ன நாடகம் ப்ளே செய்து நாம் திரும்ப அதை சம்பாதித்துக் கொண்டு விட்டோம். அவ்வளவுதானே?''

''ஆனால் அவன் போய் போலீசாரிடம் போய் தன் செல்வாக்கை பயன்படுத்தி நம்மை அரெஸ்ட் செய்ய வைத்து விட்டான். நம் மேல் என்னவெல்லாம் புகார் கொடுத்திருக்கிறானோ தெரியவில்லையே?''

''செல்வாக்கு இருப்பது அவனுக்கு மட்டும்தானா? நமக்கு இல்லையா?'' அனுஜா வேகமாக பக்கத்திலேயே இருந்த போஸ்டாஃபீசுக்கு போனாள். ஐந்து நிமிடங்களில் அவளுக்கு டில்லி எஸ்.டி.டி. கிடைத்து விட்டது.

''ஹலோ! மினிஸ்ட்ரி ஆஃப் ஃபைனான்ஸ்.''

''மிஸ்டர் தாவன்?''

''ஸ்பீக்கிங்.''

''நான்தான் அனுஜா. அப்பா இல்லையா?''

''இல்லை மேடம். பிரதமருடன் மீட்டிங்கில் இருக்கிறார்.''

''சின்ன பிரச்னையாகி விட்டது இங்கே.'' அனுஜா விவரங்களை சொன்னாள்.

''இத்தனை சின்ன விஷயத்திற்கு அப்பா எதுக்கு மேடம்? நானே பேசுகிறேன்.''

''ஆனால் ஹோட்டலில் எங்களுக்காக போலீசார் காத்திருக்காங்களாம்.''

மறுமுனையில் லேசான சிரிப்பு. ''நீங்க போய் சேரும் போது, இருக்க மாட்டார்கள். கவலையை விடுங்கள் மேடம்.''

இரண்டு நிமிடங்கள் கழித்து கமிஷனர் கல்யாண்சிங் மேஜையில் இருந்த போன் ஒலித்தது.

''ஹலோ!''

''டில்லியிருந்து ஃபைனான்ஸ் மினிஸ்டரின் பி.ஏ. தாவன் பேசுகிறேன்.''

''கமிஷனர் பேசுகிறேன். சொல்லுங்கள்.''

''ஹோட்டலில் மாணவர்களை அரெஸ்ட் செய்திருக்கீங்களாமே.''

''எல்லோரையும் இன்னும் அரெஸ்ட் செய்ய வில்லை. ஒருத்தன்தான் கிடைத்தான். இதில் உங்களுடைய இண்ட்ரெஸ்ட் என்ன?''

''அந்த ஸ்டூடெண்ட்ஸ் எங்களுக்கு வேண்டிய வர்கள்.''

''அப்படியா? அந்த ஏமாற்றப் பட்ட நபர் எங்களுக்கு வேண்டியவர்.''

''மிஸ்டர் கல்யாண்சிங்! அந்த மாணவர்களில் அனுஜா என்ற பெண் அமைச்சரின் மகள்.''

''அதனால் எந்த வித்தியாசமும் இருக்காது மிஸ்டர் தாவன்!''

மறுமுனையில் கொஞ்ச நேரம் மௌனம். ''நீங்க சின்ன விஷயத்தை பெரிது ஆக்கறீங்க கமிஷனர்.''

''நான் அதை சின்ன விஷயமாக நினைக்கவில்லை மிஸ்டர் தாவன்! என் சுயகௌரவத்திற்கு சம்பந்தப்பட்ட விஷயமாக நினைக்கிறேன். ஹோட்டலில் தங்கியிருந்த ஒரு நபரை ஏமாற்றி வெளியேற்றி, அவனை மரணத்தின் விளிம்பு வரையில் கொண்டு போய் விட்டது சின்ன விஷயம் எப்படி ஆகும்?''

மறுமுனையில் மௌனம். ''ஆகட்டும். நான் ஹோம் மினிஸ்டருடன் பேசுகிறேன்.''

''மிஸ்டர் தாவன்! என்னுடைய சர்வீஸ் ரிகார்டை நீங்க ஒருமுறை பரிசீலித்து விட்டால் நல்லது. பலமுறை எனக்கு பிரமோஷன் மறுக்கப்பட்டிருக்கிறது. கண்காணாத இடங்களுக்கு மாற்றப்பட்டிருக்கிறேன். எனக்கு இது போன்ற சிபாரிசுகள் பிடிக்காது என்று என்னைப் பற்றி தெரிந்தவர்கள் எல்லோருக்கும் தெரியும்.'' கமிஷனர் போனை வைத்து விட்டார்.

★

காவன் உறுதி மொழி கொடுத்த பிறகு அனுஜா சிநேகிதிகளுடன் சேர்ந்து ஹோட்டலுக்கு திரும்பிவந்து விட்டாள். கிளாஸ்மேட் சொன்னது போல் அங்கே போலீசார் இருக்கவில்லை. ஆனால் அங்கே போலீசார் இல்லாமல் போனதற்கு உண்மையான காரணம் வேறு. பெண்கள் மட்டும் நிம்மதியாக மூச்சு விட்டுக் கொண்டார்கள்.

''நாம் அறையை காலி செய்ய வைத்த அந்த ஆள் ரொமப் ஸ்மார்ட்டாக இருக்கிறான் இல்லையா?'' ஒரு பெண் சொன்னாள்.

''ஸ்மார்ட்டா! நன்றாக சொன்னாய் போ. வாயில் விரலை வைத்தாலும் கடிக்கத் தெரியாத அப்பிராணியாக இருக்கிறான்.''

அந்தச் சமயத்தில் ஹமாலி அவர்களுக்கு தேநீர் சப்ளை செய்து கொண்டிருந்தான்.

யாரோ சொன்னார்கள். ''பெங்காலியாக இருப்பான் என்று நினைக்கிறேன். பைஜாமா ஜிப்பா போட்டுக் கொண்டு தோளில் ஜோல்னா பையுடன் இருந்தானே.''

''இல்லை. அவர் தமிழ்க்காரர்தான். சென்னை யிலிருந்து வந்திருக்கிறார்.'' என்றான் ஹமாலி. அதுவரை அவன் அவர்களுடைய பேச்சை பொறுமையாக கேட்டுக் கொண்டிருந்தான். இதயத்தில் தீ பற்றி எரிந்து கொண்டிருந்தது. அதற்கு மேல் தாங்க முடியாமல் சொல்லி விட்டான்.

''நீங்கள் நினைத்துக் கொண்டிருப்பது போல் அவர் சாதாரணமான நபர் இல்லை. சிறந்த ஓவியர். அவர் வரைந்த ஓவியங்களை நீங்கள் பார்த்திருக்கீங்களா? பார்த்திருந்தால் இப்படி ஏளனமாக பேச மாட்டீங்க. நான் இங்கே டீ, காபி சப்ளை செய்யும் ரூம் பாய். என்னிடம் கூட அவர் ரொம்ப பரிவோடு பேசினார். நீங்கள் நினைப்பது போல் அவர் போய் போலீசாரிடம் சொல்ல வில்லை. போலீஸ் வரையிலும் போவானேன்? அவர் கொஞ்சம் குரலை உயர்த்தி கேட்டிருந்தால் மேனேஜர் அவருக்கு மறுபடியும் ரூமை கொடுத்திருப்பார்.

மென்மையான சுபாவம் கொண்டவரானதால் ஒன்றும் சொல்லாமல் வெளியில் சென்று பனியில் புதைந்து போய் விட்டார். சாகும் தருவாயில் இருந்த அவரை நான்தான் வெளியே இழுத்து ஆஸ்பத்திரியில் கொண்டு சேர்த்தேன்.''

அங்கிருந்தவர்களின் முகங்களில் ரத்தமெல்லாம் வற்றிவிட்டது. ஹிமாலியின் மனக் கொந்தளிப்பு கொஞ்சம் அடங்கியது. எல்லோரையும் பார்த்தான்.

''அவருடைய சட்டைப் பையில் போலீஸ் கமிஷனரின் விசிட்டிங் கார்ட் இருந்தது. டாக்டர்கள்தான் அதைப் பார்த்து விட்டு போலீஸ் கமினஷரைக் கூப்பிட்டார்கள். என்ன நடந்தது என்று கமிஷனருக்குச் சொன்னது மட்டும் நான்தான்.''

அந்த அறையில் எறும்பு ஊர்ந்தாலும் கேட்கும் அளவுக்கு நிசப்தம்!

அதற்குள் கதவின் அருகில் சந்தடி கேட்டது. எல்லோரும் அந்தப் பக்கம் திரும்பிப் பார்த்தார்கள்.

கோவிந்த் உள்ளே வந்து கொண்டிருந்தான்.

★

''இன்னும் கொஞ்ச நேரத்தில் நான் போகலாமா டாக்டர்?'' கார்த்திகேயன் கேட்டான். ''இன்னும் ஒரு மணி நேரத்தில் நேஷனல் காம்பெடிஷன் தொடக்க விழா நடக்கப் போகிறது.''

''நீங்கள் ரொமப் பலவீனமாய் இருக்கீங்க.''

''பரவாயில்லை. கைவிரல்களைத் தவிர எல்லாம் சுவாதீனத்தில் இருக்கின்றன.''

''ஃபிராஸ்ட் பைட்டின் பாதிப்பு அது. இன்னும் அரைமணி நேரம் அந்தப் பனியில் அப்படியே இருந் திருந்தால் ஆபரேஷன் பண்ண வேண்டியிருந் திருக்கும். ஃபிராஸ்ட் பைட் ரொம்ப ஆபத்தானது.''

''அதிர்ஷ்டம் என்னை ஹமாலி உருவத்தில் வந்து காப்பாற்றி இருக்கிறது என்று சொல்லுங்கள்.'' சிரித்தான் கார்த்திகேயன். ''அப்போ நான் வரட்டுமா?''

''ஒரு நிமிஷம்.'' டாக்டர் அப்பொழுது தான் வந்த எக்ஸ்ரேயை பார்த்தார். திருப்தியடைந்தவராக ''ஓ.கே. எல்லாம் க்ளியராகத்தான் இருக்கு. நீங்கள் போகலாம். உங்கள் உடம்பு சரியாவதற்கு பத்து பதினைந்து நாட்கள் ஆகும். பளுவான வேலைகள் எதையும் செய்யதீங்க.''

கார்த்திகேயன் வெளியே வந்த போது போலீஸ் காரர்கள் தயாராக இருந்தார்கள். சாமான்களை அவர் களிடம் தந்து விட்டு சேர்ந்து புறப்பட்டான்.

''ஏதோ வேலையாக கமிஷனர் அய்யா அர்ஜெண்டாக கௌசாலிக்குப் போகிறார் சார். நீங்களும் வருவதாக இருந்தால் போன் செய்யச் சொன்னார். காரில் போகிறாராம்'' என்றான் கான்ஸ்டபிள்.

பப்ளிக் பூத்திலிருந்து கார்த்திகேயன் போன் செய்தான். கல்யாண்சிங் கேட்டார். ''நீங்களும் வர்றீங்களா? மாலையிலேயே திரும்பி வந்து விடலாம்.''

''எனக்கும் பார்க்க வேண்டும் போல்தான் இருக்கு. ஆனால் இன்னும் கொஞ்ச நேரத்தில் போட்டிகள் தொடங்கப் போகின்றன. இல்லாவிட்டால் கௌசாலியை பார்க்கும் வாய்ப்பை நழுவவிடுவேனா?''

ஹிமாசல் பிரதேசத்தில் சிம்லாவிலிருந்து இருநூறு கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது கௌசாலி. ராமரின் தாயாரான கௌசல்யாவின் பிறந்த ஊராக இதை சொல்லுவார்கள். புராண காலத்து சிறப்பைக் காட்டிலும் இன்னொரு விசேஷமும் இருந்தது. வெள்ளைக்காரர்கள் ஆண்ட பொழுது ஊர் எப்படி இருந்ததோ அதைக் கொஞ்சமும் மாற்றாமல் கடந்த நூறு ஆண்டுகளாக ஊரை அப்படியே விட்டு வைத்திருந்தார்கள். அந்த ஊரில் இருக்கும் பொழுது 19ம் நூற்றாண்டில் இருப்பது போலவே இருக்கும். இந்தச் சிறப்பைப் பற்றி நிறைய பேருக்குத் தெரியாது.

''நான் நாளைக்குத் திரும்பி வந்து விடுவேன். நீங்கள் ஹோட்டலிலேயே இருங்கள்.''

''திரும்பவும் அந்த அறையை எனக்காக காலி பண்ணச் சொன்னீங்களா?''

''அவர்களே காலி செய்து விட்டார்கள். மிஸ்டர் கார்த்திக்! இனி அந்த விஷயத்தை மறந்து விடுங்கள். கடைசியாக ஒரு விஷயம்.''

''என்ன விஷயம் கல்யாண்ஜீ?''

''சிம்லா உங்களை இவ்வளவு அவமரியாதையாக வரவேற்பு கொடுத்ததற்கு சாரி.''

''அப்படி எதுவும் இல்லை.'' போனை வைத்து விட்டான்.

ஹோட்டல் பிரைடில் மேனேஜர் மன்னிப்பு கேட்டுக் கொண்டு சாவியைக் கொடுத்தார். பழைய அறையையே அவனுக்குத் தந்து விட்டார்கள். பூட்டைத் திறந்த

பொழுதுதான் தெரிந்தது கைவிரல்களின் வலி. அவ்வளவு வலியிலும் அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

'பனி' எப்படி ஏதும் அறியாதது போல் தென்படு கிறது? எவ்வளவு கடுமையாக உடலைத் துளைத் தெடுக்கிறது?

அறைக்குள் நுழைந்தான். ரூம் பாய் சாமான்களை கொண்டு வந்து உள்ளே வைத்து விட்டுப் போனான். அவன் விளக்கை போட்டான். வெளியே காற்றின் சத்தம் ஹோவென்று கேட்டுக் கொண்டிருந்தது. ஜன்னல் கதவின் இடுக்கு வழியாக காற்று உள்ளே பலமாக வீசிக் கொண்டிருந்தது. அந்த வேகத்திற்கு மேஜை மேல் வைத்திருந்த காகிதம் ஒன்று படபடத்தது. அதன் மீது பேப்பர் வெயிட்டுக்கு பதிலாக ரோஜா மலர்களின் பொக்கே.

அவன் வியப்படைந்தவனாக அதை எடுத்துப் படித்தான்.

கார்த்திகேயன் அவர்களுக்கு,

வணக்கம். என் பெயர் அனுஜா. உங்கள் பெயர் எப்படித் தெரிந்தது என்று வியப்பாக இருக்கிறதா? உங்களை அறையை விட்டு 'துரத்தி விட்டவள்' நான். எனக்கு உங்கள் பெயர் தெரியாமல் எப்படி இருக்கும்? இப்பொழுது உங்களுக்கு இந்தக் கடிதம் எழுதுவதற்குக் காரணம் உங்களிடம் மன்னிப்பு கேட்டுக் கொள்வதற்காக அல்ல.

ஆம். உண்மையில் அதற்காக அல்ல. இட்ஸால் இன் தி கேம். துரதிர்ஷ்டவசமாக அது இவ்வளவு பயங்கரமான விளைவுகளுக்கு வழிவகுத்து விட்டது. அது வேறு

விஷயம். நான் இந்தக் கடிதம் எழுதுவதற்குக் காரணம் உங்கள் நடவடிக்கைதான்.

போலீசாரிடமிருந்து வந்த பிறகு கோவிந்த் அங்கே நடந்ததையெல்லாம் சொன்னான். கமிஷனர் இதை தன் சுயகௌரவத்திற்கு நேர்ந்த இழுக்காக எடுத்துக் கொண்டு தீவிரமாக செயல்பட முற்பட்ட போது நீங்கள் தலையிட்டு கல்யாண் சிங்கிற்கு நயமாக எடுத்துச் சொன்ன விதத்தை அவன் எங்களிடம் விவரித்துச் சொன்னபோது என் நடவடிக்கையை நினைத்து வெட்கத்தால் குறுகிப் போய் விட்டேன். நீங்கள் சாமான்களை எடுத்துக் கொண்டு ஹோட்டலை விட்டுத் தலை குனிந்தபடி வெளியேறிய போது நாங்கள் தூணுக்குப் பின்னால் மறைந்தபடி நின்று கொண்டு, வாய்பொத்தி சிரித்தபடி வேடிக்கை பார்த்தோம். நீங்கள் பனிப்புயலில் சிக்கிக் கொண்ட விஷயம் மட்டும் இப்பொழுதுதான் தெரிந்தது. ஆனாலும் உங்களுக்குக் கோபம் வரவில்லையா? போகப் போக என்னவாகி யிருக்குமோ தெரியாது. ஆனால் எங்கள் கோவிந்தை மட்டும் போலீசாரின் பிடியிலிருந்து காப்பாற்றியது நீங்கள்தானே?

போலீஸ் கமிஷனரிடம் ''போகட்டும் விடுங்கள். சின்னப் பசங்கள்! அவர்கள் ரகளை செய்யாமல் வேறு யார் செய்யப் போகிறார்கள்'' என்று சொன்னீர்களாம். இதோ இந்த இடத்தில்தான் தோற்றுப் போய் விட்டேன் நான்.

கேப்ரியல் நகாரா எழுதிய பாடல் ஒன்று நினைவுக்கு வந்தது. நீங்கள் அந்த வகையைச் சேர்ந்த ஆதிவாசியோ என்று தோன்றியது.

ஒரு காலத்தில்... முன்னொரு காலத்தில்
அவர்கள் அற்புதமாக சிரிப்பார்கள்,

அவர்கள் மனமும் சேர்ந்து சிரிக்கும்,
கண்கள் நலனை விசாரிக்கும்
இப்பொழுது இதழ்கள் மட்டுமே சிரிக்கின்றன
அப்பொழுது இதயத்தோடு கைகுலுக்கிக் கொள்வார்கள்.
இப்பொழுது கைகளால் மட்டுமே குலுக்கிக் கொள்கிறார்கள்
ஆனால் என்னை நம்பு கண்ணா!
எனக்கும் உன்னைப் போல் சிரிக்க வேண்டும் போலிருக்கு
உன் வயதில் நான் இருந்த பொழுது
நான் எப்படி சிரித்து மகிழ்ந்தேனோ,
மறுபடியும் எனக்கு அது போல் சிரிக்கக் கற்றுத்தர மாட்டாயா.....

நன்றாக இருக்கிறதா? என் அரைகுறைப் புலமையில் எழுதிய தமிழ்ப் பாடல். தமிழ் என்றதும் நினைவுக்கு வருகிறது. நீங்கள் தமிழர்தானே. நானும் தமிழ்க்காரிதான். வேலை ரீதியாக (மன்னித்துக் கொள்ளுங்கள். என் தந்தை அமைச்சர் என்பதால் அரசியல் ரீதியாக என்று சொல்ல வேண்டுமோ) - டில்லியில் இருக்கிறோம். அது போகட்டும். என்ன சொல்லிக் கொண்டிருந்தேன்? நினைவுக்கு வந்து விட்டது. உங்கள் நடத்தையைப் பார்த்தால் எனக்கு கேப்ரியல் நகாராவின் பாட்டு நினைவுக்கு வந்தது. இந்தக் காலத்தில் உங்களைப் போன்ற ஆதிகாலத்து மனிதர்கள் கூட இருப்பார்களா என்று தோன்றியது.

என் தாய் அடிக்கடி சொல்லிக் கொண்டிருப்பாள். ''நல்ல மனிதர்களோடு சகவாசம் வைத்துக் கொள். கொஞ்ச மாவது உருப்படுவாய்'' என்று. அதனால் நீங்கள் எங்களை மன்னித்துவிட்டு எங்களுடன் ஒரு கோப்பை தேநீர் அருந்தினால் நல்ல சகவாசம் கிடைக்கும். உங்களுக்கு இல்லை எங்களுக்கு.

உங்களுக்கு ஒரு கோப்பை தேநீரை இலவசமாக பருக வேண்டும் என்று விருப்பமிருந்தால் இந்த ரோஜா மலர்களை ஏற்றுக் கொள்ளுங்கள். எங்களைப் போன்ற இளவட்ட சிறுசுகளோடு சிநேகம் பண்ணிக் கொள்ள விருப்பம் இல்லாவிட்டால் அந்த பொக்கேயை வெளியே வீசியெறிந்து விடுங்கள். ஆனால் ஒரு விஷயத்தை மட்டும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். குளிர்காலத்தில் சிம்லாவில் ஒரு பெண் தேநீருக்குக் கூப்பிட்டால் யாரும் மறுக்க மாட்டார்கள். அது அந்தப் பெண்ணின் சிறப்பு அல்ல. தேநீரின் சிறப்பு.

நான் போகிறேன - பக்கத்து அறைக்கு - தேநீருக்காக.

அனுஜா

அவன் நாற்காலியில் பின்னால் சாய்ந்து கொண்டே வாய்விட்டுச் சிரித்தான். உரத்த குரலில் இதயமெல்லாம் சந்தோஷத்தால் பூரிக்க வாய்விட்டுச் சிரித்தான். அது சந்தோஷத்தால் மட்டுமே ஏற்பட்ட சிரிப்பு அல்ல. சிறு குழந்தைகள் குறும்புத்தனம் செய்யும் போது வரும் சிரிப்பு. கடிதத்தை கவனமாக மடித்து வைத்து விட்டு அதன் மீது பூங்கொத்தை வைத்து விட்டு எழுந்தான்.

''தாங்க்ஸ்!''

கதவிற்கு அருகிலிருந்து கேட்டது. திடுக்கிட்டு நிமிர்ந்தான். அவள் சிரித்துக் கொண்டே ''வருகிறீர்கள் என்றுதானே அர்த்தம்'' என்றாள்.

அவனால் உடனே பதில் சொல்ல முடியவில்லை. அவளை வெளிச்சத்தில் பார்ப்பது அதுதான் முதல் தடவை. அவனுக்குள் இருந்த ஓவியன் சட்டென்று விழித்துக் கொண்டான்.

சௌந்தரிய தேவதை என்றால் அவள்தான். அது கவிஞனுக்கும், ஓவியனுக்கும் மட்டுமே புரியும். கவிஞனையும், ஓவியனையும் சிலிர்க்க வைக்கும் அழகு அவளுடையது.

''என்ன குருஜீ? ஷேக்ஸ்பியரின் டுபி நாட் டுபியைப் போல் எங்கள் அறைக்கு வரலாமா வேண்டாமா என்று யோசித்துக் கொண்டு இருக்கீங்களா? வாங்க... வாங்க... பைதிபை, என் பெயர் அனுஜா.'' என்று அவனை அழைத்துச் சென்றாள்.

அரை மணி நேரம் ஒரே அரட்டை. அவனைப் பேசவே விடவில்லை. எல்லாவற்றையும் அவர்களே பேசினார்கள். ''தவறு எங்களுடையது இல்லை. எங்கள் அறையை உங்களுக்கு தந்துவிட்டார் அந்த மேனேஜர்'' என்று பெயருக்கு மன்னிப்பு கேட்டுவிட்டு, பிறகு ஃபிராஸ்ட் பைட் என்றால் என்னவென்று விவரம் கேட்டு தெரிந்து கொண்டு, பிகாஸோவையும் மோனாலிசாவையும் ஒப்பிட்டு ஜோக் அடித்துக் கொண்டு அவர்களுக்குள்ளேயே ஏதேதோ பேசிக் கொண்டு, அவனை முற்றிலுமாக பார்வையாளனாக்கிவிட்டு அரைமணிக்குப் பிறகு அவனை விட்டார்கள்.

அவனுடன் சேர்ந்து அனுஜாவும் அறைக்குள் வந்தாள்.

''உங்களுடைய வயது என்ன?''

திடீரென்று அந்தப் பெண் கேட்ட கேள்விக்கு அவன் அதிர்ந்து போய், பிறகு சொன்னான்.

''ப்ச்'' என்றாள். உங்களை குருஜீ என்று கூப்பிட்டால் ஏதோ மகாபாரதத்தில் துரோணாசாரியரை அழைப்பது

போல் இருக்கிறது. மித்ராஜீ என்று அழைக்கிறேன். நன்றாக இருக்கு இல்லையா?''

அவன் பதில் சொல்லவில்லை.

''அது சரி. உங்களுடைய ஓவியங்களை காண்பிக்கிறீங்களா? அதான் நாளைக்குப் போட்டியில் வைக்கப் போகிற ஓவியம்.''

அவன் ஓவியத்தை மூடியிருந்த காகித உறையை விலக்கப் போனான். விரல்கள் வலித்தன. அவன் வேதனையை கவனித்து விட்டு அவளாகவே அதை வாங்கிக் கொண்டு பிரித்தபடி சொன்னாள்.

''எங்களுக்காக நீங்கள் இன்னும் பத்து நாட்கள் இந்த வலியோடு கஷ்டப்பட வேண்டியிருக்கும். பைதிபை நான் அடிக்கடி மன்னியுங்கள் என்றும் நீங்கள் பரவாயில்லை என்றும் பரஸ்பரம் சொல்லிக் கொள்வது நன்றாக இருக்காது இல்லையா?''

''ஆமாம். நன்றாக இருக்காது.'' என்றான் அவன்.

''அதனால்தான் சொல்லவில்லை.'' அவள் கடைசி முடிச்சை அவிழ்த்து விட்டு, சிரித்துக் கொண்டே ஓவியத்தை வெளியே எடுத்தாள்.

மரக்கிளைக்கு பின்னாலிருந்து திடீரென்று மலைப் பாம்பு வெளியே வந்தாற்போல்...

அவன் வாயடைத்துப் போய்விட்டான். முதல்நாள் வீசிய பனிப்புயல் அந்த ஓவியத்தில் இருந்த வர்ணங்களை விழுங்கிவிட்டிருந்தது.

ஃபிராஸ்ட் பைட் அவனை, அவன் ஓவியத்தை விழுங்கி விட்டிருந்தது. அவன் முகம் கூட அந்த

ஓவியத்தைப் போலவே கறுத்து களையிழந்து விட்டது. வருத்தம் பரிசு கிடைக்காதே என்பதற்காக. அல்ல.

பச்சைப் பசேலென்று வயல்களும், சுதந்திரமாக புற்களை மேய்ந்து கொண்டிருக்கும் பசுமாடுகளும், அவற்றை மேற்பார்வையிட்டுக் கொண்டிருந்த சிறுவர்களும், புல்லை அறுத்துக் கொண்டிருந்த கிராமத்துப் பெண்களும், கிராமத்தை நோக்கி பயணித்துக் கொண்டிருக்கும் மாட்டு வண்டிகளும், அந்த வண்டிச் சக்கரத்தின் சுவடுகள் பதிந்த சாலைகளும், குளம், வானத்தில் பறக்கும் கொக்குகள் எல்லாமே... அத்தனையுமே ஒரே குண்டு விழுந்து நாசமாகி விட்டாற்போல்.

எல்லாம் நாசமாகி விட்டதே என்பதற்காகக் கூட இல்லை வருத்தம்.

அவற்றோடு சேர்ந்து தானும் போகாமல் போய் விட்டோமே என்றுதான்.

அனுஜா மெதுவாக அவனிடம் வந்தாள். அவன் இன்னும் அதிர்ச்சியிலிருந்து மீளவில்லை. ''இது... இது இனிமேல் பயன்படாது இல்லையா?'' ஓவியத்தை பார்த்து இயலாமையுடன் கேட்டாள்.

அவன் பதில் பேசவில்லை. வெறுமையுடன் பார்த்துக் கொண்டே இருந்தான்.

தன் உணர்ச்சிகளை அடக்கிக் கொண்டே அவள் சொன்னாள். ''இதெல்லாம் என்னால்தான்... என்னால்... தான். இப்படி ஏன் நடந்தது? நடக்காமல் இருந்திருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்? இப்பொழுது தானே கிண்டல் செய்தேன், நான் மன்னியுங்கள் என்று சொல்வதும், நீங்கள் பரவாயில்லை அதற்கென்ன வந்தது

என்று சொல்வதும் எதற்காக என்று.'' அவள் கண்களில் நீர் தளும்பியது தெளிவாக தெரிந்தது. ''இப்பொழுது மன்னியுங்கள் என்று கேட்கவும் முடியாத அளவுக்கு பெரிய தவறு இது. ரொம்ப மோசமானது. என்னால்தான்...'' வார்த்தைகள் வராமல் சிறு பெண்ணைப் போல் அழுது விட்டாள். இதயத்திலிருந்து துக்கம் பொங்கி வெளியில் வந்தது.

அவளைத் தேற்றுவது போல் ''அழாதே... அழாதே அனுஜா! இப்போ என்னவாகிவிட்டது?'' என்றான்.

அவள் இதழ்களை இறுக்கிக் கொண்டு அழுகையை அடக்க முயன்றாள். ''ஒன்றும் ஆகவில்லையா? ஒன்றுமே ஆகவில்லையா?'' என்றாள்.

தன்னையும் விட அவள் அதிகமாக வருத்தப் படுவதை உணர்ந்து அவளைச் சமாதானப்படுத்துவதற்காக ''அடுத்த வருஷம் போட்டியில் கலந்து கொள்கிறேன். சரிதானே?'' என்றான்.

''போட்டியா? போட்டியில் கிடைக்கும் பத்தாயிரத்திற்காகவா? உண்மையைச் சொல்லுங்கள். எவ்வளவு நாளாக போட்டிருப்பீங்க இந்த ஓவியத்தை? அவ்வளவு நாளும் வீணாகி விட்டதற்காகவா? இந்த நஷ்டம் அந்த நாட்களின் கணக்கிலா? இல்லை... உண்மையாகவே இல்லை. நான் வருத்தப்படுவேனோ என்று நீங்கள் சாதாரணமாக இருப்பதற்கு முயற்சிக்கிறீங்க. எனக்குத் தெரியும். இந்த ஓவியத்தை வரைவதற்கு நீங்கள் எத்தனை கஷ்டப்பட்டிருப்பீங்கன்னு எனக்குத் தெரியும். என்னை கோபித்துக் கொள்ளுங்கள். அடியுங்கள். நீங்கள் இப்படிச் சாதாரணமாக இருந்தால் என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.''

அவள் ஹிஸ்டீரிக்காக அழத் தொடங்கியதும் அவன் நெகிழ்ந்து போய் விட்டான். அவனுக்கு வருத்தம் மலையளவிற்கு இருந்தது. ஆனால் அவள் வருத்தம் கண்முன்னாடி வெளிப்படையாக தெரிந்தது.

''இதோ பாரு. நான் இன்னொரு ஓவியம் தீட்டுகிறேன். இதை விட சிறப்பாக வரைகிறேன். போதுமா?'' என்றான்.

அவள் மெதுவாக நிமிர்ந்தாள். ''நிஜமாகவா!'' என்றாள். ஜன்னல் வழியாக விழுந்த வெளிச்சம் கண்ணீர்த் துளிகளின் மீது பட்டு பிரதிபலித்துக் கொண்டிருந்தது.

''நிஜமாகத்தான்'' என்றான்.

''என் மேல் சத்தியமாக?'' அழுகையையும் மறந்து போய் கேட்டாள்.

அவ்வளவு வருத்தத்திலும் அவனுக்குச் சிரிப்பு வந்தது. ''சத்தியம்!'' என்றான்.

அவள் சட்டென்று நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு ''அப்படி என்றால் போடுங்கள்'' என்றாள்.

அவன் அதிர்ச்சியடைந்தவனாக ''இப்பொழுதா?'' என்றான்.

''இப்பொழுதே.''

''இதோ பாரு. உனக்கு ஓவியத்தைப் பற்றி ஒன்றும் தெரியாதுன்னு நினைக்கிறேன். அதற்கு மூட் வேண்டும். தினமும் இரண்டு மூன்று மணி நேரம் வரைந்தால்தான் போட்டு முடிக்க ஒரு வாரம் பத்து நாள் ஆகும்.''

''அதாவது முப்பது மணி நேரம். இன்னும் ஒரு மணி நேரத்தில் கண்காட்சி தொடங்கப் போகிறது. முதலில் இந்த

ஓவியத்தை கண்காட்சியில் வைத்து விடுவோம். அப்புறமாக இதை மாற்றி புதியதை வைத்து விடுவோம்.'' தனக்குள் பேசிக் கொள்வது போல் அவள் வேக வேகமாக சொல்லி முடித்தாள்.

ரொம்ப சுலபமாக அவள் சொல்லிவிட்டதைக் கேட்டு அவன் வாயடைத்துப் போய் விட்டான்.

''எழுந்திருங்கள். போய் கேன்வாஸும், வர்ணங் களையும் வாங்கிக் கொண்டு வந்து விடுவோம்.''

''உனக்கு உண்மையாகவே பைத்தியம் பிடித்து விட்டது. நாளை மாலைக்குள் எப்படி ஓவியம் போட முடியும்? எனக்கு மூன்று நான்கு மாதங்கள் ஆகும் போட்டு முடிக்க.''

''பின்னே முப்பது மணி நேரம் என்று சொன்னீங்களே?''

''ஆபீஸில் உட்கார்ந்து கொண்டு வேலை பார்ப்பது போல் போட்டால் முப்பது மணி நேரம். ஆனால் தினந் தோறும் போட மாட்டேன். நான் நாலைந்து நாட்களுக்கு ஒரு முறை ஓரிரண்டு மணி நேரம் போடுவேன். சில சமயம் வெறுமே ஓரிரு கோடுகளைப் போட்டு விட்டு சும்மா இருந்த நாட்களும் உண்டு. அதெல்லாம் உனக்குப் புரியாது.''

அவள் அதைப் பொருட்படுத்தாமல் ''தினமும் ஏன் வரைய மாட்டீங்க?'' என்று கேட்டாள்.

''இது க்ரியேடிவ் வர்க் என்பதால். இதற்கு ஒரு மூட் வேண்டும். அதுதானே தவிர மூன்று நாட்களுக்கு ஒன்று வீதம் வருடத்திற்கு நூறு படங்களைப் போடுவதெல்லாம் நடக்காத காரியம்.''

''நான் மூடை வரவழைக்கிறேன்.''

''எப்படி வரவழைப்பாய்?''

அவள் நாற்காலியை விட்டு எழுந்து கொண்டு நாடகப்பாணியில் ''ஒவ்வொரு ஆணின் வெற்றிக்குப் பின்னால் ஒரு பெண் இருப்பாள்'' என்று நிறுத்தி விட்டு ''உங்களுக்குப் பின்னால் போன் மணி அடிக்கிறது'' என்றாள்.

அவன் ரிசீவரை எடுத்து ''ஹலோ!'' என்றாள்.

''ஹலோ! நான்தான் கல்யாணி. சிம்லா எப்படி இருக்கு? எக்ஸிபிஷன் தொடங்கிவிட்டதா?''

''இன்னும் ஒரு மணி நேரத்தில் தொடங்கப் போகிறது'' என்று நிறுத்திவிட்டு ''கல்யாணி! ஒரு சின்ன பேட் நியூஸ்! என் ஓவியம் பாழாகிவிட்டது'' என்றான்.

''வ்வாட்!''

''ஆமாம் கல்யாணி! நேற்றிரவு பனியில் பாழாகிவிட்டது.''

''பிரயோஜனப்படவே படாதா?''

''லாபம் இல்லை கல்யாணி.''

மறுமுனையில் கொஞ்சம் நிசப்தம். ''ஐயாம் சாரி.''

''பரவாயில்லை.''

''எனக்காக நீங்கள் அப்படி சொல்றீங்களே தவிர அங்கே ரொம்ப வருத்தப்பட்டுக் கொண்டு இருப்பீங்க.''

''கொஞ்சம் வருத்தமாகத்தான் இருந்தது. ஆனால் என்ன செய்ய முடியும்?''

''எப்படிப் பாழாகிவிட்டது உங்கள் ஓவியம்? உங்கள் உயிரையும் விட மேலாக பார்த்துக் கொள்வீர்களே. அன்றைக்குக் கூட என் கையால் ஓவியம் கிழிந்து போன போது நீங்கள் எப்படி துடிதுடித்துப் போனீங்க?''

அவன் தன் கைவிரல்களைப் பார்த்துக் கொண்டே ''பரவாயில்லை கல்யாணி! நடந்தது என்னவோ நடந்து முடிந்து விட்டது'' என்றான். அவள் மறுமுனையில் ஏதோ சொல்லிக் கொண்டிருந்தாள். அவன் ஒரு கையால் மௌத்பீசை மூடிக் கொண்டே ''என் மனைவி கல்யாணி'' என்று அனுஜாவிடம் சொல்வதற்காக திரும்பினான். அந்தப் பெண் அறையில் இல்லை. எப்பொழுது போனாளோ தெரியாது. போய் விட்டிருந்தாள்.

''யாரிடம் என் மனைவின்னு சொல்றீங்க?'' மறுமுனையிலிருந்து கேட்டாள் கல்யாணி.

''பக்கத்து அறையில் இருந்த டெலிகேட்ஸ், அனுஜா என்று. இல்லை... போய் விட்டாள். உன் உடம்பு எப்படி இருக்கு?''

''அப்படியே தான் இருக்கு. அது போகட்டும். நீங்கள்தான் போட்டியில் கலந்து கொள்ளப் போவதில்லை என்று சொன்னீங்களே. மாலை பிளைட்டில் வந்து விடுவீர்களா?''

''எனக்கு போட்டியில் அதிக ஆர்வம் இல்லை. நாட்டின் பல பகுதிகளிலிருந்து வரும் ஓவியர்களை எல்லாம் சந்திக்க வேண்டும் என்பதற்காகவே கண்காட்சி முடியும் வரையில் இருக்கணும் என்று நினைக்கிறேன்.''

அவள் தொடர்ந்து பிசினெஸ் விஷயங்களைப் பற்றிப் பேசத் தொடங்கினாள். ஐந்து நிமிடங்களுக்குப் பிறகு

லைன் கட் ஆகிவிட்டது. இரண்டு நிமிடங்கள் கழித்து மறுபடியும் போன் மணி அடித்தது.

''நான்தான் கல்யாணி. என்ன பேசிக் கொண்டிருந் தேன்?''

''பிசினெஸ் விஷயங்களைப் பற்றி.''

''உங்களுக்கு மூட் சரியாக இல்லை போலிருக்கே?''

''ச்செ... ச்செ... அதெல்லாம் ஒன்றுமில்லை கல்யாணி.''

''இதெல்லாம் சாதாரணம்தான். இதற்குப் போய் அப்செட் ஆனால் இரவு தூக்கம் கெடுவதைத் தவிர வேறு பிரயோஜனம் எதுவும் இருக்காது. உங்களுக்கு என் அனுபவம் ஒன்றை சொல்லட்டுமா? பட்டப்படிப்பு படித்துக் கொண்டிருந்த நாட்களில் மாமா கொடுத்த பணத்தை எல்லாம் சேர்த்து வைத்து சூரியா ஆயில் மில்ஸ் ஷேர்களை வாங்கினேன். ஓரிரு மாதங்களில் கம்பெனி திவாலாகி விட்டது. சினிமா கூட பார்க்காமல், ஐஸ்க்ரிம் கூட வாங்கி சாப்பிடாமல் சேமித்து வைத்த பணம் அது. யாரிடமாவது சொன்னால் சிரிப்பார்கள். நான்கு நாட்கள் தனிமையில் அழுது தீர்த்தேன். என் வயது அப்பொழுது இருபது. பிறகு இன்வெஸ்டிங் கைடுகள் எல்லாம் படித்து விட்டு விமல் குரூப்பை பிடித்தேன். சிநேகிதிகளிடமிருந் தெல்லாம் கடன் வாங்கி அந்த ஷேர்களை வாங்கினேன். ஆறே மாதத்தில் டிவிடெண்ட் மூலமாகவே அந்தக் கடன்களை எல்லாம் அடைத்து விட்டேன். விமல் குரூப்பை சரியாக எடைபோட்டு லாபத்தை அடைந்த இன்வெஸ்டர்களில் நானும் ஒருத்தியாகிவிட்டேன்.''

''இதெல்லாம் கல்லூரி நாட்களிலா?'' வியப்படைந்த வனாக கேட்டான்.

''ஆமாம்.''

''எனக்கு உன்னைப் பார்த்தால் ஆச்சரியமாக இருக்கும் கல்யாணி. இந்தக் காலத்து கல்லூரி பெண்களும், பையன்களும் உன்னைப் பார்த்து கற்றுக் கொள்ள வேண்டியது நிறைய இருக்கு.''

''எனக்கு உங்களைப் பார்த்தால் ஆச்சரியமாகத் தான் இருக்கு. நாமிருவரும் ஏறக்குறைய ஒரே நிலைமை யிலிருந்து தான் வந்திருக்கிறோம். உங்கள் தந்தை சொத்து முழுவதையும் அழித்தார். நீங்கள் சாப்பாட்டுக்காகவே எத்தனையோ கஷ்டப்பட்டீங்க. இனி என் விஷயத்திற்கு வந்தால் என் தாய் மாமனே என் தந்தையைக் கொன்று விட்டார். என் சொத்தை எல்லாம் விழுங்கப் பார்த்தார். இதை எல்லாம் பார்த்து விட்டு நான் சக மனிதர்களிடம் நம்பிக்கை வைப்பதையே விட்டு விட்டேன். நீங்களோ சக மனிதர்களிடம் நம்பிக்கையைத் தவிர வேறெதையும் வைத்துக் கொள்ளவில்லை. ஒரே நிலைமையிலிருந்து வந்த நாமிருவரும் இப்படி இரு வேறு கொள்கைகளை ஏன் வளர்த்துக் கொண்டிருக்கிறோம் என்கிறீர்கள்?''

கார்த்திகேயன் சிரித்தான். ''பக்கத்திலேயே இமயமலைகள் இருக்கின்றன. சுவாமி துருவானந்தரைப் போய்க் கேட்டு விட்டு வரட்டுமா?''

''வேண்டாம் வேண்டாம். கல்யாணம் பண்ணிக் கொண்டு புருஷனை இமயமலைக்கு துரத்திவிட்டாள் என்று நினைத்துக் கொள்வார்கள். அசல் விஷயம் மறந்து போய் ஏதேதோ பேசிக் கொண்டிருக்கிறேன். நீங்கள் மட்டும் ஓவியத்தைப் பற்றி எந்தக் கவலையும் படாதீங்க. ஒரு நல்ல யோசனை வந்திருக்கு எனக்கு.''

''என்ன யோசனை கல்யாணி?''

''உங்களுடைய அத்தனை ஓவியங்களையும் ஒரு கோடி ரூபாய்க்கு இன்ஷ்யூர் செய்வது என்று. எப்படி இருக்கு என் யோசனை?''

அவன் ஒரு வினாடி தாமதித்து ''நன்றாக இருக்கு. கின்னஸ் புத்தகத்தில் கூட இடம் பெற்று விடலாம். அதை விடு. உனக்கு வீட்டில் எல்லாம் சரியாக இருக்கா? பொழுது நன்றாக போகிறதா?''

வியாபாரத்தை பற்றிப் பேச்சு வந்ததுமே அவள் உற்சாகத்துடன் ''பெட்ரூமிலேயே டி.வி. ஸ்க்ரீனுக்கு ஏற்பாடு பண்ணி விட்டேன். அன்றைக்கு பம்பாய் ஸ்டாக் பிரொசீடிங்குகளை எல்லாம் கம்ப்யூடரைஸ் செய்து வீடியோ கேசட்டை அனுப்பி வைக்கப் போகிறார்கள். சுற்றும் கால்களும், மெல்லும் வாயும் சும்மாயிருக்காது என்பார்கள் இல்லையா? அதான் இந்த வியாபாரத்தைத் தொடங்கிவிட்டேன். படுக்கையை விட்டு எழுந்து கொள்ளும் தேவை கூட இல்லாததால் மூளை இன்னும் சுறுசுறுப்பாக செயல்படுகிறது. நேற்று ஒரே நாளில் பத்தாயிரம் ஜாக்பாட் அடித்து விட்டேன்'' என்றாள்.

''உன்னை பாலைவனத்தில் கொண்டு போய் விட்டாலும் திராட்சையை விளைவித்து விடுவாய் கல்யாணி.''

''சீக்கிரமாக வந்து விடுங்கள். இரண்டு பேருமாக சேர்ந்து விளைவிக்க வேண்டியவை நிறைய இருக்கு.'' போனை வைத்து விட்டாள்.

அவனும் போனை வைத்துவிட்டு நாற்காலியில் உட்கார்ந்த பொழுது காலில் ஓவியம் இடறியது. பனி சிதைத்தது போக மிச்சமிருந்த அந்த ஓவியத்தை அவன்

குனிந்து கையில் எடுத்துக் கொண்டான். ஏனோ தெரிய வில்லை. அவன் கைகள் தன்னை அறியாமல் நடுங்கின. பிணத்திற்கு முன்னால் உட்கார்ந்து கொண்டு துக்கத்தையும் மீறிய வேதனையில் இருக்கும் போது பக்கத்து அறையி லிருந்து பத்தாவது நாள் காரியத்திற்கு என்ன சமைப்பது என்ற சர்ச்சை காதில் விழுந்தால் ஏற்படக் கூடிய மனநிலை! தன்னுள் ஏற்பட்ட மாறுபாடு அவனுக்கே தெரிந்தது. பேச்சில் சிலேடை, எரிச்சல், வேதனை எல்லாம் தெரிந்தன. ஏதோ திரை அவனைப் போர்த்திக் கொண்டிருந்தது. முதலில் இருந்த 'கன்சர்ன்' இப்போது இல்லை. கல்யாணி யின் வாதம்தான் சரியானதா? இந்தச் சமுதாயத்தில் வாழவேண்டுமென்றால் கோபம், துக்கம் போன்ற பலவிதமான உணர்வுகளுக்கு ஆளாக வேண்டியதுதானா?

அவன் இரு கைகளாலும் முகத்தைப் பொத்திக் கொண்டே தனக்குள் நினைத்துக் கொண்டான். ''கடவுளே! நீ இருக்கிறாயா இல்லையா என்று எனக்குத் தெரியாது. இருந்தால் மட்டும் எனக்குக் கொஞ்சம் உணர்வுகளைத் தா. இதுவரை உன்னை எல்லோரும் பணத்திற்காகவும், புகழுக்காகவும், கஷ்டங்களிலிருந்து மீட்கச் சொல்லியும் வேண்டிக் கொண்டிருப்பார்கள். நான் மட்டும் கைவிட்டுப் போய்க் கொண்டிருக்கிற என் உணர்வுகளுக்காக வேண்டிக் கொள்கிறேன். மருத்துவத் துறையைக் காட்டிலும் தூரிகை எனக்கு அதிக சந்தோஷத்தைத் தரக்கூடியது என்பதை உணர்ந்து மருத்துவப் படிப்பை நடுவில் விட்டு விட்டுக் கூட சந்தோஷமாகவே இருக்க முடிந்தது. அதே உணர்வை என்னுள் தொடர்ந்து இருக்கும்படிச் செய். இந்த நிமிஷத்தில் சகலத்தையும் இழந்து விட்டாலும் கொஞ்சமும் வருத்தம் இல்லாமல் சாலையோரத்தில் செருப்பு தைக்கும் தொழிலாளியாக இருப்பதில் தாழ்வாக

நினைக்காத அந்த உணர்வைத் திரும்பவும் எனக்குக் கொடு. எல்லாவற்றையும் விட முக்கியமாக ஒரு காலத்தில் என் ஓவியம் பாழாகி விட்ட பொழுது எவ்வளவு வருத்தப்பட்டேனோ அதே அளவுக்கு அன்பை என்னிடம் இருக்கும்படியாக செய்.''

15

''மித்ராஜீ!'' தொலைவில் காற்றில் மிதந்து வந்த குரலைக் கேட்டு அவன் நெற்றியிலிருந்து கையை எடுத்து விட்டு சுற்றிலும் பார்த்தான். அறைக்கு வெளியே வராண்டா கூட காலியாகத்தான் இருந்தது.

மறுபடியும் ''மித்ராஜீ!'' என்று உரக்கக் கேட்டது. அவன் எழுந்து ஜன்னல் அருகில் வந்தான். அவன் தங்கியிருந்த ஹோட்டல் சின்ன குன்றின் மீது இருந்தது.

நூறடிக்குக் கீழே சாலையில் நின்று கொண்டு அனுஜா அவனுக்காக குரல் கொடுத்துக் கொண்டிருந்தாள். ஜன்னல் அருகில் அவன் தென்பட்டதுமே ''வாங்க'' என்றாள். அவள் கையில் பெரிய பாக்கெட் இருந்தது.

அவனுக்கு ஒன்றுமே புரியவில்லை. ''எங்கே?''

''கீழே வாங்க. இப்போ என்னால் அவ்வளவு தூரம் சுற்றிக் கொண்டு வந்து மலையேற முடியாது'' என்று கத்தினாள்.

சாலையில் போய்க் கொண்டிருப்பவர்கள் சிரித்தால் சிரித்து விட்டுப் போகட்டும், எனக்கென்ன வந்தது என்பது போல் இடுப்பில் கைகளை ஊன்றிக் கொண்டு அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவனுக்கு சங்கோஜமாக

இருந்தது. அந்தப் பெண்ணைப் போல் கத்த முடியவில்லை அவனால். மேலும் இந்த நிலைமையை நீடிக்க விரும்பாமல் அவன் அறையைப் பூட்டி விட்டுக் கீழே வந்த பொழுது அனுஜா சாலையோரத்தில் இருந்த பாலத்தின் மீது உட்கார்ந்து கொண்டு ஒவ்வொரு கல்லாக எடுத்து தண்ணீருக்குள் வீசிக் கொண்டிருந்தாள்.

''வாங்க... போகலாம். இதைப் பிடித்துக் கொள்ளுங்கள்'' என்றாள்.

''எங்கே போகணும்? இவையெல்லாம் என்ன?''

''கேன்வாஸ், ஸ்டேண்ட், பெயிண்டிங்க்ஸ். நாம் இப்போ அந்த லேண்ட் ஸ்கேப் பக்கம் போகிறோம். போனதும் எங்கே இயற்கை காட்சி நன்றாக இருக்கிறதோ நீங்கதான் முடிவு செய்யணும்'' என்றாள்.

அவன் வாயடைத்துப் போனான். ''இதெல்லாம் என்ன? எனக்கு ஒன்றும் புரியவில்லையே?''

''நீங்க படம் போடப் போறீங்க. அதுக்குத்தான் நாம் போய்க் கொண்டிருக்கிறோம்.''

''உனக்கு உண்மையிலேயே புத்தி பிசகி விட்டது. நான் இப்பொழுது படம் போடுவதாவது?

இந்த ரகளையைப் பார்த்து நாலைந்து பேர் நின்று வேடிக்கை பார்க்கத் தொடங்கினார்கள். ஒரு இளைஞன் அருகில் வந்து ''மேடம்! நீங்கள் சினிமா நடிகையா?'' என்று கேட்டான் இந்தியில்.

''ஆமாம்.''

''பெயர்?''

''மமதாரே. பெங்காலி டைரக்டர் சத்யஜித்ரேயைத் தெரியுமா? அவருடைய மகள்'' என்றாள்.

அந்த இளைஞன் கையிலிருந்த புத்தகத்தை நீட்டி ''ஆட்டோகிராஃப் ப்ளீஸ்'' என்றான். அவள் அதை வாங்கிக் கொண்டு கார்த்திகேயனை பார்த்துச் சிரித்தாள். ஆட்டோகிராஃப் போட்டுக் கொண்டே ''கையில் ஆட்டோகிராஃப் புத்தகத்தை வைத்துக் கொண்டு அலைந்து கொண்டிருக்கிறாயே?'' என்றாள்.

''ஊரில் நிறைய பிரமுகர்கள் வந்திருக்காங்க மேடம். அதனால்தான்.''

அவள் கையெழுத்தைப் போட்டு தந்து விட்டு குரலை தாழ்த்திக் கொண்டு ''அவரிடம் வாங்கிக் கொள்ளப் போவதில்லையா?'' என்றாள்.

''அவர் யாரு மேடம்?''

''அமிதாப் பச்சனின் அக்கா மகன். எதிர்காலத்து ஹீரோ'' என்றாள் புத்தகத்தைத் திருப்பித் தந்து கொண்டே.

இளைஞனின் முகம் பிரகாசமடைந்தது. கார்த்தி கேயனை கேள்விகளால் திணறடித்தான். எப்படியோ ஒரு விதமாக அவனிடமிருந்து விடுபட்டு கார்த்திகேயன் வெளியே வந்தான்.

''இதெல்லாம் என்ன அனுஜா?''

''ஜஸ்ட் திரில்.''

''இதெல்லாம் எனக்கு பிடிக்காது. அதோடு எனக்கு இப்பொழுது படம் போடுகிற மூட் இல்லை. ஒரு ஸ்டேண்டில் கேன்வாஸ் மாட்டிக் கொண்டு கை போன போக்கில் கிறுக்க முடியாது என்னால்'' என்றான் சீரியஸாக.

முன்னால் நடந்து கொண்டிருந்தவள் அப்படியே நின்று விட்டாள். ''அப்படி என்றால் சரி. நீங்கள் போய்க் கொள்ளுங்கள். நான் திரும்பி வர மாட்டேன்'' என்றாள்.

திடீரென்று அவள் முகத்தில் தோன்றிய மாறுதலைப் பார்த்து வியப்படைந்த அவன் ''என்ன செய்யப் போகிறாய்?'' என்று கேட்டான்.

''டில்லிக்குப் போகிறேன் இல்லையா இந்தக் காட்டிற்குள் போய் ஹோவென்று அழுவேன். அழுகை அதிகமானால் செத்துப் போகிறேன்.''

''உனக்குப் பைத்தியம் பிடித்து விட்டது. இவ்வளவு சின்ன விஷயத்திற்கு யாராவது செத்துப் போவார்களா?''

''சின்ன விஷயமா? உங்களுக்கு சின்ன விஷயமாக இருக்கலாமோ என்னவோ. எனக்கு மட்டும் இல்லை. என் வாழ்க்கையில் மிக வேதனைமயமான சம்பவம் ஓவியத் தோடு பிணைந்திருக்கிறது.'' அவள் நடந்து கொண்டே சொன்னாள். ''அது என் கணவனின் உயிருக்கும் வாழ்க்கைக்கும் சம்பந்தப்பட்ட விஷயம்.''

அவன் கலக்க மடைந்தவன் போல் சட்டென்று நின்று ''உன் கணவனா?'' என்றான் வியப்புடன். அவளுக்கு வயது இருபதுதான் இருக்கும்.

''ஆமாம். எனக்கு ரொம்ப சின்ன வயதிலேயே பிளஸ் டூ படித்துக் கொண்டிருந்த காலத்திலேயே கல்யாணமாகி விட்டது. அந்த நாட்களிலேயே கண்மண் தெரியாத காதலில் விழுந்து விட்டேன். ராஜேஷைப் பார்த்தால் யார்தான் காதலில் விழாமல் இருப்பார்கள்? ரொம்ப ஸ்மார்ட்டாக இருப்பான். அப்பாவை எதிர்த்துக் கொண்டு கல்யாணம் செய்து கொண்டோம். ராஜேஷ் ஒரு

ஓவியன். நானும் ஓவியம் வரைவேன். ராஜேஷின் தந்தை ஒரு மர காண்ட்ராக்டர். அவருக்கு எங்களுடைய திருமணத்தில் சம்மதம்தான். அமைச்சரின் மகளை மருமகளாக்கிக் கொள்வது யாருக்குத்தான் பிடிக்காது? நானும் ராஜேஷும் காட்டில் குடித்தனம் நடத்தத் தொடங்கினோம். மரத்தால் ஆன வீடு; அருகில் அருவி. அதற்குள் நான் நான்கு மாதம் கருபுற்றிவுருந்தேன். அன்று இரவு பத்து மணிக்கு நடந்தது அந்தச் சம்பவம். நீங்கள் ஷோலே சினிமா பார்த்திருக்கீங்களா?''

''இல்லை. ஏன்?''

''ஒன்றுமில்லை. மத்திய பிரதேஷ் காட்டுக்குள் வசித்து வந்தோம் என்று சொன்னேன் இல்லையா? சம்பல் பள்ளத்தாக்கு கொள்ளையர்களுக்கு புகழ்பெற்றது. நாங்கள் எங்களிடம் விலை உயர்ந்த சாமான்கள் எதையும் வைத்துக் கொள்ளவில்லை. சம்பல் கொள்ளையர்கள் பெண்களைத் தொடமாட்டார்கள். அதுதான் தைரியம். அன்றிரவு நான்கு கொள்ளையர்கள் வீட்டைச் சூழ்ந்து கொண்டார்கள். ஒரு ரைஃபிலைத் தவிர வேறு எதுவுமே கிடைக்கவில்லை. அதை எடுத்துக் கொண்டு போய்க் கொண்டிருந்த போது ஒரு கொள்ளைக்காரனின் பார்வை சுவற்றில் மாட்டியிருந்த ஓவியத்தின் மீது பட்டது. கொள்ளையர்களுக்குக் கூட கலை ரசனை இருக்கும் என்று எனக்குத் தெரியாது. அந்த ஓவியங்கள் ராஜேஷ் அரும்பாடுபட்டு வரைந்தவை. அந்த விஷயம் மட்டும் எனக்குத் தெரியும். என் உயிரே போனாலும் சரி அந்த ஓவியங்களை ராஜேஷ் இழக்கக் கூடாது என்று முடிவு செய்தேன். அடுப்பில் எரிந்து கொண்டிருந்த விறகுக் கட்டையை எடுத்து ஒரு கொள்ளைக்காரனின் தலைமீது ஓங்கி அடித்தேன். அது

தான் நான் செய்த தவறு. சம்பல் கொள்ளையர்கள் எதிர்ப்பைச் சகித்துக் கொள்ள மாட்டார்கள். இரண்டு கொள்ளையர்கள் வந்து என் கைகளை பின்னால் சேர்த்துப் பிடித்துக் கொண்டார்கள். நான்கு மாத கர்ப்பவதி என்று கூட கருணை காட்டாமல் என் கணவனின் கண் முன்னாடியே என்னை கற்பழித்தார்கள்...''

கார்த்திகேயன் பாம்பு தீண்டியவன் போல் நின்று அவளைப் பார்த்தான். அவள் நடந்து கொண்டிருக்கும் போது மரங்களின் நிழல் அவள் முகத்தில் பட்டு பின்னால் போய்க் கொண்டிருந்தது. அவள் தலைகுனிந்தபடி நடந்து கொண்டே, தனக்குள் பேசிக் கொள்வது போல், படித்த புத்தகத்தின் பக்கங்களை புரட்டி பார்த்துக் கொள்வது போல், தொடர்ந்தாள்.

''சாதாரணமாக என்னை யாராவது கண்ணெடுத்துப் பார்த்தாலே சகித்துக் கொள்ள முடியாத ராஜேஷ் இந்தச் சம்பவத்தால் வெறி பிடித்து, போய்க் கொண்டிருந்த கொள்ளையர்களில் ஒருத்தனை பின்னாலிருந்து கத்தியால் குத்தினான். மற்ற கொள்ளையர்கள் ஆத்திரமடைந்து அந்தச் கத்தியாலேயே ராஜேஷின் வலது கையை வெட்டினார்கள். அந்தக் காட்சி எனக்கு இன்றும் நினைவு இருக்கிறது. ராஜேஷின் கை தரையில் குற்றுயிருடன் துடித்துடித்துக் கொண்டிருந்தது. அப்பொழுதுதான் எனக்குக் கருச்சிதைவு ஏற்பட்டது. என் வயது பதினேழு அப்பொழுது.''

கார்த்திகேயனின் இதழ்கள் இறுகின.

''ராஜேஷின் கையை வெட்டிப் போட்ட கொள்ளையர்கள் காட்டிற்குள் ஓடிப் போய் விட்டார்கள். கொள்ளைக்காரனைக் கொன்றதற்காக நீதி மன்றம் ராஜேஷுக்கு ஜெயில் தண்டனை விதித்தது. நான் வெறுமே

இருப்பதை விரும்பாத என் தந்தை என்னை மறுபடியும் கல்லூரியில் சேர்த்தார். அவ்வப்பொழுது திஹார் ஜெயிலுக்குப் போய் ராஜேஷைப் பார்த்து விட்டு வருவேன். இருவரும் சந்தோஷமாக இருக்கிறோம். ராஜேஷ் அடிக்கடி சொல்லுவான். ''அனுஜா! ஒரு பழைய கருப்புப் போர்வையை எடுத்துவை'' என்று. எதற்காக என்று கேட்டால் 'ஜெயிலிலிருந்து தாடியுடன் நான் வெளியே வந்ததுமே அதைத் தோளைச் சுற்றிப் போர்த்திக் கொண்டு வாயில் சுருட்டுடன் சம்பல் பள்ளத்தாக்கிற்கு போய் அந்தக் கொள்ளையர்கள் மூன்று பேரையும் கொல்ல வேண்டும்' என்று சொல்லுவான். அவன் அவ்வளவு இயல்பாக இருப்பது எனக்கும் சந்தோஷமாக இருக்கிறது. ''என்னுடைய கை போனது உனக்கு வருத்தமாக இருக்கிறதா?'' என்று கேட்பான். ''எப்படியும் அது எனக்கு சக்களத்தி'' என்பேன் நானும். ''ஆமாம் பின்னே. அந்தக் கையாலே தானே படம் போடுவாய். அது போய் விட்டதால் இனி என்னுடனேயே தான் இருப்பாய். என்னோடு சரசம் புரிய ஒரு கை போதும்'' என்று சொல்வேன் நான். எங்களுக்கு ஒரே ஆசைதான். எப்பொழுது அவன் வெளியே வந்து, எப்பொழுது அந்தக் காட்டில் நீர்வீழ்ச்சிக்குப் பக்கத்தில் இருக்கும் எங்கள் வீட்டிற்குத் திரும்பிப் போவோமோ என்று.''

அவள் அவனைப் பார்த்துச் சிரித்தாள். ''பார்த்தீங்களா, ஒரு ஓவியம் எங்கள் வாழ்க்கையை எப்படி திசை திருப்பி விட்டது என்று?'' என்றாள்.

கார்த்திகேயன் அதைக் காதில் போட்டுக் கொள்ள வில்லை. அவன் மனதின் மறுபக்கத்து கதவு திறந்து கொண்டு விட்டாற்போல் இருந்தது. ஒரு பிரச்னையை

அவன் வேதனையோடு முடிச்சுப் போட்டான். அவன் மனைவி புத்திசாலித்தனத்தோடு அதை மீற முயன்றாள். ஆனால் இந்தப் பெண் பிரச்னையையே பொருட்படுத்த வில்லை. இதை விட பெரிய அவமானம் ஒரு பிரச்னைக்கு வேறு இருக்க முடியுமா? பிரச்னையைப் பொருட் படுத்தாமல் அதை பரிகாசம் செய்வது.

அந்தச் சின்னப் பெண் அவனுக்கு தர்ட் டைமன்ஷனில் தென்பட்டாள். ராஜேஷ் ஒரு அபூர்வமான நபராக தோன்றினான். குழந்தைகள் விளையாடும் போது அடிபட்டு விட்டால் அடுத்த நிமிடமே மறந்து போய் விளையாட்டிலும், சந்தோஷத்திலும் மூழ்கிவிடுவது போல், குறும்புத்தனத்திற்கு பின்னால் இவ்வளவு துன்பம் இருப்பதைக் காட்டிக் கொள்ளாமல், மனக் குமுறலே இல்லாதபடி எப்போதும் இயல்பாக... சிரிப்பும் துள்ளலுமாக...

அவள் அபூர்வப் பிறவியாக தோன்றினாள்.

''சொல்லுங்கள் மித்ராஜீ! ஒரு ஓவியம் எவ்வளவு பெரிய காரியத்தை செய்து விட்டதோ, பார்த்தீர்கள் இல்லையா? மறுபடியும் இவ்வளவு நாட்களுக்கு பிறகு உங்கள் ஓவியத்தை பாழடித்து விட்டு என் மனம் என்னை கடிந்து கொள்ளும்படி நடந்து கொண்டு விட்டேன். என்னையே நான் திட்டிக் கொள்ளாமல் இருக்க வேண்டும் என்றால் நீங்கள் மறுபடியும் படம் போடணும். ஒரே நாளில் அதை முடித்து சாதனை செய்ய வேண்டும். இல்லா விட்டால் என் மனக்குமுறலுக்கு எல்லையே இருக்காது. அதோடு ராஜேஷ் என் காதைத் திருகி தோப்புக்கரணம் போடவைப்பான். என் சந்தோஷத்திற்காக நீங்கள் இந்தச் சின்ன காரியத்தை செய்யமாட்டீர்களா?'' என்றாள்.

அது சின்ன காரியமில்லை என்று அவனுக்கு தெரியும். மரத்துப் போய் விட்டிருந்த கைவிரல்களை பார்த்துக் கொண்டே ''போடுகிறேன்'' என்றான்.

அவள் முகம் மலர்ந்தது. ''தாங்க்ஸ்'' என்றாள். ''என்னை ஒரு பெரிய மனக் கஷ்டத்திலிருந்து காப்பாற்றினீர்கள்.''

கார்த்திகேயனுக்கு அவள் வார்த்தைகள் காதில் விழவில்லை. அவனுள் இருந்த கலைஞன் அதற்குள் விழித்துக் கொண்டு விட்டான். செங்குத்தான ஒரு இடத்தில் ஸ்டாண்டை போட்டு விட்டு சுற்றிலும் பார்த்தான். ஒரு பக்கத்தில் மலையின் மீது திரிசூலத்தை குத்தி வைத்தாற் போல் சைப்ரஸ் மரங்கள். மலையின் மேலிருந்து வெள்ளி உருகி கீழே வழிந்தாற்போல் பனி ஒழுகிக் கொண்டிருந்தது. அந்தக் காட்சியைப் பார்ப்பதற்கு ஆயிரம் கண்கள் வேண்டும் என்பார்கள். தேவையில்லை. மனதிற்குக் கண்கள் இருக்க வேண்டும்.

என்ன வரைவது என்று அவனுக்குத் தெரியவில்லை. ஒரு சின்ன யோசனை மனதில் விதையாக தோன்றி மெல்ல மெல்ல வளர்ந்து ஒரு உரு பெற்றுக் கொண்டு இனி அதை ஓவியமாக தீட்டினால் தவிர முடியாது என்ற பிரசவ வேதனை ஏற்பட்டால் ஒழிய, தூரிகையை பிடித்து அவனுக்கு பழக்கமில்லை. தூரிகையின் மறுமுனையால் முகவாயை சொரிந்து கொண்டான். தொலைவில் அனுஜா கல்லின்மீது உட்கார்ந்து கொண்டு கால்களை ஆட்டியபடி பாடிக் கொண்டிருந்தாள். பரீட்சை ஹாலில் உட்கார்ந் திருக்கும் மாணவன் கேள்விகளுக்கு பதில் தெரியாமல் இன்விஜிலேட்டரை நோக்கி தீனமாக பார்த்தாற் போல் அவன் இயற்கையைப் பார்த்தான்.

அவள் பின் பக்கமாக வந்து கேட்டாள். ''என்ன மித்ராஜீ? என்ன இப்படி உட்கார்ந்துட்டீங்க?''

''என்ன போடுவது என்று தெரியவில்லை.''

அவள் கலகலவென்று சிரித்தாள். அவன் திரும்பிப் பார்த்தான். என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாள் இந்தப் பெண்? ஒரு கவிதையோ, சித்திரமோ வெளிவர வேண்டும் என்றால் இதயம் காயமடைந்தோ அல்லது சந்தோஷத்தால் நிறைந்தோ இருக்க வேண்டாமா?

''ஏன் சிரிக்கிறாய்?''

''ராஜேஷ் கூட இதே போல்தான் தலையைச் சொரிந்து கொள்வான். நான் சொல்லுவேன் 'கற்பனை தோன்றவில்லையா? தூரிகையை என் இதயத்தில் தோய்த்து வரையுங்கள்' என்று. அது நினைவுக்கு வந்ததால் சிரிப்பு வந்தது. பூமியும் வானமும் ஒன்று சேரும் இடத்திலிருந்து தொடங்கி ஒரு கோடு போடுங்கள் மித்ராஜீ! பிறகு தானாகவே வந்து விடும்.''

அவன் தூரிகையை வர்ணத்தில் தோய்க்கப் போனான். பனியால் இறுகிப் போயிருந்த எலும்புகள் ஒத்துழைக்க மறுத்தன. அவன் மேலும் முயற்சி செய்தான். நரம்புகள் சிதைந்து போய்க் கொண்டிருப்பது போன்ற வலி. வேதனையை கண்களுக்குப் பின்னால் மறைத்துக் கொண்டு அவளை ஏறிட்டுப் பார்த்தான். அவள் எப்பொழுதோ அங்கிருந்து போய் விட்டிருந்தாள். ஏதோ பாட்டை ஹம் செய்து கொண்டே மறுபடியும் கல்லின் மீது உட்கார்ந்து கொண்டாள்.

கண்ணிமைக்கும் நேரத்தில் அவன் கண்கள் அந்தக் காட்சியை படம் பிடித்துக் கொண்டுவிட்டன. இயற்கையை,

அவளை... அவளையும், இயற்கையையும், அங்கே அவள் அனுஜா இல்லை. ஒரு அழகு... அவ்வளவுதான். அபூர்வமான அழகு.

அவள் கண்களிலிருந்து கடன் வாங்கிக் கொண்டு வானம் நீலநிறத்தை பரப்பிக் கொண்டிருந்தது. அவள் கேசங்களிலிருந்து இருட்டை கைமாற்றாக வாங்கிக் கொண்டு சைப்ரஸ் மரங்கள் தம் நிழல்களை பரப்பிக் கொண்டிருந்தன. மலையின் மீது இருந்த பனி அவள் கன்னத்தின் வழுவழுப்பைத் தொட்டுப் பார்த்து வெட்க மடைந்தது. பல்லாக்கிலிருந்து இறங்கி வந்த ஊர்வசியோ என்பது போல் அந்த மலைகளுக்கிடையே அழகு தேவதையாக அமர்ந்திருந்தாள் அவள்.

சூரியனைப் பார்த்து கீழே இருந்த மேகம் அழகு காட்டியது போல அவன் உடலின் வேதனையை அந்த இயற்கை அழகானது பரிகசித்தது. வேதனை அதிகமாக இருந்தாலும் ஓவியம் வரையும் தவிப்பு அதைவிட அதிகமாக இருந்தது.

அவன் தன் வேலையில் மூழ்கிப் போய் விட்டான். ஓரக்கண்ணால் அதை கவனித்து விட்டு அவள் அங்கிருந்து நழுவிவிட்டாள். அவன் அதை கவனிக்கும் நிலையை எப்பொழுதோ கடந்து விட்டிருந்தான். வானமும் பூமியும் இணையும் இடத்தில் கோடு இல்லை. அது அவனுடைய கற்பனை அழகியின் இதழ்களுக்கிடையே கோடாக மாறியது. மலைகளுக்கிடையே துள்ளிக் குதித்துக் கொண்டிருந்த அருவியைக் காணவில்லை. கலகலவென்று சிரிப்புச் சத்தமாக அது ஒலித்துக் கொண்டிருந்தது.

அவன் இரண்டு மணி நேரம் கனவுலகில் சஞ்சரித்து விட்டு திரும்பி இந்த உலகத்திற்கு வந்த போது அவள்

தொலைவிலிருந்து வந்து கொண்டிருப்பது தென்பட்டது. வட இந்தியாவில் தேநீரை மண்சட்டியில் ஊற்றி விற்றுக் கொண்டிருப்பார்கள். அப்படிப்பட்ட மண்சட்டி ஒன்றை ஒரு கையால் ஏந்திக் கொண்டு தோளில் ஒரு கோணிப்பையை சுமந்து கொண்டு அவள் குப்பைக் காகிதங்களைப் பொறுக்கும் ஆளைப் போல் மலையில் இறங்கி வந்து கொண்டிருந்ததைப் பார்த்து அவன் வியப்படைந்தான்.

''என்ன இது?''

''தேநீர்.''

''அது சரி. அந்தக் கோணியில் என்ன இருக்கு?''

''காய்ந்த இலைகள்.''

அவன் வியந்து, ''காய்ந்த இலைகளா?'' என்றான்.

''ஆமாம் மித்ராஜீ! சட்டியில் இருக்கும் தேநீர் இங்கே கொண்டு வருவதற்குள் ஆறிப் போய் விடும் இல்லையா? இங்கேயோ பனியில் நனைந்த இலைகளை தவிர வேறு எதுவும் கிடைக்காது. அதனால் ரொமப் முன் யோசனை யுடன் வரும்போதே இவற்றையும் கொண்டு வந்தேன்'' என்றவள் மளமளவென்று மூன்று கற்களை அடுக்கி அவற்றின் மீது மண் சட்டியை ஒரு கையால் பிடித்துக் கொண்டே கீழே பற்ற வைத்தாள். அவள் முழங்காலில் அமர்ந்துகொண்டு குனிந்து புகையை ஊதி கொண்டிருக்கும் போது ''பிளாஸ்கில் ஊற்றி கொண்டு வரலாமே. இவ்வளவு கஷ்டம் எதுக்கு?'' என்றான்.

அவள் ஊதுவதை நிறுத்திவிட்டு தலையை உயர்த்தாமலேயே கண்களை மட்டும் உயர்த்தி ''இரண்டிற்கும் வித்தியாசம் இல்லையா?'' என்றாள்.

''என்ன வித்தியாசம்?''

''ஏழரைக்கு ஃபேமிலியை அழைத்துக் கொண்டு ப்ளூ மௌண்டனுக்கு டின்னருக்கு வந்து விடு என்று சொல்வதற்கும், என் மனைவி வடை பாயசம் பண்ணி யிருக்கிறாள் - மனைவி குழந்தைகளுடன் மாலையில் வீட்டிற்கு வா என்று சொல்வதற்கும் இடையே என்ன வித்தியாசம் இருக்கிறதோ அவ்வளவு வித்தியாசம் இருக்கிறது'' என்று சொல்லிவிட்டு மறுபடியும் தன் வேலையில் மூழ்கிப் போய் விட்டாள்.

அவன் மௌனமாக அவள் செய்து கொண்டிருந்த காரியத்தையே பார்த்துக் கொண்டிருந்தான்.

''சாந்த் பன்கே தூ ககன்ஸே'' என்று பாடிக் கொண்டே டீயை சுட வைத்து தந்தாள். ''இது என்ன ராகம்?'' என்று கேட்டாள்.

அவன் கவனம் வேறு இடத்தில் இருந்ததால் ''எது எந்த ராகம்?'' என்றான்.

''நான் பாடிக் கொண்டிருந்தது காதில் விழ வில்லையா?''

''எனக்கு ராகங்களை பற்றித் தெரியாது.''

''தெரிய வாய்ப்பும் இல்லை. உங்கள் உலகம் முழுவதுமே ஓவியங்கள் தானே? உங்களுக்குத் தெரியுமா? எனக்கு டில்லியைக் கண்டாலே பிடிக்காது. நான் எங்க அப்பாவிடம் சொல்லிக் கொண்டே இருப்பேன். இந்த அமைச்சர் பதவி போதும். கிராமத்திற்கு போய் நிலத்தை மேற்பார்வையிட்டுக் கொண்டு செட்டில் ஆகிவிடு, நானும் ராஜேஷும் அடிக்கடி வந்து கொண்டிருப்போம் என்று.

கேட்க மாட்டாரே. இந்த நாட்டை ஆள்வதற்கு இன்னும் பாக்கியிருப்பது போல் 'கொஞ்ச நாள் பொறும்மா' என்பார். நீங்களே சொல்லுங்கள். டில்லி நன்றாக இருக்குமா? கிராமம் நன்றாக இருக்குமா?''

அவன் தேநீரைக் குடித்துக் கொண்டே ''உனக்கு கிராமத்தில் அவ்வளவு தூரம் என்ன பிடித்திருக்கிறது?'' என்று கேட்டான்.

''நாங்கள் கிராமத்தை விட்டு பதினைந்து வருடங்கள் ஆகிறது. அப்பொழுது எனக்கு என்ன வயசு? ஆறோ ஏழோ... நீங்களே சொல்லுங்கள். நம் வீட்டில் எட்டு வயது குழந்தை யாருக்காவது ஜுரம் வந்தால் வேலைக்காரன், தெருவோடு போகிறவன், கோவிலிலிருந்து மாலையில் வீட்டுக்குத் திரும்பிப் போகும் பூசாரி... அத்தனை பேரும் நம் வீட்டு வாசலில் ஒரு நிமிஷம் நின்று 'குழந்தைக்கு உடம்பு எப்படி இருக்கும்மா?' என்று விசாரிப்பார்களா இல்லையா? இதுவே டில்லியாக இருந்தால் எந்த டெரரிஸ்டாவது குண்டு போட்டு வெடித்தாலும் போலீஸ்காரர்கள்தான் வந்து நம் விலாசத்தைத் தெரிந்து கொள்ளணும், இல்லையா?''

''ஆமாம். அப்படித்தான் நினைக்கிறேன்.''

''நினைக்கிறேன் என்ன? நான் சொல்லிவிட்டால் அப்படித்தான். அது சரி. நீங்கள் ஏன் இப்படி ஆழ்ந்து பெருமூச்சு விடறீங்க? படம் போடும் உற்சாகம் குறைந்து விட்டதா?''

அவன் பாதி போட்டு முடித்திருந்த ஓவியத்தை உணர்ச்சியில்லாமல் பார்த்து விட்டு மௌனமாக இருந்து விட்டான். அவள் நிசப்தத்தைச் சிதறடித்தபடி ''நான் டான்ஸ் ஆடட்டுமா?'' என்றாள்.

திடீரென்று கேட்ட அந்தக் கேள்விக்கு திடுக்கிட்டு ''என்ன?'' என்றான்.

அவள் உற்சாகத்தோடு கல்லின் மீதிருந்து கீழே குதித்து ''கையில் கற்பூரத்தை ஏற்றிக் கொண்டு ஆடுகிறேன். டைரக்டர் விஸ்வநாத் பார்த்து விட்டால் உடனே என்னை ஹீரோயினாகவும், இந்த சீனை கிளைமாக்ஸாகவும் வைத்து படம் எடுத்து விடுவார்.''

''உனக்கு சினிமாவிலும் இண்ட்ரெஸ்ட் இருக்கா?''

''அசல் எங்கள் ராஜேஷ் கேட்பது போலவே கேட்கிறீங்களே? ஏன்? இருந்தால் தவறென்ன? ராஜேஷ் அடிக்கடி சொல்லிக் கொண்டிருப்பான். விஸ்வநாத் படத்தில் வேஷம் போட்டாலும் போடலாமே தவிர ராகவேந்திரராவ் படத்தில் மட்டும் ஹீரோயினாக போடாதே. ஆடை குறைப்பு செய்துவிட்டு தண்ணீரில் மூழ்கவைப்பார் என்பான். எனக்குக் கோபம் பற்றிக் கொண்டு வரும். ''விஸ்வநாத் மட்டும் என்னவாம்? எந்த டைரக்டராக இருந்தாலும் ஹீரோயினை மூழ்க வைப்பது தண்ணீரில் தானே தவிர பாலில் யாரும் மூழ்கடிக்க மாட்டார்கள் இல்லையா? அஃப்கோர்ஸ்! அவருடையது செக்ஸ் அப்பீல் என்றால் இவருடையது ரொமான்ஸ் என்று வைத்துக் கொள்ளுங்கள்.''

''இரண்டிற்கும் என்ன வேறுபாடு?''

''படித்துவிட்டு கட்டிலுக்கு அடியில் போட்டு விடுவது செக்ஸ். இரவில் கணவருக்கு படித்துக் காட்டி விட்டு சிரித்துக் கொள்வது ரொமான்ஸ். அதுசரி மித்ராஜீ! தமிழ் நாட்டை விட்டு இவ்வளவு தூரத்தில் இருந்து கொண்டு நான் தமிழ் சினிமா கலாசாரத்தைப் பற்றியும்,

ரொமான்ஸ் பற்றியும் பேசுவது கொஞ்சம் அதிகமாகி விட்டதோ?''

''கொஞ்சம் இல்லை. நிறையவே.''

''எங்க ராஜேஷ் கூட இப்படித்தான் சொல்லுவான்.'' அவள் கல்லின் மீது உட்கார்ந்து கொண்டே சொன்னாள். ''நான் வாயை மூடிக் கொண்டு இருக்கணும் என்றால் ஒரே வழி நீங்கள் படம் போடுவது ஒன்றுதான். டிரிங்... டாங்க்'' என்றாள் விளம்பர பாணியில்.

அவன் மற்றொருமுறை ஓவியத்தை பார்த்து விட்டு ''நிறங்கள் சரியாக இல்லை'' என்றான் கவலையுடன்.

''ஐயோ! அந்தப் பிரச்னை வந்து விட்டதா? நான் நினைத்துக் கொண்டே இருந்தேன். சிம்லா கடைத் தெரு வெல்லாம் சுற்றி அலைந்தேன். சரியான கேன்வாஸ் கிடைக்கவில்லை. தவிர லிண்டில் என்ற பெயரையே யாரும் கேள்விப்பட்டதில்லை என்று சொல்லிவிட்டார்கள்'' என்றாள்.

அவன் சட்டென்று நிமிர்ந்து ''லிண்டில் என்ற பெயர் உனக்கு எப்படி தெரியும்?'' என்றான். லிண்டில் உலகத்தி லேயே விலை உயர்ந்த வர்ணங்கள். ப்ரொஃபஷனல் ஓவியர்கள் மட்டுமே அவற்றை பயன்படுத்துவார்கள்.

அவன் கேள்விக்கு பதிலளிப்பது போல் சிரித்து விட்டு ''நானும் ஒரு ஓவியர்தான் என்பதை மறந்து விட்டீங்க நீங்க'' என்றாள்.

''நீ லிண்டில் பெயிண்டைப் பயன்படுத்துவாயா?''

''படங்களை நன்றாக வரைகிறேனோ இல்லையோ தெரியாது. ஆனால் எங்க அப்பா பணக்காரர் இல்லையா?''

''நான் சாதாரண வர்ணங்களைத்தான் பயன்படுத்து வேன். இப்பொழுது பிரச்னை அது இல்லை. இந்த வர்ணங்களில் முக்கியமாக பச்சை, ஆரஞ்ச் வர்ணங்கள் எடுப்பாக இல்லை'' என்றான்.

அவள் கேன்வாஸை பார்த்தாள். சாதாரண கண்களுக்கு தெரியாது அது. ஆனால் தேசீய போட்டிகளில் எதற்கு முதல் பரிசு தருவது என்று கூர்ந்து கவனிக்கும் நீதிபதியின் கண்களுக்கு அது தெரியும்.

அவன் கொஞ்ச நேரம் யோசித்து விட்டு ''ஒரு காரியம் செய்வோமா?'' என்றான்.

என்ன என்பது போல பார்த்தாள்.

''சிந்தெடிக் வர்ணங்கள் இல்லாமல் இயற்கை யிலிருந்து எடுக்கப்பட்ட வர்ணங்களை பயன்படுத்து வோம். சிறு வயதில் நான் அப்படி செய்திருக்கிறேன். நாகப்பழம், மஞ்சள் போன்றவற்றை சந்தன எண்ணெயுடன் சேர்த்துப் பயன்படுத்தலாம். இப்பொழுது நமக்கு தேவை பச்சை நிறம் என்பதால் பெரிதாக பிரச்னை இல்லாமல் இருக்கலாம். ஆனால் இந்த சிந்தெடிக் வர்ணத் தோடு இயற்கை வர்ணம் எப்படி ஒத்துப் போகுமோ பார்க்க வேண்டும். முயற்சி செய்து பார்ப்போம். ஜெயித்தால் ஜெயிக்கலாம். இல்லா விட்டால் வரப் போகிற நஷ்டம் எதுவும் இல்லையே'' என்றவன் அவளிடம் தனக்கு தேவையான பொருட்களைச் சொன்னான். அவள் போய் அவற்றை கொண்டு வருவதற்குள் மரங்களுக்கிடையே அலைந்து திரிந்து தனக்கு வேண்டிய பொருட்கள் மேலும் சிலவற்றை சேகரித்துக் கொண்டான். அவள் வந்ததுமே எல்லாவற்றையும் சேர்த்து தனக்குத் தேவைப்பட்ட வர்ணக் கலவைகளை தயாரிக்க முற்பட்டான்.

எப்பொழுதும் கலகலப்பாக பேசும் அவள் இப்பொழுது வாயைத் திறக்காமல் அவன் செய்து கொண்டிருந்த காரியத்தையே கவனித்துக் கொண்டிருந்தாள். அவன் விதவிதமான காம்பினேஷன்களை தயாரித்து பரிசோதித்துக் கொண் டிருந்தான். சில கலவைகள் நன்றாக இருந்தன. சிலது கேன்வாஸ் மீது பட்டதுமே வழியத் தொடங்கின. திரும்பத் திரும்ப முயற்சி செய்து கொண்டே இருந்தான். முயற்சியை தொடர்ந்து கொண்டே அவள் பேசாமல் இருந்ததை கவனித்து விட்டு ''ஏன் இப்படி மௌனமாக இருக்கிறாய்?'' என்று கேட்டான்.

அவள் அவன் செய்து கொண்டிருந்த காரியத்தி லிருந்து பார்வையைத் திருப்பாமலேயே ''எனக்கு ஏனோ த்ரில்லிங்காக, அற்புதமாக இருக்கு'' என்றாள், வேறு ஏதோ உலகத்தில் இருப்பது போல். ''அஜந்தா, எல்லோரா குகைகளில் உள்ள சித்திரங்கள் இவ்வளவு காலமாக பாழாகாமல் இருப்பதற்குக் காரணம் இப்படிப்பட்ட இயற்கை வர்ணங்கள்தானோ?'' என்றாள்.

''அழகாகத்தான் இருக்கு. அவற்றுக்கும் இதற்கும் என்ன ஒற்றுமை? ஒரு மாத காலத்திற்கு வர்ணம் அழியாமல் இருந்தால் போதும். நாம் வெற்றி பெற்று விட்டாற்போல்தான்.''

வர்ணங்களில் எண்ணெயைக் குழைத்துக் கொண்டே அவன் சொன்னான். ''இந்த சைப்ரஸ் மரங்களிலிருந்து வடிகிற பாலில் கூட ஒரு விசேஷம் இருக்கிறது, கவனித்தாயா? இதிலிருந்து வடிகிற பால் அடுத்த நிமிடமே ஆரஞ்சு வர்ணமாக மாறிவிடும்.''

''நாம் இமயமலையில் தானே இருக்கிறோம்?'' ஏதோ நினைவுக்கு வந்தாற் போல் கேட்டாள்.

''ஆமாம். அதில் என்ன சந்தேகம்?''

''ஒன்றுமில்லை. மனுசரித்திரத்தில் வருதினி பிரவராக்யனிடம் ஓரிடத்தில் சொல்கிறாள், வானளாவிய கற்பூரச் செடி பன்னீராக பொழிகிறது என்று. மழை நீரானது கற்பூரச் செடிகள் மீது விழுந்து அந்த பன்னீர் ஸ்படிக கற்களால் ஆன குழிகளில் சேர்ந்து சிவப்பு சந்தனத்தின் நிறத்தை அடைந்ததாம். அந்தக் கற்பூரச் செடிகள் என்று குறிப்பிட்டது இந்த சைப்ரஸ் மரங்களைத்தானோ என்னவோ?''

''மைகாட்! உண்மையாகத்தான் இருக்க வேண்டும்.''

அவன் தூரிகையினால் பச்சை நிறத்தை கேன்வாஸில் தீட்டிவிட்டு ஐந்து நிமிடங்கள் காத்திருந்தான். நிறம் மாறவில்லை. ஆனாலும் அவன் முகத்தில் திருப்தி தென்படவில்லை. அவள் உற்சாகத்துடன் அவன் பக்கம் திரும்பி ''என்னவாச்சு?'' என்று கேட்டாள்.

''பரவாயில்லை. ஆனாலும் படம் முழுவதும் பச்சை நிறம் அதிகமாக இடம் பெறாததால் இது பெரிய பிரச்னை இல்லை. இனி மேல் தான் உண்மையான சவால் இருக்கிறது. வானம் முழுவதும் சந்தியா வேளைக்குரிய செஞ்சிவப்பு வர்ணத்தை தீட்ட வேண்டும். நம் வெற்றி அதன் மீதுதான் ஆதாரப்பட்டிருக்கிறது'' என்றான்.

அவள் போய் சைப்ரஸ் மரத்தின் பாலைக் கொண்டு வந்தாள். அதில் எண்ணெயைக் குழைத்து முயற்சி செய்தான்.

நேரமாக ஆக நிறம் மாறியது. மேலும் சில வர்ணங்களை குழைத்து தயாராக வைத்துக் கொண்டான்.

சூரியன் நடுவானத்திற்கு வந்து விட்டான். முதல் நாள் பெய்த பனிப் புயலின் பாதிப்பு அன்றைக்குத்தான்

தெரியத் தொடங்கியது. ஒரு பக்கம் பனி, இன்னொரு பக்கம் வெயில். அவனுடைய இயலாமை நிலையை அவள் கவனித்தாள். யார் மீதென்றே தெரியாத ஆத்திரம். கோபத்தால் அவள் கண்களில் நீர் சுழன்றது. அவன் வாழ்க்கையில் அனுபவப்பட்டவன். கோபம், துக்கம் போன்றவற்றுக்கு அப்பாற்பட்டவன். இன்னும் முயற்சி செய்து கொண்டே இருந்தான்.

ஆனால் அவள் சிறு பெண். இந்தத் தோல்வியை அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. மரத்துப் போயிருந்த கைவிரல்களை சுவாதீனத்திற்கு கொண்டு வந்து அந்த ஓவியத்தை வரைவதற்கு அவன் எவ்வளவு சிரமப்பட்டுக் கொண்டிருந்தானோ அவளுக்கு தெரிந்து தான் இருந்தது. இவ்வளவுதூரம் வந்த பிறகு தோல்வி அடைவதை அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அந்த மலைகளை, மரங்களை எல்லாம் வெட்டிப் போட்டு விட வேண்டும் என்ற அளவுக்கு ஆத்திரம் ஏற்பட்டது.

பிற்பகல் இரண்டு மணி ஆகி விட்டது. தேநீர் குடிக்கணும் என்று கூட தோன்றவில்லை. நான்கு மணிக்குள் ஓவியத்தைக் கொண்டு போய் கொடுத்து விட வேண்டும்.

அவன் தூரிகையைப் பக்கத்தில் வைத்து விட்டு போய் கல்லின் மீது உட்கார்ந்து கொண்டு முகத்தை கைகளுக்குள் புதைத்துக் கொண்டான். தன் வேதனை அவளுக்குத் தெரிந்து விடக் கூடாது என்பதற்காக அவன் செய்து கொண்டிருந்த முயற்சி அவளுக்கு இன்னும் வேதனையை ஏற்படுத்திக் கொண்டிருந்தது.

அவள் ரோஷத்தோடு மரங்களையும், வானத்தையும், மலைகளையும் பார்த்தாள். சூரியன் மேகங்களுக்குப்

பின்னால் போனதுமே பனியின் மீது வானத்தின் நிறம் பிரதிபலித்து ஆரஞ்சு வர்ணத்திற்கு மாறியது. தனக்கு வேண்டிய நிறம் அதுதான் என்பது போல் இயற்கை கட்டியம் கூறியது.

அவன் அவ்வாறு எவ்வளவு நேரம் உட்கார்ந் திருந்தானோ அவனுக்கே தெரியாது. ''இதை முயற்சித்து பாருங்கள்'' என்ற குரலைக் கேட்டு கண்களை திறந்தான். இந்த முறை அவள் கொஞ்சம் அடர்ந்த வர்ணத்தைக் கொண்டு வந்திருந்தாள். நூறு வருடங்களுக்கு முற்பட்ட மரத்திலிருந்து எடுக்கப் பட்டது போல் தோன்றியது. எங்கேயோ மலைமீது; தொலைவில் இருப்பதாக சுட்டிக் காட்டினாள்.

அவன் நம்பிக்கையில்லாமலேயே தான் முயற்சி செய்தாள். மேற்பூச்சுக்குத் தேவையாக இருந்த தைலத்தைக் கூட கலந்து கொள்ளவில்லை. நேரம் கழிந்தது. மெல்ல மெல்ல நிறம் மாறி ஆரஞ்சு வர்ணத்திற்கு வந்து சேர்ந்தது. அவன் உற்சாகத்துடன் அவளைப் பார்த்தான். அவன் முகத்தில் என்றுமில்லாத விதமாக புதுவிதமான சஞ்சலம், உத்வேகம் தென்பட்டன. தங்கச் சுரங்கத்தில் தேடிக் கொண்டிருந்தவனுக்கு முதல் முறை தோண்டியதுமே தங்கத்தின் இருப்பு தென்பட்டு விட்டால் அந்தக் கண்கள் சந்தோஷத்தால் எப்படி மின்னுமோ, எப்படி பரபரக்குமோ... அது போல்.

அவன் மள்மளவென்று தேவையான மற்ற பொருட் களை கலந்து கொண்டான். முதல் கோட்டை தூரிகையால் அனாயாசமாக இழுத்தான்.

அவள் இதயம் படபடத்துக் கொண்டிருந்தது அவளுக்கே நன்றாக தெரிந்தது. காற்றுக்கூட ஸ்தம்பித்துப் போய் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது.

வெள்ளையும் சிவப்புமான கலவையிலிருந்து ரோஜா வர்ண கோடுகள் மெல்ல மெல்ல ஆரஞ்சு வர்ணத்திற்கு வந்து நதியின் அலைகளை போல் சிலது மாறியும் சிலது மாறாமலும் தொட்டியில் மீன் குஞ்சுகளைப் போல் பளபளவென்று மின்னிக் கொண்டே கடைசியில் தங்க நிறத்தில் ஸ்திரப்பட்ட போது, அந்த மின்னல் அவன் கண்களில் தென்பட்ட போது, அவள் இரண்டு கைகளையும் காற்றில் நீட்டி சிறு பெண்ணைப் போல் துள்ளிக் குதித்தாள். அந்தக் குறும்புத் தனத்தைப் பார்த்து அருவி கூட பொறாமைப்பட்டது. மலைகள் பாராட்டுவதுபோல் கம்பீரமாக உயர்ந்து நின்றன. சைப்ரஸ் மரங்கள் சந்தோஷத்தால் தலையை அசைத்தன. பனி உருகி கால்களை நனைத்தது. சந்தோஷம் உருகி இமைக் கோடியை ஈரமாக்கியது.

அவன் அதற்கு மேல் தாமதிக்கவில்லை. தூரிகை அவன் கையில் குதிரையாக காற்றில் பறக்கத் தொடங் கியது. ஓவியத்தின் மேல் பகுதி முழுவதும் சந்தியா வேளையின் நிறத்தை தீட்ட வேண்டும். அவன் அந்த காரியத்தில் மூழ்கியிருந்த போது அவள் போய் மரத்திலிருந்து பாலை எடுத்துக் கொண்டு வருவாள். அவள் வேலைதான் கடினம்; ஒரே சமயத்தில் அத்தனையும் கொண்டு வருவதற்கு வழியில்லை. நிறம் மாறிப் போய் விடும். களைப்பை இதழ்களுக்கு இடையில் அழுத்திக் கொண்டே அவள் வேக வேகமாக போய், அவனுக்கு வேண்டியவற்றைக் கொண்டு வந்தாள். அவனோ இந்த உலகத்திலேயே இல்லை.

கடைசி பகுதியை முடித்துக் கொண்டிருந்த போது அவள் வருவதற்கு தாமதமானதால் அவன் இந்த உலகிற்கு மீண்டு வந்தான். கொஞ்ச நேரம் காத்திருந்து... மேலும் காத்திருந்து, பிறகு அவளைத் தேடிக் கொண்டே மரங்களுக்குப் பின்னால் சென்றான்.

நூறு ஆண்டுகளுக்கு முன்னால் உருவான மரமும் இல்லை. அது தொலைவில் மலை மீது இல்லவும் இல்லை.

சைப்ரஸ் மரத்தின் பாலை அஸ்தமன வானத்தின் நிறத்திற்கு மாற்றுவதற்காக...

வானளவு கேன்வாஸை முடிவில்லாத வர்ணத்தால் நிரப்புவதற்காக...

முதலில் ஊசியால் குத்திக் கொண்டு, அது போதாமல் உள்ளங்கையை கீறிக் கொண்டு அங்கேயும் ரத்தம் உறைந்து போய்விட்டதால் என்ன செய்வதென்று புரியாமல், இன்னொரு பக்கம் நேரமாகிக் கொண்டிருக்கிறதே என்ற தவிப்பில் நாளத்திலிருந்து இரத்தத்தை வெளியேற்று வதற்காக அழுத்திக் கொண்டே அந்த வலியை பற்களைக் கடித்துக் கொண்டே அடக்கிக் கொண்டு, அந்த அவசரத்தில் பதற்றத்தில் பின்னாலிருந்து சத்தம் கேட்டு பயந்துபோய் அந்தப் பக்கமாக பார்த்தாள். அங்கே கார்த்திகேயனைக் கண்டதும் கையைப் பின்னால் மறைத்து வைத்துக் கொண்டு ''ஒன்றுமில்லை'' என்று சிரித்த பொழுது...

'ஏற்கெனவே பார்வை மறைக்கிறது. அதோடு கண்ணீர் திரை வேறு' என்று சபரி அடைந்த உத்வேகம் போல், குகனின் நெற்றியில் படிந்த வியர்வை முத்துக்கள் போல், அணிலின் முதுகுக் கோடுகளுக்கிடையே வெளிப்பட்ட நன்றியைப்போல் நெகிழ்ந்து கண்ணீர்த் துளிகளாக கன்னத்தில் உருண்டது.

சந்தோஷமும் துக்கமும் கலந்த நிலையில் அவள் தலைமீது கையை வைத்துக் கண்களை மூடிக் கொண்டான். நடுங்கும் விரல்கள் நன்றியை வெளிப்படுத்திக் கொண் டிருக்கையில் காலம் கூட அப்படியே நின்று விட்டது.

அவன் மேற்கொண்டு தன்னால் ஒரு கோடு கூட வரைய முடியாது என்றும், பரிசு வந்தால் வரட்டும் இல்லாவிட்டால் போகட்டும் என்றும் கேன்வாஸையும் மற்ற சாமான்களையும் எடுத்துக் கொண்டு திரும்பி வந்து கொண்டிருந்ததைப் பார்த்து விட்டு கேட்டாள்.

''மித்ராஜீ! உங்களுக்கு இவ்வளவு பிடிவாதம் ஏன்?''

''எனக்கு இது கொஞ்சமும் பிடிக்கவில்லை அனுஜா.''

''எனக்குப் பிடித்திருக்கிறது. இதைவிட உயர்ந்தது வேறு இருக்க முடியாது. ராஜேஷுக்கு மட்டும் இந்த விஷயம் தெரிந்தால் திட்டுவான், எனக்காக சிந்த வேண்டிய ரத்தத்தை, மித்ராஜீக்காக தாரை வார்த்து விட்டாயா என்று.''

அதைக் கேட்டு கார்த்திகேயன் சிரித்தான். ''உன்னுடைய ராஜேஷ் ரொம்ப அதிர்ஷ்டசாலி.''

''அப்பாடா! உங்கள் முகத்தில் கொஞ்சமாவது சிரிப்பு தென்பட்டதே. இப்போ சொல்லுங்கள். ராஜேஷ் ஏன் அதிர்ஷ்டசாலி?''

''ஒவ்வொரு நிமிஷமும் மனைவியால் நினைத்துக் கொள்ளப்படுகிறான் என்பதால்.''

''அப்போ துரதிர்ஷ்டசாலி யாராம்? அதைச் சொல்லுங்கள்.''

அவன் யோசித்து விட்டு சொன்னான். ''மனைவியை மதிக்காதவன், அளவு கடந்த சந்தோஷத்திலும் எல்லை யில்லாத துக்கத்திலும் மனைவியை நினைத்துக் கொள்ள முடியாதவன், வேலையினாலும், தீய பழக்கத்திற்கு அடிமையாகியும் மனைவியை அலட்சியம் செய்பவன்... இந்த உலகத்திலேயே மிகவும் துரதிர்ஷ்டசாலியானவன்.''

16

வெயில் கடுமையாக இருந்தது. ஸ்ரீகல்யாணியின் வீட்டைச் சுற்றிலும், தோட்டத்திலும், தொலைவில் வேலைக்காரர்களின் குடியிருப்புகளிலும் ஆள் நடமாட்டம் இருக்கவில்லை.

வீட்டின் முன்னால் சத்யனின் கார் வந்து நின்றது. போர்டிகோவிலும், ஹாலிலும் யாருமே இல்லை. டிரைவிங் சீட்டில் அமர்ந்திருந்த சத்யன் காரை விட்டு இறங்கவில்லை. சுற்றிலும் பார்வையிட்டான். யாருமே இல்லை என்று உறுதிப்படுத்திக் கொண்ட பிறகு பின்னால் திரும்பி ஜாடை காட்டினான். பின்சீட்டில் அமர்ந்திருந்த பிரதாப் இறங்கினார்.

சத்யன் காரை எடுத்துக் கொண்டு போய்விட்டான். ஏற்கெனவே பழக்கப்பட்ட வீடு என்பதால் பிரதாப் நேராக உள்ளே சென்று படிகளில் ஏறி மாடிக்குப் போனார்.

டி.வி. பார்த்துக் கொண்டிருந்த கல்யாணி சத்தம் கேட்டு திரும்பிப் பார்த்தாள். அதற்குள் பிரதாப் கட்டிலுக்கு அருகில் வந்துவிட்டார்.

அவர் முகத்தைப் பார்த்தாலே ஏதோ கெட்ட எண்ணத்துடன் வந்திருப்பதுபோல் தோன்றியது. ''எதற்காக வந்தீங்க?''

பிரதாப் சிரித்தார் கொடூரமாக. ''கீழே யாருமே இல்லை.''

''அதனால்?'' அவள் நெற்றி சுருங்கியது.

''விஷத்தினால் உடல் முழுவதும் செயல் இழந்து விட்டவள் நீ. தலையணையால் முகத்தின் மீது அழுத்தினால் போதும். நிமிடத்தில் இறந்து விடுவாய்.

ஏற்கெனவே உயிருள்ள பிணமாக இருப்பதால் போஸ்ட் மார்ட்டம் செய்யவைக்கணும் என்று யாருக்குமே சந்தேகம் வராது. அதுதான் எங்கள் திட்டம்.''

அவளால் எதிர்ப்பு ஏதும் தெரிவிக்க முடியாத நிலை.

அவர் குனிந்து அவள் முகத்தின் மீது தலை யணையால் அழுத்தப் போகும் முன் கேட்டாள். ''என்னை கொன்று விடுவதற்கு முன்னால் ஒரு கேள்விக்கு பதில் சொல்லுங்கள். 'எங்கள் திட்டம்' என்றால் உங்கள் கூட இருப்பது யார்?''

அவர் சிரித்தார். ''சாவதற்கு முன்னால் உன் எதிரி யாரென்று தெரிந்து கொண்டு சாகணும் என்று விரும்பு கிறாயா? அப்படி என்றால் கேட்டுக் கொள். நாங்கள் என்றால் நானும் கார்த்திகேயனும்.''

உடலை அசைக்க வேண்டும் என்ற துடிப்பு அவள் நரம்புகளில் ஊடுருவியது. ஆனால் அந்தத் துடிப்பு மரணத்திற்கு முன்னால் மூச்சு திணறியதால் ஏற்பட்டது அல்ல. கார்த்திகேயனின் பெயரைக் கேட்டதால் ஏற்பட்டது.

நுரையீரலில் காற்று இல்லாமல் போவதை அவளால் உணரமுடிந்தது. செயலிழந்து போன உடம்பில் ரத்தம் வேகமாக பாய்ந்து கொண்டிருந்தது. கண்கள் நிலைகுத்தி விட்டன. முகத்தை அப்படியும் இப்படியும் அசைத்துத் தலையணையைத் தள்ள முயன்றாள். தலையணையை மேலும் அழுத்தினார். அவள் கத்துவதற்கு முயற்சி செய்த போதும் அந்தப் பதற்றத்தில் குரல் வெளியே வரவில்லை.

அப்பொழுது பின்னால் கதவுகள் படாரென்று திறந்து கொண்ட சத்தம் கேட்டது. ''ஏய்? என்ன இது?'' என்ற குரல் அவள் காதுகளில் லேசாக விழுந்தது.

தலையணையை அழுத்திக் கொண்டிருந்த பிரதாப்பின் கைகள் விலகிக் கொண்டன. அவள் தன் கைகளால் தலையணையைத் தள்ளி விட்டாள். கண்ணெதிரில் தென்பட்ட காட்சி அவளைத் திகைப்பில் ஆழ்த்தியது. சத்யன் பிரதாப்பை பிடித்து பின்னால் இழுத்துக் கொண்டிருந்தான். சத்யனை விட பிரதாப் பலம் வாய்ந்தவர்தான் என்றாலும் சத்யன் அவருக்கு எந்த வாய்ப்பும் தராமல் அழுத்திக் கொண்டிருந்தான். திடீரென்று பிரதாப் காலை உயர்த்தி தாக்கியதில் சத்யனின் பிடி தளர்ந்தது. முழங்காலில் அடிபட்டதால் தரையில் அப்படியே சரிந்தான். பிரதாப் மின்னல் வேகத்தில் வெளியேறினார்.

ஸ்ரீகல்யாணி இண்டர்காமை அழுத்தினாள். அது உள்ளே ஒலித்து சமையல்காரி வருவதற்கு அரை நிமிட மாகி விட்டது. ''பிரதாப்பை தடுத்து நிறுத்தச் சொல்லி கூர்க்காவிடம் சொல்லு. தப்பித்துக் கொண்டு ஓடுகிறார்; க்விக்'' என்றாள். சமையல்காரிக்கு அவள் சொன்னது முதலில் புரியவில்லை. புரிந்து கொண்டு அவள் செயல் படுவதற்குள் மேலும் ஒரு நிமிடமாகிவிட்டது.

அதற்குள் சத்யன் மெதுவாக எழுந்து கொண்டான். வேகமாக வாசல் பக்கம் போகப் போனவன் முழங்கால் சுவாதீனத்தில் இல்லாததால் வேதனையுடன் நாற்காலியில் சரிந்தான். இந்தச் சில வினாடிகளுக்குள் கல்யாணி தேறிக் கொண்டு விட்டாள்.

கூர்க்காவும் மற்ற வேலைக்காரர்களும் வாசலில் வந்து நின்றார்கள்.

''கிடைத்தாரா?'' என்று கேட்டாள்.

''யாரு மேடம்?''

''அதையும் நான்தான் சொல்லணுமா? எவனோ வந்து வீட்டுக்குள் நுழைந்து என் கழுத்தை நெறித்துக் கொலை செய்தாலும் யாருக்கும் தெரியப் போவதில்லை. கூர்க்கா என்றால் கேட்டை காவல் காக்கிறவன் இல்லை. வீட்டை காவல் காக்கிறவன்.''

கூர்க்கா பதில் பேசவில்லை.

''யு ஆர் சஸ்பெண்டெட். உன்னை இந்த நிமிடத்தி லிருந்து வேலையிலிருந்து நீக்குகிறேன்'' என்று சொல்லி யிருப்பாள், பழைய கல்யாணியாக இருந்தால். ஆனால் கார்த்திகேயனின் சகவாசம் அவளிடம் ஏதோ மாற்றத்தை ஏற்படுத்தியிருந்தது போலும்.

''இனிமேல் கவனமாக இரு'' என்றாள், இனி நீ போகலாம் என்பது போல்.

வேலைக்காரர்கள் எல்லோரும் போன பிறகு சத்யனிடம் சொன்னாள். ''கமிஷனருக்கு போன் போடு. நான் பேசுகிறேன்.''

சத்யன் உடனே எழுந்துகொள்ளவில்லை. இடத்தை விட்டு அசையாமலேயே ''பிரதாப் மீது கேஸ் போடுவது அவ்வளவு சுலபம் இல்லை கல்யாணி'' என்றான்.

அவள் வியப்புடன் ''ஏன்?'' என்றாள்.

''பிரதாப் இங்கே வந்ததற்கு நீயும் நானும் தவிர வேறு எந்த சாட்சியமும் இல்லை. இத்தனை பேர் இருக்கும் போது யாருக்கும் தெரியாமல் பங்களாவுக்குள் நுழைவது எப்படி சாத்தியம் என்ற கேள்வி முதலில் வரும். கொலை செய்வதுதான் தன்னுடைய உத்தேசம் என்றால் கதவுகளை சாத்திக் கொண்டுதானே செயல்படுவேன் என்று பிரதாப் வாதம் செய்வார். அதோடு உன்னைக் கொலை செய்வதால்

தனக்கு என்ன லாபம் என்று கேட்பார். முன்னாள் போலீஸ் அதிகாரி. இப்போ டிடெக்டிவ் ஏஜென்ஸியின் யஜமானன். அப்படிப்பட்ட நபர் மீது கேஸ் போட்டால் நாம் தான் கோர்ட்டை சுற்றிச் சுற்றி வரணுமே தவிர அவருக்குத் தண்டனை கிடைக்கும் என்று நான் நினைக்கவில்லை.''

''வேலையிலிருந்து நீக்கி விட்டோம் என்று பகையை தீர்த்துக் கொள்கிறாரோ என்னவோ?''

''அவ்வளவு சின்ன விஷயத்திற்காக இவ்வளவு பெரிய காரியத்தில் இறங்குவார் என்றால் கோர்ட் நம்பாது. வேறு ஏதோ காரணம் இருந்திருக்க வேண்டும். கொலை செய்யப் போகும் முன் ஏதாவது சொன்னாரா?'' ஓரக்கண்ணால் பார்த்துக் கொண்டே சத்யன் கேட்டான்.

''சொன்னார். ஆனால் அதற்கு அவ்வளவு முக்கியத்துவம் கொடுக்க வேண்டியதில்லை. கார்த்திகேயனைப் பற்றி ஏதோ உளறினார், தானும் கார்த்திகேயனும் சேர்ந்து திட்டம் போட்டிருப்பது போல்.''

சத்யன் சடாரென்று நாற்காலியை விட்டு எழுந்து கொண்டு ''மைகாட்! இதற்குப் பின்னால் கார்த்திகேயன் இருக்கிறானா?''

''இல்லை'' என்றாள். ''இருக்கிறான் என்று என்னுள் சந்தேகம் ஏற்படுத்துவதற்கு கடைசி நிமிடத்தில் முயற்சி செய்திருக்கிறார். கார்த்திகேயன் வேண்டும் என்றால் மறுகேள்வி கேட்காமல் சொத்து முழுவதையும் நான் எழுதிக் கொடுத்து விடுவேன் என்று பிரதாப்பிற்கு தெரியாது.''

சத்யனின் முகம் வாடிப் போய் விட்டது. இருந் தாலும் தன் உணர்வுகளை வெளியில் காட்டிக் கொள்ளாமல்

''இதற்கு முன்னால் கூட இதே போல் ஏதோ டிரிக் ப்ளே செய்திருக்கிறார் இல்லையா?'' என்றான்.

''இந்த விஷயத்தை சும்மா விடக் கூடாது. நீ போலீசுக்கு போன் செய். நான் பேசுகிறேன்'' என்றாள்.

சத்யன் போன் அருகில் சென்று டயல் செய்வது போல் போக்கு காட்டி விட்டு திடீரென்று ஏதோ நினைவுக்கு வந்தாற் போல் ரிசீவரை வைத்து விட்டு ''இப்போ எனக்குப் புரிகிறது அவருடைய அசல் திட்டம்'' என்றான்.

''என்ன?''

''நாம் அவர் மீது கேஸ் போட்டு குற்றத்தை நிரூபிக்க முடியாவிட்டால், பிறகு நம் மீது மான நஷ்ட வழக்கு போடுவது அவருடைய உத்தேசமாக இருக்க வேண்டும்.''

கல்யாணி கண்களை அகல விரித்து ''அப்படித்தான் என்கிறாயா?'' என்றாள்.

''ஆமாம். அவரிடம் இப்போது பணம் இல்லை. பணத்தைச் சம்பாதிப்பதற்காக இந்த விதமாக திட்டம் போட்டிருப்பார். ஐந்தாறு லட்சத்திற்கு குறையாமல் நம்மீது மான நஷ்ட வழக்கு போட முடியும்.''

அவள் நெற்றியின் மீது கையை வைத்துக் கொண்டே ''மைகாட்! அவருக்கு அவ்வளவு கிரிமினல் மூளை யிருக்கா?'' என்றவள், திடீரென்று வீலென்று கத்தினாள்.

போன் அருகில் இருந்த சத்யன் சட்டென்று தலையை உயர்த்தி அவள் பக்கம் பார்த்தான்.

அவள் தன் கைகளைப் பார்த்துக் கொண்டே ''என் கைகள்...'' என்றாள். அதற்கு மேல் அவளால் பேசமுடிய வில்லை.

சத்யன் குழப்பத்துடன் ஓரடி முன்னால் வைத்தான்.

அவள் தன் கைகளை காற்றில் அசைத்துக் கொண்டே ''உயிருக்காக நான் போராடிக் கொண்டிருக்கும் போது நரம்புகள் சுவாதீனத்திற்கு வந்திருக்கும்'' என்றாள் தனக்குத் தானே பேசிக் கொள்வது போல்.

சத்யன் இன்னும் அதிர்ச்சியிலிருந்து மீளவில்லை. தன் உணர்ச்சிகளை அடக்கிக் கொண்டு வெளியில் சந்தோஷமாக இருப்பது போல் காட்டிக் கொள்வதற்கு அவன் ரொம்ப சிரமப்பட வேண்டியிருந்தது. அருகில் வந்து ''கங்கிராஜுலேஷன்ஸ் கல்யாணி'' என்றான்.

அபூர்வமாக கிடைத்த விளையாட்டுப் பொருளைப் போல் அவள் தன் கைகளைப் பார்த்துக் கொண்டிருந்தாள். இந்தச் செய்தியை உடனே தன் கணவனுடன் பகிர்ந்து கொள்ளணும் என்ற விருப்பம் ஏற்பட்டது. போனை அருகில் இழுத்துக் கொண்டு டயல் செய்தாள். சத்யன் ஏதோ சொல்ல வந்த போது ''உஷ்!'' என்றாள்.

அரை நிமிடம் கழித்து அவள் போனை வைத்து விட்டு ''இல்லையாம். அது சரி, இப்பொழுதுதானே அங்கே பரிசளிப்பு விழா?'' என்றாள்.

சத்யன் பதில் பேசவில்லை. பொறாமையுடன் பார்த்துக் கொண்டிருந்தான். அவளை இல்லை, கணவன் பால் அவளுக்கு இருந்த அன்பை.

அவள் சொன்னாள். ''சத்யன்! இந்த விஷயத்தை அவரிடம் நீ சொல்லாதே. அவர் இங்கே வரும் போது பிளெஸெண்ட் சர்ப்பிரைஸாக இருக்கட்டும்.''

'கார்த்திகேயனைப் பற்றி என்கொயரி செய்யச் சொல்லட்டுமா?' என்று கேட்க நினைத்த சத்யன்

வார்த்தைகளை விழுங்கிக் கொண்டான். இப்போ இந்தச் சூழ்நிலையில் கார்த்திகேயனே கொலை செய்ய வந்தாலும் அதை நம்பும் நிலையில் அவள் இல்லை என்று அவனுக்குப் புரிந்து விட்டது.

★

மாநில கவர்னர் சொற்பொழிவு ஆற்றிக் கொண்டிருந்தார். ஹாலின் முக்கால் பாகத்திற்கு மேல் கூடியிருந்த மக்கள் நிசப்தமாக கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

மனிதர்களின் குணாதிசயத்தின் மீது கலைகளின் பாதிப்பு என்ற அம்சத்தைப் பற்றி தொடங்கி, தற்சமயம் பதவியில் இருக்கும் அரசாங்கம் மலிவு விலை அரிசி திட்டத்தை எப்படி செயல்படுத்துகிறது என்பதைப் பற்றி விவரித்துக் கொண்டிருந்தார் ஆளும் கட்சியின் பக்க பலத்தால் பதவிக்கு வந்திருந்த கவர்னர்.

கார்த்திகேயனும் மற்ற சில கலைஞர்களும் ஹாலுக்கு சற்று தொலைவில் மரத்தடியில் நின்று பேசிக் கொண்டிருந்தார்கள். உண்மையான கலைஞர்களுக்கு அரசியலும், சொற்பொழிவுகளும், கூட்டங்களும் அதிகமாக உற்சாகத்தைத் தந்து விடாது. ஆர்வத்தை தூண்டக் கூடியதாக இருந்தால் தவிர பார்வையாளராக ஒன்ற முடியாது அவர்களால். சக கலைஞர்களை சந்திப்பதற்காகவே இவ்வளவு தூரம் வந்திருந்தான் கார்த்திகேயன். பத்துப் பேர் கலைஞர்கள் ஒன்று கூடும் இடம் சிறு குழந்தைகளின் காப்பகம் போன்றது. அவர்களுடைய உலகத்தை வெளியார் புரிந்து கொள்ள முடியாது.

''உங்களை ஹோட்டல் அறையிலிருந்து வெளியே அனுப்பிவிட்டதற்கு நாங்கள் ரொம்ப வருத்தப்பட்டோம்.

நீங்கள் பெரிய கலைஞர். உங்கள் ஓவியங்களைப் பார்த்து நாங்கள் பிரமித்துப் போய் விட்டோம்'' என்றான் கோவிந்த்.

கார்த்திகேயன் சிரித்து விட்டு மௌனமாக இருந்து கொண்டான்.

கோவிந்த் மேலும் சொன்னான் - ''வாஸ்தவத்தில் உங்களை அந்த அறையைக் காலி செய்ய வைப்பதில் எங்களுக்குள் - எனக்கும் அனுஜாவுக்கும் - ஒரு பந்தயமே ஏற்பட்டுவிட்டது.''

கார்த்திகேயன் வியப்புடன் ''பந்தயமா?'' என்றான்.

''உங்கள் அறையை காலி பண்ணச் செய்து விட்டால் அவள் என்ன கேட்கிறாளோ அதை நாங்கள் தர வேண்டும் என்று பந்தயம் கட்டினாள். பந்தயத்தில் வென்று எங்கள் ஜேபிகளை காலி செய்து விட்டாள். ஆனால் அப்புறமாக தோற்றுவிட்டாள் இல்லையா? இப்பொழுது மற்ற நண்பர்கள் எல்லோரும் ரொம்ப கோபத்தில் இருக்கிறார்கள். அவளை சங்கடமான நிலைக்கு தள்ளி அவளால் செய்ய முடியாததை கேட்க வேண்டும் என்று முடிவு செய்திருக்கிறார்கள்.''

''என்ன அது?''

அவர்களுடைய உரையாடல் ஹிந்தியில் நடந்து கொண்டிருந்தது. கோவிந்த் ஏதோ சொல்லப் போனான். அதற்குள் ஆடிட்டோரியத்திலிருந்து கைத்தட்டல் ஓசை கேட்டது. கவர்னரின் பேச்சு முடிவடைந்து விட்டது போலும். இருவரும் அந்தப் பக்கமாக பார்த்தார்கள்.

''வாங்க போகலாம். பரிசுகளை அறிவிக்கப் போகிறார்கள்'' என்று அரங்கை நோக்கி நடக்கத் தொடங்

கினான் கோவிந்த். ''உங்களுக்கு இந்தப் பரிசுகள் மீது பெரிதாக ஆர்வம் எதுவும் இல்லை போலிருக்கே?''

கார்த்திகேயன் முறுவலித்து விட்டு பேசாமல் இருந்தான்.

''நீங்கள் அதிகமாக பேசமாட்டீங்க போலிருக்கே?''

''அப்படி ஒன்றும் இல்லை. பரிசுகளை விட உங்களை எல்லாம் சந்திக்க வேண்டும் என்ற ஆர்வத்தில் தான் வந்தேன்.''

''உங்களுக்கு தெரியுமா? அனுஜா கூட ஒரு ஓவியர் தான்.''

''சொன்னாள். பாவம்! அவளுடைய கதை வேதனை நிறைந்தது இல்லையா?''

நடந்து கொண்டிருந்த கோவிந்த் நின்று, ''வேதனை நிறைந்ததா?'' என்றான்.

''அதான் கொள்ளையர்கள் வந்து அவள் கணவனின் கையை வெட்டியது'' என்று தொடங்கி எல்லாவற்றையும் சொன்னான்.

பாதியிலேயே சிரிப்பு வந்தாலும் வலுக்கட்டாயமாக அடக்கிக் கொண்டான் கோவிந்த். கார்த்திகேயன் சொல்லி முடித்ததும் அதற்குமேல் தாங்கிக் கொள்ள முடியாமல் வயிற்றைப் பிடித்துக் கொண்டு சிரிக்கத் தொடங்கினான். கார்த்திகேயன் ஒன்றும் புரியாமல் அவனைப் பார்த்தான்.

''என்ன கார்த்திகேயன் சார்? ஷோலே சினிமாவா? பதினாறு வயதிலேயே கல்யாணம் ஆகிவிட்டதாமா? சம்பல் கொள்ளையர்கள் கையை வெட்டி விட்டார்களா? கீழே விழுந்ததில் அபார்ஷன் ஆகிவிட்டதா? கணவன்

தி ஹார் ஜெயிலில் பொழுதை கழித்துக் கொண்டிருக் கிறானா? விறகுக் கட்டையால் கொள்ளைக்காரனின் தலையில் ஓங்கி அடித்ததால் கட்டை ஒடிந்து விட்டதா?'' என்று கேட்டுவிட்டு மறுபடியும் விழுந்து விழுந்து சிரிக்கத் தொடங்கினான்.

கார்த்திகேயன் பதில் பேசவில்லை.

''எங்க அனுஜா ஒரு வாலில்லாத குரங்கு. விதவித மாக பொய் சொல்லுவாள். நீங்கள் கூட அந்த வலையில் விழுந்துட்டீங்க போலிருக்கு. முகத்தில் அவ்வளவு அப்பாவித்தனம் தென்பட்டால் யாருமே நம்பத்தானே செய்வாங்க.''

இருவரும் ஆடிட்டோரியத்திற்குள் நுழைந்தார்கள். முன் வரிசையில் உட்கார்ந்திருந்த அனுஜா திரும்பி இவர்களைப் பார்த்து விட்டு கையை ஆட்டினாள். கோவிந்த் பதிலுக்குக் கையை ஆட்டினான். சீட்டில் உட்கார்ந்து கொள்ளும் போது ''கார்த்திகேயன் சார்! நீங்கள் முட்டாளடிக்கப்பட்டு விட்டதற்கு வருத்தப்படறீங்களா?'' என்று கேட்டான்.

''இல்லை. நாளைக்கு டில்லிக்குப் போனதும் கல்லூரியில் எல்லோரிடமும் சொல்லி வேடிக்கையாக சிரித்துக் கொள்வதற்கும், நல்ல பொழுது போக்காகவும் இருக்கும் இல்லையா? இந்தப் பிராக்டிகல் ஜோக்கை நான் கூட ரசிக்கிறேன்.''

கோவிந்த் உள்ளூற சிரித்துக் கொண்டான். முட்டாளடிக்கப்பட்டதை மறைத்துக் கொள்ளணும் இல்லையா? வேறு எப்படி சொல்லுவான் என்று நினைத்தான்.

அதற்குள் ஜட்ஜ் வந்து உறையைப் பிரித்தார்.

அதுவரை இருந்து வந்த கொஞ்ச நஞ்ச சலசலப்பும் அடங்கி ஆடிட்டோரியத்தில் ஊசி விழுந்தாலும் கேட்கும் அளவுக்கு நிசப்தம் வந்து சூழ்ந்து கொண்டது.

பரிசு விவரங்களை ஜட்ஜ் படிக்கத் தொடங்கினார்.

''முதல் பரிசு...'' சஸ்பென்சுக்காக நிறுத்தி விட்டு பிறகு சொன்னார். 'கீதாஞ்சலி' என்ற புனைப் பெயர் கொண்ட குமாரி அனுஜா'' ஆடிட்டோரியத்தில் கைத்தட்டல் ஓசை.

அனுஜா நாற்காலியை விட்டு எழுந்து கொண்டாள். அவளைப் பார்த்ததுமே மற்றொரு முறை அந்த ஹாலே அதிரும்படியாக கைத்தட்டல் ஓசை கேட்டது. பாதி பேர் அவள் அழகிற்கு மெய் மறந்து போய் கை தட்டினார்கள்.

கார்த்திகேயன் எதையுமே கவனிக்கவில்லை. இரண்டாவது பரிசு யாருக்கு என்பதைக் கூட பொருட் படுத்தாமல் ஆடிட்டோரியத்தை விட்டு வெளியே வந்து பக்கத்திலேயே இருந்த ஹாலுக்குள் நுழைந்தான். கண்காட்சிக்காக வைக்கப்பட்டிருந்த ஓவியங்கள் அங்கே தான் இருந்தன. அனுஜா 'கீதாஞ்சலி' என்ற பெயரில் போட்டியில் பங்கெடுத்துக் கொண்டது அவனுக்கு அதுவரையில் தெரியாது. அவன் எல்லா ஓவியங்களையும் அதற்கு முன்பே பார்த்திருந்தான். ஆனால் தெரிவதற்கு முன்னால் பார்ப்பது வேறு. வரைந்தது யாரு என்று தெரிந்த பிறகு பார்ப்பது வேறு.

பாதி மூடிக் கொண்டிருந்த இரண்டு அழகான கண்கள். அவற்றின் மீது மெல்லிய துணியால் ஆன திரை. கீழே சிறிய எழுத்துகளில் 'இனிய நினைவுகள்' என்ற

தலைப்பும், இன்னெளாரு மூலையில் 'கீதாஞ்சலி' என்று ஓவியரின் பெயரும் இருந்தன.

அந்த ஓவியம் வரைந்திருந்த விதத்தில் அனுபவம் இல்லை. உழைப்பு இருந்தது. தேசிய போட்டிக்கான தகுதி இல்லை என்றாலும் அப்பாவித்தனமான நளினம் இருந்தது.

பரிசுகளைப் பற்றி அறிவித்ததுமே கார்த்திகேயன் விருட்டென்று வெளியேறியதை கவனித்த கோவிந்த் பின்னாலேயே வந்தான். தனக்குப் பரிசு கிடைக்காததால் கார்த்திகேயன் ஆத்திரமடைந்து அவ்வாறு வந்துவிட்டான் என்று நினைத்தான். ஆனால் அவன் ஹாலுக்குள் போய் அனுஜாவின் ஓவியத்திற்கு முன்னால் நின்று அதில் மூழ்கிப் போய் விட்டதைப் பார்த்தும் கோவிந்துக்கு புரியவில்லை.

''படம் நன்றாக இல்லையா?'' பழிப்பது போல் கேட்டான் ஓரக்கண்ணால் பார்த்துக் கொண்டே.

''நன்றாக இல்லாமல் போவதா? அந்தப் பெண்ணின் குறும்புத்தனத்தைப் பார்த்தால் அவளிடம் இவ்வளவு ஆர்ட் இருப்பதை யாராலுமே நினைத்துப் பார்த்திருக்க முடியாது. அந்தக் கண்களைப் பார்த்தாயா? எவ்வளவு அழகாக இருக்கின்றன?''

கோவிந்த் வாயடைத்துப் போய் கார்த்திகேயனை பார்த்தான். அவனுக்கு ஒரு விஷயம் தெளிவாக புரிந்தது. பரிசு வரவில்லை என்று தெரிந்ததுமே கார்த்திகேயன் விடுவிடென்று வெளியே போனது ஆத்திரத்தால் அல்ல. தன் சிநேகிதி என்ன வரைந்திருக்கிறாள் பார்ப்போம் என்றுதான். அந்த உற்சாகத்தில் இரண்டாவது பரிசு தனக்கு வந்ததா இல்லையா என்று கூட பொருட்படுத்தவில்லை. அதோடு அந்த ஓவியத்தின் அழகையும், பொருளையும் தனக்கு விளக்குகிறான். கிரேட்!

கோவிந்த் கண்களில் தன்னையறியாமல் நீர் தளும்பியது. அனுஜா கட்டுக் கதை சொல்லி முட்டாளடித்த போது கூட ''நீங்கள் கல்லூரியில் வேடிக்கையாக சிரித்துக் கொள்ள பொழுது போக்காக இருக்கும்'' என்ற கார்த்திகேயனின் வார்த்தைகளில் சிலேடை இல்லை என்றும், 'என் மீது போடப்படும் ஜோக் உங்களுக்கு சந்தோஷத்தை தந்தால் அந்த ஜோக் எனக்கும் சந்தோஷமே' என்ற பொருள் மட்டும்தான் இருந்தது என்றும் புரிந்து கொண்டான். தன் உணர்வுகளை வெளியே காட்டிக் கொள்ளாமல் ''இந்த ஓவியத்திற்கு அர்த்தம் என்ன சார்?'' என்று கேட்டான்.

கார்த்திகேயன் இன்னும் அந்த ஓவியத்தை பார்த்துக் கொண்டே ''நினைவுகள் எப்பொழுது இனிமையாக மாறும் கோவிந்த்? வாழ்க்கைப் பாதையில் நம்முடன் பயணம் செய்து பலவிதமான அனுபவங்களை நம்மோடு பகிர்ந்து கொண்டால்தானே அந்தப் பரிவு இனிய நினைவாக தங்கியிருக்கும்? அதற்கு எடுத்துக்காட்டுத்தான் அந்தக் கண்கள். தாலி கட்டும் பொழுது பெரிய மனுஷியாக தலை குனிந்து கொள்ளும் சாக்கில் தரையைப் பார்த்துக் கொண்டு 'இனி உன் மீது குறும்புடன் குதித்துப் பாட முடியாது' என்று பூமாதேவியுடன் பேசும் கண்கள். முதலிரவன்று இதயமெனும் அலமாரியிலிருந்து மௌன அட்சரங்களைக் கொண்ட புத்தகத்தை எடுத்துப் பிரித்து, ரசமான சம்பவங்களைப் படித்து, படிக்கச் செய்து சோர்ந்து போன கண்கள்.

''மகளை புகுந்த வீட்டுக்கு அனுப்பி வைத்து விட்டு கதவு மறைவில் கண்ணீர் வடிக்கும் தாயின் கண்கள். வெளியூரில் படித்துக் கொண்டிருக்கும் மகனை நினைத்துக் கொண்டே முறத்தில் இருக்கும் அரிசியிலிருந்து கற்களை

பொறுக்கும் கண்கள். அப்படிப்பட்ட கண்கள் நிரந்தரமாக மூடிக் கொண்டு விட்டால்?'' கார்த்திகேயன் நிறுத்தினான். ''அதோ கண்களை மூடியிருக்கும் திரை... அது மரணத்தை குறிக்கிறது.''

கோவிந்த் வியப்புடன் கொஞ்ச நேரம் பேசாமல் இருந்து விட்டு கடைசியாக சொன்னான். ''உங்களைக் கல்யாணம் செய்து கொள்ளப் போகும் பெண் ரொம்ப அதிர்ஷ்டசாலி.''

''எனக்குக் கல்யாணம் ஆகவில்லை என்று நினைத்துவிட்டாயா? ஆகிவிட்டது. என் மனைவியின் பெயர் ஸ்ரீகல்யாணி.''

17

அவள் சொன்னதை எல்லாம் பீட்டர் மௌனமாக கேட்டுக் கொண்டான்.

முழுவதையும் சொல்லிவிட்டு ஸ்ரீகல்யாணி கடைசியில் சொன்னாள். ''இதை சும்மா விடுவதற்கு எனக்கு விருப்பம் இல்லை. சத்யன் சொன்னது உண்மை யாகவே இருக்கலாம். எனக்கும் என் கணவருக்குமிடையே கருத்து வேற்றுமைகளை ஏற்படுத்துவதற்காகவோ அல்லது என் மீது மான நஷ்ட வழக்கு போடுவதற்காகவோ பிரதாப் இந்தக் காரியத்தை செய்திருக்கக் கூடும். பீட்டர்! நீங்கள் எங்கள் கம்பெனிக்கு விஜிலென்ஸ் ஆஃபீசர். ஆனால் இந்த என்கொயரி மட்டும் எனக்காக தனிப்பட்ட முறையில் செய்யுங்கள். ஏதாவது விஷயம் வெளியில் வரக் கூடும்.''

''முயற்சி செய்கிறேன்'' பீட்டர் சுருக்கமாக சொல்லி விட்டு எழுந்து கொண்டான். கீழே வந்த பிறகு கூர்க்காவை இண்டராகேட் செய்தான்.

''பிரதாப் வீட்டுக்குள் நுழைந்ததாக சொல்லும் நேரத்தில் நீ கேட் அருகில் இல்லையா?''

''இருந்தேன் சாப்.''

''அவர் சுவர் ஏறி குதித்து உள்ளே வர வாய்ப்பு இல்லை. அல்சேஷன் நாய்கள் இருக்கு இல்லையா?''

''ஆமாம் சாப்.''

''பின்னே எப்படி வந்திருப்பான்?''

''தெரியவில்லை சாப்.''

பீட்டர் சற்று நேரம் யோசித்தான். கொலை முயற்சி நடந்த சமயத்தில் சத்யன் வந்து சண்டை போட்டது ஏனோ செயற்கையாக தோன்றியது. சத்யனின் வாதத்திலும் ஏதோ குறையிருப்பது போல் பட்டது.

''சத்யன் காரை போர்டிகோவில் நிறுத்திவிட்டு உள்ளே மாடிக்குப் போனானா?''

''போர்டிகோவில் இருக்கும் கார் கேட்டில் நிற்கும் எனக்குத் தெரியாது சார்.''

பீட்டருக்கு மேற்கொண்டு என்ன கேட்பது என்று தெரியவில்லை. ''பிரதாப் வெளியே போனதை நீ பார்த்தாயா?''

''மேடம் அழைக்கும் வரையில் நான் கேட்டை விட்டு நகரவில்லை சாப்.''

''குட்!'' அங்கிருந்து நகர்ந்தான் பீட்டர்.

பிரதாப் கீழே இறங்கி வந்து சத்யனின் காரிலேயே மறைந்தபடி உட்கார்ந்திருக்கக் கூடும். சத்யன் மீது தன்க்கு ஏற்பட்ட சந்தேகத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக அவன் பப்ளிக் பூத்திலிருந்து போன் செய்தான்.

''ஹலோ!'' மறுமுனையில் சத்யனின் குரல் கேட்டது.

''சிக்மா ஏஜென்ஸியிலிருந்து பேசுகிறேன் சார். பிரதாப் சார் உங்களை அர்ஜெண்டாக வரச் சொன்னார்.''

''எதற்கு?''

''ஸ்ரீகல்யாணியின் கொலை முயற்சி பற்றி ஏதோ பேச வேண்டுமாம்'' என்று சொல்லி விட்டு போனை வைத்து விட்டான். பிறகு அங்கிருந்து சிக்மா ஏஜென்ஸி கட்டிடத்தின் பின்பக்கம் போனான். அங்கே வேலை செய்தவன் என்பதால் அந்த இடமெல்லாம் நன்றாக தெரியும்.

ஐந்து நிமிடங்கள் கழித்து சத்யன் ப்ரபரப்புடன் அந்த ஆபீசுக்கு வந்தான். நேராக பிரதாப்பின் அறைக்குள் நுழைந்து ''என்ன? நம்முடைய திட்டத்தைப் பற்றி யாருக்காவது தெரிந்து போய்விட்டதா?'' என்றான்.

சத்யனின் திடீர் வருகைக்கு வியப்படைந்த பிரதாப், இந்தக் கேள்விக்கு மேலும் ஆச்சரியமடைந்து ''என்ன சொல்கிறாய்?'' என்றார்.

சத்யன் குழப்பத்துடன் ''என்ன?'' என்றான்.

''யாரோ டிரிக் ப்ளே செய்திருக்கிறார்கள். உடனே இங்கிருந்து போய் விடு'' என்று கத்தினார்.

சத்யனுக்கு அப்பொழுது தான் புரிந்தது. வெளிறிப் போன முகத்துடன் அறையை விட்டு வெளியேறினான்.

ஜன்னலுக்கு வெளியே புதரில் மறைந்தபடி இந்த உரையாடலைக் கேட்டுக் கொண்டிருந்த பீட்டர் தன் வேலையை முடித்த உற்சாகத்தில் அங்கிருந்து நகர்ந்தான்.

★

காலை பத்து மணியாகிவிட்டது. ஸ்ரீகல்யாணி செய்தித் தாளைக் கையில் எடுத்துக் கொண்டாள். கைகள் சுவாதீனத்திற்கு வந்து அதற்குள் ஒரு நாள் ஆகியிருந்தது.

அதுவரை அசையாமல் கிடந்த நிலைமைக்கும், இப்பொழுது கைகளை இயக்கத் தொடங்கியிருந்த நிலைமைக்கும் வித்தியாசம் இருந்தது. அந்த வித்தியாசத் திற்கு ஏற்றவாறு தன் அறையில் மாற்றங்களை செய்தாள் - கட்டிலுக்கு பக்கத்தில் கம்ப்யூட்டர் போன்றவைகள்.

விஷ பிரபாவத்தின் தீவிரம் குறைந்த பிறகு உடம்பில் சில அவயவங்களில் அசைவுகள் தோன்றி அவை சுவாதீனத்திற்கு வரலாம் என்று டாக்டர் சொல்லியிருந்தது நினைவுக்கு வந்தது.

அப்படி என்றால்...

இனி இந்த விதமான வாழ்க்கைக்கு நிரந்தரமாக பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். ஏதாவது அற்புதம் நிகழ்ந்தால் ஒழிய உடம்பு முழுவதும் சுவாதீனத்திற்கு வராது. அது அசம்பவம். அதனால் அவள் மனதளவில் தயாராகிக்கொண்டிருந்தாள்.

செய்தித் தாளை பார்த்துக் கொண்டிருந்த போது கடைசிப் பக்கத்திலிருந்த செய்தி அவளைக் கவர்ந்தது.

''நேஷனல் கல்சுரல் போட்டியில் ரகளை!''

அவள் உற்சாகத்தோடு படிக்கத் தொடங்கினாள். அந்தச் செய்தியின் முழு விவரங்களையும் தெரிந்து கொள்ள வேண்டும் என்றால் ஒரு நாள் பின்னோக்கிச் செல்ல வேண்டும்.

★

கார்த்திகேயனும் கோவிந்தும் சேர்ந்து ஆடிட்டோரியத்திற்கு திரும்பி வந்த பொழுது பரிசுகளைப் பற்றிய அறிவிப்பு முடிந்து விட்டிருந்தது. பல துறைகளில் பரிசுகள் கிடைக்கப் பெற்றவர்களுக்கு கலை நிகழ்ச்சிகள் முடிந்த பிறகு கவர்னர் பரிசுகளை வழங்குவார் என்று அறிவித்தார்கள். ஜவஹர்லால் யூனிவர்சிடீ மாணவர்களின் கும்பல் வந்ததே கலை நிகழ்ச்சியில் பங்கு பெறுவதற்காகத்தான். கார்த்திகேயன் கூட அனுஜாவின் ஓவியத்தைப் பற்றி தெரிந்து கொள்வதற்கு முன்பு அவள் அந்த நாடகத்திற்காக மட்டுமே வந்திருப்பதாக நினைத்துக் கொண்டிருந்தான்.

''என் மேல் உங்களுக்குக் கோபமாக இருக்கிறது இல்லையா?'' கேட்டாள் அனுஜா, கார்த்திகேயன் டிராமா ட்ரூப்பை பாராட்டுவதற்காக மேக்கப் அறைக்குள் வந்த போது.

''கோபம் எதற்கு?''

''நானும் போட்டியில் பங்கெடுத்துக் கொள்ளப் போவதாக சொல்லாததற்கு.''

''அதற்குக் கோபம் இல்லை. ஆனால் நீ எதற்காக அவ்வளவு பெரிய கட்டுக் கதையைச் சொன்னாய்?''

''என்ன கட்டுக் கதை?''

''சம்பல் பள்ளத்தாக்கு... ராஜேஷ் என்ற கணவன்.''

''இதையெல்லாம் உங்களுக்கு யார் சொன்னார்கள்?'' உதடுகளை இறுக்கிக் கொண்டே கேட்டாள்.

''கோவிந்த் சொன்னான்.''

அவள் சிரித்தாள். ''பின்னே உங்களை எப்படி படம் போடவைப்பது என்று தெரியவில்லை.''

''அதற்காக இவ்வளவு பெரிய கதையைச் சொன்னாயா?''

''நீங்கள் என் இடத்தில் இருந்து யோசித்துப் பாருங்கள் மித்ராஜீ! நானும் போட்டியில் பங்கெடுத்துக் கொள்கிறேன். உங்கள் ஓவியம் என்னால் பாழாகி விட்டது. போட்டியிலிருந்து நீங்கள் பின் வாங்கி விட்டால் பிறகு எனக்கு அதனால் திருப்தி ஏற்படுமா? எனக்குப் பரிசு கிடைத்தால் கூட அது நீங்கள் போட்டியில் கலந்து கொள்ளாததால்தான் வந்தது என்று ஆகிவிடாதா?''

''போட்டி நம் இருவருக்கும் மட்டும்தான் என்று நினைத்துக் கொண்டு விட்டாயா? எனக்கு செகண்ட் பிரைஸ் கூட வரவில்லை என்ற விஷயத்தை மறந்து போய் விட்டாயா?''

''அதற்குக் காரணம் நாம் செய்த வர்ணப் பிரயோகங்கள்'' என்றாள் அனுஜா. ''அது சரி, நீங்கள் என் ஓவியத்தை ரொம்ப பாராட்டினீர்களாமே. கோவிந்த் சொன்னான்.''

''கருத்து நன்றாக இருக்கிறது. தலைப்பும் சரியாக பொருந்தியிருக்கிறது. ஆனால் கோடுகளிலும், பயன் படுத்தியிருக்கும் வர்ணங்களிலும் இன்னும் அனுபவம் தேவை.''

''இன்னுமா? இந்தியாவில் முதல் இடத்தில் இருக்கும் ஓவியர் நான் என்ற விஷயத்தை மறந்து போய் விட்டீங்க.'' என்றவள் கலகலவென்று நகைத்து விட்டு ''சும்மா சொன்னேன்'' என்றாள்.

''நான் முதலில் வரைந்த ஓவியம் போட்டியில் இருந்தாலும் கூட உனக்குத் தான் முதல் பரிசு கிடைத் திருக்கும் என்று நினைக்கிறேன். அது வேறு விஷயம். நான் சொல்ல வந்தது, கலையில் சாதிக்க வேண்டிய முன்னேற்றத்தைப் பற்றி. நீ இந்தியாவின் நம்பர் ஒன் ஓவியராக இருக்கலாம். உலகத்திலேயே ஓவியத்துறையில் நீ முதலிடத்திற்கு வரவேண்டும் என்பது என் விருப்பம்'' என்றான்.

அவள் கண்களில் தன்னை அறியாமலேயே நீர் சுழன்றது. மெதுவாக ''உங்களுக்கு உண்மையிலேயே என் மீது கோபம் இல்லையா?'' என்றாள்.

''கோபம் எதற்கு அனுஜா? இவ்வளவு சின்ன வயதில் இவ்வளவு உயர்ந்திருக்கிறாய். கலையில் நிபுணராக இருக்க வேண்டும் என்று விரும்புகிறவர்கள் கண்டிப்பாக ரிசர்வ்ட் ஆகத்தான் இருக்க வேண்டும் என்று இல்லை என்றும், ஆடிக் கொண்டும் பாடிக் கொண்டும் இருக்கலாம் என்றும் நிரூபித்து விட்டாய். எல்லாவற்றையும் விட முக்கியமாக நான் போட்டியில் கலந்து கொள்ளாமல் இருப்பதற்காக நீ செய்த நேர்மையான முயற்சி. அது எனக்கு மிகவும் பிடித்திருந்தது.''

''உண்மையாகவா?''

''ஆமாம். பொய் சொல்லத் தெரியாது எனக்கு.''

''அப்படி என்றால் எனக்கு ஒரு நல்ல பரிசு வேண்டும். தருவீர்களா?''

அந்த வார்த்தைகளைக் கேட்டதும் அவன் வியப்புடன் ''சொல்லு அனுஜா'' என்றான்.

அவள் கையை நீட்டி ''இங்கே முத்தமிடுங்கள்'' என்றாள் திடீரென்று.

அவன் அவளை வெறுமையாக பார்த்துவிட்டு ''எதுக்கு?'' என்று கேட்டான்.

அவள் ''உங்களுக்காக ரத்தத்தை வடித்த கைகள் இவை. அதோடு எனக்குப் பரிசு தருவதாக சொன்னீங்க. பொய் பேசமாட்டேன் என்றும் சொன்னீங்க. உங்களுக்காக இத்தனையும் செய்தது வீண்'' என்றாள் நிஷ்டூரமாக.

அவன் அவள் கையைப் பார்த்தான். ரத்தத்திற்காக விரல் நுனிகளை முள்ளால் கீறிக் கொண்டதால் ஏற்பட்ட கீறல்கள் தென்பட்டன. அந்த வடுக்கள் சிவப்பு நிறத்தி லிருந்து கருப்பு நிறத்திற்கு மெதுவாக மாறிக் கொண்டிருந்தன.

'நான் ஸ்கூலுக்குக் கிளம்பும் நேரத்தில் என் சட்டை கிழிந்திருப்பதை பார்த்தேன். அதைத் தைத்துக் கொண்டு போவதற்குள் ஸ்கூலுக்கு நேரமாகி விட்டது. பார்த்தாயா டாடீ! டீச்சர் என்னை எப்படி அடித்தாள் என்று.'

அப்பாவித்தனமாக கைகளை காட்டும் சிறுமியின் வார்த்தைகளைக் கேட்டு எந்த இதயம்தான் உருகிப் போகாது? எந்தக் கண்கள் தான் ஈரமாகாது? அவன் அவள் கையை பற்றிக் கொண்டு முத்தமிட்டான்.

''தாங்க்ஸ் மித்ராஜீ! ஒருமுறை ஜெயித்து விட்டேன். இன்னும் இரண்டு முறை ஜெயிக்கணும்'' என்றாள்.

அதற்குள் கோவிந்த் அங்கே வந்தான்.

''ஜெயித்தாயா? அப்படி என்றால்-?'' புரியாமல் கேட்டான் கார்த்திகேயன்.

''கோவிந்த்! ஒரு தடவை முத்தம் கொடுத்தாகி விட்டது. நீ தான் சாட்சி'' என்றாள்.

''இதெல்லாம் என்ன அனுஜா?''

கோவிந்த் இடையில் புகுந்து சொன்னான். ''அவள் பந்தயத்தைப் பற்றி ஒருமுறை உங்களிடம் சொன்னேனே, நினைவு இருக்கா? அனுஜா பந்தயத்தில் தோற்றுப் போய் விட்டதால் இவர்கள் என்ன சொன்னாலும் அதை அப்படியே செய்ய வேண்டும். அதான் உங்களுக்கு மறுபடியும் ஹோட்டல் அறையை கொடுத்து விட்டார்கள் இல்லையா?''

''ஆமாம்.''

''முதலில் தான் ஜெயித்தபோது நண்பர்களைக் கொண்டு ஏகப்பட்ட பணத்தை செலவழிக்கச் செய்தாள். அந்த ஆத்திரத்தை மனதில் வைத்துக் கொண்டார்கள். இப்போ அவள் தோற்றுப் போய் விட்டாள் இல்லையா? அதனால் உங்களிடமிருந்து மூன்று முறை முத்தம் பெற வேண்டும் என்று கண்டிஷன் போட்டார்கள்.''

கார்த்திகேயன் வாயடைத்துப் போய்விட்டான்.

அனுஜா அப்பாவியாக முகத்தை வைத்துக் கொண்டு ''அஃப்கோர்ஸ்! கையில்தான் கொடுத்தீங்க என்பதால் பரவாயில்லை என்று வைத்துக் கொள்ளுங்கள். ஆனால் இதெல்லாம் நாளைக்கு கல்லூரியில் என்னை அழவைப் பதற்காக போட்ட திட்டம். நீங்கள் நல்லவராக இருப்பதால் என் மானம் காப்பாற்றப்பட்டு விட்டது. இதே வேறு

யாராவது இளவட்டமாக இருந்திருந்தால் மூன்றென்ன? முப்பதே தருகிறேன் என்று, என் பின்னாடி சுற்றத் தொடங்கியிருப்பான்.''

''அனுஜா! இந்தச் சின்ன பசங்களின் ஆட்டத்தில் என்னை சேர்க்காதே.''

''நானும் அதையே தான் சொன்னேன் அவர்களிடம். பார்ப்பதற்கு அமிதாப்பச்சனின் மருமகனாக இருந்தாலும் மித்ராஜீயின் சுபாவம் மட்டும் சங்கராபரணம் சங்கர சாஸ்திரியைப் போன்றது, அவருடன் நாம் விளையாட வேண்டாம் என்று. அவர்கள் எல்லோரும் இந்திக் காரர்களாக இருப்பதால் சங்கரசாஸ்திரியைத் தெரியாது. இவ்வளவு ஸ்மார்ட் ஆக இருப்பவனிடமிருந்து முத்தம் பெறணும் என்று பந்தயம் வைத்தால் பிகு செய்து கொள்கிறாயே என்று கிண்டல் செய்தார்கள்.

''இதோ பாரு அனுஜா! முத்தம் என்பது அன்பையும், நேசத்தையும், அளவு கடந்த காதலையும் எடுத்துக் காட்டும் அடையாளம். அதை இவ்வாறு பந்தயத்திற்காக வீணாக்கித் தாழ்வாக எடை போடாதே.''

''ஆனால் இப்பொழுதுதான் நீங்கள் முத்தமிட்டீங்க.''

''அது நீ செய்த உதவிக்கு என் நன்றியின் வெளிப்பாடு.''

''அப்படி என்றால் சரி.'' ஒரு முடிவுக்கு வந்தவள் போல் சொன்னாள். ''இரண்டாவதை நேசத்தோடும், மூன்றாவதை காதலோடும் கொடுக்கும் படியாக செய்கிறேன். போதுமா?''

உரையாடல் முழுவதும் தமிழில் இருந்ததால் கோவிந்த் புரியாமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

கார்த்திகேயன் அவள் பக்கம் திரும்பி ஏதோ சொல்லப் போன பொழுது...

''கங்கிராஜுலேஷன்ஸ்'' என்று குரல் கேட்டது. மூவரும் அந்தப் பக்கமாக பார்த்தார்கள். டில்லி லலித்கலா அகாடமியின் பிரசிடென்ட் அங்கே நின்று கொண்டிருந்தார். அவர்தான் ஓவியப் போட்டிக்கு தீர்ப்பு அளித்தவர்.

''பரிசுகளைத் தரப் போகிறார்கள். உள்ளே வாங்க.''

''வருகிறோம்.'' அனுஜா நகர்ந்தாள். எல்லோரும் ஆடிட்டோரியத்தை நோக்கி நடந்து கொண்டிருந்தார்கள். மரியாதைக்காக அனுஜா பிரசிடெண்டோடு சேர்ந்து நடக்கத் தொடங்கினாள்.

கார்த்திகேயனும் கோவிந்தும் நாலடி பின்னால் நடந்து வந்து கொண்டிருந்தார்கள்.

''அப்பா நேற்று போனில் பேசினார் மிஸ் அனுஜா!'' என்றார் அகாடமி பிரசிடெண்ட்.

''அப்படியா? என்ன சொன்னார்?''

''உனக்கு பரிசு வந்ததா இல்லையா என்று கேட்டுத் தெரிந்து கொண்டார்.''

''நேற்றே பரிசு முடிவுகள் தெரிந்து விட்டதா?'' குரலைத் தாழ்த்திக் கொண்டே கேட்டாள்.

''உனக்குத்தான் முதல் பரிசு என்பது போட்டி வைப்பதற்கு முன்பே முடிவாகி விட்டது.'' சிரித்தார் அவர்.

''மற்ற ஜட்ஜ்கள் பெயருக்குத்தான் தீர்ப்பளிப்பார்கள். அவர்கள் பங்கு மதிப்பெண்களை போட்டுத் தந்து விடுவார்கள். அந்தப் பேப்பர்களை ஒதுக்கி வைத்து விட்டு நான் லிஸ்ட் தயாரிப்பேன்.''

எல்லோரும் போய் உள்ளே உட்கார்ந்து கொண்டார்கள். அனுஜாவும், மற்றவர்களும் இரண்டாவது வரிசையில் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். அவளுக்கு முன் வரிசையில் பிரசிடெண்டின் நாற்காலி இருந்தது. பக்கத்து சீட்டில் பையை வைத்து விட்டு உட்கார்ந்திருந்தார் அவர்.

அனுஜா மெதுவாக அந்த பையை இழுத்தாள். அதில் மற்ற இருவரும் மதிப்பெண்கள் அளித்திருந்த காகிதங்கள் இருந்தன. அதற்குள் அறிவிப்பு கேட்டது. அகாடமி பிரசிடெண்ட் மேடையில் உட்கார்ந்து கொள்வதற்காக எழுந்து கொண்டார். அனுஜா மன்னிப்பு கேட்டுக் கொள்வது போல் முறுவலுடன் அவரிடம் பையைத் தந்தாள். அவர் மேடைக்கு போய் விட்டார். கவர்னர் பரிசளித்துக் கொண்டிருந்தார். டி.வி. கேமிராக்களின் விளக்குகளும், பிளாஷ்களுமாக எங்கும் சந்தடியாக இருந்தது. மற்ற போட்டிகளோடு சேர்ந்து ஓவியத்தின் முறை வந்தது.

''முதல் பரிசு... குமாரி அனுஜா.''

ஆடிட்டோரியத்தில் கைத்தட்டல் ஓசை கேட்டுக் கொண்டிருந்தது. அனுஜா மேடை ஏறினாள். கவர்னர் பரிசளிக்க முன் வந்தார். அவள் அதைப் பெற்றுக் கொள்ளாமல் ''உங்களுடைய அனுமதியுடன் நான் ஒரு நிமிஷம் மைக்கில் பேசலாமா?'' என்று கேட்டாள்.

நடந்த உரையாடல் தெரியாத பார்வையாளர்கள் அவள் மைக் அருகில் வந்ததை பார்த்து விட்டு வியப்படைந்தார்கள். அதுவரை இருந்த சலனம் கூட அடங்கி விட்டதால் நிசப்தம் மேலும் வந்து சூழ்ந்து கொண்டது.

''வணக்கம். என் பெயர் அனுஜா'' என்றாள். அவள் என்ன பேசப் போகிறாள் என்று பார்வையாளர்கள் ஆர்வத்துடன் கவனித்துக் கொண்டிருந்தார்கள். அவள் தொடர்ந்தாள்.

''இரண்டு மணி நேரத்திற்கு முன்னால் எனக்கு முதல் பரிசு தரப் போவதாக அறிவித்த பொழுது இந்த ஹாலில் இருந்த பார்வையாளர்கள் கை தட்டினார்கள். நாலு மூலையிலிருந்து அந்த வெற்றியோசை கேட்டது என்று என்னால் பெருமையாக சொல்லிக் கொள்ள முடியாது. காரணம் ஒரு கும்பல் சலனமில்லாமல் உட்கார்ந்திருந்தது. அந்தக் கும்பல் என் சகக்லைஞர்கள்'' என்று நிறுத்தினாள். அவள் என்ன சொல்ல வருகிறாள் என்று அங்கிருந்தவர் களுக்குப் புரியவில்லை.

''சாதாரணமாக ஒருத்தருக்குப் பரிசு கிடைத்தால் போட்டியில் பங்கெடுத்துக் கொண்ட மற்றவர்களால் முழு மனதுடன் பாராட்ட முடியாது. அந்த விதமாக மௌனம் வகித்தார்கள் போலும் என்று நினைத்தேன். தமக்குக் கிடைக்காமல் இவ்வளவு சின்னப் பெண்ணான இவளுக்கு வருவதாவது என்று நினைக்கிறார்களோ என்று கூட எண்ணினேன்.''

அவள் ஒரு நிமிடம் நிறுத்திவிட்டு மீண்டும் தொடர்ந்தாள். ''என் ஊகம் தவறு என்று அப்புறமாக தெரிந்தது. என் ஓவியத்தை பார்த்த என் நண்பர் 'நீ இன்னும் நிறைய பாடுபட்டு உழைக்க வேண்டும்' என்று அறிவுரை சொன்னார். அந்த அறிவுரை பொறாமையால் வழங்கப் பட்டதல்ல. ஏனெனில் என் படத்திற்கு நான் நினைத்துக் கொண்டிருந்ததை விட உயர்ந்த அர்த்தத்தைச் சொன்னார் அவர். ஆனால் நான்தான் அந்த அறிவுரையை புரிந்து

கொள்ளாமல் போய் விட்டேன். தேசிய அளவில் முதல் பரிசு பெற்ற எனக்கு இப்படிப்பட்ட அறிவுரை எதற்கு என்று எண்ணினேன். ஒரு தனிப்பட்ட பிரிவிலிருந்து கைத்தட்டல் ஓசை ஏன் கேட்கவில்லை என்று எனக்கு இப்பொழுதுதான் புரிகிறது. அங்கே உட்கார்ந்திருக்கும் கலைஞர்கள் எல்லோரும் ஓவியக்கலையை தம் உயிராக பாவிப்பவர்கள். வயதிலும், வித்தையிலும், அனுபவத்தி லும் பழுத்தவர்கள். அவர்களுக்கு நான் போட்ட படம் சிறு குழந்தையின் கிறுக்கலை போல் தோன்றியிருந்தால் அதில் தவறு இல்லை. அந்த விஷயம் மார்க்குகளின் லிஸ்ட்டைப் பார்த்த போது எனக்கே புரிந்துவிட்டது.''

கேட்டுக் கொண்டிருந்த பிரசிடெண்ட் திடுக்கிட்டுப் போனார்.

''ஜட்ஜ்கள் போட்ட மார்க் லிஸ்டில் என் பெயர் பன்னிரண்டாவது. எனக்கு நாற்பது மதிப்பெண்கள் மட்டுமே வந்திருந்தன. அதாவது நான் அவ்வளவு பின் தங்கியிருக்கிறேன் என்று அர்த்தம். என்னை விட சிறப்பாக வரைந்த பதினோரு கலைஞர்களை ஒதுக்கி விட்டு எனக்கு முதல் பரிசு தரப்பட்டதற்கு காரணம் நான் அமைச்சரின் மகளாக இருப்பதுதான்.''

நிசப்தத்தைப் பிளந்துகொண்டு வெளி வந்து கொண்டிருந்தன அவள் வார்த்தைகள்.

''இந்த விதமாக நான் மைக்கைப் பிடித்துக் கொண்டு சொல்வது தவறுதான். நான் யாரையும் குறை சொல்ல வில்லை. மகளுக்குப் பரிசு வாங்கித் தர வேண்டும் என்று விரும்பும் அமைச்சரையோ, அமைச்சரின் சந்தோஷத்தைப் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று எண்ணும் அகாடமி தலைவரையோ, அவரிடம் லிஸ்டைத் தந்து விட்டு, தாம்

தேர்வு செய்த நபருக்கு முதல் பரிசு ஏன் வரவில்லை என்று கேட்கக் கூட தோன்றாத நீதிபதி களையோ குறை சொல்ல வில்லை.'' சற்று நிறுத்திவிட்டு தன் இறுதி வார்த்தைகளைச் சொல்ல உத்தேசித்தவளாக மூச்சை இழுத்து விட்டுக் கொண்டு சொல்லத் தொடங்கினாள்.

''நம் நாட்டைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். இப்படிப் பட்ட முடிவுகளால் எத்தனையோ கலைஞர் களும், உண்மையான எழுத்தாளர்களும், மேதாவிகளும் ஒரு விதமான விரக்திக்கு ஆளாகி விடுகிறார்கள் என்பதை, எனக்குப் பரிசு தரப் போகிவதாக அறிவித்த பொழுது நிசப்தமாக இருந்து விட்ட இந்த நாட்டின் உண்மையான கலைஞர்களின் கும்பல் தெரியப்படுத்திவிட்டது. இரண்டாவது விஷயம் எனக்கு அளிக்கப்பட்ட இந்தப் பரிசு, ஒரு உண்மையான கலைஞன் எனக்குத் தந்த அறிவுரையை உதாசீனப்படுத்தும் அளவுக்கு தலைகனத்தை என்னுள் இந்தச் சிறுவயதிலேயே ஏற்படுத்திவிட்டது.

''இந்த வகையில் இரண்டு விதமாக கலையை நாசமாக்கிக் கொண்டிருக்கும் இந்த அரசியலை நாம் சீரமைத்துக் கொண்டால், நம் மூவர்ணக் கொடி ஒலிம்பிக் கிலும், கலைத்தாயின் உலகத்திலும் பெருமையோடு ஒளி வீசிப் பறக்க முடியும் என்று எடுத்துச் சொல்லக் கூடிய இந்த வாய்ப்பை எனக்குத் தந்த கவர்னர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.'' அனுஜா தன் இருக்கையில் வந்து அமர்ந்து கொண்டாள்.

ஆடிட்டோரியத்திலிருந்த மக்கள் கை தட்டவும் மறந்து போனவர்களாக அப்படியே உட்கார்ந்திருந்தார்கள். பத்திரிகை நிருபர்கள் மட்டும் மளமளவென்று எழுதிக் கொண்டிருந்தார்கள். சபையின் பொறுப்பாளர்களும்,

காரியஸ்தர்களும் என்ன செய்வதென்று தெரியாமல் தர்மசங்கடத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஜட்ஜ்கள் மட்டும் அனுஜாவைப் பாராட்டுவது போல் தலையை அசைத்தார்கள்.

கவர்னர் மைக்கை வாங்கிக் கொண்டார். முன்பே சொன்னது போல் அவர் சிறந்த அரசியல்வாதி. இப்படிப் பட்ட எத்தனையோ சிக்கல்களை சமாளித்தவர். ''இந்த நாள் நமக்கு பொன்னான நாள்'' என்று ஆரம்பித்தார் ''பரிசு யாருக்கு வந்தது. என்பதில்லை இங்குள்ள பிரச்னை. கலைத்தாய் சந்தேகமில்லாமல் தலை நிமிர்ந்து நிற்பாள். ஏனெனில் அனுஜாவைப் போன்ற கலைவாணியை, ஸ்போர்டிவ் பெர்சனாலிடியை பெற்றிருப்பதால்.''

ஆடிட்டோரியத்தில் கைத்தட்டல்கள்.

''நம் தேசியக் கொடி பெருமையுடன் தலை நிமிர்ந்து நிற்கும். ஏனெனில் அனுஜாவைப் போன்ற பெண்களின் கைகளில் நம் மூவர்ணக் கொடி இருக்கிறது என்பதால்.''

மறுபடியும் கைத்தட்டல்கள்.

நிர்வாகிகள் நிம்மதியாக மூச்சு விட்டுக் கொண்டார்கள்.

★

''இத்தனைக்கும் பரிசு யாருக்குக் கிடைத்தது என்று எழுதவில்லையே ஏன்?'' பேப்பரை மேஜை மீது போட்டு விட்டு சலித்துக் கொண்டாள் ஸ்ரீகல்யாணி. 'அந்தப் பெண் யாரோ ரொம்ப தைரியசாலியாக இருக்கிறாள். கார்த்தி கேயன் வந்த பிறகு அவளைப் பற்றி கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும்' என்று நினைத்துக் கொண்டாள்.

வாட்சைப் பார்த்துக் கொண்டாள். எட்டாகியிருந்தது. நாளை இந்நேரத்திற்குள் கார்த்திகேயன் வந்து விடுவான் என்ற நினைப்பே மகிழ்ச்சி தருவதாக இருந்தது. தன் கைகள் சுவாதீனத்திற்கு வந்துவிட்ட விஷயத்தை அவனிடம் எவ்வளவு அபூர்வமாக தெரியப்படுத்தலாம் என்ற யோசனையில் ஆழ்ந்து போய் விட்டாள். இதற்கு முன்னால் வியாபார விஷயத்திற்குக்கூட அவள் அத்தனை முக்கியத்துவம் தந்தது இல்லை. அவ்வளவு தீவிரமாக யோசிக்கத் தொடங்கினாள்.

அவள் முகத்தில் அடிக்கடி சிரிப்பு தோன்றிக் கொண்டிருந்தது. தமக்குப் பிடித்தவர்கள் நினைவுக்கு வரும் போதுதான் அப்படிப்பட்ட சிரிப்பு உதட்டில் தோன்றும். ஆனால் பார்ப்பவர்களுக்கு மட்டும் பைத்தியக்காரத்தனமாகப் படும்.

அந்தச் சிரிப்பு அர்த்தம் (அர்த்தம் = பிரயோஜனம்) இல்லாதது இல்லை என்றும், அதன் அர்த்தம் (அர்த்தம் = காரணம்) எந்த அர்த்தமும் (அர்த்தம் = பணம்) கொடுத்து வாங்க முடியாத விலை மதிப்பு வாய்ந்தது என்றும், அதன் அர்த்தத்தை (விளக்கத்தை) அர்த்தமில்லாத வார்த்தைகளில் அடுத்தவர்களுக்கு எடுத்துச் சொல்லுவது வியர்த்தம் என்றும் காதலில் ஆழ்ந்து போனவர்களுக்கு மட்டுமே புரியும்.

18

இரவு பத்தாகி விட்டது.

கார்த்திகேயன் சாமான்களை அடுக்கி வைத்து விட்டு தூங்கத் தொடங்கினான். மறுநாள் காலையிலேயே டில்லிக்கு டாக்ஸியில் பயணம். அங்கிருந்து மாலையில் விமான நிலையத்திற்கு... சென்னைக்கு.

அவன் கண்ணயர்ந்த போது கதவைத் தட்டிய சத்தம் கேட்டது. திறந்தான். எதிரே ஹமாலி.

''சாப்! உங்களை அவசரமாக ஆஸ்பத்திரிக்கு வரச் சொல்லி போன் வந்தது.''

''யாரிடமிருந்து போன்? என்ன நடந்தது?'' பதற்றத்துடன் கேட்டான்.

''கோவிந்த்தான் செய்தார். வேறெதுவும் சொல்ல வில்லை. உங்களை அவசரமாக அழைத்துக் கொண்டு வரச் சொன்னார். போனைக் கூட அவசரமாக வைத்து விட்டார்.''

கார்த்திகேயன் உடனே ஹமாலியுடன் ஆஸ்பத்திரிக்குப் புறப்பட்டான். அவன் மனம் தீங்கை எடை போட்டது. ஊர்ச் சந்தடி அடங்கி ரொம்ப நேரமாகி விட்டது. ஆஸ்பத்திரி மட்டும் வேறு வழியில்லாதது போல் விழித்துக் கொண்டிருந்தது.

வராண்டாவில் நர்ஸ்கள் இரண்டு பேர் அங்குமிங்கும் நடந்து கொண்டிருந்தார்கள்.

கார்த்திகேயனை பார்த்ததுமே கோவிந்த் அருகில் வந்தான்.

''என்ன நடந்தது?''

''செரிப்ரல் ஹெமரேஜ், எதிர்பாராமல் திடீரென்று.''

''யாருக்கு?'' துப்பாக்கிக் குண்டாக வெளிவந்தது கேள்வி.

''அனுஜாவுக்கு.''

உலகத்தின் வேதனையெலலாம் ஒரே பலூனுக்குள் திணித்து வைத்து விட்டு, உண்மை என்ற ஊசியால் குத்தினால், வேதனை வான் முழுவதும் பரவினாற் போலவும், அதற்கு மூலாதாரம் தன் மனம்தான் என்பது போலவும்...

அவன் நெகிழ்ந்து போனவனாக உள்ளே ஓடினான்.

ஆரஞ்சு வர்ணச் சுவர்களுக்கு பக்கத்தில் பச்சை நிற திரைச் சீலைகளுக்கு நடுவில் கட்டிலில் தனியாக... தனிமையில்...

''டாக்டர்! என்ன நடந்தது?'' கார்த்திகேயனின் குரல் நடுங்கியது.

''டிடனெஸ் இஞ்ஜெக்ஷன் கொடுத்திருக்கிறேன். ஆனால் கஷ்டம்... மூளையில் ஹெமரேஜ் அதிகமாக இருக்கிறது. நள்ளிரவு வரை பிழைத்திருப்பது கூட கஷ்டம் தான்.''

தொலைவிலிருந்து யாரோ பேசிக் கொள்வது கேட்டது. ''அவளுடைய அப்பா புறப்பட்டு விட்டாராம்.''

''ஆமாம். இது எப்படி நேர்ந்தது? திடீரென்று எப்படி?''

''செப்டிக். அவள் ரத்தமெல்லாம் விஷமயமாகி விட்டது.''

''ஏன்?... ஏ...ன்?'' ஏறக்குறைய கத்திவிட்டான்.

''கைகளை எதனாலேயோ, கீறிக் கொண்டிருக்கிறாள். எதற்காக கீறிக் கொண்டாள் என்று புரியவில்லை. எதனால்

என்றும் தெரியவில்லை. ஒருக்கால் காட்டில் இருக்கும் ஏதாவது விஷ முள்ளோ என்னவோ.''

துக்கம் அவன் தொண்டையை அடைத்தது. பீறிட்டுக் கொண்டு வந்த வேதனையை அடக்க முடியாமல் குரல் வெடித்தது.

''அவளுக்குக் கொஞ்ச நேரத்தில் நினைவு வரலாம். அதிக நேரம் பிழைத்திருக்க மாட்டாள்.'' டாக்டர் போய்க் கொண்டே சொன்னார். ''அதுதான் அவளைக் கடைசி தடவையாக பார்க்கிறதாக இருக்கும். அவள் தந்தை வரும் வரைக்கும் அவள் உயிரைப் பிடித்து நிறுத்தி வைக்க முயற்சி செய்து கொண்டிருக்கிறோம்.''

அவன் உள்ளே எட்டிப் பார்த்தான். இன்னும் கொஞ்சம் அருகில் போனான்.

ஜன்னல் வழியாக வந்து விழுந்த வெளிச்சக் கீற்றை செயற்கை வெளிச்சம் விழுங்கி விட்டாற்போல் சுபாவமான அவள் குறும்புத்தனத்தை நோய் மறைத்து விட்டது.

மரண தேவதை கம்பளியை போர்த்திக் கொண்டு கட்டிலுக்குப் பக்கத்திலேயே நிற்பது போல் அவன் உடல் சிலிர்த்தது. வேதனையுடன், பரிவுடன் அவளைப் பார்த்தான்.

இதயத்தின் கதவை தடாரென்று திறந்து கொண்டு வந்து மோதும் மழைத் தண்ணீரைப் போல் தடாலடியாக அறிமுகமான ஒரு பெண், வந்தது போலவே நிமிட நாழிகையில் ஓய்ந்து போய் விடும் மழையைப் போல் மறைந்து விடப் போகிறாள் என்றால் நம்பத்தான் முடியவில்லை. காய்ந்த இலைகளை பொறுக்கிக் கொண்டு

வந்து தேநீர் சுட வைத்துக் கொடுத்தது இன்னும் இதயத்தில் பசுமையாக இருந்தது. கல்லின் மீது உட்கார்ந்து கொண்டு கால்களை ஆட்டிக் கொண்டு ''தல் ஹைகி'' என்று பாடியது கூட இன்னும் காதுகளில் ஒலித்துக் கொண்டிருந்தது. அதற்குள்... இவ்வளவு சீக்கிரத்தில் மறைந்து விடப் போகிறாளா?

அவன் ஈர விழிகளோடு அவளைப் பார்த்தான். ஒரு காலத்தில் உறவினர் யாராவது வீட்டிற்கு வந்து இரண்டு நாட்கள் தங்கி விட்டு திரும்பிப் போனால் கூட அந்த வீட்டு இல்லத்தரசி கதவுக்குப் பின்னால் நின்று கொண்டு மௌனமாக கண்ணீர் விடுவாளாம். அவ்வளவு மென்மை யான இதயம் அவனுடையது.

அவள் ரத்தத்தால் வரையப்பட்ட அந்த ஓவியம் அவன் இதயச் சுவற்றில் தொங்கிக் கொண்டே இருக்கப் போகிறது. இந்த சிம்லா பயணம், இந்தச் சின்னப் பெண்ணின் சிநேகம், பிறகு மரணம் - இந்த நினைவுகள் வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து கொண்டே இருக்கும்.

அவன் அருகில் வந்ததை உணர்ந்தாளோ என்னவோ அவள் மெள்ள கண்களைத் திறந்தாள். டாக்டர் அருகில் ஓடி வந்தார். ஊசியை போடுவதற்காக மருந்து பாட்டிலை எடுத்தார்.

'போகிற போது கூட நான் இந்த வலியோடு தான் போகணுமா' என்பது போல் பார்த்தாள் அவள். 'கடைசி ஐந்து நிமிஷங்கள் என்னை அமைதியாக இருக்க விடுங்கள் ப்ளீஸ்!' என்பது போல் கண்களாலேயே கெஞ்சினாள்.

அவள் விருப்பத்தை புரிந்து கொண்டாற் போல் டாக்டர் அங்கிருந்து போய் விட்டார். எதிரே வந்த

இன்னொரு டாக்டரிடம் ''லெட் ஹர் ஹேவ் எ பீஸ்ஃபுல் டெத்'' என்று சொன்னது காதில் விழுந்தது.

கார்த்திகேயன் மெதுவாக குனிந்து அவள் கட்டிலுக்கு பக்கத்தில் முழங்காலில் அமர்ந்து கொண்டான். அவள் பலவீனமான குரலில் சொன்னாள். ''சம்பல் பள்ளத்தாக்கு கதையைச் சொன்னதற்கு என்மேல் இன்னும் கோபம் போகவில்லையா?''

கோபமா? ஐயோ... ஆனாலும் இந்தச் சமயத்திலா அந்தக் கேள்வி!

''கார்த்திகேயன்!'' குரல் அடைத்தாற் போல் நிறுத்தினாள். ''டு யூ லைக் மீ?''

இமைகளை உயர்த்தி அவள் கைகளையும், விரல் நுனியையும் பார்த்தான். காய்ந்த இலைகளின் வெளிச்சத்தில் அன்பு, மைக்முன்னால் பேசியதில் நேர்மை, தேநீர் கோப்பையில் ததும்பும் குறும்பு.

''சொல்லுங்கள். என்னைப் பிடிக்கவில்லையா?'' மறுபடியும் கேட்டாள்.

அவன் அவள் நெற்றியில் படிந்த வியர்வையை ஒற்றிக் கொண்டே ''உன்னைப் பிடிக்காதவர்கள் இந்த உலகத்தில் யாராவது இருக்க முடியுமா அனுஜா'' என்றான் குரல் கம்ம.

அவள் தலையை ஆட்டிவிட்டு ''நாய் குட்டியையும், அழகான குழந்தையையும் கூடத்தான் எல்லோருக்கும் பிடிக்கும். அது இல்லை நான் கேட்டது. டு யூ லவ் மீ?'' என்றாள்.

அவன் தன்னை அறியாமல் கையை பின்னால் இழுத்துக் கொண்டான். 'என் மனைவியைத் தவிர' என்று

நாக்கின் நுனி வரையில் வந்து விட்ட வார்த்தைகளையும் பின்னால் இழுத்துக் கொண்டான். எதுக்கு சொல்லணும்? அவள் உயிரோடு இருக்கப் போகும் கடைசி ஐந்து நிமிடங்களும் இப்படியே கழிந்து போகட்டும். கொள்கைகள், நெறிமுறைகள், தர்ம அதர்ம சர்ச்சைகள் எதுக்கு? மௌனம் சம்மதத்திற்கு மட்டுமே அறிகுறி இல்லை. சம்மதமின்மைக்கும் கூடத்தான்.

''அனுஜா! கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடுத்துக் கொள். எல்லாம் சரியாகிவிடும்.''

''இன்னும் கொஞ்ச நேரத்தில் எப்படியும் ஒரேயடியாக ரெஸ்ட் எடுத்துக் கொள்ளப் போகிறேன் இல்லையா? அவ்வளவு உயரமாக இருக்கும் மரங்களைப் பற்றி எழுதிய கவிஞர், இமாலயத்தில் இருக்கும் விஷமுட்களை பற்றி ஏனோ எழுதாமல் போய்விட்டார்.''

அதைக் கேட்டு சட்டென்று கண்களில் சுரந்த நீரை வெளியே வழிந்து விடாமல் பலவந்தமாக கட்டுப்படுத்திக் கொண்டே ''இதெல்லாம் என்னால்தான்... என்னால்தான், என் ஓவியத்திற்கு வர்ணம் வேண்டுமென்று...'' என்றான்.

''அப்படிச் சொல்லாதீங்க'' என்று அவள் இன்னும் ஏதோ சொல்லப் போனவள், தொண்டைக் குழியில் ஏதோ அடைத்துக் கொண்டு விட்டாற் போல் துடிதுடித்துப் போய் விட்டாள். அவன் தன் துக்கத்தை விழுங்கிக் கொண்டே அவள் இதயத்திலிருந்த வார்த்தைகளை தொண்டைக்குள் வரவழைப்பதற்காக விரல்களால் மென்மையாக நீவிவிட்டான். அந்த நெருக்கத்தை விரும்பினாற் போல் அவள் கண்களை மூடிக் கொண்டாள். பிறகு சொன்னாள். ''காதல் என்பது இவ்வளவு உயர்வாக இருக்கும் என்று இன்றைக்குத்தான் எனக்குத் தெரிந்தது.'' மெதுவாக

கண்களைத் திறந்தாள். ''உண்மையில் காதல் என்பது ரொம்ப அபூர்வமானது இல்லையா?''

அவன் பதில் பேசவில்லை.

''மித்ராஜீ!

அவன் ஈர விழிகளோடு பார்த்தான்.

''ஒரு ரகசியம் சொல்கிறேன். அருகில் வாங்க.''

அவன் நகரவில்லை.

''மூளையில் ரத்த நாளங்கள் சிதைந்து போயிருக்கும் இந்தப் பெண்ணால் எப்படியும் என்னை நெருங்கி வரமுடியாது இல்லையா என்று தொலைவிலேயே உட்கார்ந்திருந்தால் என்னால் என்ன செய்ய முடியும் மித்ராஜீ!''

அந்த வார்த்தைகளைக் கேட்ட பார்த்திகேயன் மின் அதிர்ச்சி அடைந்தவனாக சட்டென்று குனிந்து ''அப்படிச் சொல்லாதே அனுஜா! சொல்லு'' என்றான்.

அவள் ரகசியம் சொல்வது போல் மெதுவாக ''ஓவியப் போட்டியில் முதல் பரிசு உங்களுக்குத்தான். மதிப்பெண்களைப் பார்த்தேன்'' என்றாள்.

அவன் வியப்படைந்து, ஆழ்ந்த பெருமூச்சுவிட்டு, ''இப்போ அதைப் பற்றி என்ன பேச்சு?'' என்றான்.

''அதற்காகத்தானே இந்தக் கையைக் கீறிக் கொண்டதே.''

அடியிலிருந்து அலை பலமாக வந்து முகத்தில் அடித்தாற்போல் திரும்பவும் வேதனை அவனை ஆழ்த்தியது. பற்களால் உதட்டை அழுத்திக் கொண்டு அவள் கையை தன் கைகளுக்கிடையே எடுத்துக் கொண்டான்.

''இந்தக் கைகள் உங்களுக்காக சந்தோஷமாக மடிந்து போய்க் கொண்டிருக்கின்றன மித்ராஜீ! என் வாழ்க்கையைப் போலவே என் ரத்தம் படிந்த ஓவியம் கூட நிரந்தர மில்லாததுதான். ஆனால் உங்கள் நினைவுகளில் என்னைப் பற்றிய நினைப்பு மட்டும் அசாசுவதமாக ஆகிவிடக் கூடாது. அப்படி வாக்குத் தருவீங்களா?''

''இதற்கு வாக்களிக்க வேண்டுமா அனுஜா! அது என்றுமே சாசுவதம் தான்.''

''என்ன ருசு?''

அவள் உரையாடலை எந்தப் பக்கமாக இட்டுச் செல்கிறாள் என்று புரியாமல் ''என்ன வேண்டும்?'' என்று கேட்டான்.

''நான் என்ன கேட்டாலும் செய்கிறேன் என்று வாக்களிக்க வேண்டும்.'

''வாக்களித்து விட்டேன். சொல்லு.''

''அப்படி இல்லை. சத்தியம் செய்யுங்கள்.''

''நான் இதுவரையில் வாக்கு தவறியதில்லை அனுஜா! சொல்லு.''

அவள் இமைகளை உயர்த்தி அவனைப் பார்த்தாள். அவன் கவலையோடு, பரபரப்போடு, எல்லாவற்றையும் விட கவனமாக தான் சொல்வதைக் கேட்டுக் கொண் டிருக்கிறான் என்று உறுதி பண்ணிக் கொண்டு, இதயத்தி லிருந்த பலத்தை எல்லாம் வார்த்தைகளாக மாற்றிக் கொண்டு சொல்லத் தொடங்கினாள்.

''எந்தத் துறையிலும் சரி, எந்தக் கலையிலும் சரி, அதை எடுத்தாளக் கூடிய கலைஞர்கள் ரொம்ப குறைவாக

இருப்பார்கள் கார்த்திகேயன். காலத்தோடு நின்று விடக் கூடியவர்கள் அவர்களுள் மேலும் குறைவு. அவர்கள் வரலாற்றுக்கே சவாலாக இருப்பார்கள். மைல் கற்களாகவும், வழி காட்டியாகவும் இருப்பார்கள். நம் துறையில் அப்படிப்பட்ட ஓவியர்கள் லீயானார்டோடாவின்ஸி, மைகலாஞ்சலோ, பிகாசோ...'' அவள் அசதியோடு கண்களை மூடிக் கொண்டாள். வெளியே காற்று மேலும் தீவிரமடைந்தது.

அவன் மனதைப் புரிந்து கொண்டாற்போல் அவன் கைகளுக்கு நடுவில் இருந்த அவள் கை அசைந்தது. அவள் கண்களைத் திறந்து சொன்னாள்.

''கார்த்திகேயன்! மோனலிசாவையும் மிஞ்சும் அளவுக்கு சிறந்த ஓவியத்தை நீங்கள் வரைய வேண்டும். அதுதான் நீங்கள் எனக்குத் தரக் கூடிய வாக்குறுதி. வரலாற்றில் நீங்கள் நாலாவது ஆளாக மாற வேண்டும்.''

வேகமான காற்று அலையோடு சேர்ந்து வந்து பளீரென்று கண்ணாடி ஜன்னலில் மோதி சுக்கு நூறாக உடைத்தாற்போல் அவன் யோசனைகள் சிதறிப் போய் குழப்பம் எஞ்சி நின்றது. பைத்தியம் பிடித்தவனைப் போல் அவளைப் பார்த்தான். அவன் எவ்வளவு திகைத்துப் போனான் என்றால் அவள் மரணத்தின் விளிம்பில் இருக்கிறாள் என்பதை கூட மறந்து போய் ''உனக்கு புத்தி ஏதாவது பிசகிவிட்டதா? லியானார்டோ டாவின்ஸியோடு என்னை ஒப்பிடுவதாவது?'' என்றான்.

''இருவருக்கும் ஒற்றுமை இருக்கிறது. பரிசீலித்துப் பார்த்துக் கொள்ளுங்கள். எந்த கதாசிரியராவது லியானார்டின் வாழ்க்கை வரலாற்றை எழுதினால் இதென்ன இவ்வளவு விநோதமான கற்பனையாக

இருக்கிறதே? இன்ஜீனியர் அனாடமி பற்றி எழுதுவதாவது, ஓவியம் தீட்டுபவன் பாட்டுப்பாடுவதாவது என்று விமரிசிப்பார்கள்.''

அதற்குள் இரண்டு டாக்டர்கள் அங்கே வந்தார்கள். அவளை பரிசோதித்து விட்டு ஒருவர் முகத்தை மற்றவர் பார்த்துக் கொண்டார்கள். அனுஜா சிரித்துக் கொண்டே ''என்ன டாக்டர்! ஏதாவது அற்புதம் நிகழ்ந்து நான் பிழைத்துக் கொண்டு விடப் போகிறேனா?'' என்றாள்.

டாக்டர்கள் பதில் பேசாமல் அங்கிருந்து போய் விட்டார்கள். கார்த்திகேயன் எழுந்து அவர்களைப் பின் தொடர்ந்தான்.

''என்ன டாக்டர்? என்ன ஆச்சு?''

''செரிப்ரல் ஹெமரேஜ்.''

''பின்னே செப்டிக் என்று சொன்னீங்களே?''

''செப்டிக்தான்.''

''இரண்டிற்கும் என்ன சம்பந்தம்?''

அந்தக் கேள்விக்கு கொஞ்சம் சங்கடம் அடைந்த டாக்டர் ஏதோ சொல்ல முற்படுவதற்குள் பின்னால் கட்டில் அருகில் சத்தம் கேட்டது. எல்லோரும் வேகமாக அங்கே போனார்கள். கட்டிலில் அனுஜா துடிதுடித்துக் கொண் டிருந்தாள். கார்த்திகேயன் சட்டென்று அவளைப் பிடித்துக் கொண்டான்.

அவளிடம் சலனம் மெல்ல மெல்ல ஒடுங்கத் தொடங்கியது. அவள் கை மெதுவாக மேலே உயர்ந்தது. டூ... யூ... லவ்... மீ என்று கேட்பது போலவும், கடைசி முத்திரையை இந்தக் கையின் மீது போடுங்கள் என்று

கெஞ்சுவது போலவும் ... உதட்டில் முறுவல்... கண்களில் நீர். விடைபெற்றுக் கொள்வது என்றால் இதுதானோ?

அவன் அந்தக் கையை அபூர்வமாக அருகில் இழுத்துக் கொண்டான்.

மரணமானது பாம்புக் கடி உருவில் தன் முத்திரையைப் பதித்து விட்டதோ என்பது போலிருந்த அந்த வடுவின் மீது உதடுகளால் மென்மையாக முத்த மிட்டான்.

அது வரை ஒற்றைக் கண்ணால் அவன் நடவடிக்கை களைக் குறும்பாக பார்த்துக் கொண்டிருந்தவள், இன்னொரு கண்ணையும் திறந்து ''தாங்க்ஸ் கார்த்திகேயன்! இரண்டாவது முத்தமும் கொடுத்தாகி விட்டது'' என்றாள்.

கயிறு அறுந்ததுமே மாலையில் உள்ள மணிகள் அவிழ்ந்து விழத் தொடங்கினாற் போல் லேசான அதிர்வு! கார்த்திகேயன் தன்னையறியாமல் அந்தக் கையை விட்டு விட்டான். அவள் கட்டிலில் எழுந்து உட்கார்ந்து கொண்டாள். இரண்டு டாக்டர்களும் வெள்ளை கோட்டை அவிழ்த்து விட்டு கைகளில் தொங்க விட்டுக் கொண்டார்கள்.

அதுவரை தொலைவில் இருந்த கோவிந்த் அருகில் வந்தான் சிரித்த முகத்துடன்.

''என்ன இதெல்லாம்?'' கார்த்திகேயன் கேட்டான்.

''பந்தயத்தில் வெற்றி பெறுவதற்காக போட்ட நாடகம்'' என்றாள் அனுஜா. ''அதான் சொன்னேனே, எங்களோடு வந்தவர்களுடன் பந்தயம் வைத்துக் கொண்டதைப் பற்றி.''

அவன் இன்னும் அதிர்ச்சியிலிருந்து மீளவில்லை. ஆனால் தான் முட்டாளடிக்கப்பட்டு விட்டோம் என்ற உணர்வை விட அந்தப் பெண்ணின் மரணம் பொய் என்ற உணர்வு அதிக சந்தோஷத்தை தந்தது.

''இவர்கள் இரண்டு பேரும் எங்க யூனிவர்சிடீ ஸ்டுடென்ட்ஸ்! நீங்கள் பார்த்த நாடகத்தில் நடிகர்கள். நன்றாக கவனித்திருந்தால் இவர்களை அடையாளம் தெரிந்து கொண்டிருப்பீங்க.''

மாணவர்கள் இருவரும் நட்பு கலந்த முறுவலுடன் பார்த்தார்கள்.

அனுஜா சொன்னாள். ''நான் வயிற்றுவலி என்ற சாக்கில் இன்பேஷண்டாக சேர்ந்து கொண்டேன். அமைச்சரின் மகள் என்பதால் பெரிதாக பிரச்னைகள் எதுவும் வரவில்லை. என்னோடு கூட இரண்டு டாக்டர்களும் இருப்பார்கள் என்று சொன்ன போது கூட யாருக்கும் சந்தேகம் வரவில்லை. இங்கே நர்ஸுகள் எல்லோரும் அவரவர்கள் வேலையில் ஆழ்ந்து போயிருந்தார்கள். உங்களை சாதாரண விசிட்டர் என்று நினைத்து விட்டார்கள். கொஞ்சம் சான்ஸ் கிடைத்ததுமே நானும் என் நடிப்பு திறமையை காட்டிவிட்டேன்.''

''ஒரு சின்ன பந்தயத்திற்காக இவ்வளவு நாடகமா?''

''பந்தயம் மட்டுமே இல்லை. உங்களிடமிருந்து மோனாலிஸாவைக் காட்டிலும் உயர்ந்த ஓவியத்தை போடச் சொல்லி வாக்குறுதி கூட வாங்கிக் கொண்டு விட்டேனே?''

''சரி. அந்த விஷயத்தை விடு.''

''ஏன்? எதற்காக விடணும்? ஓஹோ! நான் சாகப் போகிறேன் என்ற பிரமையில் வாக்குறுதியை தந்து விட்டீங்க. இப்பொழுது நான் நன்றாக இருப்பதால் அந்த வாக்குறுதியை காப்பாற்ற வேண்டிய அவசியமில்லை என்று சொல்றீங்களா? அதெல்லாம் நடக்காது. நீங்கள் பொய் சொல்ல மாட்டேன் என்று சொன்னீங்க.''

''விடு அனுஜா! இப்போ அந்த டாபிக் எதுக்கு?''

''விட மாட்டேன். நீங்கள் அந்த ஓவியம் வரைவதற் காக இதெல்லாம் உண்மையாக வேண்டும் என்று சொன்னால் என் உயிரையும் விடத் தயாராக இருக்கிறேன்.''

கோவிந்த் இடையில் புகுந்தான். ''இனி இங்கிருந்து நாம் கிளம்பி விட்டால் நன்றாக இருக்கும்'' என்றான்.

எல்லோரும் வெளியே வந்த போது நர்ஸ்கள் வாயடைத்துப் போனாற் போல் பார்த்துக் கொண் டிருந்தார்கள்.

''வயிற்று வலி குறைந்து போய் விட்டது. கிளம்புகிறோம்'' என்றாள் அனுஜா.

''டாக்டர் டிஸ்சார்ஜ் செய்யாமல் இப்படிப் போகக் கூடாது மேடம்.'' நர்ஸ் ஒருத்தி சொன்னாள்.

''எங்க அப்பா டாக்டரிடம் பேசிவிட்டார்.'' அதிகார தோரணையில் சொன்னாள்.

எல்லோரும் ஹோட்டலை நோக்கி நடக்கத் தொடங்கினார்கள். குளிருக்கு உடம்பு வெடவெடத்த போதிலும் வித்தியாசமான அனுபவமாக இருந்தது.

கார்த்திகேயன் மௌனமாக நடக்கத் தொடங்கினான். அவனுக்கு இதெல்லாம் பிடிக்கவில்லை. மனதளவில்

வளர்ந்து விட்ட பிறகு இளவட்டங்களின் குறும்புகளை ரசிக்க முடியுமே தவிர அதில் பங்கெடுத்துக் கொள்வது உசிதமாக இருக்காது., ஹோட்டலை அடைவதற்கு இன்னும் நூறடி தூரம் இருந்தது.

அனுஜா கேட்டாள். ''என்ன மௌன சுவாமிகளே? ஏன் என்னவோ போல் இருக்கீங்க?''

''ஒன்றுமில்லை.''

''இல்லை. ஏதோ இருக்கு.''

''எனக்கு இதெல்லாம் பிடிக்கவில்லை அனுஜா. நீங்கள் எல்லோரும் கல்லூரி மாணவர்கள். கல்யாணம் ஆகாதவர்கள். என்னை வைத்துக் கொண்டு இப்படி பந்தயம் கட்டுவது நன்றாக இல்லை.''

''நீங்கள் ஒன்றும் பீஷ்மர் இல்லையே? உங்களுக்கும் எங்கள் வயது தானே இருக்கும்?''

''ஆனால் எனக்கு கல்யாணமாகிவிட்டது.''

நடந்து கொண்டிருந்தவள் சட்டென்று நின்று ''கல்யாணமாகி விட்டதா?'' என்றாள்.

''ஆமாம். என் மனைவியின் பெயர் ஸ்ரீகல்யாணி.''

''பின்னே அவள் ஏன் சிம்லாவுக்கு வரவில்லை?''

''வரவில்லை. வர வேண்டும் என்று விரும்பினாலும் அவளால் வர முடியாது'' என்று அவள் நிலைமையைப் பற்றிச் சொன்னான். ''அவள் அங்கே உடல் சுவாதீன மில்லாமல் படுத்துக் கிடக்கும் போது அவளை பார்த்துக் கொள்வது போய் நான் இப்படி வந்ததே எனக்கு ரொம்ப கில்டியாக இருக்கு. அதனால் தான் இந்தப் பந்தயம் அது இது எல்லாம் எனக்குப் பிடிக்கவில்லை. நடந்ததென்னவோ நடந்து விட்டது. இனி இதை விட்டு விடு.''

அனுஜா கொஞ்ச நேரம் மௌனமாக இருந்து விட்டு, ''சிம்லாவில் எந்த பூ பிரசித்தி பெற்றது?'' என்று கேட்டாள்.

சம்பந்தமே இல்லாமல் அவள் கேட்ட கேள்விக்கு வியப்படைந்தவனாக ''எதற்காக கேட்கிறாய்?'' என்று கேட்டான்.

''காதில் வைத்துக் கொள்ளத்தான்.'' சிரித்தாள். ''பின்னே என்ன மித்ராஜீ! நான்தான் ராஜேஷ் பற்றி ஒரு கதையை இட்டுக்கட்டிச் சொன்னேன் என்றால் நீங்கள் கூடவா உடனே ஒரு கதையை எடுத்து விடணும்? ஊஹூம். லாபமில்லை. இன்னும் கொஞ்சம் பெட்டர் ஸ்டோரியை கற்பனை பண்ணுங்கள்.

★

'மித்ராஜீ!

நான்கு மணி நேரத்திற்குள் காதல் கடிதமா என்று வியப்படைகிறீர்களா? முழுவதும் படியுங்கள்.'

புறப்படப் போன கார்த்திகேயன் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு படிக்கத் தொடங்கினான். முதல் நாள் இரவு ஆஸ்பத்திரியிலிருந்து ஒரு மணிக்கு எல்லோரும் ஹோட்டலுக்கு திரும்பி வந்த பிறகு விடியற்காலையில் டில்லிக்கு புறப்படுவதற்காக தயாராகி அவன் கதவைத் திறந்த போது கதவின் இடுக்கிலிருந்து கீழே விழுந்தது கடிதம். போகும் போது வழியில் படிக்கலாம் என்று நினைத்தான். ஆனால் டாக்ஸி வருவதற்கு இன்னும் ஒரு மணி நேரமாகும் என்று சொன்னதால் உட்கார்ந்து படிக்கத் தொடங்கினான்.

'இன்று காலையிலேயே நீங்கள் போய் விடப் போகிறீர்கள் என்று தெரிந்துதான் இந்தக் கடிதம். உங்களுக்கு என் மீது தாங்க முடியாத கோபம் இருக்கும் என்று தோன்றுகிறது. நான் என்ன செய்யட்டும்? இப்பொழுது என்ன நஷ்டமாகிவிட்டது? ஆஸ்பத்திரி யிலிருந்து திரும்பி வரும் போது நீங்கள் சொன்ன கதையை எங்கள் கும்பலுக்குச் சொன்னேன். எல்லோரும் விழுந்து விழுந்து சிரித்தார்கள் உங்கள் அபார கற்பனைக்கு.

சாதாரண கதைகளுக்கு எதிர்பதமாக இருக்கிறது நம் கதை. சாதாரணமாக ஆண்தான் பெண்ணுக்கு பின்னால் சுற்றுவான். ஆனால் இங்கே உங்களுக்கு பின்னால் நான். உங்கள் மீது நாளுக்கு நாள் என் காதல் அதிகமாகிக் கொண்டே வருகிறது. மித்ராஜீ! நான் செத்துப் போய்க் கொண்டிருக்கிறேன் என்ற நினைத்ததுமே உங்கள் கண்களில் கண்ணீர். அப்பொழுதே எழுந்து கொண்டு ''வருத்தப்படாதீங்க. இதெல்லாம் வெறும் நடிப்பு'' என்று சொல்லிவிட வேண்டும் என்ற ஆவல் தோன்றியது.

என் காதலைப் பற்றி நான் சொன்னது மட்டும் மனப்பூர்வமாகத்தான். நீங்கள் என் விரல்களை தடவி தந்த போது எனக்கு என்ன தோன்றியது தெரியுமா?

உலகமே எதிர்த்தாலும் சரி, என் தந்தையை எதிர்க்க வேண்டி வந்தாலும் சரி, உங்களுடனேயே இருந்து விட வேண்டும் என்று தோன்றியது. அஃப்கோர்ஸ். என் தந்தை ரொம்ப நல்லவர். நமக்கு இப்படிப்பட்ட பிரச்னைகள் எதுவுமே வரப் போவதில்லை.

உங்களுடன் கழித்த நான்கு நாட்களும் என் உலகத்தில் புதிய கதவுகள் திறந்து கொண்டாற்போல் இருக்கிறது மித்ராஜீ. இதுவரை குறும்பும், ரகளையும்

செய்பவர்களைத்தான் பார்த்திருக்கிறேன். வேலை மீது இவ்வளவு சிரத்தை உள்ள ஒருவரை பார்ப்பது இதுதான் முதல் தடவை. ஆயிரமாயிரம் காதல் கடிதங்கள் வந்த போதிலும் நான் இதுவரை யாரையுமே விரும்பாமல் போனதற்குக் காரணம் இப்பொழுது புரிகிறது. உங்களிடம், அந்தப் பக்குவத்தையும், நிதானத்தையும், நேர்மையையும் கண்டேன். இவை எப்படி வந்தன உங்களுக்கு? அதனால்தான் உங்கள் மீது அவ்வளவு விருப்பம் ஏற்பட்டு விட்டது. என் மரண நாடக கட்டத்தில் நீங்கள் பட்ட வேதனை உங்கள் விருப்பத்தை உறுதியாக காண்பித்து விட்டது. எல்லாம் சேர்ந்து நம்மை காதலில் ஆழ்த்தி விட்டது.

உங்களுடன் இருக்க வேண்டும் என்ற விருப்பத்தை இதயம் என்ற அறைக்குள் அடைத்து, கனவுகளைக் காவலாக வைத்து காலம் என்ற பூட்டை போட்டு விட்டேன். சாவி உங்களிடம் தான் இருக்கிறது. எப்பொழுது திறப்பீர்களோ அது உங்கள் விருப்பம். நீங்கள் இன்று விடியற்காலை யிலேயே போய்விடப் போகிறீர்கள் இல்லையா, நீங்கள் கதவு திறந்ததுமே இந்தக் கடிதம் கீழே விழும். இனி இன்றிரவு என்னால் தூங்க முடியாது. உங்கள் அறையையே பார்த்தபடி உட்கார்ந்திருப்பேன். நீங்கள் போகும் போது கையை ஆட்டினால் என் பேக்கையும் எடுத்துக் கொண்டு வந்து விடுகிறேன் டில்லி வரைக்கும். ஓடிப் போய் விடலாம்.'

அனுஜா

பி.கு.: இந்தக் காலத்தில் கல்யாணம் ஆனவர்கள் கூட தங்களை பிரம்மசாரி என்று சொல்லிக் கொண்டு பெண்களைக் காதலில் ஆழ்த்துவார்கள். அப்படி இருக்கும் போது நீங்கள் மட்டும் ஏன் இப்படி?

கடிதத்தைப் படித்து முடித்து விட்டு அவன் எழுந்து நின்று கொண்டான். வெளியே டாக்ஸி ஹாரன் கேட்டது. ஹமாலி உள்ளே வந்து சாமான்களை எடுத்துக் கொண்டு போய் டாக்ஸியில் வைத்தான். கார்த்திகேயன் அறையை விட்டு வெளியேறி டாக்ஸியில் உட்கார்ந்து கொண்டான்.

இவ்வளவு நடந்து முடியும் வரை அவன் அனுஜா இருந்த அறையின் பக்கம் திரும்பிக்கூட பார்க்கவில்லை. இப்படிப்பட்ட ஈர்ப்புகள் எல்லாம் சீக்கிரத்தில் தணிந்து போய் விடும் என்பது அவன் உத்தேசம். என்றாவது அவள் தன் வீட்டிற்குப் போன் செய்தால் ஸ்ரீகல்யாணியுடன் பேசச் செய்து விட்டால் சரியாகி விடும். இந்தச் சின்ன விஷயத்திற்கு வாதமும் பிரதிவாதமும் வீண்.

கார்த்திகேயன் டில்லிக்குப் போய்ச் சேர்ந்த பொழுது பிற்பகல் மணி இரண்டு. நேராக விமான நிலையத்திற்கு போய் விட்டான். கௌண்டரில் டிக்கெட் வாங்கப் போன பொழுது மைக்கில் அறிவிப்பு கேட்டது.

''யுவர் அடென்ஷன் ப்ளீஸ். சென்னைக்கு போகும் பயணி மிஸ்டர் கார்த்திகேயன் உடனே விசாரணை கௌண்டருக்கு வரவேண்டும்.''

கார்த்திகேயன் ஆச்சரியமடைந்தவனாக விசாரணை கௌண்டர் அருகில் சென்றான்.

''நீங்கள் தானா மிஸ்டர் கார்த்திகேயன்?''

''ஆமாம்.''

''இந்த நம்பருக்கு உடனே போன் செய்யுங்கள்.''

''இந்த நம்பர் யாருடையது?''

''செண்ட்ரல் மினிஸ்டர் விவேகாநந்த்.''

அவருக்கு என்னிடம் என்ன வேலை என்று எண்ணிக் கொண்டே டயல் செய்தான்.

''ஹலோ! அமைச்சரின் பர்சனல் அசிஸ்டென்ட் ஸ்பீக்கிங்.''

''நான் கார்த்திகேயன் பேசுகிறேன்.''

''இவ்வளவு நேரமாக நானும் உங்களுக்காகத்தான் முயன்று கொண்டிருந்தேன். இப்பொழுதுதான் மினிஸ்டர் கிளம்பிப் போனார்.''

''எங்கே?''

''உங்களுக்குத் தெரியாதா? அவருடைய மகள் வந்து கொண்டிருந்த கார் ஆக்ஸிடெண்ட் ஆகிவிட்டது.''

கார்த்திகேயனுக்கு சிரிப்பு வந்தது. ரொம்ப சாமர்த்தியக்காரிதான் இந்தப் பெண் என்று நினைத்துக் கொண்டான். ''ஓஹோ! அப்படியா? இந்த விஷயத்தை என்னிடம் ஏன் சொல்றீங்க?'' என்றான்.

எதிர்பாராத அந்தக் கேள்விக்கு ஆடிப் போனார் மறுமுனையில் இருந்தவர். ''எனக்குத் தெரியாது சார். சண்டிகரிலிருந்து போன் வந்தது. அவளுடைய நண்பர்கள் யாரோ நீங்கள் விமான நிலையத்தில் இருப்பீங்க. இந்த விஷயத்தை தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள்'' என்றார்.

''அனுஜா எங்கே இருக்கிறாள்?''

''சண்டிகரிலிருந்து தூக்கிக் கொண்டு வருகிறார்கள். மினிஸ்டர் ஏர்போர்ட்டுக்கு வந்திருக்கிறார்.''

''சரி நல்லது.''

''உங்களுடைய டிக்கெட்டை கேன்சல் செய்து விடச் சொல்றீங்களா?''

''தேவையில்லை. நான் சென்னைக்குப் போன பிறகு இரங்கல் தெரிவித்து டெலிகிராம் அனுப்பிக் கொள்கிறேன்.''

''நீங்கள் என்ன பேசுகிறீர்கள் என்று எனக்குப் புரியவில்லை மிஸ்டர் கார்த்திகேயன்.''

''அனுஜாவிடம் சொல்லுங்கள். புரியும்.'' போனை வைத்து விட்டான்.

'இந்தப் பெண்ணின் அசட்டு ரகளை தாங்க முடியாமல் போய் கொண்டிருக்கிறது.' கார்த்திகேயன் மனதில் நினைத்துக் கொண்டான். அதற்குள் அறிவிப்பு கேட்டது, சண்டிகரிலிருந்து விமானம் வந்து விட்டதாக. அடுத்த ஐந்து நிமிடங்களுக் கெல்லாம் சென்னை செல்லும் விமானத்தின் செக்யூரிட்டி செக்கிங் அழைப்பு கேட்டது.

கார்த்திகேயன் ப்ரீஃப்கேஸை எடுத்துக் கொண்டு போகும் போது கண்ணாடிக்கு அப்பால் அமைச்சரின் கார் தென்பட்டது.

முதல் முறையாக அவனுக்கு ஏதோ சந்தேகம் ஏற்பட்டது. அதற்குள் கேட்டிலிருந்து மூன்று ஸ்ட்ரெச்சர்கள் வெளியே வந்தன. வேனுக்குள் ஏற்றிக் கொண்டிருந்தார்கள். அமைச்சர் விவேகாந்தனும் அவர் மனைவியும் வேனுக்குள் ஏறிக் கொண்டார்கள். அமைச்சர் கொஞ்சம் நிச்சலனமாக இருந்தாலும், அவர் மனைவி மட்டும் விம்மி விம்மி அழுது கொண்டிருந்தாள். போட்டோகிராஃபர் ஸ்ட்ரெச்சர் மீது இருந்த பிணத்தை போட்டோ எடுத்துக் கொண்டிருந்தார்.

ஏனோ கார்த்திகேயனுக்கு 'புலி வருகிறது' என்ற கதை நினைவுக்கு வந்தது.

மளமளவென்று வெளியே போனான். மக்கள் கும்பலாக நின்றபடி வேடிக்கை பார்த்துக் கொண் டிருந்தார்கள்.

''என்ன நடந்தது?'' கார்த்திகேயனிடம் யாரோ கேட்டார்கள்.

''எனக்குத் தெரியாது'' என்றான்.

''மினிஸ்டரின் மகள் சிம்லாவிலிருந்து திரும்பி வந்து கொண்டிருந்த போது ஆக்ஸிடெண்ட் ஆகிவிட்டதாம். கார் நொறுங்கிவிட்டது. நாலு பேரும் இறந்து போய் விட்டார்களாம்.''

மக்கள் பேசிக் கொண்டிருந்தார்கள். வேனும், அதற்குப் பின்னாடியே அமைச்சரின் காலியான காரும் புறப்பட்டுப் போய் விட்டன.

கார்த்திகேயன் டெலிபோனுக்கு அருகில் சென்று டைரக்டரியில் தேடி அமைச்சரின் வீட்டிற்கு போன் செய்தான். ரொம்ப நேரம் எங்கேஜ்ட் ஆக இருந்தது. அதற்குள் செய்தி நகரமெல்லாம் பரவி விட்டாற் போலிருந்தது. ஐந்து நிமிடங்கள் முயன்ற பிறகு பி.ஏ. லைனுக்கு வந்தார். கார்த்திகேயனின் குரலை அடையாளம் கண்டு கொண்டு ''சொல்லுங்கள்'' என்றார்.

''என்ன நடந்தது அனுஜாவுக்கு?''

''சென்னைக்கு போன பிறகு இரங்கல் டெலிகிராம் அனுப்புங்கள்.'' போனை வைத்து விட்டார் பி.ஏ. அவர் குரலில் இருந்த பழிப்பை பொருட்படுத்தவில்லை கார்த்திகேயன். அதையும் விட அதீதமான அதிர்ச்சியில் இருந்தான் அவன்.

அந்த நிமிஷம் அவனுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. யோசனை சொல்லக் கூடியவள் கல்யாணி ஒருத்திதான். விமான நிலையத்திலிருந்து போன் செய்தான். நடந்த விஷயத்தை ஐந்து நிமிடங்களில் சொல்லி முடித்தான். ''எனக்கு என்ன செய்வதென்று தெரிய வில்லை கல்யாணி! ரொம்ப சின்னப் பெண். பரிசு கிடைத்த போது வேண்டாம் என்று நிராகரித்து விட்டாள். நான் ஓவியம் வரைவதற்கு உதவி செய்தாள்.''

''இதற்கு யோசிப்பானேன்? இன்றைக்கு அங்கே இருங்கள். இல்லாவிட்டால் நன்றாக இருக்காது.''

19

கார்த்திகேயனுக்கு மயானத்திற்குப் போகும் போது மணி ஐந்தாகிவிட்டது. அந்த இடமெல்லாம் ஒரே சந்தடியாக இருந்தது. அவன் மட்டும் தொலைவில் மௌனமாக நின்றான். செய்தியைக் கேட்டதுமே ஏற்பட்ட அதிர்ச்சி தணிந்து போகத் தொடங்கியதும் மனம் முழுவதும் வேதனை பரவியது.

திருமணமாகாதவள் என்பதால் தகனம் செய்யாமல் புதைக்கப் போகிறார்கள். அதற்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன. அவன் கவனம் அந்தப் பக்கமாக வந்த ஆளின் மீது படிந்தது. அவன் கோவிந்த். அதே சமயத்தில் கோவிந்த்கூட கார்த்திகேயனைப் பார்த்து விட்டு அருகில் வந்தவன், கைகளைப் பிடித்துக் கொண்டு சிறு பையனை போல் அழுது விட்டான்.

''என்ன கோவிந்த்? எப்படி நடந்தது?'' கார்த்திகேயன் கேட்டான்.

கோவிந்த் கஷ்டப்பட்டு துக்கத்தை அடக்கிக் கொண்டான். ''நீங்கள் காலையிலேயே புறப்பட்டு போய் விட்டீர்கள். ஏனோ அனுஜா ரொம்ப டல்லாக இருந்தாள். நாங்கள் பத்து மணிக்குத்தான் புறப்படுவதாக இருந்தோம். ஆனால் ஆறு மணிக்கே புறப்படச் சொல்லிவிட்டாள். இரண்டு கார்களில் புறப்பட்டோம். சிம்லா மலையில் இறங்கிக் கொண்டிருந்த போது ஆக்ஸிடெண்ட் ஆகி விட்டது. முதலில் சென்ற கார் எங்கள் கண் முன்னாலேயே பள்ளத்தாக்கில் நழுவி விட்டது. அந்த இடத்திலேயே இறந்து விட்டார்கள்.'' கோவிந்தின் குரல் தழுதழுத்தது.

கார்த்திகேயன் தொலைவில் நின்று கொண்டிருந்த வர்களை பார்த்தான். அனுஜா க்ரிஸ்டியன் என்ற அவனுக்கு அது வரை தெரியாது. தன்னுடைய மன நிலையை நினைத்தபோது அவனுக்கே விநோதமாக இருந்தது. இவ்வளவு சலனமின்றி இருக்கிறதே மனம். ஏன்? எந்த விதமான வேதனையோ, துக்கமோ ஏற்படவில்லையே? தன்னுடன் இவ்வளவு அனுபவங்களை பகிர்ந்து கொண்ட அந்தப் பெண் இறந்து போனால் ஒரு சொட்டு கண்ணீர் கூட உதிர்ந்து விழவில்லையே?

அவன் சில சாவுகளை பார்த்திருக்கிறான். உறவினர் களும், நெருக்கமானவர்களும் மார்பில் அடித்துக் கொண்டு அழுவதையும் அதற்குப் பிறகு இரண்டு மூன்று மாதங் களிலேயே சாதாரணமாக ஆகி விடுவதையும் பார்த்திருக் கிறான். சிலரோ மறு நாளே எல்லோரும் சேர்ந்திருக்கும் போது திருமணத்திற்காக வரன் இருந்தால் பேச் செடுப்பார்கள்.

நெருங்கியவர்கள் இறந்து போனால் துக்க மடையாமல் மௌனமாக இருப்பவர்களும் இருக்கிறார்

கள். அதற்குப் பிறகு ஆண்டு கணக்கில் இறந்தவர்களின் நினைவுகளிலேயே மூழ்கிப் போய் வேதனையுடன் காலம் கழிப்பதையும் கண்டிருக்கிறான். அன்பானவர்கள் போய் விட்ட பிறகு முகத்தில் முறுவலைக் கூட நிரந்தரமாக தொலைத்து விட்டவர்களும் உண்டு. அதற்கு உதாரணம் அவன் தாய்! அவன் தந்தை இறந்த போது அவள் சலனமில்லாமல் ஒரு மூலையில் உட்கார்ந்திருந்தாள். அழவேயில்லை. தந்தையின் பக்கத்து உறவினர்கள் குசுகுசுவென்று பேசிக் கொண்டார்கள், ''கணவன் இறந்து போனால் அழக் கூட இல்லையே'' என்று.

''உயிரோடு இருந்த போது என்ன சுகத்தைக் கண்டு விட்டாள் இப்பொழுது அழுவதற்கு'' என்று தாயின் சார்பில் உறவினர்கள் சிலர் வாயை அடைத்தார்கள். அவனுக்குத் தெரியும், அதற்குப் பிறகு அவள் உயிருடன் இருந்த காலம் வரை தந்தையின் நினைவுகளிலேயே மூழ்கியிருந்தாள் என்று. நடுவில் வைப்பாட்டியின் மோகத்தில் விழுந்தாலும், கடைசியில் சொத்து முழுவதையும் இழந்து விட்டு திரும்பி வந்த போது அவ்விருவரும் மனதளவில் நெருக்கமானார்கள். அந்த நெருக்கத்தின் நினைவுகளில் அவள் எஞ்சிய வாழ்க்கையை கழித்து விட்டாள். சின்ன சந்தோஷத்தைக் கூட அனுபவிக்க வில்லை.

இன்று தன்னுடைய நிலைமை கூட அதே போல் இருந்தது அவனுக்கு வியப்பாக இருந்தது. சில நாட்கள் அறிமுகத்திலேயே அந்தப் பெண் தன் மீது இவ்வளவு பாதிப்பை ஏற்படுத்திவிடுவாள் என்று அவன் நினைக்க வில்லை. குறும்பும், அப்பாவித்தனமும் கலந்த வாசலில் தவிப்பும் துணிச்சலையும் சேர்த்துப் போட்ட கோலம். அவ்வப்பொழுது கட்டுக் கதையை புனைந்து சொன்னது,

டு யூ லவ் மீ என்று கேட்டது, இன்னும் கொஞ்ச நேரத்தில் மரணமடையப் போவது போல் நடித்தது, இதெல்லாம் அவனை பாதித்துக் கொண்டிருக்கும் நீங்காத நினைவுகள்.

நிறைய பேருக்கு மயானத்தில் வைராக்கியம் ஏற்படும். ஆனால் இவனுக்கு மயானத்தில் காதல் அரும்பிக் கொண்டிருந்தது. அதை காதல் என்பார்களா? என்னவோ தெரியாது.

அந்த நேரத்தில் கோவிந்த் அருகில் வந்தான். ''வாங்க... கடைசி தடவையாக பார்க்கலாம்'' என்றான்.

தொலைவில் இருந்த மக்கள் கூட்டத்திற்கு இடையே இருந்த சவப்பெட்டி கண்ணில் பட்டது. புதைக்க வேண்டிய நேரம் நெருங்கி விட்டதால் தாய் சவப் பெட்டியைப் பிடித்துக் கொண்டு அளவுக்கு மீறி அழுது கொண்டிருந்தாள்.

விவேகானந்தன் முழங்காலிட்டு சரிந்து ''அம்மா அனுஜா! நீ இல்லாமல் எங்களால் எப்படியம்மா வாழ முடியும்?'' என்று மகள் முகத்தின் மீது குனிந்து ஓவென்று கதறினார்.

''ரொம்ப ஓவராக நடிக்கிறீங்க. இப்படி மேலே வந்து விழத் தேவையில்லை. கொஞ்சம் தள்ளி நின்று கொண்டு கண்ணீர் விட்டால் போதும்.'' பெட்டிக்கு உள்ளேயிருந்து ரகசியமாக கடிந்து கொண்டாள் அனுஜா.

''அப்படியாம்மா பண்ணச் சொல்கிறாய்? ஐயோ... ஐயோ'' என்றார் விவேகானந்தன் அதே சுருதியில்.

''ஒரு மணி நேரமாக படுத்துக் கொண்டு போர் அடிக்கிறது. மித்ராஜீயை சீக்கிரமாக அழைத்து வர ஏற்பாடு செய் சம்பந்த்!''

விவேகானந்தன் வேஷத்தில் இருந்த சம்பந்த் ஓரக்கண்ணால் இடது பக்கமாக பார்த்துவிட்டு ''கோவிந்த் அழைத்துக் கொண்டு வருகிறான் உன் மித்ராஜீயை'' என்று தாழ்ந்த குரலில் சொல்லி விட்டு மீண்டும் குரலை உயர்த்தினான். ''என் கண்ணே! பாழும் பயணத்தை ஏன் தான் வைத்துக் கொண்டாயோ? பெண் பிள்ளைகள் இவ்வளவு ஃபாஸ்டாக இருக்கக் கூடாது என்று சொன்னேனே. கேட்கவில்லையே? இந்தப் பந்தயம் கிந்தயம் எல்லாம் எதற்காக வைத்துக் கொண்டாய்? அதிலும் முத்தம் பெற்றுக் கொள்ளணும் என்று பந்தயமா? அட கடவுளே!''

''ஷட்டப்!'' உதடுகள் அசையாமல் கடிந்து கொண்டாள் அனுஜா.

தந்தை வேஷத்தில் இருந்த சம்பந்த் கூட குறும்புக்கார இளைஞன் தான். ''காதில் விழாது மகளே! ஆனாலும் நாங்கள் எல்லோரும் இருக்கும் போது அவன்தான் முத்தம் கொடுக்கணும் என்று ஏன் தான் ஆசைப்பட்டாயோ'' என்று ராகம் போட்டு அழுதான்.

''நிறுத்துகிறாயா? எழுந்துவந்து அடிக்கட்டுமா?''

''எழுந்து வந்தால் பந்தயத்தில் தோற்றுப் போய் விடுவாய் மகளே!'' என்று திரும்பிப் பார்த்து விட்டு ''உஷ்! வருகிறான் உன் கார்த்திகேயன்'' என்று எச்சரித்தான்.

★

''ஸ்ரீகல்யாணி போலீசுக்கு ரிப்போர்ட் செய்யாமல் இருப்பதற்காக நான் ரொம்ப பாடுபட வேண்டியிருந்தது. தன் மீது கொலை முயற்சி நடந்த போதும் கூட அவள் சும்மா இருந்து விட்டாள் என்றால் அது நம் அதிர்ஷ்டம் தான்'' என்றான் சத்யன்.

''இதுவரை ஆயிரம் தடவை சொல்லி விட்டாய் இதை'' பிரதாப் அலுத்துக் கொண்டார். ''நான் ரொம்பவும் யோசித்துத்தான் செய்தேன். இந்தக் காரியத்தில் இவ்வளவு ரிஸ்க் எடுத்துக் கொண்டிருக்கிறேன் என்றால் அதற்குக் காரணம் ஸ்ரீகல்யாணிக்கு உன் மீது நம்பிக்கை ஏற்படும் விதமாக செய்யணும் என்பதுதான்.''

''இந்த நம்பிக்கைகள் - வருடக் கணக்கில் ஸ்லோ பாய்சன் - இதோடயே நம் வாழ்நாளெல்லாம் முடிந்து விடும் போலிருக்கே. நாம் செய்த கொலை முயற்சி மூலமாக அவளுக்கு கைகள் சுவாதீனத்திற்கு வந்து விட்டன. புருஷன் எப்பொழுது வருவானோ, எப்பொழுது இந்த விஷயத்தை சொல்லுவோமோ என்று தவித்துக் கொண்டிருக்கிறாள்.''

''போனில் சொல்லலாமே?''

''நேரில் சொல்லணுமாம். அது ஒரு த்ரில் என்கிறாள்.''

''அது போகட்டும். இன்னுமா கார்த்திகேயன் சிம்லாவிலிருந்து திரும்பவில்லை?''

''இன்று காலையில் வந்திருக்க வேண்டியது. அவனோடு சிம்லாவில் இருந்த பெண் யாரோ செத்துப் போய் விட்டாளாம். அந்திம காரியங்களில் பங்கெடுத்துக் கொண்டு விட்டு வருவதாக சொன்னானாம்.''

''அவன் கூட லேசுப்பட்டவன் இல்லை போலிருக்கே?'' அஸ்வத்தாமன் ஒரு மாதிரியாக சிரித்துக் கொண்டே சொன்னார்.

''அதெல்லாம் ஒன்றுமில்லை. விவேகானந்தன் என்று அமைச்சர் இருக்கிறார் இல்லையா? அவருடைய மகளாம்.''

பிரதாப் சந்தேகத்துடன் ''எப்போ செத்துப் போனாள்?'' என்றார்.

''இன்று காலையில் தான்.''

''நான்சென்ஸ்! விவேகானந்தன் மதியம் இங்கேதான் இருந்தார். காலையில் மகள் இறந்து போயிருந்தால் மதியம் வரைக்கும் அவருக்கு தெரியாமல் இருக்குமா?''

''இறந்து போனது அமைச்சரின் மகள்தானோ அல்லது வேறு யாரோ?'' என்றார் அஸ்வத்தாமன்.

''சத்யன் ஒரு முறை ஸ்ரீகல்யாணிக்கு போன் செய்து தெரிந்து கொள்.''

''இவ்வளவு சின்ன விஷயத்திற்கு இவ்வளவு ஆர்ப்பாட்டம் எதுக்கு? கார்த்திகேயன் நாளைக்கு வந்துவிடப் போகிறானே?''

''போலீஸ் பயிற்சியில் எங்களுக்கு, சொல்லித் தந்த முக்கியமான பாயிண்டுகளில் இது ஒன்று. ஒவ்வொரு மனிதனுக்கும் ஏதாவது ஒரு பலவீனம் இருக்கும். என்றாவது ஒரு நாள் அவன் நடவடிக்கையிலிருந்து அது வெளிப்பட்டு விடும். அதை கண்டு பிடிக்க வேண்டும் என்றால் எதையுமே சின்ன விஷயமாக நினைத்து ஒதுக்கக் கூடாது. சத்யன்! நீ போன் பண்ணு.''

சத்யன் ஸ்ரீகல்யாணிக்கு போன் செய்து கொஞ்ச நேரம் சாதாரணமாக பேசினான். பிறகு அந்த விஷயத்திற்கு வந்தான். மேலும் இரண்டு நிமிடங்கள் பேசிய பிறகு போனை வைத்து விட்டு ''டில்லியிலிருந்து கார்த்திகேயன் சொன்னது விவேகானந்தனின் மகள் என்றுதான். அதில் சந்தேகம் இல்லை'' என்றான்.

பிரதாப் கொஞ்ச நேரம் மௌனமாக யோசனை செய்தார். ''சத்யன்! விவேகானந்தன் என்றால் மனோஜாவின் தந்தைதானே?'' என்று கேட்டார்.

''ஆமாம். எல்லாம் சரியாக இருந்திருந்தால் எனக்கு மாமனாராகி இருப்பார்.''

''அவருக்கு இன்னொரு மகளும் இருக்கிறாளா?''

''அனுஜா அவருடைய இரண்டாவது மகள். ரொம்ப அழகாக இருப்பாள்.''

''அவளுடைய அழகைப் பற்றி உன்னைக் கேட்க வில்லை.'' அஸ்வத்தாமன் இடைமறித்து சொன்னார். ''அனுஜா செத்துப் போய் விட்டாள் என்ற சாக்கில் கார்த்திகேயன் டில்லியில் தங்கி விட்ட காரணம் என்ன? இந்த விஷயத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும். சத்யன்! இன்று மாலையில் நீ டில்லிக்கு போ'' என்றார்.

''நானா? இன்று மாலையிலா? அங்கே போய் என்ன செய்யணும்?''

''விஷயம் சூடாக இருக்கும் போது தான் உள் விவகாரத்தைத் தெரிந்து கொள்ள முடியும். முதலில் இந்த அனுஜாவின் மரணத்தைப் பற்றியும், அவர்கள் இரண்டு பேருக்கும் இடையே என்ன சம்பந்தம் என்றும் தெரிந்து கொள்.''

புரிந்து விட்டது என்பது போல் சத்யன் தலையை அசைத்தான். அவர்களோடு மேலும் ஐந்து நிமிடங்கள் பேசி விட்டு நேராக ஸ்ரீகல்யாணியிடம் போனான். அவன் போன பொழுது ஸ்ரீகல்யாணி பீட்டருடன் பேசிக் கொண் டிருந்தாள்.

சத்யனை பார்த்து முறுவலுடன் ''என்ன சத்யன்! இப்பொழுதுதானே போன் செய்தாய்?'' என்றாள்.

''கொஞ்சம் தனியாக பேசணும்.''

அவள் அதே முறுவலுடன் ''பேசு'' என்றாள்.

சத்யன் பீட்டரை சங்கடத்துடன் பார்த்துக் கொண்டே ''தனிமையில்'' என்றான்.

அவன் எண்ணத்தை புரிந்து கொண்டாற்போல் பீட்டர் எழுந்து நின்று ''நான் அப்புறமாக வந்து பார்க்கிறேன்'' என்றான்.

''உங்களிடம் பேச வேண்டியது இன்னும் பாக்கி யிருக்கு. கொஞ்சம் வெளியே உட்கார்ந்து கொள்ளுங்கள்.'' என்றாள் கல்யாணி. பீட்டர் போனதும் சத்யனை நோக்கித் திரும்பி ''சொல்லு. என்ன விஷயம்?'' என்றாள்.

''தன்னுடன் சிம்லாவுக்கு வந்த பெண் செத்துப் போய் விட்டதால் கார்த்திகேயன் டில்லியிலேயே தங்கி விட நேர்ந்தது என்று சொன்னாய் இல்லையா? அந்தப் பெண் அமைச்சர் விவேகானந்தனின் மகள் என்றும் சொன்னாய்.''

''போனில் கூட இதைத்தானே கேட்டாய்? ஏன் திரும்பத் திரும்ப கேட்கிறாய்?''

''கல்யாணி!'' முகத்தை சோகமாக வைத்துக் கொண்டான் சத்யன். ''நீயும் நானும் அனாதைகள்தாம். ஒருத்தரின் கஷ்ட சுகங்களை மற்றவர் பார்த்துக் கொள்ள வில்லை என்றால் வேறு யார்தான் கவனிப்பார்கள்?''

அவள் சிரித்துவிட்டு ''என் கஷ்ட சுகங்களை கவனித்துக் கொள்வதற்கு என் கணவர் இருக்கிறார். வந்த விஷயத்தைச் சொல்லு'' என்றாள்.

''நான் சொல்ல வந்தது கூட கார்த்திகேயனைப் பற்றித்தான். உங்க இருவருக்குமிடையே கருத்து வேற்றுமையை உருவாக்குவது என் நோக்கமில்லை கல்யாணி! ஆனால் பிரதாப் உன்னைக் கொல்ல முயன்றபோது சொன்ன வார்த்தைகள் உனக்கு நினைவு இருக்கும் என்று நம்புகிறேன்.''

''தானும் கார்த்திகேயனும் சேர்ந்து என்னை கொலை செய்ய திட்டம் போட்டதாக சொன்னாரே, அதைப் பற்றியா?''

''அந்த பிரதாப் ஒரு இடியட். முதலில் என்னிடம் வந்து கார்த்திகேயனைப் பற்றி தவறாகச் சொன்னார். கப்பல் மூழ்கிப் போனதைப் பற்றி பம்பாய்க்கு போன் செய்து விசாரித்தான் என்று பழி சுமத்தினார். இப்பொழுது எப்படியாவது பிரிக்க வேண்டும் என்று பார்க்கிறார். ஆனால் கார்த்திகேயன் கூட போய் சொல்லி இருக்கிறான். இன்றைக்கு அவன் டில்லியில் தங்கி விட்டதற்குக் காரணம் விவேகானந்தன் மகளின் மரணம் காரணம் இல்லை.''

ஸ்ரீகல்யாணி வியப்புடன் ''அவ்வளவு உறுதியாக எப்படி சொல்கிறாய்?'' என்று கேட்டாள்.

''எப்படி சொல்கிறேன் என்றால் விவேகானந்தன் இந்த ஊரிலேயே தான் இருக்கிறார் என்பதால். போன் செய்து தெரிந்து கொண்டேன்.''

ஸ்ரீகல்யாணி வாயடைத்துப் போய் விட்டாள். அவளையே கவனித்துக் கொண்டிருந்த சத்யன் அந்த வாய்ப்பை மேலும் பயன்படுத்திக் கொள்ளும் நோக்கத்துடன் ''அந்தப் பெண்ணின் பெயர் அனுஜா'' என்றான்.

''ஆமாம். சிம்லாவிலிருந்து போன் செய்த போது சொன்னார்.''

''ஓஹோ! போன் செய்து சொல்லும் அளவுக்கு வந்து விட்டது போலிருக்கே? விஷயம் அவ்வளவு தூரத்திற்கு வந்து விட்டிருக்கும் என்றால் என்னால் நம்ப முடிய வில்லை. இப்போ டில்லியில் அந்தப் பெண்ணுக்காக தங்கி விட்டான், மரணம் என்ற சாக்கில்.''

ஸ்ரீகல்யாணி பதில் சொல்லவில்லை.

சத்யன் எழுந்து நின்றான். ''இப்போது புரிந்து விட்டது கல்யாணி. அனாதைகளான நாமிருவரும் பரஸ்பரம் உதவி செய்து கொள்ள வேண்டுமே தவிர வேறு யாரும் செய்யமாட்டார்கள்.''

அதற்குள் கல்யாணி நன்றாக தேறிக் கொண்டு விட்டாள். ''நீ சொல்லுவது என் யோசனைக்குப் பொருந்த வில்லை'' என்றாள்.

''என்ன யோசனை?''

''ஒருக்கால் கார்த்திகேயன் பொய் சொன்னதாக வைத்துக் கொண்டாலும் அது ரகசியமாக வைத்துக் கொள்ள வேண்டிய பொய்யாக இருக்காது. ஒரு அமைச்சரின் மகள் உண்மையாகவே இறந்து போனாளா இல்லையா என்ற விஷயம் மிகச் சுலபமாக வெளிப் பட்டுவிடும். என் கணவர் உண்மையிலேயே டில்லியில் ஒரு நாள் அதிகமாக தங்க நினைத்தால் இப்படி பிடிபட்டு போகக் கூடிய பொய்யை எதுக்காக சொல்லுவார்?''

''ஆனால் நான் சொல்ல வந்தது என்னவென்றால் -'' என்று அவன் ஏதோ சொல்ல வருவதற்குள் அவள் இடையிலேயே கத்தரித்து விட்டு ''நான் என்ன சொல்

கிறேன் என்றால் அவர் வந்த பிறகு தான் உண்மையான விஷயத்தை தெரிந்து கொள்ள முடியும் என்று.''

சத்யனால் மேற்கொண்டு பேச முடியவில்லை. மேலும் ஐந்து நிமிடங்கள் அதையும் இதையும் பேசிவிட்டு போய் சேர்ந்தான்.

பீட்டரை உள்ளே வரச் சொல்வதற்கு முன்னால் இரண்டு நிமிடங்கள் அவள் தனிமையில் கழித்தாள். சத்யனிடம் ''இது ரொம்ப சின்ன விஷயம்'' என்று சொல்லி அனுப்பிவிட்டாளே தவிர மனதில் மட்டும் குழப்ப மடைந்தாள். அனுஜா... அனுஜா. இதற்குள் நான்கு தடவை இந்தப் பெயர் அடிபட்டு விட்டது. கவர்னருக்கு முன்னாலேயே தனக்குப் பரிசு வேண்டாம் என்று சொல்லிவிட்ட அந்தப் பெண் உண்மையில் எப்படிப் பட்டவள்? அந்தப் பெண் இறந்து போய் விட்டாள் என்று சாக்கு சொல்லி தன் கணவன் தங்கி விட்ட காரணம் என்ன?

யோசனைகளை ஒதுக்கி வைத்து விட்டு அவள் பீட்டரை உள்ளே கூப்பிட்டாள். சத்யன் தன்னிடம் சொன்ன விஷயங்களை எல்லாம் அவள் பீட்டரிடம் சொல்லிவிட்டு ''இதைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?'' என்றாள்.

பீட்டர் சற்று நேரம் பேசவில்லை. தனக்குள் யோசிப்பது போல் இருந்து விட்டு கேட்டான். ''என் அபிப்பிராயத்தை எந்த விதத்தில் சொல்ல சொல்றீங்க? உங்கள் விஜிலென்ஸ் ஆஃபீசராகவா அல்லது வயதில் மூத்தவன் என்ற முறையிலா?''

அவள் ஆச்சரியமடைந்து விட்டாள். அவன் ஏன் தடுமாறினான் என்று புரிந்துவிட்டது. அவன் கேட்ட கேள்வியால் அடியுண்டாற்போல் ஆகிவிட்டாள். ஆனால்

அதை வெளியில் காட்டிக் கொள்ளாமல் ''விஜிலென்ஸ் ஆஃபீசராக சொல்லுங்கள்'' என்றாள்.

''இதில் சோதிக்க வேண்டியது எதுவும் இல்லை. கார்த்திகேயன் வந்த பிறகு நடந்த விஷயத்தை தானே சொல்லி விடுவார். நீங்களும் அதைத்தானே சொன்னீங்க சத்யனிடம்?''

''ஆமாம்'' என்றாள் கல்யாணி. ''வயதில் மூத்தவர் என்ற முறையில் சொல்லுவதாக இருந்தால் என்ன சொல்லுவீங்க?'' உண்மையில் அவள் கேட்க நினைத்தது அதைத்தான். ஆனால் தான் இளப்பமாகிவிடக் கூடாது என்று முதலாவதை கேட்டாள்.

பீட்டர் கொஞ்சம் பயந்தாற் போல் தோன்றியதால் ''என்னிடம் வேலை செய்யும் ஊழியர் என்பதற்காக நீங்கள் தயங்க வேண்டியது இல்லை. உங்கள் அபிப்பிராயம் என்ன? சொல்லுங்கள்'' என்றாள்.

''யாராக இருந்தாலும் சரி தன் மனைவியைப் பற்றியோ, கணவனைப் பற்றியோ மூன்றாவது நபரிடம் பேசுவது போன்ற முட்டாள்தனம் வேறு இல்லை என்பது என் அபிப்பிராயம்'' என்று சொல்லிவிட்டு சட்டென்று நிமிர்ந்து ''உங்களுக்கு கோபம் வந்தால் மன்னித்து விடுங்கள்'' என்றான்.

அவளுக்கு உண்மையாகவே கோபம் வந்தாலும் எந்த உணர்ச்சியும் காட்டாமல் மறைத்துக் கொண்டாள். மேலும் அவன் மன்னிப்பு கேட்டுக் கொண்டு விட்டதால் முற்றிலும் சாதாரணமாக மாறிப் போய் ''சொல்லுங்கள்'' என்றாள்.

''கணவன் மனைவியின் பந்தம் ஒரு கோட்டையைப் போன்றது. வாழ்க்கைத் துணையைப் பற்றி நாம்

மூன்றாவது நபரிடம் சொன்னோம் என்றால், அந்தக் கோட்டையில் அவர்கள் நுழைவதற்கு நாமே வழி ஏற்படுத்திக் கொடுத்து விட்டோம் என்று அர்த்தம்.''

அவள் வாய்மூடிக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

''கணவனைப் பற்றி பிறந்த வீட்டில் உடன் பிறந்தவர் களிடம் குறை சொல்லத் தொடங்கும் முன் ஒவ்வொரு மனைவியும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டிய விஷயம் இது.''

''அப்போ கணவன்மார்கள் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டியது எதுவுமே இல்லையா?'' ரொம்ப சாதாரணமாக கேட்டாள்.

அவன் ஆழ்ந்த பெருமூச்சு விட்டபடி சொன்னான். ''எனக்கு திருமணமாகி இரண்டு வருடங்கள் கழித்து என் மனைவி மார்கரெட்டின் பெட்டியிலிருந்து சில காதல் கடிதங்கள் அகப்பட்டன. ரொம்ப துன்புறுத்தினேன். அவள் சொன்னதைக் காதில் போட்டுக் கொள்ளவில்லை. அப்புறமாக தெரிந்தது, அவை அவள் சினேகிதி எழுதியவை என்று. மன்னிப்பு கேட்டுக் கொண்டேன். ஆனால் என்ன பிரயோஜனம்? முப்பது வருடங்கள் கடந்து விட்டன. அவள் மனதில் காயம் அப்படியே நிலைத்து விட்டது. சேர்ந்துதான் வசிக்கிறோம். ஆனால் அந்தத் தூரம் மட்டும் அப்படியே நிலைத்து விட்டது.'' பீட்டரின் முகதில் வேதனை தென்பட்டது. ''மேடம்! எந்த விஷயத்திலும் அவசரப்படக் கூடாது. கல்யாணம் ஆன புதுசில் என்றால் இன்னும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். ஒரு முறை நம் மீது முத்திரை பதிந்து விட்டால் அழிக்க முடியாது.''

அவன் மறைமுகமாக தன்னிடம் என்ன சொல்ல வருகிறான் என்று அவளுக்குப் புரிந்து விட்டது. அதற்குள்

அவன் சய நினைவுக்கு வந்து விட்டவன் போல் தலையைச் சிலிர்த்துக் கொண்டு ''சாரி மேடம்! அதிகமாக பேசி விட்டேன் போலிருக்கு'' என்றான்.

''இல்லை இல்லை. நான்தானே சொல்லச் சொன்னேன். சரி விடுங்கள். அந்தக் கொலை முயற்சியைப் பற்றி ஏதாவது தெரிந்ததா?''

சத்யன், பிரதாப் ரகசிய சதிகளைப் பற்றி சொல்லி விடலாமா என்று நினைத்தான். ஆனால் சாட்சியம் இல்லாமல் சொல்லுவதால் எந்தப் பயனும் இல்லை. அவர்கள் மேலும் ஜாக்கிரதைகளை மேற்கொள்ள வாய்ப்பும் இருக்கிறது. அதையெல்லாம் யோசித்து ''சோதித்துக் கொண்டு இருக்கிறேன். இன்னும் சில ஆதாரங்கள் வேண்டும். கொஞ்சம் டயம் கொடுங்கள். இதற்கு பின்னால் யார் யார் இருக்காங்கன்னு சொல்லிவிட முடியும்'' என்றான்.

அவன் மட்டும் அப்பொழுதே சத்யனை பற்றி சொல்லியிருந்தால் கதையே மாறியிருக்கும்.

20

கார்த்திகேயன் சவப்பெட்டியின் அருகில் நின்று கொண்டான். மற்ற சடங்குகள் நடந்து கொண்டிருந்த போது கோவிந்த், கோபால், அனுஜாவின் மற்ற சிநேகிதிகள் எல்லோரும் வந்து அவள் கையை முத்தமிட்டு விட்டுப் போய்க் கொண்டிருந்தார்கள். தந்தை வேடத்தி லிருந்த சம்பந்த் வருத்தத்தோடு பார்த்துக் கொண்டிருந் தான், இந்த வாய்ப்பை நழுவவிட்டதற்கு. கடைசியில் கார்த்திகேயனின் முறை வந்தது.

அவன் பெட்டிக்கு அருகில் முழங்காலில் அமர்ந்து கொண்டு ஜேபியிலிருந்து ஒரு பொட்டலத்தை வெளியே எடுத்தான்.

''அப்பனே! நீ தானா கார்த்திகேயன்?'' ஃபாதர் வேடத்திலிருந்த இளைஞன் கேட்டான்.

''ஆமாம்.''

''அனுஜா மனப்பூர்வமாக உன்னைக் காதலித்தாள். அந்தக் காதல் நிறைவேறாமல் பாதியிலேயே போய் விட்டாள்.''

''ஆமாம். எனக்கும் வருத்தமாகத்தான் இருக்கு.''

''என் மகள் இவ்வளவு சின்ன வயதிலேயே போய் விடுவாள் என்று நினைத்திருக்கவில்லை'' என்றான் சம்பந்த் வருத்தம் தோய்ந்த குரலில்.

''புத்திசாலிகளையும், கலைஞர்களையம் கடவுள் சீக்கிரமாக தன்னிடம் அழைத்துக் கொண்டு விடுவார். திலக் அப்படித்தான் போனான்'' என்றான் கார்த்திகேயன் தேற்றுவது போல்.

''கீட்ஸ் அப்படித்தான் போனார்'' என்றான் சம்பந்த்.

''அலெக்சாண்டர் அப்படித்தான் போனார்.'' கார்த்திகேயன் எடுத்துக் கொடுத்தான்.

''அபிமன்யு கூட அதே போல்தான் போனான்.'' சம்பந்த் தொடர்ந்தான்.

அனுஜாவுக்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது. அரைமணி நேரமாக சவப்பெட்டிக்குள் அசையாமல் கிடந்ததால் ஏற்பட்ட தொந்தரவோடு வியர்த்துக்

கொட்டியதால் கசகசவென்று இருந்தது. இந்த இருவரும் பக்கத்தில் நின்று கொண்டு சாவகாசமாக யார் யார் சின்ன வயதில் இறந்து போனார்கள் என்று புள்ளி விவரம் சொல்லிக் கொண்டு இருப்பதை பார்த்த போது கோபம் கட்டு மீறிக் கொண்டு வந்தது. ஆனாலும் தேவை தன்னுடையது என்பதால் ஆடாமல் அசையாமல் படுத்துக் கொண்டிருந்தாள்.

''சிநேகிதர்கள் எல்லோரும் கையில் தான் முத்தமிடுவார்கள். காதலர்கள் மட்டும் உதட்டில் தான் முத்தமிட வேண்டும். அது எங்கள் ஆசாரம்'' என்றான் சம்பந்த்.

கேட்டுக் கொண்டிருந்த அனுஜா திடுக்கிட்டாள்.

''நிஜமாகவா?'' என்றான் கார்த்திகேயன் அப்பாவியாக.

''ஆமாம். அப்பொழுதுதான் அவள் ஆத்மா பிரபுவின் பாதத்தைப் போய் சேரும்.''

அனுஜா கலவரமடைந்தாள். சம்பந்த் திரிசமனம் பிடித்தவன் என்று தெரியுமே தவிர இந்த விதமாக தாக்குவான் என்று நினைத்திருக்கவில்லை. பெட்டி யிலிருந்து எழுந்து வந்து அவன் முகத்தில் ஓங்கி குத்த வேண்டும் போலிருந்தது. கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டாள். இத்தனை பேருக்கு முன்னால் கார்த்திகேயன் தன் உதட்டில் முத்தமிடுவதும், அதற்குப் பிறகு கல்லூரியில் எல்லோரும் சேர்ந்து தன்னை... அதற்கு மேல் அவளால் நினைத்துக்கூட பார்க்க முடியவில்லை.

தன்னை பந்தயத்தில் தோற்கடிப்பதற்காகத்தான் நண்பர்கள் எல்லோரும் சேர்ந்து தன்னை இக்கட்டில் ஆழ்த்தி விட்டார்கள் என்று ஊகித்துக் கொண்டாள். கார்த்தி

கேயன் முகம் எவ்வளவு கிட்டத்தில் இருக்கிறதென்று ஒரு கண்ணால் பார்க்க வேண்டும் என்ற ஆசையை பலவந்தமாக அடக்கிக் கொண்டாள்.

நாடகம் இவ்வளவு தூரத்திற்கு வந்த பிறகு பாதியில் கெடுத்துக் கொள்வது பிடிக்காமல் அப்படியே படுத்திருந்தாள். உதடுகள் மட்டும் முத்தத்திற்குத் தயாராக லேசாக திறந்து கொண்டன.

ஆனால் அவள் ஊகித்துக் கொண்டாற் போல் கார்த்திகேயன் முத்தமிடவில்லை. சம்பந்த்தைப் பார்த்து ''எங்களுக்குக் கூட ஒரு ஆசாரம் இருக்கிறது'' என்றான்.

''என்ன அது?''

''கல்யாணம் ஆகாதவர்கள் யாராவது இறந்து போனால் அவர்களுடைய கண்களின் மீது கற்பூரத்தை வைப்போம். அப்பொழுதுதான் ஆத்மா குளிர்ந்து போகும்.''

கேட்டுக் கொண்டிருந்த அனுஜாவின் உயிர் துடிதுடித்தது.

சம்பந்த் சொன்னான். ''பிரபுவின் பாதங்களை அடையும் ஆத்மா எப்படியும் குளிர்ந்துதான் போகும். முத்தமிடுங்கள் போதும்.''

''ஆசைகள் நிறைவேறாத ஆத்மா சூடாக இருக்கும். அதை குளிர்விக்க வேண்டும். அப்படி செய்யவில்லை என்றால் பிரபுவிடம் போக வேண்டிய ஆத்மா சாத்தானிடம் போய்விடும்'' விடாப் பிடியாக சொன்னான் கார்த்திகேயன்.

''ஆனாலும் இப்பொழுது கற்பூரம் எங்கிருந்து கிடைக்கும்?'' கடைசி அஸ்திரத்தை பயன்படுத்தியபடி கேட்டான் சம்பந்த்.

''நான்தான் கொண்டு வந்திருக்கிறேனே.'' பொட்டலத்தைப் பிரித்தான். ''கொஞ்சம் நகர்ந்து நில்லுங்கள். காற்றுக்கு கண்ணில் பட்டு விட்டால் எரிச்சல் ஏற்படும். கண்பார்வை போனாலும் போகும்'' என்று பொட்டலத்தில் இருந்ததை அவள் கண்கள் மீது வைக்கப் போனான். முகத்தின் மீது கொஞ்சம் மண் விழுந்ததுமே அனுஜா சட்டென்று எழுந்து உட்கார்ந்து கொண்டாள்.

சுற்றிலும் இருந்தவர்கள் ஆரவாரம் செய்தார்கள்.

''ஆமென்... ஆமென்'' என்று சொல்லிக் கொண்டிருந்தான் ஃபாதர் வேடத்தில் இருந்த இளைஞன். எங்கும் ஒரே சந்தடி.

''ஆபரேஷன் சக்ஸஸ் நோயாளிதான் 'க்ளோஸ்' என்பது போல் நாடகம் மட்டும் ஜனரஞ்சகமாக அமைந்து விட்டது. பலன்தான் பூஜ்யம்'' என்றான் சம்பந்த்.

கோவிந்துக்கு இங்கே என்ன நடந்து கொண்டிருக் கிறது என்று தெரியவில்லை. ''இவ்வளவு நேரம் நன்றாகத் தானே இருந்தாய்? கடைசியில் ஏன் எழுந்து விட்டாய்?'' தொலைவிலிருந்து வந்து கொண்டே கேட்டான்.

சவப் பெட்டியிலிருந்து அனுஜா வெளியே வந்து கொண்டே ''கண்களில் கற்பூரத்தைத் தூவப் போனால் எழுந்து கொள்ளாமல் என்ன செய்ய முடியும்?'' என்று எரிந்து விழுந்தவள் அதே கோபத்துடன் கார்த்திகேயனை நோக்கி ''ஆனாலும் இதென்ன ஆசாரம்? கண்கள் மீது யாராவது கற்பூரத்தை வைப்பாங்களா?'' என்றாள்.

''கற்பூரம் இல்லை. வெறும் மண்.'' பொட்டலத்தைப் பிரித்துக் காட்டினான் கார்த்திகேயன்.

''சந்தேகம் ஏற்படத் தொடங்கியதுமே பொட்டலத்தில் கட்டி வைத்தேன்.''

''உங்களுக்கு சந்தேகம் எப்பொழுது வந்தது?'' தந்தை வேஷத்தின் மீசையை அப்புறப்படுத்திக் கொண்டே கேட்டான் சம்பந்த்.

''எல்லோரும் அனுஜாவின் கையை முத்தமிட வேண்டும் என்று சொன்னதுமே.''

''அது பந்தயத்தின் கடைசி கட்டம் என்று தெரிந்து போய் விட்டதா?''

''ஆமாம். இவ்வளவு நன்றாக எப்படி நடிக்க முடிந்தது? ஸ்ட்ரீட் ப்ளே அனுபவம் உண்டா?''

''அட! தெரிந்து கொண்டு விட்டீர்களே.''

ஸட்ரீட் ப்ளே என்பது நவீன நாடக பாணி. பழங்காலத்து வீதி நாடகத்தோடு யதார்த்த நிலைமையை ஜோடித்து தயாரிப்பார்கள். 'நாடகத்தை அரங்கேற்றுவதற்கு மேடை தேவையில்லை. மக்கள் போதும்' என்ற கொள்கையை பின்பற்றி கடைவீதியில் திடீரென்று நாடகத்தை தொடங்குவார்கள். கொஞ்ச நேரம் வரை அது நாடகம் என்று மக்களுக்கு தெரியாது. மக்கள் கூடியதுமே நாடகத்தின் மூலமாக தாம் சொல்ல வந்த விஷயத்தை சொல்லுவார்கள். சமீபகாலத்தில் இந்த நாடக பாணி பிரபலமாகிக் கொண்டு வருகிறது.

★

கார் விமான நிலையத்தை நோக்கி சென்று கொண்டிருந்தது. அனுஜா நேராக வருவதாக சொல்லி

யிருந்தாள். கோவிந்த் கார்த்திகேயனுடன் சேர்ந்து புறப்பட்டான்.

''மயானத்தில் நாங்கள் எல்லோரும் சிரித்துக் கொண்டே இருந்தோம். எனக்கென்னவோ நீங்கள் இன்னும் கொஞ்சம் புத்திசாலித்தனத்துடன் நடந்து கொண்டிருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. கடைசி யில் முத்தம் கொடுக்கும் கட்டம் வந்த போது சந்தேகம் ஏற்பட்டு மண்ணை கற்பூரமாக தூவி பதிலடி கொடுத்து விட்டீர்கள். இருந்தாலும் அவ்வளவு பரபரப்புடன் நீங்க மயானத்திற்கு வந்த விதம், முகத்தில் தென்பட்ட சோகம் எங்களுக்கு சிரிப்பை வரவழைத்தன.''

கார்த்திகேயன் ஒரு வினாடி மௌனமாக இருந்து விட்டு சொன்னான். ''நீயாக இருந்தால் என்ன செய்திருப்பாய் கோவிந்த்?''

''போனிலேயே சொல்லியிருப்பேன். என் காதில் பூ வைக்க வேண்டாம். ஏற்கெனவே அந்தப் பெண் என்னை இரண்டு முறை முட்டாளாக்கியிருக்கிறாள். இனி ஏமாற மாட்டேன். அந்தப் பெண்ணிடம் சொல்லுங்கள் என்று சொல்லிவிட்டு விமானத்தில் ஊருக்கு புறப்பட்டுப் போயிருப்பேன்.''

''ஒருக்கால் அந்த மரணம் உண்மையாக இருந்தால்?''

கோவிந்த் சட்டென்று நிமிர்ந்தான்.

கார்த்திகேயன் மெதுவாக சொன்னான். ''இரண்டு தடவை முட்டாளாக்கினாள். சரிதான். மூன்றாவது முறையும் செய்திருப்பாள் என்று எப்படி நம்புவது?''

கார்த்திகேயன் என்ன சொல்ல வருகிறான் என்று கோவிந்துக்கு புரியவில்லை.

கார்த்திகேயன் தொடர்ந்தான். ''அவள் என்னை முட்டாளடித்து நாடகமாடுவதற்கு தொன்னூற்றி ஒன்பது சதவீதம் சான்ஸ் இருக்கிறது. உண்மைதான். ஆனால் அது நாடகம் அல்லாமல் உண்மையாக இருப்பதற்குக் கூட ஒரு சதவீதம் சான்ஸ் இருக்கிறது. துரதிர்ஷ்டவசமாக அந்த ஒரு சதவீதம் உண்மையாக இருந்து அவளுக்கு ஏதாவது அபாயம் ஏற்பட்டிருந்தது என்று வைத்துக் கொள். கடைசி தடவையாக பார்க்க முடியாமல் நான் ஊருக்குப் போய் விட்டால் அந்த அலட்சியத்திற்கு வாழ்நாளெல்லாம் வருத்தப்படாமல் என்னால் இருக்க முடியுமா? நான் ஒரு முட்டாள் என்று நினைத்து நீங்கள் சிரித்துக் கொள்வதைக் காட்டிலும் அந்த வருத்தம் அதிகமில்லையா?''

கோவிந்த் திக்பிரமை அடைந்து விட்டான். அவன் கணக்கில் மாஸ்டரேட்! ஆனாலும் இந்த வித்தியாசத்தைப் பற்றி வாழ்நாளிலேயே நினைத்துப் பார்த்ததில்லை. ''என்ன மனிதன் இவன்?'' என்று எண்ணிக் கொண்டான்.

''நீங்கள் மனிதர்களை இவ்வளவு தூரம் நம்பினால் பாதிக்கப்படுவீர்கள்'' என்றான்.

''எவ்வளவு தடவை பாதிக்கப்பட்டாலும் சரி. மனிதர்களை நம்பிக் கொண்டு தான் இருக்க வேண்டும் என்று தோன்றுகிறது கோவிந்த்! ஏனெனில் சக மனிதன் மீது அவநம்பிக்கையோடு பெறுகிற வெற்றியைவிட, நம்பிக்கையோடு வருகிற தோல்விதான் அதிக திருப்தியைத் தருகிறது. சக மனிதனை விட நாம் உயர்ந்தவர்கள் என்று

நிரூபித்து வாதம் புரிந்து தோற்கடிப்பதை விட நமக்கு ஒன்றுமே நஷ்டம் இல்லாத பொழுது, அடுத்தவர்களின் புத்தி சாதுரியத்தை ஒப்புக் கொண்டு விட்டால் அதில் தவறென்ன?''

கார் விமான நிலையத்தில் நின்றது. கால் மணி நேரத்திற்கு பிறகு அனுஜா வந்து சேர்ந்தாள். ''எங்க அப்பா கூட இதே பிளைட்டில் தான் போகிறாராம். அவர் கண்ணில் படாமல் வருவதற்குள் தாமதமாகி விட்டது'' என்றாள். கொஞ்சம் நெருங்கி வந்தவள் குரலை தாழ்த்திக் கொண்டு ''எங்க அப்பா கோபமாக இருக்கிறார். மயானத்தில் போட்ட நாடகத்தைப் பற்றி அவருக்குத் தெரிந்து விட்டது. ஆனால் ஏன் போட்டேன் என்று தெரியாது. அதுவரை நாம் அதிர்ஷ்டசாலிகள்'' என்றாள்.

''தெரிந்தாலாவது நன்றாக இருந்திருக்கும். மகளுக்கு இனி திருமண வயது வந்து விட்டது என்று தெரிந்து கொள்வார்.''

அனுஜா வெட்கமடைந்தாள். அந்தச் சூழ்நிலையை மாற்றுவதற்காக பேச்சை மாற்றினாள். ''என்ன மித்ராஜீ! என் நண்பர்கள் எல்லோரும் என்னை அழ வைத்துக் கொண்டிருக்கிறார்கள். உன் பாய் ஃபிரண்ட் ஆனாலும் ரொம்ப ட்யூப்லைட் என்று கேலி செய்கிறார்கள்'' என்றாள்.

கோவிந்தின் முகம் சிவந்து விட்டது. கார்த்திகேயன் மட்டும் முறுவலித்து விட்டது பேசாமல் இருந்தான்.

''உங்களுக்கு கொஞ்சம் கூட சந்தேகம் வரவில்லையா? நீங்கள் ஆனாலும் இவ்வளவு...''

அவள் வார்த்தைகளை முடிக்கக் கூட இல்லை. கோவிந்த் எரிச்சலடைந்து ''இடியட்! ஸ்டாப் இட்!'' என்று கத்தினான்.

அந்த ஆவேசத்தினால் அவள் வாயடைத்துப் போய் விட்டாள்.

கார்த்திகேயன் கூட ஆச்சரிய மடைந்தான். கோவிந்த் தன்னைக் கட்டப்படுத்திக் கொண்டே ''ஐ யாம் சாரி'' என்றான்.

''என்னதான் நடந்தது?'' என்றாள் அனுஜா குழப்பத்துடன்.

''உயர்ந்தவர்கள் சாதாரணமானவர்களைப் போல் தென்படுவார்கள். சாதாரணமானவர்கள் உயர்ந்தவர்களைப் போல் தென்படுவதற்கு முயற்சி செய்வார்கள்'' என்றான் ஆவேசமாக.

''இப்போ அதெல்லாம் எதுக்கு கோவிந்த்?'' என்றான் கார்த்திகேயன்.

''இல்லை. என்னை சொல்ல விடுங்கள்'' என்றான். கார்த்திகேயன் ஏதோ சொல்ல வருவதற்குள் விமானம் பற்றிய அறிவிப்பு கேட்டது.

''நான் போய் போர்டிங் பாஸ் வாங்கி வருகிறேன்'' கார்த்திகேயன் போய் விட்டான்.

''என்ன கோவிந்த்? என்ன நடந்தது?''

''உனக்கு பேராபோலா என்ற வார்த்தை தெரியுமா? கணக்குப் பாடத்தில் சொல்லுவார்கள். நம் நடவடிக்கை பேராபோலாவுக்கு நேர்மாறானது. ஒன்றுமே தெரியாதவன்

கீழேயே இருப்பான். சிறந்த குணநலனை பண்டத்தவனும் கீழேயே இருப்பான். நாம்தான் எல்லோருக்கும் மேலே இருப்பதாக நினைத்துக் கொண்டிருப்போம்'' என்று விஷயத்தை விளக்கினான்.

ஆனால் அவன் எதிர்பார்த்தாற் போல் அவள் வியப்படையவில்லை. யோசனையில் ஆழ்ந்தவள் சட்டென்று ஏதோ நினைவு வந்தாற் போல் ''இதோ வருகிறேன்'' என்று சொல்லிவிட்டு அங்கிருந்து வேகமாக வெளியேறினாள்.

இம்முறை வியப்படைவது கோவிந்தின் பங்காயிற்று. அதற்குள் கார்த்திகேயன் திரும்பி வந்து விட்டான். அடுத்த இரண்டாவது நிமிடம் அனுஜா வந்தாள். அவள் கையில் சின்ன பாக்கெட் இருந்தது.

''என்ன இது?'' கோவிந்த் கேட்டான்.

அவள் கார்த்திகேயனைப் பார்த்து சிரித்து விட்டு ''ஊருக்குப் போகப் போகிற நம் நண்பருக்கு ஒரு சின்ன நினைவுப் பரிசு. மித்ராஜீ பற்றி நீ சொன்ன போது சட்டென்று இந்த யோசனை வந்தது. அதனால்தான் போனேன். அந்த விஷயத்தில் மட்டும் உனக்கு தாங்க்ஸ்.''

''எவ்வளவு செலவு செய்தாய்?''

''உன்னைப் போன்ற ரசனையில்லாதவர்களுக்கு இதெல்லாம் புரியாது.''

''ரசனையில்லாதவன் என்று எப்படி சொல்கிறாய்? காரணம் என்ன?'' கோவிந்த் கேட்டான்.

''எங்கள் இருவரையும் தனியாக விடாமல் நீ இன்னும் இருப்பதுதான்.''

கோவிந்த் திடுக்கிட்டு, கார்த்திகேயன் தடுத்த போதிலும் கேட்காமல் தன் கார் வெளியே இருக்கிறது என்று சொல்லவிட்டு போய் விட்டான்.

''இது கொஞ்சம் கூட நன்றாக இல்லை.''

''ஏன் நன்றாக இல்லை? எங்க யூனிவர்சிடியில் இது பழக்கப் பட்டதுதான், காதலர்களைத் தனியாக விட்டு விட்டுப் போவது'' என்றாள்.

அவன் ஒரு வினாடி மௌனமாக இருந்து விட்டு ''நீ எங்கள் ஊருக்கு வா அனுஜா! உன்னைப் பார்த்தால் கல்யாணி சந்தோஷப்படுவாள்'' என்றான்.

''கல்யாணி யாரு?''

''அதான் சொன்னேனே, என் மனைவி.''

அனுஜா சிரித்தாள். ''நான் ஏதாவது நாடகமாடிய போதெல்லாம் நீங்கள் புதருக்குள்ளே இருந்து பாம்பை வெளியே எடுப்பது போல் இந்தக் கதையை எடுத்து விடுவீங்களா?''

அவன் ஏதோ சொல்ல வருவதற்குள் அறிவிப்பு கேட்டது. அனுஜா தன் கையிலிருந்த பாக்கெட்டை தந்தாள்.

''என்ன இது?''

''விமானத்திற்குள் உட்கார்ந்ததும் பிரித்துப் பாருங்கள். அது சரி, உங்களுக்கு மங்கோலியன் மொழி தெரியுமா?''

''தெரியாது. ஏன்?''

''நான் உன்னை காதலிக்கிறேன் என்று சொல்வதற்கு மங்கோலியன் மொழியில் யோவோ எ வோலை என்பார்கள்.''

''யோவோ எ வோலை?''

''ஆமாம். I love you வை திருப்பிப் போடுங்கள். கோட் வார்த்தை... நம் இருவருக்கும் இடையே மட்டும் யோவோ என வோலை.''

''அனுஜா! நீ வீணாக...''

''ஷ்!'' அவள் அவன் கையை பிடித்து இழுத்து ''எங்க அப்பா'' என்று காபி ஸ்டாலுக்குப் பின்னால் அழைத்துக் கொண்டு போனாள். அதற்குள் இரண்டாவது அறிவிப்பு கேட்டது.

''நான் போய் வருகிறேன்.''

''எவ்வளவு சிம்பிளாக சொல்லிவிட்டீங்க, போய் வருகிறேன் என்று.''

''பின்னே எப்படி சொல்லணும்?''

''போய் தீர வேண்டியிருக்கு. அதனால் போகிறேன். திரும்பி வரும் வரை உயிரற்ற உடலாகத்தான் வாழ்ந்து கொண்டிருப்பேன் என்று சொல்லணும்.''

அவன் நெகிழ்ந்து போய் விட்டான். தம் விஷயத்தை ஒதுக்கினால் காதலை இவ்வளவு அழகாக, சிறப்பாக உருவகப்படுத்துகிற கலை ரொம்ப சிலருக்குத் தான் இருக்கும். ''உனக்கு வாழ்க்கைத் துணையாக யார் வரப் போகிறானோ அவன் ரொமப் அதிர்ஷ்டசாலி. இவ்வளவு

ரசனை கொண்ட உள்ளம் ரொம்ப சிலருக்குத்தான் உண்டு'' என்றான் மனப்பூர்வமாக.

''நான் தந்த பரிசை உங்களிடம் வைத்துக் கொள்ளுங்கள். உங்களுக்கும் வரும்'' என்றாள்.

''என்ன இது?''

''விமானத்தில் பிரித்துப் பாருங்கள் என்றேனே'' என்றவள் கொஞ்ச நேரங்கழித்து மெதுவாக சொன்னாள்.

''மனிதன் ரொம்பவும் சந்தோஷமாக இருந்து விடாமல் இருப்பதற்காகத்தான் தெய்வம் இந்தக் காலம் என்ற ஒன்றை படைத்திருப்பார் போலிருக்கிறது. பாருங்கள் இந்த ஒரு வாரமும் எவ்வளவு சீக்கிரமாக கழிந்து போய்விட்டது என்று. இந்தத் தெய்வங்களுக்கு ஒன்று சேருவது பிரிவது இதெல்லாம் கிடையாது. அதனால்தான் அவர்களுக்கு பிரிந்து போவதில் இருக்கும் வருத்தம் தெரியாது'' என்று சொல்லி விட்டு நிமிர்ந்து அவனைப் பார்த்து ''ஏன் அப்படி ஆச்சரியமாக பார்க்கிறீங்க?'' என்றாள்.

''இப்படிப்பட்ட ரசனையை வெளிப்படுத்தும் போது வித்தியாசமாக, அருமையாக இருக்கிறது.''

''சாதாரணமாக கவிஞர்கள் இண்ட்ராவர்ட்டாக இருப்பார்கள். அதனால்தான் வாய் விட்டு பேசமுடியாமல் கடிதங்களை, கவிதைகளை தஞ்சமடைவார்கள். ஆனால் அதெல்லாம் பழைய முறைகள். என் இதயத்தை எப்படி புதிய முறையில் எடுத்துச் சொல்வது என்று இரவு பகலாக உட்கார்ந்து எழுதி முடித்து மனப்பாடம் செய்தேன்'' என்றாள்.

''வ்வாட்!'' என்றான்.

''ஆமாம்... மனதில் இருப்பதை ரசனையுடன் வெளிப்படுத்துவதற்கு கடிதம் எழுதுவதை விட எதிரே நின்று ஏன் சொல்ல முடியாது என்று பரிசோதனை செய்தேன்'' என்றாள் பெருமையுடன்.

கார்த்திகேயன் மிரண்டு போனாற் போல் தென்பட்டான்.

அதைப் பொருட்படுத்தாமல் அவள் தொடர்ந்தாள். ''இரவு மூன்று மணி வரைக்கும் எழுதிக் கொண்டே இருந்தேன். ஒவ்வொரு உணர்வையும் மனதிலிருந்து காகிதத்தில் கொண்டு வருவதற்கு ரொம்ப கஷ்டமாக இருந்தது. இரண்டு மணி வரையிலும் ஒன்றுமே எழுத முடியாமல் வெளியே வந்தேன். தோட்டத்தில் இருந்த பூக்கள் இரக்கத்தோடு பார்த்துக் கொண்டிருந்தன. காலம் ஓடிக் கொண்டிருந்த போது பேனா நகருவது எவ்வளவு கஷ்டம் என்பது புரிந்தது. மொத்தத்தில் எப்படியோ ஒரு வழியாக எழுதி முடித்து விட்டேன். சொல்லட்டுமா?''

''சொல்லு'' என்றான் தீனமாக.

'கண்களுக்கு மை அழகைத் தரும் என்பார்கள். ஆனால் அழகான பெண்ணிற்கு மை எப்படி இருக்க வேண்டும் என்று அவள் கண்களே எடுத்துக் காட்டாக இருப்பது போல் உங்கள் சிநேகம் என்னுடைய பெண்மையை தட்டி எழுப்புகிறது.'

அவன் வியப்புடன் பார்த்தான். அவள் சுற்றிலும் இருக்கும் கூட்டத்தைக் கூட பொருட்படுத்தாமல் சொல்லிக் கொண்டே போனாள்.

''காகிதம் என்ற கன்னத்தின் மீது கவிஞனின் எழுத்து பொட்டு வைத்தாற் போல் உங்கள் நினைவு என் மனதில் பச்சை குத்திவிட்டது. இனி நாளையிலிருந்து கண்ணை மூடினால் கனவுகளின் சலசலப்பு. கண்ணைத் திறந்தால் நீங்கள் இல்லாத தனிமை.

போய் வருகிறேன் மித்ராஜீ!

ஒரு சொப்பனம் கண்விழிகளைத் தூக்கத்திலிருந்து எழுப்புவதற்கு முன்னரே, ஒரு ஆசை மனதில் விருட்சமாக பரவுவதற்கு முன்னாடியே, ஒரு உணர்வு தொண்டைக் குழியிலிருந்து வெளிப்படுவதற்கு மொழி இல்லாமல் வெலவெலத்துப் போவதற்கு முன்னாடியே போய் வாருங்கள்.''

திடீரென்று அவள் குரல் தழுதழுத்ததால் அவன் கனவு சிதறிப் போய் அவளைப் பார்த்தான். அவள் சட்டென்று திரும்பி அங்கிருந்து போய் விட்டாள். கன்னங்களில் கண்ணீர்த் துளிகள் நிலாவெளிச்சத்தில் பளபளக்க விடை கொடுப்பது போல் அவள் கையை அசைத்தாள்.

அவளோ கண்ணீர்த் துளிகளோடு விடை கொடுத்து விட்டு போய் விட்டாள். ஆனால் அவனோ குளிர்ந்த நீரில் குளித்தாற் போல் நடுங்கினான். குளித்தது உடல் அல்ல மனம்! நடுங்கியது ஆனந்தத்தாலோ வேதனையாலோ அல்ல, உத்வேகத்தால்.

சில நாட்களுக்கு முன்னால் அவன் கைகூப்பி ''உணர்ச்சிகளுக்காக'' கடவுளை வேண்டிக் கொண்டான். உணர்ச்சி எப்படி இருக்கும் என்பதை இப்பொழுது கண்ணாரக் கண்டு விட்டான்.

அவன் ஓவியன். மின்னலைக் கூட அவனால் படம் பிடித்துக் காட்ட முடியும். அந்த நேர்மையான உணர்வை அவள் கண்களிலிருந்து படித்துணர்ந்த போது நடுங்கி விட்டான். அங்கே தான் விவாகமானவன் என்றோ, அவளுடையது தவறான கருத்து என்பதோ பிரச்னை அல்ல. ஹிப்போகிரஸிக்கு அப்பாற்பட்ட அந்தக் கண்ணீர்த் துளியில் ஒரு பழமையான உணர்வு. அது மெடீரியலிஸ்ட் உலகத்திற்கு எட்டாதது. அந்த உணர்வுகளின் புனிதம், அதுதான் அவனை நெகிழ்த்தி விட்டது.

பாரமான இதயத்தோடு தலை குனிந்தபடி உள்ளே நடந்தான். ஒரு மூலையில் இருந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்டான். தன்னையறியாமலேயே அவன் கைகள் அவள் தந்த பாக்கெட்டைப் பிரிக்கத் தொடங்கின.

சரியாக அதே சமயத்தில் அனுஜா கண்ணாடியின் முன்னால் நின்று கொண்டு தன் பிரதிபிம்பத்தோடு பேசிக் கொண்டிருந்தாள். ''அடி பைத்தியக்காரி! போகிறவனை வேதனையோடு அனுப்பிவிடப் போகிறாயா? சியரப் மை கர்ல்! அவனை கொஞ்சம் சிரிக்க வை.''

அடுத்த நிமிஷம் அவள் பழைய குறும்புக்காரப் பெண்ணாகி விட்டாள். நேராக சேம்பருக்குள் போனாள். மைக்கிற்கு முன்னால் ஒரு சிந்திப் பெண் உட்கார்ந் திருந்தாள்.

''மேடம்! அர்ஜெண்டாக ஒரு பயணிக்கு ஒரு விஷயத்தைச் சொல்லணும். அவர் இப்பொழுதுதான் விமானத்திற்கு ஏறப் போகிறார்.''

''யாரு? என்ன விஷயம்?''

''அவருக்கு மகன் பிறந்திருக்கிறானாம். இப்பொழுது தான் தெரிந்தது அந்தச் செய்தி.''

''அப்படிப்பட்ட விஷயங்களைச் சொல்ல மாட்டோம்.''

''சாதாரணமாக இருந்தால் சொல்ல மாட்டீங்க. ஆனால் அவர் இந்தியர் இல்லை. கோ... ரித்... கேய என்று மங்கோலியாவிலிருந்து வந்திருக்கிறார். அவருக்கு ஆங்கிலம் கூட தெரியாது.''

சிந்திப் பெண் சங்கடத்துடன் பார்த்து விட்டு ''பின்னே எப்படி சொல்வது?'' என்றாள்.

''எழுதிக் கொண்டு வந்திருக்கிறேன்'' என்று காகிதத்தைத் தந்தாள்.

UOY EVOL I என்று இருந்தது.

''எப்படி சொல்வது இதை?'' கேட்டாள் சிந்திப் பெண்.

''நீங்கள் முதலில் பெயரைச் சொல்லுங்கள். அவர் போய் விடப் போகிறார். சீக்கிரம்'' என்று அவசரப் படுத்தினாள், யோசிக்க அவகாசம் தராமல்.

சரியாக அந்தச் சமயத்தில் கார்த்திகேயன் பாக்கெட்டை பிரித்தான். அதற்குள் மைக்கிலிருந்து ''மிஸ்டர் கோரிட்கேயா'' என்று அனௌன்சரின் குரல் கேட்டது.

அந்த அழைப்பிற்கு கார்த்திகேயன் திடுக்கிட்டு தன்னைத்தானோ என்று திரும்பி சுவற்றில் இருந்த ஸ்பீக்கரை பார்த்தான். அப்படி திரும்பியதில் பக்கத்திலிருந்த

ஃபேனின் காற்று விர்ரென்று வந்து மோதியது. கையில் இருந்த நைலான் துப்பட்டா காற்றுக்கு பறந்து அவன் முகத்தை சுற்றிக் கொண்டது. அதுதான் அவள் தந்த பரிசு.

'இவ்வளவு நாளாக என் இதயத்தை காவல் காத்துக் கொண்டிருந்த 'துப்பட்டா' என் மனதில் உள்ள விருப்பத்தை உங்களுக்கு உணர்த்தும்'

என்பது போல் அவன் நெற்றியை, கன்னங்களை, உதடுகளை, கழுத்தை ஸ்பரிசித்தது. அவன் சுவாசத்தை அதன் பரிமளம் சூழ்ந்து கொண்டது.

அதே சமயத்தில் அவள் வார்த்தைகள் அவன் செவிகளில் வந்து விழுந்தன.

''கார்த்திகேயன்! யோவோ ஏ வோலை....'' என்ற வார்த்தைகள் அவள் தொண்டையிலிருந்து தொனித்து, பிரதிபலித்து அவன் இதயத்தைத் தொட்டு விட்டு ஓயந்தன.

அவ்விருவரும் அவ்வாறு பிரிந்து போனதை அதுவரை அவ்விடத்திலேயே நின்று கொண்டு ஒரு ஆள் மறைந்திருந்து பார்த்துக் கொண்டிருந்தான். அந்த நபர் சத்யன்!

முதல் பாகம்

முற்றும்